வெளியீடு 21-2-1992 Issued 21-2-1992

15

தமிழ்நாடு ... அண்ணா ... எழும்பூர், சென்னை-600008
26

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, செப்டம்பர் 10, 1991 - தொகுதி 5 - எண் 2
Tuesday the 10th September, 1991 - Volume 5 - No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
**Legislative Assembly Secretariat,**
**Madras-600 009**

விலை ரூ. 3-00] [Price Rs. 3-00

15

# Tamil Nadu Legislative Assembly Debates.

## Official Report.

Vol-5 No-2

10.9.1991.

D C
V211,31 N91
N91.5.2
161490

## உள்ளடக்கம்.

**10—9—1991.**


பக்கங்கள்.

1. **வினாக்கள்-விடைகள்—** 133—150

   உடுக்குறியிட்ட வினாக்கள்.

2. **உரிமைப் பிரச்சினை —**

   9–9–1991 ஆம் நாளன்று நடைபெற்ற அவை நிகழ்ச்சிகள் பற்றி சில பத்திரிகைகள் தவறான செய்திகளை வெளியிட்டுள்ளது குறித்து. 150— 158

3. **தகவல் கோரல்—**

   மதுரையில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக நடைபெறும் பிரச்சாரங்களைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து. 158—164

4. **வரவு-செலவுத் திட்டம், 1991-92—பொது விவாதம்— தொடர்ச்சி—** 164—262

   1. *திரு. ஏ. எகாம்பர ரெட்டி .. .. 165—169
   2. செல்வி எல். சுலோசனா .. .. 169— 173
   3. *திரு. சி. சுவாமிநாதன் .. .. 173—177
   4. *திரு. ஆ. செல்லதுரை .. .. 177—180
   5. டாக்டர் (செல்வி) ஜி. ஆர். மாலா .. 180—184
   6. திரு. எஸ். ஆர். ஜெயராமன் .. . 184—186
   7. திரு. நா. சா. பழனிசாமி .. .. 186—194
   8. திரு. செ. கு. தமிழரசன் .. .. 194—199

பக்கங்கள்.

9. திரு. எஸ். வி. சண்முகம் .. .. 200—205
10. *திரு. எஸ். திருநாவுக்கரசு .. .. 205—222
11. டாக்டர் தே. குமாரதாஸ் .. .. 224—242
12. *திரு. வே. தம்புசாமி .. .. .. 242—252
13. *திரு. ச. இராமச்சந்திரன் .. .. 253—261

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள். 262—264

14490

D

V2111,31 N91

N91.5.2

16

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

ஆவணி 25, பிரஜோற்பத்தி—திருவள்ளுவராண்டு 2022.

1991 செப்டம்பர் 10, செவ்வாய்க் கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' ஆக்கம் கருதி முதல்இழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார்.''

பின் விளைவையும், ஊதியத்தையும் கருதி இப்போதுள்ள முதலை இழந்துவிடக் காரணமான செயலை அறிவுடையவர் மேற்கொள்ளமாட்டார்.

## 1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள். வினா எண் 9. டாக்டர். ச. சுந்தரராஜ், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

### பரமக்குடியில் சார்நிலை நீதிமன்றம்.

9—

*1646 டாக்டர் ச. சுந்தரராஜ் :
மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) பரமக்குடியில் சார்நிலை நீதிமன்றம் (Sub-Co r) நிறுவுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. இருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : இது தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றத்துடன் கடிதப் போக்குவரத்தில் உள்ளது இப் பிரச்சினை.

[1991 செப்டம்பர் 10

டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சபை கூடியவுடன் ஆம் என்ற வார்த்தை வருமோ இல்லையோ என்று நான் பலவாறு கலங்கிக் கொண்டு இருந்தேன். ஆனால் இந்தச் சபை கூடியவுடன் அறிவுடையவர்கள் செய்கின்ற காரியத்திற்கு நல்ல ஊக்கம இருக்கிறது என்ற வகையில் ஆம் என்று அமைச்சர் அவர்கள் கூறி இருக்கிறார்கள். பரமக்குடி என்பது இராமநாதபுரம் மாவட்டத்தில் மத்தியில் அமைந்துள்ள பகுதியாகும். கமுதி, முதுகுளத்தூர் போன்ற தாலுக்காக்களிலே இருந்தும், இராமநாதபுரம், இராமேஸ்வரம் போன்ற பகுதிகளிலே இருந்தும் பரமக்குடிக்குத்தான் வரவேண்டும். மேலும் 40-க்கு மேற்பட்ட வழக்கறிஞர்கள் வந்து வழக்கறிஞர் தொழில் செய்கிறார்கள். எப்போதுமே இரட்டை இலைக்குத்தான் அந்த மக்கள் வாக்களித்து இருக்கிறார்கள். புயல் வீசியபோதுகூட மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய சின்னமான சேவல் சின்னத்தைக்கூட மறக்காத மக்களுக்காகக் கட்டாயம் பரமக்குடியில் ......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

டாக்டர் ச. சுந்தரராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, கட்டாயம் பரமக்குடியில் சப் கோர்ட் அமைத்துத் தர ஆதரவு அளிககப்படுமா? மற்றும் ஒன்று. 1971 ஆம் ஆண்டு ஜஸ்டிஸ் நடேசன் அவர்கள் அங்கே வருகை தந்து கட்டாயம் பரமக்குடியில் அமைக்கப்படும் என்று உறுதி தந்திருக்கிறார்கள். மேலும் 1980 ஆம் ஆண்டு மாண்புமிகு முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் வருகை தந்தபோது....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

டாக்டர் ச. சுந்தரராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கறிஞர் சங்கத் தலைவர் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

டாக்டர் ச. சுந்தரராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, கட்டாயம் அமைககப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு கொள்கை அளவில் நம்முடைய பரமக்குடியில் சப் கோர்ட் அமைக்க முடிவெடுத்து அது இன்றைக்கு உயர்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு, அதனுடைய



1991 செப்டம்பர் 10]

ஒப்புதலுக்காகக் காத்து இருக்கிறது. அதற்கு முன்பாக அந்த மாவட்டத்தினுடைய தலைநகரத்திலே மாவட்ட நீதிமன்றம் பற்றி வருகிற 25 ஆம் தேதி அன்றையதினம் சட்டத் துறை விவாதத்தின்போது, நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஒப்புதலோடும், ஆணையின்படியும் எந்தெந்த இடத்திலே, எந்தெந்த தலைநகரங்களிலே மாவட்ட நீதிமன்றங்கள் வர இருக்கின்றன என்ற ஆணையை அரசு அறிவிக்க இருக்கிறது. அதனை அமைத்த பிறகு சப் கோர்ட் பரமக்குடியில் நிச்சயமாக வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே ஏற்கனவே இரண்டு நீதிமன்றங்கள் ஒன்று டிஸ்ட்ரிக்ட் முன்சீஃப் கோர்ட் இரண்டாவது டிஸ்ட்ரிக்ட் முன்சீஃப் கம் ஜுடிஷியல்மாஜிஸ்ட்ரேட் கோர்ட். இந்த இரண்டு நீதிமன்றங்கள் பரமக்குடியில் இருக்கின்றன மூன்றாவது வசதியாக மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஒப்புதலோடு சப் கோர்ட் நிச்சயம் பரமக்குடியில் வரும், வரும், வரும், வரும்

டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்ட கோர்ட்டை இராமநாதபுரத்தில் அமைப்பதற்காக கடந்த ஓராண்டு காலமாக மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் செகண்ட் ஃப்ளோர் காலி செய்யப்பட்டு........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது சப் கோர்ட் பற்றிய கேள்வி. நீங்கள் டிஸ்ட்ரிக்ட் கோர்ட்டுக்குப் போகிறீர்கள்.

டாக்டர் ச. சுந்தரராஜ் : அந்த மாவட்ட கோர்ட் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு வருவதற்கு மறுக்கிறது. ஒரு வருட காலமாக இடம் காலி செய்யப்பட்டு இரண்டாவது தளம் கலெக்டர் அலுவலகத்தில் காலியாக இருக்கிறது. ஆனால் ஜஸ்டிஸ் அவர்கள் வருவதற்கு பல்வேறு காரணங்களைச் சொல்லிக் கொண்டு, அதன் காரணமாக அந்த மாவட்ட நிர்வாகம் உள்ளே நுழைவதற்கு மறுக்கிறது. ஆகவே இவ்வாறு பல்வேறு நிலைகளை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். குறிப்பாக........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பல்வேறு நிலைகளுக்குப் போகக்கூடாது. இதிலே கேள்வி கேளுங்கள்.

டாக்டர் ச. சுந்தரராஜ் : அந்த மாவட்ட நீதிமன்றத்தை உடனே இராமநாதபுரத்தில் அமைத்துத் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-35

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெளிவாக திட்டவட்டமாகச் சொன்னதுபோல, வருகிற 25-ம் நாள்

நீதி நிர்வாகங்கள் மற்றும் சிறைச்சாலை டிமாண்ட் வருகிறது. கோர்ட்டினுடைய டிமாண்ட் வருகிறது. அன்றைக்கு மிகத் தெளிவாக இதுபற்றி மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் அனுமதியோடு நல்ல செய்தியை மாண்புமிகு உறுப்பினருக்கு நான் அளிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. தேனி பன்னீர் செல்வம்.

**திரு. தேனி பன்னீர்செல்வம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக சப்-கோர்ட் என்பது சம்பந்தப்பட்ட காவல் நிலையங்கள் அமைந்திருக்கின்ற பகுதியிலேதான் பெரும்பாலும் அமையவேண்டும். ஆனால் எங்களுடைய போடி காவல் நிலையங்களை மையமாக வைத்திருக்கக்கூடிய இடங்களில் அது போல அமையவில்லை. அதுபோல அமைத்துத் தருவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். தற்போது அந்த கோர்ட்டு உசிலம்பட்டியில் இயங்கி வருகிறது. எனவே அதை மீண்டும் போடிநாயக்கனூருக்கு மாற்றித் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான விவரங்கள் தேவை என்றால் உடனடியாக ஒரு 'ஷார்ட் நோட்டீஸ் கொஸ்டியன்' போட்டால் ஒரு 4 நாட்களிலே தகவலைத் துறையிலிருந்து பெற்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருவேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண். 10. திரு. ச. காந்திராஜன். மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள்.

**டீசல் தட்டுப்பாட்டினால் நிறுத்தப்பட்ட பேருந்துகள்.**

10—

*279—**திரு. ச. காந்திராஜன் :**

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வேடசந்தூர் தொகுதியில் டீசல் தட்டுப்பாடு காரணமாக நிறுத்தி வைக்கப்பட்ட வழித்தடங்களில் மீண்டும் பேருந்துகள் விட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், வேடசந்தூர் - வெள்ளோடு, திண்டுக்கல்-இவல்லம்பட்டி(வழி)புத்தாம்பட்டி, வேடசந்தூர்—அய்யலூர் வழித் தடங்களில் விரைவில் பேருந்துகள் விடப்படுமா ?



**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) டீசல் தட்டுப்பாடு நீங்கிய பின் நிறுத்தி வைக்கப்பட்ட பேருந்துகளை மீண்டும் விடுவது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ச. காந்திராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேடசந்தூர் பகுதியானது மிகவும் வறட்சியான பகுதி மட்டுமல்ல, மிகவும் பின்தங்கிய பகுதி என்பது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், இங்கே இருக்கின்ற அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும் நல்ல முறையிலே தெரியும் என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். அதுமட்டுமல்ல. வேடசந்தூர் பகுதியைப் பொறுத்த அளவிலே 4 கிலோ மீட்டர் சென்று ஒரு பஸ் ஏறிச் செல்லவேண்டியிருக்கின்ற காரணத்தினாலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு ஏதாவது விதிவிலக்கு அளித்து அந்த பஸ்ஸை உடனடியாக விடுவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதை நான் மிகவும் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்'' என்று இயேசு பிரான் சொன்னார். கேட்காமலேயே கொடுக்கக்கூடிய வல்லமை படைத்த நம் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் நம்முடைய போக்குவரத்துத் துறையில் புதிய மாற்றங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே நம்முடைய உறுப்பினர் கேட்ட கோரிக்கை மிக விரைவிலே நிறைவேற்றப்படும்.

**திரு. ச. காந்திராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நிச்சயமாகக் கிடைக்கும் என்ற நம்பிக்கையிலேதான் இந்த வார்த்தையை இங்கே கேட்டேன். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சி. இராமசுவாமி.

**திரு. சி. இராமசுவாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கராபுரம் தொகுதியில் டீசல் தட்டுப்பாடு காரணமாக பவுஞ்சிப்பட்டு, புத்தூராம்பட்டு, அரசம்பட்டு, வட பொன்பரப்பி ஆகிய ஊர்களில் 4 முறை சென்ற பஸ்கள் 2 முறைகள்தான் விடப்படுகின்றன. எனவே மாண்புமிகு போக்குவரத்துத்

[1991 செப்டம்பர் 10

துறை அமைச்சர் அவர்கள் டீசல் தட்டுப்பாடு காரணத்தினால் முன்னால் நிறுத்தப்பட்ட பஸ்களை உடனடியாக விடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்காமலேயே கொடுக்கக் கூடிய அரசு, நம்முடைய புரட்சித் தலைவி அரசு என்பதை நான் கோடிட்டுக் காட்டுவதற்குக் காரணம், டீசல் தட்டுப் பாட்டின் காரணமாக 1,005 பேருந்துகள் நிறுத்தப்பட்டன. டீசல் தட்டுப்பாடு இருந்தாலும்கூட அதை சிக்கனப்படுத்தி இன்றைக்கு ஏறத்தாழ 732 பேருந்துகளை இப்போது இயக்கிக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருமதி ஜீனத் சர்புதீன்.

**திருமதி ஜீனத் சர்புதீன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பெண் குலத்தின் ஒளிவிளக்காக இருக்கக் கூடிய புரட்சித் தலைவி முதல்வராக இருக்கின்ற இந்தக் காலத்தில் பஸ்களில் பெண்களை ஓட்டுநர்களாக அனுமதிப்பார்களா என்ற கேள்வியைக் கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள் தேர்வுக்கு முன் வருவார்களேயானால், முன்னுரிமை வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. வி. பி. சந்திரசேகர்.

**திரு. வி. பி. சந்திரசேகர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வி மூலக் கேள்விக்கு சற்று மாறு பட்டு இருந்தாலும்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி மாறுபடக் கூடாது.

**திரு. வி. பி. சந்திரசேகர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறிதுதான் மாறுபட்டு இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இல்லை. மாறுபடா மல் கேட்கவேண்டும்.

**திரு. வி. பி. சந்திரசேகர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் அளிப்பார்கள் என்று கருதுகிறேன்,



1991 செப்டம்பர் 10]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாறுபாடு பரவா யில்லை என்று நீங்களே 'அஸ்யூம்' பண்ணக் கூடாது. மாறு படாமல் கேட்க வேண்டும். மாறுபடாமல் கேளுங்கள்.

முற்பகல் 9-40

**திரு. வி. பி. சந்திரசேகர் :** 30 கிலோ மீட்டருக்கு உட் பட்டும், ஆயிரம் பேர் உள்ள பகுதியாக இருந்தும் கூட பல பகுதிகளில் பஸ் போக்குவரத்து இல்லாமல் இருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் போக்குவரத்தை ஏற்படுத்திக் கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவருடைய ஆட்சி யில், தன்னிறைவுத் திட்டத்தில் பல பாதைகள் செப்பனிடப் பட்டன. அந்தப் பாதைகள் முந்தைய ஆட்சிக் காலத்தில் புதுப்பிக்கப்படாமல் பழுதடைந்திருக்கின்ற காரணத்தால், சில இடங்களில் பேருந்துகளை விட முடியவில்லை. நம்முடைய ஒப்பற்ற தலைவியாக இருக்கிற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ஒரு கோடி ரூபாயை ஒதுக்கி, பாதைகளைச் செப்பனிடும் பணியைத் துவக்கியிருக்கிறார்கள். அந்தப் பணிகள் முடிவுற்ற வுடனேயே, மிக விரைவாக பேருந்துகள் அங்கே விடப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஆர். ஈஸ்வரன். மூலக் கேள்வியுடன் தொடர்பு உடையதாக இருக்க வேண்டும்.

**திரு. ஆர். ஈஸ்வரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் கட்டபொம்மன் டெப் போ இருக்கிறது. 10 சதவிகிதம் பேருந்துகள் அங்கே நிறுத்தப்பட்டு இருக்கின்றன. ஆனால் அமைச்சர் அவர்கள் டீசல் தட்டுப்பாடு காரணத்தால் நிறுத்தப்பட்டிருப்பதாக சொல்கிறார்கள். இந்த டீசல் தட்டுப்பாடு எப்போது நீங்கும் ? அதற்காக மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு என்ன நட வடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ? மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு கூடிய விரைவில் நடவடிக்கை எடுத்து, நிறுத்திய பேருந்துகளை மீண்டும் விடுவதற்கு அமைச்சர் அவர்கள் நட வடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற முதல் நாளிலேயே டீசல் தட்டுப்பாட்டைத் தளர்த்த வேண்டுமென்று சொல்லி மத்திய அரசுக்கு கடிதம் எழுதியிருக்கிறார்கள். மத்திய அரசுடன் தொடர்புள்ள உறுப்பினர் மத்திய அரசை வலியுறுத்தி, இந்த 10 சதவிகித டீசல் தட்டுப்பாட்டை நீக்கினால் அடுத்த நாளே பேருந்துகள் இயக்கப்படும்.

டி2 53-269—2

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இந்திய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த அருமைச் சகோதரர் திரு. பாலையா அவர்கள் அன்றைக்கு ஒரு கேள்வி கேட்கின்ற நேரத்தில் தாய்க் குலத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஓட்டுநர் வேலை, டிரைவர் வேலை......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வியோடு வராத இன்னொரு கேள்வி, துணைக் கேள்வி கேட்கிறீர்கள். இரண்டு நாளைக்கு முன்பு கேட்டது, அப்போது அவர்கள் கேட்ட கேள்விக்கு நீங்கள் ஏதாவது கேட்டிருக்க வேண்டும். இரண்டு நாளைக்கு முன்பு கேட்ட ஒரு கேள்விக்கு தொடர்புடையதாக அப்போதே கேட்டால்தான் அதற்கு அது துணைக் கேள்வியாக ஆகும்.

டாக்டர் தே. குமாரதாஸ் : டிரைவர் வேலையில் பெண்ணாக இருப்பதால் 160 சென்டி மீட்டருக்குக் குறைவாக இருந்தாலும் பணியில் அமர்த்த வேண்டுமென்று அமைச்சர் அவர்களை அப்போது கேட்டுக் கொண்டார்கள். அதற்கு அமைச்சர் அவர்கள் 4 சென்டிமீட்டர் உயரம் குறைவாக இருப்பதால் பணியில் அமர்த்த முடியாது என்று சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் கருணை கூர்ந்து அதை டெக்னிக்கல் டிரபுள் ஆகக் கருதி, சீட்டை மட்டும் 4 சென்டிமீட்டர் உயர்த்திவிட்டால் உயரம் சரியாகப் போய்விடும். ஆகவே, அந்த வகையில் அவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தொடர்பு இல்லாத கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறீர்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சிக்கலான ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். இவரே பின்னால் ஏன் 156 சென்டிமீட்டர் உயரம் உள்ளவரை எடுத்தீர்கள் என்று கேள்வி கேட்கக் கூடும். 156 சென்டிமீட்டர் என்ற காரணத்தால் அவர்களை எடுக்க முடியவில்லை என்றுதான் அன்றைக்கே விளக்கம் தந்தேன். காரணம் அவர்களுக்கு 'லாங் வியூ' தெரியாது. தொலை நோக்குப் பார்வை தெரியவில்லை என்று சொன்னால், பேருந்திலே பல்வேறு ஆக்சிடென்ட் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. அதே நேரத்தில் அவர்கள் 'கிளச்' போன்றவற்றை அப்ளை பண்ண வேண்டுமென்று சொன்னால் உயரம் 160 சென்டிமீட்டர் இருக்க வேண்டும். இது



எல்லாம் சட்டரீதியாக இருக்கின்ற நிலை. உறுப்பினர் அவர்கள் முன் வரிசையில் அமர்ந்து இருக்கிறார்கள். இது போன்ற சூழ்நிலையை உருவாக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 11, திரு. வ. சத்தியமூர்த்தி, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள்.

மலட்டாற்றின் குறுக்கே அணை

11—

*256.—திரு. வ. சத்தியமூர்த்தி :

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம் கடலாடி, முதுகுளத்தூர், கமுதி பகுதிகளில் ஓடும் மலட்டாற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதனுடைய மதிப்பீடு எவ்வளவு ?

(இ) நடப்பு நிதியாண்டில் அனுமதி அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) 1990-91 ஆம் ஆண்டு விலைவாசிப்படி மலட்டாற்று திட்ட திருத்திய மதிப்பீடு பற்றிய கருத்துரு தலைமைப் பொறியாளர் (திட்டங்கள் மற்றும் வடிவமைப்பு) அவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

(ஆ) 1990-91ஆம் ஆண்டு விலைவாசிப்படி திட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 17.25 கோடியாகும்.

(இ) இத்திட்டம் 1991-92 ஆம் ஆண்டிற்கான பகுதி இரண்டு திட்டத்தில் (Part II Scheme) சேர்த்துக்கொள்ளப்பட்டு ரூ. 17.25 கோடியில் ரூ. 40.00 லட்சம் இவ்வாண்டிற்காக ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மு. தென்னவன்.

திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர், அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த கடலாடி, முதுகுளத்தூர், கமுதி ஆகிய பகுதிகளில் வாழ்கிற மக்களின் மனம் குளிர்கிற வகையில் அவர்களின் நீண்டநாள் கோரிக்கையை

நிறைவேற்றி உத்தரவிட்ட தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கும் நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, இந்த ஆண்டு அந்தத் திட்டத்திற்கு 40 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாக குறிப்பிட்டிருக்கிறார்கள். எத்தனை ஆண்டுகளில் அந்த அணைக்கட்டு கட்டும் திட்டம் முடிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் இப்போது அந்த மலட்டாறு தாய்மை அடைந்துவிட்டதால் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் அதற்கு தாய் நதி அல்லது அம்மா நதி என்று பெயர் சூட்டப்படுமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒரு திட்டத்தை எடுக்கின்ற நேரத்திலே மொத்தமாக அந்த மதிப்பீட்டுத் தொகை சாங்ஷன் செய்யப்பட்டு, ஒவ்வோர் ஆண்டும் அதற்கான நிதி ஆதாரங்களை அரசு ஒதுக்கி வருகிறது. இந்தத் திட்டத்தைப் பொறுத்தமட்டில் நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வரவர்கள் இராமநாதபுரம் பகுதி வறட்சியான பகுதி என்ற காரணத்திற்காக பல்லாண்டுக் காலம் கிடப்பிலே இருந்த இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்ற உத்தரவை வழங்கி, இந்தத் திட்டம் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 40 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. வருகிற நிதி ஆண்டுகளில், அந்தந்த ஆண்டுகளில் உள்ள நிதி ஆதாரங்களுக்கேற்ப இந்தத் திட்டத்தை எவ்வளவு விரைவாக அரசு நிறைவேற்ற முடியுமோ அந்த அளவுக்கு நிதி ஆதாரங்களை ஒதுக்கி நிறைவேற்றித் தருமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் இங்கே பேசுகின்றபோது மலட்டாறு என்ற பெயரை மாற்றி, தாய் உள்ளத்தோடு இந்தத் திட்டத்தைத் தந்தமையால், நதியினுடைய பெயரை மாற்றி தாய் நதி அல்லது அம்மா நதி என்று பெயரிடலாமா என்று கேட்டார்கள். அந்தத் திட்டத்திற்கு மட்டுமல்ல, சொல்லுகின்றபோது நம்முடைய நாட்டைத் தாய்நாடு என்றுதான் சொல்லுவார்கள். ஆகவே மலட்டாறு என்ற பெயர் தொன்றுதொட்டு வழங்கும் பெயராக இருந்தாலும், நம்முடைய உறுப்பினர் அவர்களுடைய கேள்வி ஒரு வேண்டுகோளாக இருப்பதால், அதைப் பரிசீலித்து அரசு முடிவு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஜெ. பாலகங்காதரன். இது தொடர்புடைய கேள்வி கேளுங்கள்.



**திரு. ஜெ. பாலகங்காதரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, காமராஜர் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம், வ. உ. சிதம்பரனார் மாவட்டம் ஆகிய மாவட்டங்கள் அனைத்தும் பயன்பெறும் வகையில் அழகர் அணைத் திட்டம் என்ற திட்டம்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தத் திட்டம் பற்றி இருந்தால் பதில் சொல்லலாம். இன்னொரு திட்டத்திற்குப் போனால் பதில் வராது. உட்காருங்கள்.

அடுத்த வினா, வினா எண். 12, திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள்.

ஊராட்சிகளுக்கு தொலைக்காட்சிப் பெட்டி.

12—

*559—திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அனைத்து ஊராட்சிகளுக்கும் தொலைக்காட்சிப் பெட்டி வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

**மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆம்.

**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் 'ஆம்' என்று பதில் சொல்லியதற்கு மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில் அது எப்போது வழங்கப்படும், ஒரே ஆண்டில் தமிழகத்தில் உள்ள அனைத்து ஊராட்சி மன்றங்களுக்கும் வழங்கப்படுமா, அது கலர் டி.வி.யா, அது ஒயிட் அண்ட் பிளாக்கா அல்லது போர்ட்டபுளா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதுவரை தமிழகத்திலே இருக்கிற ஊராட்சி மன்றங்களுக்கு 12,277 தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இன்னும் 4,494 தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட இருக்கின்றன. நடப்பு நிதி ஆண்டில் நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி, தமிழக முதல்வரவர்கள் சார்பில் 1991-92ஆம் ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த நிதிநிலையைப் பொறுத்து சுமார் 700 கலர் டி.வி.க்களை வாங்கி, நிதி குறைவாக உள்ள ஊராட்சி

களுக்கு அளிக்கப்பட இருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மீதி உள்ளவர்களுக்கு நிதிநிலைக்கேற்ப மற்றைய ஊராட்சி மன்றங்களுக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக முதல்வரவர்கள், புரட்சித் தலைவி அவர்களுடைய முகத்தைப் பார்ப்பதற்கு தமிழகத்திலே இருக்கிற கோடிக்கணக்கான தாய்மார்கள் காத்திருக்கிற நேரத்தில் ஒவ்வொரு ஊராட்சி மன்றத்திற்கும் ஒரு டி.வி. வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் போகும்போதும், மற்ற சட்டமன்ற உறுப்பினர்கள் போகும்போதும் எங்களிடம் சொல்கிறார்கள். அந்த அடிப்படையில் என்ன சொன்னார்கள் என்றால், எல்லோரும் நேரடியாகப் பார்க்க முடியாது, ஆங்காங்கே வந்தாலும்கூட போய்ப் பார்க்க முடியாது, டி.வி.-யில் பார்த்து மகிழலாம் என்ற அடிப்படையில் டி.வி. கேட்கிறார்கள். ஒரு ஊராட்சிக்கு ஒன்று. பெரிய ஊராட்சி என்றால் 4, 5 குக் கிராமங்கள் இருக்கலாம். அதற்குத் தனித் தனியாகக் கொடுக்க வேண்டும். அதற்கு போர்ட்டபுள் டி.வி. கொடுக்கலாமா என்பதை ஆராயலாம். மேலும் முந்தைய ஆட்சிக் காலத்தில் வழங்கப்பட்ட டி.வி.க்கள் எல்லாம் சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றங்களின் தலைவர்கள் இல்லத்தில் இருப்பதாக நான் அறிகிறேன், புகார் வந்திருக்கிறது. அதை வைத்துக்கூட தாய்மார்கள் எல்லாம் ஒன்றுசேர்ந்து இந்தத் தொலைக்காட்சிப் பெட்டியைப் போட வேண்டும் என்று கேட்டும், மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தால் போடாமல், அதாவது புரட்சித் தலைவி அவர்கள் பதவியேற்பு விழாவைப் பார்க்கவேண்டுமென்று தாய்மார்கள் எல்லாம் கேட்டபோது அதைக் காண்பிக்காமல் மறுக்கப்பட்டிருக்கிறது. இப்படி அந்தத் தலைவர்கள் இல்லத்தில் இருக்கிற டி.வி. பெட்டிகளைப் பறித்து பொது இடத்தில் வைத்து நிகழ்ச்சிகளை மக்கள் பார்க்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

முற்பகல் 9-50

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் நம்முடைய இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் கிராம மக்கள் எல்லாம் நகரத்தில் இருக்கிற மக்களுக்கு இணையாக பல்வேறு வாழ்க்கைத் தரங்களை உயர்த்துவதற்காக தொலைக்காட்சிப் பெட்டிகள் பெரிதும் பயன்படுகிற வகையில் தொலைக்காட்சிப் பெட்டிகளை அங்கும் விஸ்தரிக்க வேண்டுமென்ற எண்ணம் இருந்தாலும், நடப்பு நிதியாண்டில் நிதிப் பற்றாக்குறை இருப்பதால் இந்த ஆண்டு ஒரு கோடி ரூபாயை ஒதுக்கி கிட்டத்தட்ட 700 கலர் டி.வி. பெட்டிகள் வாங்கி ஊராட்சி மன்றங்களுக்கு வழங்க இருக்கிறோம். மேலும் ஊராட்சி மன்றங்களில் நிதி



வசதி இருந்தால் அவர்களே தொலைக்காட்சிப் பெட்டிகளை வாங்கிக் கொள்ளலாம் என்று அரசு குறிப்பு இருக்கிற காரணத்தால் டி.வி. இல்லாத கிராமங்களுக்கு அரசு விரைவில் வாங்கி வழங்க தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்களைக் கலந்து முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. துரை ராமசாமி.

திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொலைக்காட்சிப் பெட்டிகளை, புரட்சித் தலைவர் அவர்கள் கிராமங்களில் உள்ள மக்களுக்குக் கொடுத்தபிறகு தான் கிராம மக்களுக்குப் பொது அறிவு வளர்வதற்கும், அன்றாட செய்திகளை உடனே தெரிந்து கொள்வதற்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அது ஒரு முக்கியமான விஷயமாக இருப்பதால் ஊராட்சி மன்றங்கள் அமைந்து இருக்கும் இடங்களில் மட்டும் கொடுக்காமல், ஊராட்சியில் இருக்கிற அத்தனை குக்கிராமங்களுக்கும் டி.வி. பெட்டிகள் கொடுக்கிற திட்டத்தை விரிவுபடுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிப் பற்றாக்குறை காரணமாகத்தான் விரிவுபடுத்தவில்லையே தவிர, அரசுக்கு எல்லா குக்கிராமங்களுக்கும் டி.வி. பெட்டிகள் வழங்கவேண்டுமென்ற உணர்வு இருக்கிற காரணத்தால், நிதிநிலைக்கேற்ப இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : செல்வி ஜி. மல்லிகா.

செல்வி ஜி. மல்லிகா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இதயதெய்வம் புரட்சித் தலைவியின் புரட்சிகரமான இந்தத் திட்டத்தின்படி, உள்ளாட்சியில் தொலைக்காட்சிப் பெட்டிகள் அமைப்பதைவிட, ஆதிதிராவிட மக்கள் வாழும் காலனிகளில் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம மக்களுக்குப் பொது வான இடத்தில் டி.வி. பெட்டிகள் வைக்கப்படுகின்றன. மாண்பு மிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று நிதி வசதி இருந்தால் அந்தப் பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொலைக்காட்சிப் பெட்டிகளை ஊராட்சி மன்றத்திற்கு வழங்கினால், அந்த ஊராட்சி மன்ற அலுவலகத்தில் வைத்துக் கொண்டால் மக்களுக்குப் பயன் இருக்காது. முன்பு வானொலி நிலையங்கள் என்று ஒவ்வொரு கிராமத்திற்கும் கட்டிக் கொடுத்து இருந்தார்கள். அதுமாதிரி இடத்தில் வைப்பதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஊராட்சி மன்றத்தில் மன்ற அலுவலகங்கள் இருக்கும் இடத்தில் வைக்கவேண்டுமென்று குறிப்பு இருக்கிறது. முன்பெல்லாம் வானொலிப் பெட்டிகள் பல்வேறு இடங்களில் வைக்கப்பட்டிருந்தன. அப்படி வைப்பதற்கு நிதி வசதி இல்லாததனால்தான் பொதுவான இடத்தில் வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ம. தனபால்

திரு. ம. தனபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி நிதியிலிருந்துதான் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கவேண்டுமென்று விதி இருந்து வருகிறது. அந்த விதியை மாற்றி அரசு தொகுப்பு நிதியிலிருந்து, அதாவது புரட்சித் தலைவி ஆட்சி பல கோடி ரூபாய் பற்றாக்குறை வந்தாலும் அஞ்சாத ஆட்சியாக இருக்கிற காரணத்தால், இதற்கு சில கோடிகளை ஒதுக்கி, அரசு தொகுப்பு நிதியிலிருந்து வழங்க ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஒதுக்கியிருக்கிற ஒரு கோடி ரூபாயும் அரசு நிதியிலிருந்துதான் வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 13. திரு. சி. ஞானசேகரன். மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள்.

வேலூரில் வேளாண்மைப் பல்கலைக்கழகம்.

13—

*502— திரு. சி. ஞானசேகரன் :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வேலூரில் வேளாண்மைப் பல்கலைக்கழகம் துவங்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது துவங்கப்படும் ?



மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் ' ஆம் ' என்று பதில் வந்து, எனக்கு மட்டும்—புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியில் ' இல்லை ' என்ற சொல்லே அகராதியில் ' இல்லை ' என்று சொல்கிற அளவில் இருந்தும்-இல்லை என்று கூறியிருக்கிறார்கள். வட ஆற்காடு அம்பேத்கர் மாவட்டம் என்பது, தஞ்சைக்கு அடுத்தபடியாக தமிழகத்திலே இரண்டாம் நிலையை வகித்து நெல்லை உற்பத்தி செய்கிற மாவட்டம்— எங்கள் மாவட்டம்தான்.

முற்பகல் 9-55

தஞ்சையிலே காவிரியாறு ஓடிக்கொண்டிருக்கிறது. ஆனால் எங்கள் மாவட்டத்தில் இருக்கிற பாலாற்றில் தண்ணீரைப் பார்த்துப் பல ஆண்டுகள் ஆகிவிட்டன. எப்படி புரட்சித் தலைவி திரு. பங்காரப்பாவோடு பனிப்போர் தொடர்ந்திருக்கிறாரோ அதே போல பெத்தமங்கலம் ஏரியிலும் நடத்த வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே பெத்தமங்கலம் ஏரியைத் திறந்துவிட்டால் தான் பாலாற்றுக்குத் தண்ணீர் வரும். நிலத்தடி நீரை நம்பியிருக்கும் எங்களுடைய மாவட்டத்தில் வேளாண்மை உற்பத்தி செய்வதற்குப் பல்கலைக் கழகம் இருந்திருந்தால் நலமாக இருந்திருக்கும். ஆனால் அமைச்சர் அவர்கள் இல்லையென்று சொல்லி விட்டார்கள். அது இல்லை என்று சொன்னாலும், அட்லீஸ்ட் ஒரு விவசாயக் கல்லூரியையாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்களுடைய மாவட்டத்திற்குத் தந்து உதவ வேண்டும். காரணம் மற்ற இடங்கள் எல்லாம் நஞ்சையை நம்பியுள்ள இடங்கள். ஆனால் நாங்கள் புஞ்சையை நஞ்சையாக ஆக்க வேண்டிய ஒரு நிலையிலே இருந்து கொண்டிருக்கிறோம். ஆகவே அமைச்சர் அவர்கள் எங்களுடைய வேலூரிலோ—அல்லது அதற்குப் பக்கத்திலே இருக்கக்கூடிய ராணிப்பேட்டையில் நவலத் என்ற ஒரு இடம் இருக்கிறது. அங்கே அரசுக்குச் சொந்தமான இடங்கள் ஏராளமாக இருக்கின்றன. அந்த இடத்திலேயாவது, அல்லது வேலூர் தொகுதியில் ஏதாவது ஒரு இடத்திலாவது ஒரு விவசாயக் கல்லூரியையாவது நிறுவுவார்களா, அதற்கு அரசிடம் திட்டம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், வேளாண்மைப் பல்கலைக் கழகம் வேண்டாம், எங்களுக்கு வேளாண்மைக்

கல்லூரியையாவது தர வேண்டும் என்று கேட்கிறார்கள். கொடுத்துக் கொடுத்து கை சிவந்த குமண வள்ளல் புரட்சித் தலைவருடைய அரசியல் வாரிசு, தமிழகத்தினுடைய காவல் தெய்வம், எங்களுடைய புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்திலே இல்லையென்று சொல்ல மாட்டோம். ஆனால் நாங்கள் எதை இல்லையென்று சொல்ல வருத்தத்தோடு நினைக்கிறோமோ அதைத்தான் உறுப்பினர் வேண்டும் என்று கேட்டு வாதாடிக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில், கோவையில் இயங்கி வந்த வேளாண்மைக் கல்லூரி 1971ஆம் ஆண்டு முதல் வேளாண்மைப் பல்கலைக் கழகமாக இயங்கி வருகிறது. இப்பல்கலைக் கழகத்தின்கீழ், கோவை, திருச்சி, கிள்ளிகுளம், மதுரை ஆகிய இடங்களில் வேளாண்மைக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இதைத் தவிர அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஒரு வேளாண்மைக் கல்லூரி செயல்பட்டு வருகிறது. புதுவை மாநிலம், காரைக்காலில் உள்ள வேளாண்மைக் கல்லூரி இப்பல்கலைக் கழகத்தின் சார்பில் இணைக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர தமிழகத்தில் இப்படிப்பட்ட பல்கலைக் கழகத்தின்கீழ் 30 இடங்களில் ஆராய்ச்சி நிலையங்களும், 5 வேளாண்மை விஞ்ஞான அறிவியல் நிலையங்களும், 5 பயிர் பாதுகாப்பு மையங்களும் இருக்கின்றன.

ஒரு புதிய வேளாண்மைக் கல்லூரியைத் துவக்க ஐந்தாண்டுகளுக்கு ஆகும் செலவு ரூபாய் 27 கோடி. அது மட்டுமல்ல. ஆண்டுதோறும் ரூபாய் 5 கோடி நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டிய திட்டத்திலே இந்தக் கல்லூரி துவக்கப்பட வேண்டும். நிதிநிலைப் பற்றாக்குறை உள்ள இந்தக் கால நிலையிலே, இவ்வளவு கூடுதல் செலவிற்கு அரசாங்கத்தில் நிதிநிலை இல்லாததால் மேலும் ஒரு வேளாண்மைக் கல்லூரியையே துவக்க முடியாது என்ற இந்தக் கால கட்டத்திலே வேளாண்மைப் பல்கலைக் கழகம் எப்படி துவக்கப்படும் என்பதை இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். அது மட்டுமல்ல. வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலே படித்திருக்கக்கூடிய அதிகமான பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க முடியாத நிலை இன்றைய தினம் இருக்கிறது. எனவே அவர்கள் பல கால கட்டங்களிலே போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய போராட்டங்களை தாய் உள்ளத்தோடு, மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் அணுகிக் கொண்டிருக்கிறார்கள். எனவே சாத்தியக் கூறு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாமல் போய் விடுமோ என்று அஞ்சுவதாகவும், எத்தனையோ கோடி ரூபாய் தேவைப்படுகிறது என்றும் அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். இப்படியே எங்கள் மாவட்டத்தை நீங்கள் '' அம்போ '' என்று விட்டுவிட்டால் பின்னால் அது சகாரா பாலைவனமாகத்தான் மாறிவிடுமோ என்ற ஒரு நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே நீங்கள் எதிர்காலத் திட்டங்களைத் தொலைநோக்குப் பார்வையோடு பார்த்து—எத்தனை கோடி வந்தாலும் எங்களுடைய புரட்சித் தலைவி இந்த இடத்திலே இருக்கிறார், எதையும் சமாளிக்கத் திறமை உள்ளவர் இருக்கிறார். ஆகவே ஒரு விவசாயக் கல்லூரியை, தயவுசெய்து பரிசீலனை செய்து கொண்டு வந்து எப்படியாவது சேர்க்க முடியுமா என்று அமைச்சர் அவர்களை நான் மீண்டும் வேண்டுகிறேன்.



மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் காலத்திலே, சகாரா பாலைவனங்கள் எல்லாம் சோலைவனங்களாகக் காட்சி தருகிற திட்டங்களை இந்த வேளாண்மைத் துறை தீட்டியிருக்கிறது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அச்சப்பட வேண்டாம். நிச்சயமாக அது சோலைவனமாக ஆக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. விசுவநாதன்.

திரு. ஜி. விசுவநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1980-81ஆம் ஆண்டு வட ஆற்காடு மாவட்டத்திலே இருக்கின்ற எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் கையெழுத்துப்போட்டு அன்றைய முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களிடத்தில் வேளாண்மைக் கல்லூரி வேண்டும் என்று கேட்டோம். எங்களுடைய மாவட்ட அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தீர்மானம் போட்டு தலைவர் அவர்களிடத்திலே கொடுத்தபோது, அடுத்த கல்லூரி வரும்போது கவனிப்போம் என்று சொல்லி இருந்தார்கள். இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் அடுத்துத் துவக்க இருக்கின்ற வேளாண்மைக் கல்லூரிக்கு வட ஆற்காடு மாவட்டத்துக்கு முதலிடம் அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக ஒரு வேளாண்மைக் கல்லூரி துவக்கக்கூடிய கால கட்டத்தில் அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே வேளாண்மைக் கல்லூரியில் படித்த பட்டதாரிகளுக்கு மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் வேலை கொடுக்க முடியவில்லை என்று சொன்னார்கள். வேளாண்மைத் துறையில் படித்தவர்கள் ஏன் அவர்களே சொந்தமாக வேளாண்மை செய்யக்கூடாது ? அவர்கள் அரசாங்கத்தினுடைய வேலையையே நம்பி இருக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை வரவேற்கின்றேன். படித்தவர்கள் தாங்களாக வேளாண்மையில் ஈடுபடுவதை இவ்வரசு மகிழ்ச்சியாக வரவேற்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. உரிமைப் பிரச்சினை.

**9–9–1991 ஆம் நாளன்று நடைபெற்ற அவை நிகழ்ச்சிகள் பற்றி சில பத்திரிகைகள் தவறான செய்திகளை வெளியிட்டுள்ளது குறித்து.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை உரிமை மீறல் பிரச்சினை. மாண்புமிகு உறுப்பினர்கள்.........

திரு. இளம்வழுதி : தலைவர் அவர்களே,....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். நான் முடித்துவிடுகிறேன் ; நான் நிற்கிறேன். அவை உரிமை மீறல் பிரச்சினைக்குத்தான் முதலிடம். அவை உரிமை மீறல் பிரச்சினை குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ச. காந்திராஜன், திரு. ம. தனபால், திரு. தே. ஜனார்தனன், திரு. சி. இராமசுவாமி, திரு. சி. ஞானசேகரன், திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், திரு. கே. தவசி மற்றும் திரு. உ. பலராமன் ஆகியோர் நேற்றைய தினம் அவையில் நடந்த நிகழ்ச்சிகளைத் தவறாகவும், அவைக்குக் களங்கம் ஏற்படுத்துகிற வகையிலேயும் மாலை முரசு, முரசொலி மற்றும் தினகரன் ஆகிய நாளிதழ்கள்





செய்திகள் வெளியிட்டதாகக் கூறி அந்நாளிதழ்கள் மீது அவை உரிமை மீறல் பிரச்சினை குறித்து அறிவிப்புகளைக் கொடுத்து உள்ளார்கள். இது எவ்வாறு அவை உரிமை மீறிய பிரச்சினையில் வரும் என்பதை மிகச் சுருக்கமாக விளக்கக் கேட்டுக்கொள்கிறேன். திரு. பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : தலைவர் அவர்களே....

திரு. இளம்வழுதி : தலைவர் அவர்களே, ...... நேற்றுக் கொடுத்த..........(கூச்சல், குழப்பம்) ......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து உட்காருங்கள். ஏற்கெனவே உரிமை மீறல் பிரச்சினை கொடுத்து இருக்கிறார். அதைக் கேட்டுக்கொண்டு இருக்கிறேன்.

திரு. இளம்வழுதி : தலைவர் அவர்களே, ......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, இல்லை, நீங்கள் ஒரு பிரச்சினையை என்னுடைய கவனத்துக்குக் கொண்டுவந்து இருக்கிறீர்கள். அவ்வாறு எத்தகைய நிகழ்வுகளும் இந்த அவையில் நடைபெறவில்லை என்பதை நானும் இந்த அவையில் உள்ள அத்தனை உறுப்பினர்களும் கண்ணாரக் கண்டு இருக்கிற காரணத்தால், அந்தப் பிரச்சினையைத் தள்ளுபடி செய்து இருக்கிறேன். அருள்கூர்ந்து அதற்குமேல் அதிலே விளக்கம் வேண்டாம். அவரைப் பேச அனுமதியுங்கள்.

(திரு. இளம்வழுதி : நின்றுகொண்டு இருந்தார்) (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து, அவை உரிமை மீறல் பிரச்சினையை பல்வேறு உறுப்பினர்கள் கொடுத்து இருக்கிறார்கள். அவரை நான் பேச அழைத்து இருக்கிறேன். நீங்கள் அமர வேண்டும்.

திரு. இளம்வழுதி : **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து, அவர் பேசுவது அவைக் குறிப்பில் இடம் பெறாது. அவையில் கூறாத ஒன்றைக் கூறியதாக, இவ்வாறு திரும்பத் திரும்பப் பேசுவது— (குறுக்கீடு) நீங்கள் உட்கார வேண்டும். நேற்றே, நீங்கள் முறைகேடாக நடந்து கொண்டீர்கள் நேற்றையதினம் நீங்கள் முறைகேடாக நடந்து கொண்டீர்கள், பத்திரிகையாளர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. இளம்வழுதி

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

பேசிய எதுவும் அவைக் குறிப்பில் ஏறவில்லை. என்னுடைய அறிவுரையை மீறிப் பேசிக்கொண்டு இருக்கிறார். எனவே அவர் பேசிய எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது.

திரு. இளம்வழுதி : **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து உட்கார வேண்டும். இல்லாத பிரச்சினையைப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். நான் முதலிலேயே சொல்லி இருக்கிறேன். இந்த அவையில் நடக்காத ஒன்றை, நடந்ததாக நீங்கள் பேசிக் கொண்டு இருப்பது சரியல்ல. நேற்றைய தினமும் நீங்கள் இதேபோல் நடந்து, இன்றும் அதே முறையிலே நடந்துகொண்டு இருக்கிற காரணத்தால் அவையினுடைய எஞ்சிய கூட்டத் தொடர் முழுவதும் உங்களை அவையிலே இருந்து நீக்கி வைக்க உத்தரவிடுகிறேன் ; வெளியேற உத்தரவிடுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). அவையை விட்டு வெளியேற உத்தரவிடுகிறேன். அவையை விட்டு வெளியேற வேண்டும். அவையை விட்டு வெளியேற வேண்டும். (உறுப்பினர் திரு. இளம்வழுதி நின்றுகொண்டே இருந்தார்) அவையை விட்டு வெளியேற வேண்டும். (குறுக்கீடு) அவையைவிட்டு வெளியேற வேண்டும். (குறுக்கீடு) அவையைவிட்டு வெளியேற வேண்டும். மார்ஷல், உள்ளே வந்து அவரை வெளியேற்றலாம்; (உறுப்பினர் திரு. இளம்வழுதி நின்று கொண்டே இருந்தார்)மார்ஷல், அவரை வெளியேற்ற உத்தரவிடுகிறேன். அவர் தெரிவிப்பதுபோல எந்தப் பிரச்சினையும் அவையில் நடைபெறவில்லை. இட்டுக்கட்டி இந்த அவைக்கும் சரி, மக்களுக்கும் சரி, தவறான ஒரு கருத்தை அவர் வெளியிட்டுக் கொண்டிருப்பது கண்டிக்கத்தக்கது. அவர் பேசிய எதுவும் அவைக் குறிப்பிலே ஏறவில்லை. அடுத்து திரு. பீட்டர் அல்போன்ஸ்.

(உறுப்பினர் திரு. இளம்வழுதி பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டார்.)

முற்பகல் 10-05.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : தலைவர் அவர்களே.....

திரு. அ. செல்வராசன் : தலைவர் அவர்களே.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் பேசி முடிக்கட்டும். அவையிலே உரிமை மீறல் பிரச்சினைக்குத் தான் முதல் இடம். உரிமை மீறல் பிரச்சினை பல்வேறு உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு) அவர்கள் சார்பில் அவர் பேசுகிறார். உரிமை மீறல் பிரச்சினைக்குப் பிறகு தான் எந்தப் பிரச்சினையையும் எடுக்க முடியும். உங்களுக்கு விதி தெரியாதது அல்ல. திரு. பீட்டர் அல்போன்ஸ்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



(திரு. அ. செல்வராசன் அவையை விட்டு வெளியேறினார்.)

*திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : தலைவர் அவர்களே, நேற்றைய தினம் இந்த மாமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் பேசுகிற போது அவர்கள் நடந்து கொண்ட முறையற்ற விதத்தினையும், நீங்கள் மீண்டும் மீண்டும் அவர்களை வெளியேற வேண்டுமென்று கூறிய பிறகும், காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களாகிய நாங்கள் எங்கள் வாழ்க்கையில் நெஞ்சம் நிறைந்த தலைவராக ஏற்றுக் கொண்டிருக்கிற எங்கள் மாபெரும் தலைவர் இராஜீவ் காந்தியைக் கொன்றது நீங்கள் தான் என்று திரும்பத் திரும்பச் சொன்ன பிறகும் கூட, நாங்கள் அமைதி காக்க வேண்டுமென்று பலமுறை முயற்சித்த பிறகும் கூட, அவர் விடாமல் எங்களை ஒவ்வொருவராக பெயர் சொல்லி ' நீ தானடா காரணம் ', ' நீ தானடா காரணம் ' என்று சொன்ன பிறகு, நீங்கள் அவரை அவையை விட்டு வெளியேறச் சொன்னீர்கள். அப்போது கூட நான் அருகில் இருந்து கொண்டு அவரை சமாதானப்படுத்தி, 'பேரவைத் தலைவர் உங்களை வெளியே போகச் சொல்லி விட்டார். ஆகவே, தயவுசெய்து விவகாரம் செய்யாமல் வெளியே போங்கள்' என்று தான் நான் அவரைச் சொன்னேன். எனது அருகில் இருக்கிற நண்பர் பலராமன் அவர்கள் கூட அவரை, 'நீங்கள் போய் விடுங்கள்' என்றும், 'ஏன் வீணாக சபை நேரத்தை வீணாக்கி, எங்கள் எல்லோருடைய மனதையும் புண்படுத்தி, ஒரு அசிங்கமான சூழ்நிலையை, இந்த மன்றம் ஆரம்பித்ததிலிருந்து இதுவரையில் நடக்காத ஒன்றை ஏன் நடத்துவதற்காக திட்டமிட்டு வந்திருக்கிறீர்கள்' என்று கேட்டு, அவரை வெளியே போகச் சொன்னபோது, அவர் ஏதோ ஒரு நாடகத்தை நடத்தி முடிக்க வேண்டுமென்ற முடிவோடு உள்ளே வந்தவர் அதை நடத்தி முடித்து வெளியே போன பிறகு, வெளியே சென்று பத்திரிகைகளுக்குச் செய்தி கொடுத்த போது, நண்பர் பலராமன் அவர்கள் அவரை அடிவயிற்றில் குத்தியதாகவும், நான் கையைப் பிடித்து முறுக்கியதாகவும் ஒரு செய்தியை பத்திரிகைகளுக்குக் கொடுத்திருக்கிறார். உங்களுக்குத் தெரியும். நீங்களே நேற்று சாட்சியாக இருந்தீர்கள், நாங்கள் நேற்று எப்படி நடந்து கொண்டோம் என்று. இது எங்களுடைய உரிமையை மீறிய செயல். அதைவிட அதிகமாகச் சொல்ல வேண்டும். வேஷ்டியை அவரே அவிழ்த்து விட்டுக் கொண்டார். நாங்கள் எல்லோரும் பார்த்தோம். இங்கேயிருக்கிற உறுப்பினர் நண்பர் சண்முகம், இங்கே இருக்கிற எல்லோருக்கும் தெரியும். வேஷ்டியை வேண்டுமென்று அவிழ்த்து விட்டுவிட்டு, அவர் வெளியே போனவுடன் அதைத்

தான் சொன்னார். என் வேஷ்டி அவிழ்ந்ததைப் பார்த்தீர்களா என்று லாபியிலே போய் கேட்டார். அப்படி ஒரு திட்டமிட்டு நடந்துகொண்ட ஒரு நண்பர், மீண்டும் இன்று வந்து நேற்று யாரும் சொல்லாத ஒரு செய்தியை, இந்தச் சட்டமன்றத்திற்குள்ளே ஜாதி, மத, இனபேதமின்றி நாம் ஒவ்வொருவரையும் உறுப்பினர்கள் என்று மரியாதையோடு அங்கீகரித்துக் கொண்டிருக்கிற ஒரு பெரிய தாய் உணர்வோடு, ஒரு சகோதர உணர்வோடு வாழ்ந்து கொண்டிருக்கிற இந்த மன்றத்திலே, ஜாதி வித்தை, விஷ வித்தை வேண்டுமென்றே விதைக்க வேண்டுமென்று, நேற்று இரவு எங்கேயோ தீட்டப்பட்ட சதித் திட்டத்தினுடைய ஒரு கட்டமாக, இன்றைய தினம் இந்த அவையிலே வந்து சொல்கிறார். உண்மையிலேயே நேற்று அது நடந்திருக்கும் என்றால் நேற்று மாலை பத்திரிகையில் வந்திருக்க வேண்டும். மாலை பத்திரிகையில் வரவில்லை. இது இரவிலே நடந்த சதி. காலையில் அம்பலமாகிறது. ஆகவே, இதையெல்லாம் நீங்கள் அங்கீகாரம் செய்து கொண்டு—இப்படிப்பட்ட நபரிடமிருந்து தயவுசெய்து எங்களைக் கொஞ்சம் ஒரமாக வைத்து விட்டால் நாங்கள் எல்லாம் நிம்மதியாக இருப்போம். தினசரி இதைப் போலவே எதையாவது செய்ய வேண்டுமென்று வருகிறார். இது எங்களுடைய உரிமை மீறிய செயல். இதை தயவுசெய்து உரிமை மீறல் குழுவிற்கு அனுப்பி, விசாரணை செய்து, நீதி வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பார்த்ததைச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது உரிமை மீறல் பிரச்சினை (குறுக்கீடு). திரு. குமாரதாஸ் அவர்கள் நான் முடித்த பிறகு சொல்லுங்கள். இது உரிமை மீறல் பிரச்சினை. (குறுக்கீடு) இது உரிமை மீறல் பிரச்சினை. உரிமை மீறல் பிரச்சினையைக் கொடுத்திருக்கிறார். (குறுக்கீடு) நான் உரிமை மீறல் பிரச்சினையில் அவரைக் கேட்டிருக்கிறேன். பத்திரிகை பற்றிய பிரச்சினைகள் எல்லாம் இதிலே வருகிறது.

டாக்டர் தே. குமாரதாஸ் : நடந்த உண்மையைச் சொல்கிறேன்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து இதிலே பத்திரிகைகள் பற்றிய பிரச்சினைகள் எல்லாம் வருகிறது. நீங்கள் தயவுசெய்து என்னைப் பேச அனுமதியுங்கள். நான் நிற்கிறேன். (குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள். என்னைப் பேச அனுமதியுங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து அனைவரும் உட்காருங்கள்.

டாக்டர் தே. குமாரதாஸ் : நான் பார்த்தேன்.... (குறுக்கீடுகள்)



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் உறுப்பினர் ஒருவர் உரிமை மீறல் பிரச்சினை பற்றி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவாரானால், பேரவைத் தலைவர் இந்த உரிமை மீறல் பிரச்சினை பற்றிய தீர்மானத்தை படித்து அவர்களே முடிவு செய்யலாம். அதுபற்றி அவர்களே தீர்ப்பு அளிக்கலாம். சில சமயங்களில் அவர்களுக்கு விளக்கங்கள் தேவைப்படுமானால் எந்த உறுப்பினர் உரிமைப் பிரச்சினையை கொண்டு வந்தாரோ அவர் ஏன் இந்த உரிமைப் பிரச்சினையை கொண்டு வந்தார் என்று அவர்களை மட்டும் காரணம் கேட்க உரிமை உண்டு. அந்த அடிப்படையில் தான் விளக்கம் கேட்டிருக்கிறார்கள். விளக்கம் சொன்னதற்குப் பிறகு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இது பற்றி என்ன முடிவெடுக்கப் போகிறார்கள், என்ன தீர்மானிக்கப் போகிறார்கள் என்பது பின்னால் தெரியும்.

முற்பகல் 10-10

அதற்கு இடையிலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இதுபற்றி மற்றவர்கள் கருத்து சொல்ல இருக்கிறார்களா என்று கேட்டால், அப்போது வேண்டுமானால், சொல்லலாமே தவிர, அவரவர்கள், இல்லாவிட்டால், பேரவைத் தலைவர் அவர்கள் ஒரு முடிவை எடுக்கிற வரையிலும் இடையிலே புகுந்து, இதற்கு சம்பந்தம் இல்லாத அளவிற்கு யாரும் சொல்லவேண்டிய அவசியம் இல்லை; கேட்டால் வரலாம். அதுவும் உரிமைக் குழுவிற்குப் போகுமானால், உரிமைக் குழுவிலே சாட்சியம் சொல்வதற்கு யார் வேண்டுமானாலும் வரலாம். ஆனால் என்ன தீர்ப்பை பேரவைத் தலைவர் எடுக்கிறார் என்பதை, விளக்கங்கள் கேட்டதற்குப் பிறகுதான் அவர்கள் முடிவு செய்வார்கள்.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பிரச்சினையை நீங்கள் எழுப்பவில்லை. இதை எழுப்பியிருக்கிற உறுப்பினர் கேட்டிருக்கிறார். இதிலே பத்திரிகைகள் எல்லாம் வருவதினாலே, இதைப்பற்றி நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன்.

திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இங்கே தெரிவித்த கருத்துக்களோடு ஏற்கெனவே ஏனைய உறுப்பினர்களும் எனக்குக் கொடுத்திருக்கிற தகவல்களின்படி மேலெழுந்த வாரியாகப் பார்க்கிறபோதே, இந்த நாளிதழ்கள் உரிமை மீறல் பிரச்சினைக்கு ஆட்படுகின்றன என்றும் நான் கருது

கிறேன். இருந்தாலும் இது பத்திரிகைகள் தொடர்பான பிரச்சினையாதலால், அந்தப் பத்திரிகை ஆசிரியர்களுக்கு எழுதி விளக்கம் கேட்டு, அதன் மீது என்னுடைய தீர்ப்பை வழங்கலாம் என்று இருக்கிறேன்.

அதோடு கூட, இந்த மூன்று நாளிதழ்களில், முரசொலி நாளிதழ் மட்டும் நீக்கப்பட்ட பகுதியை, அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்ட பகுதியை, அப்படியே வெளியிட்டதோடு, அவைத் தலைவர் சொன்ன தீர்ப்பு சரியாக காதிலே விழவில்லை என்றும் ஒரு குறிப்பை எழுதியிருக்கிறார்கள். இது அவையின் உரிமையையும், அவைத் தலைவருடைய உரிமையையும் நேரடியாகப் பாதிக்கிற ஒரு செய்தி என்று கருதுகிறேன். எனவே, அந்த இதழ் மீது நேரடியாக நானே உரிமைக் குழுவிற்கு அந்த இதழினுடைய பிரச்சினையை அனுப்பி வைக்கிறேன்.

அதோடு கூட, இப்படிப்பட்ட நாளிதழ், இங்கே பத்திரிகையாளர் மாடத்தில் இருக்கவேண்டுமா என்கிற கருத்தையும் வழங்குமாறு, அவைக்கு என்று இங்கே அமைக்கப்பட்டு இருக்கிற பத்திரிகையாளர் ஆலோசனைக் குழு, Press Advisory Committee-க்கு இந்தப் பிரச்சினையை அனுப்பி வைக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பிரச்சினையில்லாமல் வேறு பிரச்சினை என்றால் பேசுங்கள். (திரு. வே. தம்புசாமி) (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையின் நடவடிக்கைகள் பத்திரிகைகளில் வெளிவருவதைக் கட்டுப்படுத்தவும், செய்திகள் வெளிவராமலே தடுக்கவும், இந்த அவையின் தலைவருக்கு, சபாநாயகருக்கு உரிமை உண்டு. அப்படி இருக்கையில், பெரும்பாலாக அவையின் நடவடிக்கைகள் செய்திகளாக பத்திரிகைகளிலே வெளியிடப்படுவதை, இந்த அவை தடுப்பதில்லை. இந்த ஜனநாயக உரிமையை சபாநாயகரும் கட்டுப்படுத்துவதில்லை. ஆனால் அவையில் நடைபெற்ற நடவடிக்கைகளை வேண்டுமென்றே, திரித்துக்கூறி இட்டுக்கட்டி, அவைக்குக் களங்கம் ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கத்துடன் ஒரு உறுப்பினர் பத்திரிகைகளுக்கு செய்திகளைத் தருவாரேயானால், அது நிச்சயமாக உரிமை மீறல் பிரச்சினையாகும். அதில் நடவடிக்கை எடுக்கவும்,



மேற்கொண்டு கடுமையான தண்டனை அளிக்கவும், சபா
நாயகருக்கு உரிமை உண்டு. எனவே இதைப்பற்றி மேற்
கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுவதைத் தவிர்க்க
லாம் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பத்திரிகைகள் மீது
நான் வழங்கிய தீர்ப்பு அப்படியே இருக்கிறது. அந்த சம்
பந்தப்பட்ட உறுப்பினர் மீதும் உரிமைப் பிரச்சினை
கொடுத்திருக்கிறார்கள். அது உறுப்பினர் சம்பந்தப்பட்ட
பிரச்சினை என்கிற காரணத்தால், அதுபற்றிய கருத்துக்
களைக் கேட்க அவருக்கே கடிதம் எழுதியிருக்கிறேன். அது
வந்ததற்குப் பிறகு, அதன் மீது என்னுடைய தீர்ப்பை
வழங்குகிறேன். (குறுக்கீடு). திரு. தம்புசாமி.

*திரு. வே. தம்புசாமி : பேரவைத் தலைவர் அவர்களே,
தீர்ப்பைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. இந்த நிகழ்ச்சி
யிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள்
பேசுகிறபோது அவர்களை ஒதுக்கி வைக்க வேண்டும் என்று
கூறினார்கள். எந்த நோக்கத்தில் அவர்களை ஒதுக்கி வைக்க
வேண்டும் என்று கருதுகிறார்கள் என்பதை விளக்கவேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை நான் எடுத்
துக்கொள்ளவில்லை. அவர், தன்னை ஒதுக்கி, இந்தப் பக்
கம் கொண்டுவரவேண்டும் என்று சொல்லி, கேட்டுக் கொண்
டிருக்கிறார். திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நேற்றைய தினம் பத்திரிகையிலே வந்திருக்கிற
செய்திகளை நானும் பார்த்திருக்கிறேன், படித்திருக்கிறேன்.
அநேகமாக இது நடந்திருக்கிற சம்பவம், நாங்கள் பேசிக்
கொண்டிருக்கிறபோது......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீர்ப்புக்கு மேலே
எதுவும் பேசக்கூடாது. நீங்கள் அதைப் பற்றிச் சொல்
வது சரியில்லை. (குறுக்கீடு).

**

டாக்டர் தே. குமாரதாஸ் :

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் இந்த
இடத்தில் அமர்ந்திருந்து இந்தப் பக்கமாக பார்த்துக்
கொண்டிருப்பது போல், நானும் இந்தப் பக்கமாக இங்கே

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

யிருந்து அந்தப் பக்கமாக பார்த்துக் கொண்டு தான் இருந்தேன். நீங்களாவது திரும்பித்தான் பார்க்கவேண்டும். இல்லாததை வேண்டுமென்றே தெரிவிக்க வேண்டாம். (குறுக்கீடு) உரிமைக் குழுவிற்கு வருகிறபோது அங்கே வந்து நீங்கள் சொல்லலாம். தயவு செய்து உட்காருங்கள். இதிலே வேண்டாம். உரிமைப் பிரச்சினைக் குழுவிற்கு இது வருகிறபோது அங்கே வந்து நீங்கள் இந்தத் தகவலைச் சொல்லலாம். என்னுடைய தீர்ப்பிற்கு மேலே எதுவும் வேண்டாம். (குறுக்கீடு) உங்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. இதற்கு மேலே நீங்கள் பேசிக் கொண்டிருப்பது நல்லது இல்லை. தயவு செய்து வேண்டாம். உட்காருங்கள். என்னுடைய தீர்ப்பில் நீங்கள் கருத்துச் சொல்வது சரியல்ல. அதாவது உங்களுக்கு இங்கே நடந்த சில நிகழ்ச்சிகள் தெரியும் என்றால் உரிமைக் குழுவிலே வந்து உங்களுடைய கருத்துரைகளை வழங்கலாம். அங்கே உங்களுடைய கருத்துரைகளைச் சாட்சியமாக பதிவு செய்து முடிவு எடுக்கப்படும். தயவு செய்து உட்காருங்கள். என் தீர்ப்பின் மீது திரு. குமாரதாஸ் அவர்கள் தெரிவித்த சில கருத்துக்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. தயவு செய்து உட்காருங்கள்.

(திரு. வே. தம்புசாமி, திரு. ஜி. பழனிசாமி, மற்றும் டாக்டர் தே. குமாரதாஸ் ஆகியோர் வெளிநடப்புச் செய்தனர்).

## 3. தகவல் கோரல்.

**மதுரையில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக நடைபெறும் பிரச்சாரங்களைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த நிகழ்ச்சி. திரு. குமரி அனந்தன் மிக முக்கியமான ஒரு பிரச்சினை பற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர என்னுடைய அனுமதியைக் கேட்டிருக்கிறார். நான் அனுமதி அளித்திருக்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே... ... ... ... ... ... ... ... ... ... .(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குமரி அனந்தன் அமருங்கள். திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,— — — — — (குறுக்கீடு).





மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதன் மீது விவாதம் வேண்டாம். அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்கியிருக்கிறேன்.

திரு. எஸ். பீட்டர் அல்போஸ். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் தம்புசாமி சொன்னதை நீக்கியிருக்கிறீர்களா என்று கேட்கிறேன். அவர் சொன்னார். 'It is a will conceived conspiracy against both the A.I.A.D.M.K. and the Congress parties by these people'.? ஒதுக்கி வைக்கின்ற என்ற வார்த்தை, நண்பர் இளம்வழுதி சொன்ன வார்த்தை இவை எல்லாம்' 'with an ulterior motive' இந்த அரசை, நம்மை எல்லோரும், இரண்டு கட்சிகளையும் ஏதோ ஒரு ஜாதி துவேஷம் உள்ளவர்கள் போல் உண்டாக்குகின்ற ஒரு உணர்வை அவர்கள் இப்போது செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்தச் சதியைச் செய்கிறார்கள், ஒதுக்கி வைப்பது என்ற வார்த்தையை நான் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை நான் சொல்லிவிட்டேன். அதாவது நீங்கள் ஒதுங்கிக் கொள்ளவேண்டுமென்று சொன்னீர்கள். என்று நான் சொன்னேன். வேறு இடம் கேட்டார்கள் என்று நான் சொல்லியிருக்கிறேன். அதிலே அந்த அர்த்தம் வராது.

THIRU S. PETER ALPONSE : Just I wanted to bring it to the Hon. Speaker's notice.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குமரி அனந்தன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, 'ஸ்பெஷல் மென்ஷன்' என்ற சிறப்புக் குறியீடு ஒன்று செய்வதற்கு எனக்கு வாய்ப்பளித்ததற்கு நன்றி. இந்த சட்டசபை அமைந்ததற்குப் பிறகு இன்று தான் நான் எழுகிறேன். ஆகையால் தமிழ் மண்ணை ஆள வந்த பெண்ணரசிக்கு என்னுடைய வாழ்த்துக்களை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

சொல்லப்போவது ஒரு மிகவும் கசப்பான செய்தி. ஏனென்றால், 'ஆயுத கலாச்சாரம் வாழ்க. அகதிகளைத் திருப்பி அனுப்பாதே' என்ற சுவரொட்டிகளை மதுரை மாநகரத்திலே ஒட்டி, மதுரை மாநகரத்தின் மையத்திலே இருக்கின்ற, அரசாங்கத்திற்கு சொந்தமான நகராட்சிப் பயணிகள் விடுதியிலே கொடுமையானவர்கள் கூடி ஒரு கூட்டத்தை நடத்தியிருக்கிறார்கள். அதிலே 'சோனியா காந்தி விதவையானால்

என்ன, என்று ஒரு கேள்வி. 'ராஜீவ் காந்தியை கொலை செய்தது எந்த வகையிலே தவறாகும்' என்ற கேள்வி. 'சிவராசனை ஒருமையிலே வாடா, போடா என்று எழுதுகின்ற பத்திரிகையாளர்களே, உங்களுக்கு என்ன திமிர், என்று சொல்லுகின்ற ஆணவ வினா. இத்தோடு கூட 'ஆயுத கலாச்சாரத்தை குழி தோண்டி புதைப்போம் என்று சொல்கிறார்களே தமிழகத்தினுடைய முதல்வர்' என்று முதல்வரைப் பார்த்து கேலியான ஒரு கேள்வி. இத்தனையும் செய்கின்ற அளவிற்கு அங்கே செயல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அடுத்து, நெல்லையிலே இப்படி சில புலிகளுக்கு ஆதரவாகக்கூட வேண்டுமென்ற கூட்டத்தைக் கூட்டியிருக்கிறவர்களைத் தடுத்து இருக்கிற போலீஸ், பண்ருட்டியிலே தடுத்து இருக்கிற போலீஸ், அதைப் போலவே வேறு சில இடங்களிலே, வேலூர் போன்ற இடங்களிலே தடுத்து இருக்கிற போலீஸ் இலாகாவினர், மதுரை மாநகரத்திலே சுவரொட்டி ஒட்டப்பட்டு அந்த கூட்டத்தை நடத்தியவர்களை ஏன் தடுக்கவில்லை?

இரண்டாவது அங்கிருக்கின்ற போலீஸ் காவல் துறையினரை அணுகி இந்தச் செய்தியைச் சொன்னபோது 'அப்படி ஒரு கூட்டம் நடந்தது எங்களுக்குத் தெரியாது' என்று சொன்னால், நாம் புலிகளுடைய நடவடிக்கைகளை எப்படி கட்டுப்படுத்தப் போகிறோம், அவர்களுடைய துணையோடு? அது மட்டுமல்ல, அவர்களே சொல்லி இருக்கிறார்கள். அந்தக் கூட்டத்திலே பேசியவர்கள், 'இலங்கை அகதிகளை பதிவு செய்யவேண்டுமென்று சொல்வது என்ன நியாயம்? காவல் நிலையத்திற்கு பெண்கள் போனால் அங்கே இருக்கின்ற காவலர்கள், அந்தத் துறையிலே இருந்து கொண்டிருக்கிறவர்கள் பார்க்கின்ற பார்வையே அவர்களை கற்பழித்துவிடுகிறது' என்று சொல்லி 'காமக் கண் கொண்டு பார்க்கிறவர்கள்தான் அதிலே காவலர்கள்' என்று குற்றம் சாட்டும் நிலையிலேகூட, காவல் துறை ஆணையாளர் 'இப்படிப்பட்ட செயல் ஒன்று நடைபெற்றதே எனக்குத் தெரியாது' என்று சொல்வாரேயானால், நான் இவர்களை எப்படி எடுத்துக் கொள்வது என்பதற்காகக் கேட்கிறேன்.

முற்பகல் 10-20

நான் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குச் சொல்லுகிறேன். உங்களைப் பற்றி, இந்தப் புலிகளை வலை விரித்து அவர்களை அழிக்கப்படுகிற திட்டம் இட்டு செயல்படுகிற வீராங்கனையாகத் திகழ்கிறீர்கள் என்பதை நான் பாராட்டு





கிறேன். ஏனென்றால் இதே அவையிலே எத்தனையோ தடவை நான் இந்தப் புலிகள் நடமாடுகிறார்கள் என்று சொன்னபோது, 'அவர்கள் இலங்கையிலே ராஜாங்கம் நடத்துகிறார்கள், அவர்களுக்கு இங்கு என்ன வேலை' என்று சொன்னவர்கள் இப்போது புயலிலே மாட்டிக் கொண்டவர்களைப் போல திக்கு முக்காடி விழித்துக் கொண்டிருப்பது நமக்குத் தெரிகிறது. ஏனென்றால் எந்தப் பக்கம் அந்தக் கொலைக் குற்றத்தினுடைய விரல்கள் நீளுகின்றன என்று நமக்குத் தெரியும். இப்போது உங்களுக்குச் சொல்லுகிறேன். கொலை செய்ய வேண்டியவர்களுடைய பட்டியலிலே உங்களைப் போன்றவர்களுடைய பெயர்கள் இருக்கின்றன என்று சொல்லுகிறபோது, எங்களுடைய உள்ளம் என்ன, எங்களுடைய ரத்தமே கொதிக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

அங்கே 'பிரதம மந்திரியை கைது செய்' என்று அந்தக் கூட்டத்திலே பேசியிருக்கிறார்கள். 'பிரதம மந்திரியை கைது செய்' என்று சொல்லியது மட்டுமல்ல, ராஜீவ் காந்தியை ** என்று பேசியிருக்கிறார்கள். 'அவர்களுடைய பரம்பரையே இந்த தேசத்தை கொள்ளை அடித்த கூட்டம்' என்று பேசியிருக்கிறார்கள். இப்படி நடந்திருக்கிறது, மதுரையிலே நடந்திருக்கிறது, நடுநாயகமான மதுரையிலே நடந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் உணர்ச்சி வசப்பட வேண்டாம். ** என்ற வார்த்தை சேர்ந்து வருவது அவ்வளவு சரியல்ல. அதை அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கிவிட உத்திரவிடுகிறேன்.

திரு. குமரி அனந்தன் : நியாயம்தான். அவர்கள் சொன்னார்கள் என்பதற்காக நானும் சொல்லக் கூடாதுதான். அப்படி ஒரு கொடுமையான சொல்லை பயன்படுத்தியிருக்கிறார்கள். சபாநாயகருக்கு நன்றி, அதை எடுத்து விடுவது நல்லது. ஏனென்றால் மீண்டும் ஒரு முறை அதை நாம் கேட்பதற்கு தயாராக இல்லை. அது நம்முடைய ஊனைத் துளைத்து உயிரைக் கசக்கிப் பிழிகின்ற கொடுமையான சொல். இவைகளையெல்லாம் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னால், நான் முதல்வர் அவர்களைக் கேட்கிறேன். அகிம்சை என்பது சிறந்த தத்துவம் தான். காந்தி மகானுடைய வழியிலே வந்தவர்கள்தான் நாம். ஆனால் இவர்களெல்லாம், தாமரை பூத்த தடாகமாக

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. குமரி அனந்தன்] [1991 செப்டம்பர் 10

இருந்து கொண்டிருந்த தமிழகத்திலே எங்கோயிருந்து கற்
களை வீசி வளையத்தை உண்டாக்கி தமிழகத்தை வளைத்துப்
பிடிக்க நினைப்பார்களேயானால், அந்தக் கூழாங்கற்களை
தடுப்பது மட்டுமல்ல, அதை எறிகின்றவர்களுடைய கை
களை கட்டிப்போட்டு நடு ரோட்டிலே இழுத்து வருகின்ற
ஆற்றல் உங்களுக்கு இருக்கிறது என்பது எங்களுக்குத் தெரி
யும். (மேசையைத் தட்டும் ஒலி). அந்தக் காரியத்தை
நீங்கள் செய்தாக வேண்டும்.

பயிர்களுக்கு மத்தியிலே இருக்கிற களைகளை களைவது
வேந்தனுக்கு எப்படி ஒரு கடமையோ, அதேபோல தூக்கு
தண்டனை விதித்து கொடியவர்களை அகற்ற வேண்டும்
என்று வள்ளுவர் பெருந்தகை சொல்லியிருக்கிறார். அந்த
வள்ளுவனுடைய குறளைச் சொல்லித்தான் ஒவ்வொரு
நாளும் நாம் இந்த அவையை தொடங்குகிறோம். எனவே
முதல்வர் அவர்களே, அகிம்சை தத்துவம் என்று சொல்லுகிற
காந்திய தத்துவத்தை நாம் பாதுகாக்கின்ற நேரத்தில்
நாம் கோழைகளாக இருக்கவில்லை. தேவைப்பட்டால்,
அவர்கள் துப்பாக்கி கலாச்சாரம் தான் வழி என்று சொல்லு
வார்களேயானால் உங்களுக்கு பணிவோடு வேண்டி கூறிக்
கொள்கிறேன். ஒரு வாரத்திற்கு நாங்கள் நேதாஜிகளாக
இருப்பதற்கு தயாராக இருக்கிறோம். உங்களோடு சேர்ந்து
அவர்களை முறியடிப்பதற்கு தயாராக இருக்கிறோம். எனவே
நடைபெற்றிருக்கிற சம்பவங்கள் பற்றி நீங்கள் என்ன
நடவடிக்கை எடுக்கப்போகிறீர்கள் என்ற தகவல்களை
எங்களுக்குத் தருமாறு உங்களைப் பணிவன்போடு கேட்டுக் கொள்
கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதே பொருள்பற்றி
அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும்
என்று திரு. மு. தென்னவன், திரு. சி. ஞானசேகரன், திரு.
கே.பி. ராஜு, திரு. ஓ.எஸ். அமர்நாத், திரு. கு. சு.
துரைமுருகன், திரு. சிங்கை கோவிந்தராஜன் ஆகியோரும் என்
னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்
பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர்
அவர்கள்.

*மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற
உறுப்பினர்கள் திரு. குமரி அனந்தன் அவர்களும், திரு. மு.
தென்னவன் அவர்களும், திரு. ஞானசேகரன் அவர்களும்,
திரு. கே.பி. ராஜு அவர்களும், திரு. கு. சு. துரைமுருகன்
அவர்களும், மற்றும் சில உறுப்பினர்களும் இன்று தெரிவித்த
விவரங்கள் தொடர்பாக, தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கு
ஆதரவு அளிக்கின்ற சில இயக்கங்கள், தமிழகத்தில் செயல்
படுகின்றன என்றும், அவைகள் கூட்டங்களும் மற்றவைகளும்



1991 செப்டம்பர் 10] [செல்வி ஜெ. ஜெயலலிதா]

நடத்தி வருவது குறித்த தகவல்களும் எனக்கு வந்து
கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
இச் சூழ்நிலையில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான
செயல்களில் ஈடுபடுவோரை தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்
கீழ் கைது செய்து கடுமையான நடவடிக்கையை அரசு
எடுப்பது என்றும் முடிவு செய்துள்ளோம். (மேசையைத்
தட்டும் ஒலி.)

முற்பகல் 10-25

தமிழகத்திலே இந்தியத் துணை கண்டத்திலே இதுபோன்ற
செயல்களில் ஈடுபடும் தீய சக்திகளை ஒடுக்க, உடனடியாகத்
தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். கடந்த 1-9-1991 ஆம்
நாளன்று வேலூரில் நடைபெறுவதாக இருந்த இது போன்ற
ஒரு தேச விரோத கூட்டத்தை, அரசு உடனடியாக நட
வடிக்கை மேற்கொண்டு அதனை நடைபெறவிடாது தடுத்து
நிறுத்தியது. புரட்சிகர விடுதலை முன்னணி என்ற பெயரில்
ஒரு சிலர் மதுரை நகரில் போஸ்டர்கள் எல்லாம் அடித்து
செய்திகளை வெளியிடுகின்றனர். இதற்கு பொறுப்பான
வர்களை கண்டு பிடித்து கடுமையான நடவடிக்கைகள் மேற்
கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இன்று
இலங்கை போராளி குழுக்கள், தீவிரவாதிகள் ஆகியோர்
களின் தேச விரோத சட்ட விரோத நடவடிக்கைகளை அடக்க
வேண்டும், தமிழகத்தில் அறவே களையெடுக்கப்பட வேண்டும்,
நடைபெறாமல் தடுக்க வேண்டும் என்ற எண்ணத்
தோடு காவல் துறையினர் மிகவும் தீவிரமாக நடவடிக்கைகள்
மேற்கொள்ள வேண்டும் என மாண்புமிகு உறுப்பினர்கள்
கேட்டுள்ளனர். இது பொதுவாக எல்லோருக்கும் தெரிந்த
உண்மை. காவல்துறையினரின் கெடுபிடியான நடவடிக்கை
களுக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் இந்தப் போராளிக் குழுக்
களும், தீவிரவாத குழுக்களும் இன்று வேறு மாநிலங்களுக்கு
ஓடிச் சென்றுள்ளதை அனைவரும் அறிவர். வேலூரில்
மட்டுமல்ல, இன்னும் சில இடங்களில் கூட இத்தகைய
மாநாடுகளும், கூட்டங்களும் நடைபெறப் போவதாக தகவல்கள்
அரசுக்கு வந்த உடனேயே 'ப்ரிவெண்டிவ் அரெஸ்டின்' கீழ்
இவர்களை கைது செய்து பின்னர் விடுதலை செய்து இருக்
கிறோம். வேலூர் சம்பவம்தான் முதலில் அரசின் கவனத்
திற்கு கொண்டுவரப்பட்டது. வேலூர் சம்பவத்தன்று உடனடி
யாக மிகவும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டாம்,
சற்று பொறுத்து பார்ப்போம் என்ற எண்ணத்தில் தான்
அவர்கள் இத்தகைய ஒரு மாநாடு நடைபெறப் போவதாக
அறிவித்த உடன், ப்ரிவெண்டிவ் அரஸ்டின் கீழ் அவர்களை
கைது செய்து அன்று மாலையே அவர்களை விடுதலை
செய்து விட்டோம். ஆனால் அடுத்தடுத்து, இது போன்ற

சம்பவங்கள் திரும்பவும் நடைபெறுவதாக அரசின் கவனத்திற்கு வந்துள்ளது. எனவே இனிமேல் இத்தகைய மென்மையான நடவடிக்கைகள் இருக்காது. தேசவிரோதமான இத்தகைய கூட்டங்களோ, மாநாடுகளோ தமிழகத்தில் நடைபெறாத வண்ணம் எத்தகைய கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ அத்தகைய நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்தே தீரும். (மேசையைத் தட்டும் ஒலி) இனிமேல் இத்தகைய நிகழ்ச்சிகளில் ஈடுபடுவோரை அல்லது இத்தகைய நிகழ்ச்சிகளில், கூட்டங்களில், மாநாடுகளில், தேசவிரோத கூட்டங்களில் ஈடுபடப் போவதாக அறிவிப்பவர்களை கூட நேஷனல் செக்யூரிட்டி ஆக்ட்டின் கீழ், தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்வோம் என்பதை இந்த நேரத்தில் திட்டவட்டமாக தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி.)

நிலைமையை . கட்டுப்படுத்த, சீர்படுத்த தேவையான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதால் அவையின் அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டியதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. வரவு–செலவுத் திட்டம், 1991–92—பொது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, 1991—92 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவு திட்டத்தின் மீது பொது விவாதம். திரு. எ. ஏகாம்பர ரெட்டி.

திரு. கே. பி. ராஜு : தலைவர் அவர்களே. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். தயவு செய்து உட்காரவும். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

திரு. கே. பி. ராஜு : தலைவர் அவர்களே, இங்கிருந்து வெளியேற்றப்பட்டவர்கள், வெளியிலேயிருந்து சத்தம் போட்டுக் கொண்டும், பத்திரிகையாளர்களுக்கு பேட்டி கொடுத்துக் கொண்டும் இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த அவை கூட்டத்தொடர் முழுவதும் நீக்கப்பட்டவர்கள் லாபியிலேயிருந்து பத்திரிகையாளர்களைச் சந்திப்பதோ, பத்திரிகையாளர்கள் அவர்களைச் சந்திப்பதோ கூடாது. அது மரபு அல்ல. அதை நினைவுபடுத்தி அப்படியிருந்தால் வெளியேற்ற உத்தரவு இடுகிறேன். திரு. எ. ஏகாம்பர ரெட்டி.



*திரு. எ. ஏகாம்பர ரெட்டி: பேரவைத் தலைவர் அவர்களே, 1991—92 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின் மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல முன் வந்துள்ளேன். நான் இந்த நிதிநிலை அறிக்கையை மனமார வரவேற்கிறேன். அதோடு இதை நான், ரூரல் டெவலப்மெண்ட் ஓரியண்டட் பட்ஜெட் என்று சொல்லாமல் இருக்க முடியாது. காரணம் இதற்கு நான் 3 காரணங்களை குறிப்பிட ஆசைப்படுகிறேன். முதலாவது மலிவு விலை மது ஒழிப்பு, இரண்டாவது செல்ஃப் சஃபிஷியன்ஸி திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ஒரு கோடி ரூபாய் வழங்குதல், மூன்றாவது அரிசி பற்றாக்குறை என்றாலும் நாம் விலை ஏற்றாமல் அதே விலைக்கு கொடுப்பது. இந்த 3 காரணங்களால் நான் இந்த நிதிநிலை அறிக்கையை மனமார வரவேற்கிறேன். நம்முடைய தமிழ்நாடு உணவு உற்பத்தியிலே செல்ஃப் சஃபிஸியன்ஷியாக இருக்கவில்லை. காரணம் கடந்த ஆண்டிலே கூட நாம் பொதுவாக உணவு உற்பத்தியிலே 80 கோடி டார்கெட் போட்டு 75 கோடி தான் பெற்றிருக்கிறோம். அரிசி உற்பத்தியிலே கூட 60 இலட்சம் டன் நாம் இலக்கை வைத்து 55 இலட்சம்தான் சாதித்து இருக்கிறோம். எனவே, உணவு உற்பத்தியிலே பற்றாக்குறை ; இருந்தாலும் கூட அரிசி விலையை ஏற்றாமல் இருப்பது ஒரு வெல்ஃபேர் [illegible] ஸ்டேட்டுக்கு—சோஷியல் வெல்பேர் இருக்க வேண்டுமென்ற எண்ணம் கொண்ட இந்த ஆட்சிக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-30

இதை Rural Development Oriented Budget என்று சொல்லுவதற்குக் காரணம் நாம் இப்போது கிராம அபிவிருத்தித் திட்டத்திலிருந்து, பிர்க்கா டெவலப்மெண்டு திட்டத்திலிருந்து, நேஷனல் எக்ஸ்டன்ஷன் சர்வீஸ், கம்யூனிட்டி டெவலப்மெண்டு, பஞ்சாயத்து யூனியன், டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்டு கவுன்சில் என்று வந்ததற்குப் பிறகும் நாம் கிராம அபிவிருத்திப் பணியில் முழுமையாக ஒரு முன்னேற்றம் அடையவில்லை. அந்த காரணத்தால் தான் நம்முடைய புரட்சித் தலைவி செல்வி ஜெயலலிதா அம்மையார் அவர்கள் இந்த ஒரு கோடி ரூபாய் திட்டத்தை துணிவோடு பற்றாக்குறை இருந்தாலும் கூட கிராம அபிவிருத்தி திட்டத்தை கொண்டு வந்ததற்காக நான் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு, ஒரு கோடி ரூபாய் வீதம் 384 கோடி ரூபாய் ஆகிறது. அதிலே ஏரி வெட்டும் திட்டத்தின் கீழ் ஒரு ஆண்டுக்கு 60 கோடி ரூபாய் போக 324 கோடி ரூபாய், நமது பொது நிதியிலிருந்து கிராம அபிவிருத்திக்கு ஒதுக்கி இருப்பதற்கு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

[திரு. எ. ஏகாம்பர ரெட்டி] [1991 செப்டம்பர் 10

அதேபோல் 1981—82 ஆம் ஆண்டில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இது போன்ற ஒரு தன்னிறைவுத் திட்டத்தை கொண்டு வந்து ஒரு பிளாக்குக்கு 45 லட்சம் ரூபாய் வீதம் கொடுத்து கிராமங்களில் இருக்கக் கூடிய ரோடுகள், பள்ளிக்கூடங்கள், கம்யூனிட்டி டெவலப்மெண்டு செண்டர் இது போன்ற பெரிய மகத்தான வேலைகளை சாதித்தார்கள். ஆனால், அதிலே ஒரு குறையை நான் சொல்லாமல் இருக்க முடியாது. அதற்கு மெயின்டெனன்ஸ் புரவிஷன் கொடுக்காததால் இன்று அது சீர்குலைந்து இருக்கிறது. மீண்டும் அவ்வாறு செய்யாமல் நமக்கு இருக்கக் கூடிய ஒரு கோடி பட்ஜெட்டில் ஒரு மெயின்டெனன்ஸ் புரவிஷன் கொடுக்க வேண்டும் என்று நான் என்னுடைய கருத்தைச் சொல்லாமல் இருக்க முடியாது. ஒரு கோடி ரூபாயை ஒரு பிளாக்குக்கு ஒரே ஆண்டில் செய்தால் அது ஹேஸ்டியாக போய் விடும். தரமாக இருக்காது என்பது என்னுடைய வேண்டுகோள். இதை இரண்டு ஆண்டுகளுக்கு இரண்டு ஃபேசாக முடிக்கிறோம். இரண்டு ஃபேசாக வைத்து முடித்தாலும் கூட ஒரு பிளாக் ஒரு ஆண்டுக்குத்தான் வருகிறது. 192 கோடி ரூபாய் ஒரு ஆண்டிலும், மற்றொரு 192 கோடி ரூபாய் இன்னொரு ஆண்டிலும் செலவு செய்ய இருக்கிறோம். அதை ரொம்ப துரிதமாக, ஹேஸ்ட்டியாக செய்கின்ற காரணத்தால் தரம் இருக்காது என்பது என்னுடைய தாழ்மையான வேண்டுகோள். என்னுடைய நீண்ட அனுபவத்தில் சொல்கிறேன். 1952 ஆம் ஆண்டிலிருந்து நாம் கம்யூனிட்டி டெவலப்மெண்டு செய்து வருகிறோம். மீண்டும் இவ்வளவு ஹேஸ்டியாக செய்தால் தரமாக இருக்காது என்பது என்னுடைய தாழ்மையான வேண்டுகோள். ஆகவே, இது கிராம அபிவிருத்திப் பணியாக இருப்பதால் பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள், பஞ்சாயத்து யூனியன் பெருந்தலைவர்கள் இல்லாததால், தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட மன்ற உறுப்பினர்களாகவும், பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் இருக்கிற காரணத்தால் இது மக்கள்—புரோகிராம், It is a Peoples—Programme அதிலே மக்களுடைய பிரதிநிதிகளின் இன்வால்வ்மெண்டு இருக்க வேண்டும், இணைந்து இருக்க வேண்டும். அதற்காக என்னுடைய ஒரு யோசனை. பிளாக் டெவலப்மெண்டில் அந்த ஏரியாவில் இருக்கக்கூடிய அந்த லோக்கல் சேர்மேன், லோக்கல் எம்.பி., புராஜெக்ட் ஆபிசர்—டி.ஆர்.டி.ஏ., டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்டு ஆபிசர் இவர்களை எல்லாம் சேர்த்து ஒரு கமிட்டி போட்டு அந்த கமிட்டியில் புராஜெக்ட் ஆபிசரை சேர்மேனாக வைத்து, நான்-அபிசியல் மெம்பர்களாக எம்.எல்.ஏ., எம்.பி. இவர்களை வைத்து, அபிசியல் மெம்பராக டி.டி.ஓ. வை வைத்தும் பி.டி.ஓ. வை செகரட்டரியாக வைத்து ஒரு குழுவை அமைத்தால் அது பணிகளை நாணயமாகவும், நேர்மையாகவும், தரமாகவும் செய்



1991 செப்டம்பர் 10] [திரு. எ. ஏகாம்பர ரெட்டி]

வதற்கு வாய்ப்பாக இருக்கும் என்ற என்னுடைய தாழ்மையான வேண்டுகோளை, ஒரு யோசனையை குறிப்பிட தயாராக இருக்கிறேன்.

அதேபோல் நெல் உற்பத்தியைப் பற்றி சொல்ல விரும்புகிறேன். இந்த நெல் உற்பத்திக்காக உர வினியோகத்தில் ஏழை எளிய மக்களுக்கு ஸ்மால், மார்ஜினல் பார்மர்ஸ்க்கு சப்சிடி முழுமையாக கொடுத்து இருக்கிறார்கள். பெரிய விவசாயிகளுக்கு 30 சதவீதம் கொடுத்து இருக்கிறார்கள். நமக்கு இதை ஐடென்டிபை செய்வது மிகவும் கஷ்டமாக உள்ளது. தமிழ் நாட்டில் 72 லட்சம் விவசாயக் குடும்பங்கள் இருக்கின்றன. அதிலே 62 லட்சம் பேர் சிறிய நடுத்தர விவசாயிகள் ; மீதி 10 லட்சம் பேர் தான் பெரிய விவசாயிகள் இருக்கிறார்கள்.

இப்போது ஸ்பெஷல் ரைஸ் புரடக்ஷன் புரோகிராமில் 10 ஜில்லாவில் செய்ய இருக்கிறோம் ; மேலும் 3 ஜில்லாவை அதில் சேர்க்க இருக்கிறோம். நாம் தன்னிறைவு பெற வேண்டும் என்றால் அந்த உர வினியோக சப்சிடியை இந்த 10 லட்சம் பேருக்கும் கொடுத்தால் நமக்கு டெபிசிட்டாக இருக்கக் கூடிய அந்த 5 லட்சம் டன் உற்பத்தி செய்வதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகவே, நான் இந்த நேரத்தில் உங்கள் மூலமாக மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்களையும், உணவு அமைச்சர் அவர்களையும் கேட்டுக் கொள்ளுவது இந்த உர வினியோக சப்சிடியை இந்த 10 லட்சம் விவசாய குடும்பங்களுக்கும் விஸ்தரித்துக் கொடுத்தால் நமக்கு டெபிசிட்டாக இருக்கக் கூடிய அந்த 5 லட்சம் டன் நெல் உற்பத்தியைச் செய்வதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10—35

என்னுடைய தொகுதியில் கைத்தறி அதிகமாக இருக்கின்றது. அது உங்களுக்கு எல்லாம் தெரியும். என்னோடு 263 பேர் போட்டி போட்டார்கள். ஆக மொத்தம் 264 பேர் போட்டி போட்டோம். அப்படி போட்டி போட்டாலும் நான் 32 ஆயிரம் வோட்டு அதிகமாக பெற்று வெற்றி பெற்றேன். காரணம் அங்கே விசைத்தறி அதிகமாக இருக்கின்றன. அந்த விசைத் தறிக்கு மின் கட்டணம் 1 ரூபாய் 55 காசு வீதம் வசூல் செய்கிறார்கள் என்ற ஒரு காரணத்தாலும், பக்கத்திலே இருக்கிற ஆந்திர மாநிலத்திலே அதே யூனிட்டுக்கு 0.55 பைசா வசூல் செய்கிறார்கள் என்ற காரணத்தால் என்னுடன் போட்டி போட்டவர்கள், என்னுடன்

போட்டி போட்ட ஒரு சில கேன்டிடேட்டுகளுக்கு ஒரு வோட்டு கூட வரவில்லை. அவருடைய வோட்டையே அவர் போட்டுக் கொள்ளவில்லை. இதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்வதோடு நான் அதற்கு ஒரு யோசனை சொல்வதற்கும் தயாராக இருக்கிறேன் என்பதைச் சொல்லிக் கொண்டு, குடிசைப் பகுதிகளிலே வாழக் கூடிய அந்த மக்களுக்கு ஒரு தறி, இரண்டு தறி வைத்துக் கொள்வதற்கு இலவச கன்செஷனாக 0.55 பைசாவுக்கு கொடுக்கலாம் என்பது என்னுடைய யோசனை. அதை டொமஸ்டிக் சப்ளையாக ட்ரீட் செய்து 0.55 பைசாவுக்கு கொடுக்கலாம் என்ற யோசனையை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு, கைத்தறி நெசவாளர்களுக்கான நூல் விலை நிறைய ஏறிவிட்டது. 40, 60 சிட்டம் நூல் ஒரு பண்டல் ஒன்று 204 ரூபாய்க்கு. . .(மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு தலைவர்கள் வரிசையில் இருக்கிற அனைவரும் பேச வேண்டியிருக்கிறது. அதற்கிடையில், சில உறுப்பினர்கள் இன்னும் பேசவில்லையென்பதற்காக சிலருக்கு மட்டும் வாய்ப்பு கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, நீங்கள் வேகமாகப் பேசி முடிக்க வேண்டும்.

திரு. எ. ஏகாம்பரரெட்டி : 204 ரூபாய்க்கு விற்றிருந்த ஒரு பண்டல் நூல் இன்று 290 ரூபாய்க்கு விற்கிறது. 90 ரூபாய் அதிகமாக ஒரு பண்டலுக்கு விலை ஏறிவிட்டது. ஆகவே, தயவு செய்து விலையைக் குறைப்பதற்கு தக்க ஏற்பாடு செய்யும்படி நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போல பிரைமரி ஹெல்த் சென்டர்களைப் பொறுத்த வரையில், 1,505 பிரைமரி ஹெல்த் சென்டர்கள் இருப்பதாக கணக்கு இருக்கிறது. இந்த ஆண்டு 76 சென்டர்களை ஓப்பன் செய்து விட்டால் முழுமையாக 30 ஆயிரம் ஜனத் தொகைக்கு ஒரு பிரைமரி ஹெல்த் சென்டர் என்ற இலக்கை நோக்கி, அந்த டார்கெட்டை அச்சீவ் பண்ணுவோம். ஆனாலும் கூட, கடந்த ஆண்டு, தி.மு.க. ஆட்சி ஒரு திட்டத்தை வைத்தது. இருக்கிற பிரைமரி ஹெல்த் சென்டர்களை அப்-கிரேடு செய்வதற்கு, கம்யூனிட்டி ஹெல்த் சென்டர்களாக செய்வதற்கு ஒரு திட்டம் இருந்தது. ஆனால், ஒரு பிரைமரி ஹெல்த் சென்டரைக் கூட அப்-கிரேடு செய்ததாக எனக்குத் தெரியவில்லை. ஆனால் இப்போது சமர்ப்பித்து இருக்கிற பட்ஜெட்டிலே அதைப் போன்ற ஒரு திட்டம் இல்லை. நான்



தெரிந்து கொள்ள விரும்புவது, அந்தமாதிரி திட்டங்கள் இருக்கிறதா, இல்லையா என்பது. இருக்கிற பிரைமரி ஹெல்த் சென்டர்களை அப்-கிரேடு செய்வது ஒரு நியாயமான கோரிக்கை. அப்படி அப்-கிரேடு செய்வதாக இருந்தால் என்னுடைய தொகுதியிலே உள்ள பொதட்டூர்பேட்டை, அம்மையார் குப்பம், வீரக்குப்பம் போன்ற இடங்களில் உள்ளவற்றை அப்-கிரேடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பள்ளிப்பட்டு, தாலுக்கா தலைநகரமாக இருக்கிற காரணத்தால் இதுவரையில் தாலுக்கா ஆஸ்பத்திரியே அங்கே இல்லை. இப்போது, 3 ஆண்டுகளில், 15 தாலுக்கா ஆஸ்பத்திரிகளை ஓப்பன் செய்வதாக திட்டம் இருக்கிறது. முதல் ஆண்டிலேயே பள்ளிப்பட்டு தாலுக்காவிற்கு ஒரு ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பிடல் நிறுவும்படி நான் கேட்டுக் கொள்கிறேன். அதோடு, வேளாண்மையை. . . (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சீக்கிரம் முடியுங்கள்.

திரு. எ. ஏகாம்பர ரெட்டி : வேளாண்மையை ஒரு இன்டஸ்ட்ரி என்று அறிவிக்கும் புரபோசல் இருந்தது. அந்த புரபோசல் என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. வேளாண்மை டிமான்ட் வரும்போது, ஏகமனதாக ஒரு தீர்மானம் போட்டு, விவசாயத்தை ஒரு இன்டஸ்ட்ரியாக ட்ரீட் பண்ண வேண்டுமென்று ஒரு தீர்மானத்தை வகுத்து, மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டுமாய் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். இதோடு வாய்ப்பினுக்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : செல்வி எல். சுலோசனா.

செல்வி எல். சுலோசனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991-92 ஆம் வருட நிதிநிலை அறிக்கையைப் பற்றி கருத்துக்களைக் கூற விழையும் முன்பு, பல மாமேதைகள் வீற்றிருந்த இந்த மாமன்றத்திலே நானும் ஒரு உறுப்பினராக வந்தமர வாய்ப்பளித்த மாண்புமிகு முதல்வரும், எனது இதய தெய்வமுமாகிய புரட்சித் தலைவி அவர்களுக்கு எனது வணக்கத்தையும், நெஞ்சார்ந்த நன்றியையும் காணிக்கை ஆக்கிக் கொள்வதோடு, மற்றும் என்னையும் தேர்ந்தெடுத்த மேட்டுப்பாளையம் தொகுதி மக்களுக்கும், எனது வெற்றிக்கு உழைத்த ஜனநாயக முற்போக்கு கூட்டணியினருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்தும் எனது கன்னி உரையைத் துவக்குகின்றேன்.

[செல்வி எல். சுலோசனா] [1991 செப்டம்பர் 10

பல்வேறு நல்ல திட்டங்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த அறிக்கையில் கண்டுள்ள அனைத்து திட்டங்களும், அனைத்துப் பிரிவு மக்களும் பாராட்டத் தக்க வகையில் அமைந்துள்ளன. மலிவு விலை மதுக் கடைகளை மூடியதோடு, கள்ளச் சாராயத்தை ஒழித்து விட இந்த அரசு மேற்கொண்டு உள்ள நடவடிக்கைகளை, தமிழகத் தாய்மார்கள் மிகவும் பாராட்டி வரவேற்கிறார்கள். இதற்காக தாய்க் குலத்தின் சார்பாக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். கள்ளச் சாராயத்தை ஒழிக்க சட்டத்தைக் கடுமையாக்க வேண்டுமென்ற எனது வேண்டுகோளை இந்த அவையின் முன் வைக்கின்றேன்.

முற்பகல் 10-40

இம்மாநிலத்தில் நிலைத்த, நீடித்த வளர்ச்சிப் பணிகள் குறித்த திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளித்தல்; மக்களை வாழ வைப்பதற்குத் தேவையான அதிகாரங்கள் அனைத்தும் மாநில அரசுகளிடத்திலும் அமைய வேண்டும் என்பதை இந்த ஆட்சி வலியுறுத்தல்; காவல் துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்தது, காவற் படையை நவீனமயமாக்குவதற்கு ரூ. 10 கோடி ஒதுக்கீடு செய்தது; வேளாண்மையில் பண்ணை மகளிருக்கு பயிற்சியளிக்கும் திட்டம்; நாட்டிலுள்ள அனைத்து நதிகளையும் இணைக்கும் தொலைநோக்குத் திட்டம்; சிறப்புத் தன்னிறைவுத் திட்டம்; தமிழ் நாட்டில் கணிசமான தொழில் வளர்ச்சியை ஏற்படுத்தல்; மாநிலப் பள்ளி சாராக் கல்வித் திட்டம்; கிராமக் குழந்தைகளிடையே சிறந்த படிப்பறிவுத் திறனுடையவர்களைத் தேர்ந்தெடுத்து ஊக்கத் தொகை அளித்தல்; அனைத்து நிலைகளிலும் தமிழை ஆட்சி மொழியாகப் பயன்படுத்த ஊக்குவித்தல்; கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் மீது அரசு தனிக் கவனம் செலுத்தல்; ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலனுக்கான 10 அம்சத் திட்டம்; பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலம் பேணல்; பெண்கள் சுய வருமானத்தில் வாழ்க்கை நடத்த வேலை வாய்ப்பு வசதிகள்; ஒருங்கிணைந்த மகளிர் மேம்பாட்டுத் திட்டம்; தொழிலாளர்கள் நிருவாகத்தில் பங்கு கொள்வதை வரவேற்றல்; முதியோர் இல்லங்கள் தொடங்க இருப்பது போன்ற பல நல்ல திட்டங்கள் இந்நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டுள்ளன. எல்லோராலும் பாராட்டப்படுகின்ற இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று, இதனைச் சமர்ப்பித்த அரசுக்கும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்து,



1991 செப்டம்பர் 10] [செல்வி எல். சுலோசனா]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியைப் பற்றிய பிரச்சினைகளையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

மேட்டுப்பாளையத்தில் உள்ள பவானி ஆறு ஒரு ஜீவ நதி. காரமடை, பெரியநாயக்கன்பாளையம், திருப்பூர் போன்ற வெளியூர்களுக்கு இந்த ஆற்றிலிருந்துதான் குடிநீர் கொண்டு செல்லப்படுகிறது. ஆனால், மேட்டுப்பாளையம் மக்களுக்கு, உள்ளூர்வாசிகளுக்குக் குடிநீர்ப் பஞ்சம். காரணம் சுமார் 40 வருடங்களுக்கு முன்னால் குடிநீர் வழங்க ஏற்படுத்தப்பட்ட திட்டம், ஊர் வளர்ச்சிக்கு ஏற்ப, குடிநீர் வழங்கும் திட்டம் விரிவுபடுத்தப்படாததுதான். திட்டத்தை விரிவுபடுத்தி; குடிநீர்ப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தர தீர்வு காண வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

இம்ப்ரூவ்மெண்ட் ஸ்கீம் மூலம் சுமார் ஒன்றரை வருடம் முன் ரூபாய் 24 இலட்சம் ஒதுக்கப்பட்டது. ஆனால் அந்த வேலை இன்றுவரை முடிக்கப்படவில்லை. வேலையைத் துரிதப்படுத்த சம்பந்தப்பட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டிக் கொள்கிறேன்.

மேட்டுப்பாளையத்தில் தனியாருக்குச் சொந்தமான ஒரு மேல்நிலைப்பள்ளி தான் உள்ளது. அரசு மேல்நிலைப்பள்ளி இல்லை. இட நெருக்கடியினால் கல்வி கற்பதில் மாணவ, மாணவிகள் அல்லல் அடைகிறார்கள். எனவே, அரசு மேல்நிலைப் பள்ளி வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

மேலும், அரசு கலைக் கல்லூரி மேட்டுப்பாளையத்திற்கு வேண்டும். இது அத்தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாகும். 4-வது முறையாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள்தான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். எனவே, நீண்டநாள் கோரிக்கையை அத்தொகுதி மக்களுக்கு நிறைவேற்ற மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் ஆவன செய்ய வேண்டுகிறேன்.

முன்சீப் கோர்ட், நோட்டிபிகேஷன் ஆகி சுமார் இரண்டு வருடங்கள் ஆகியும் இன்னும் மேட்டுப்பாளையத்தில் அது அமைக்கப்படவில்லை. அதனை விரைவில் அமைத்திட மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதிகமான மலைவாழ் மக்கள் வாழும் பகுதியாக மேட்டுப்பாளையம் தொகுதியுள்ளது. தோலம்பாளையத்திலிருந்து கோப்பனாரி சாலை செப்பனிடப்படவேண்டும். இருளர் என்ற மலைவாசிகள் வாழும் 25 குக்கிராமங்களை இந்தச்

சாலை இணைக்கிறது. தற்சமயம் மண் வண்டிப்பாதையாக உள்ளது. கோபனாரி என்ற அந்த ஊரையடைய தற்சமயம் 100 கிலோமீட்டர் பயணம் செய்ய வேண்டும். இந்தப் பாதை செப்பனிடப்பட்டால் 16 கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்தால். போதுமானது. மேலும் இந்தச் சாலை கேரளா மாநிலத்தை இணைப்புச் சாலை ஆக்குகிறது.

அதுபோன்று, மேட்டுப்பாளையத்திலிருந்து பில்லூர் என்ற இடத்திற்கு 7 கிலோ மீட்டர் தூரம் சாலை அமைக்கப்பட வேண்டும். தற்சமயம் 50 கிலோமீட்டர் பயணம் செய்துதான் அந்தப் பகுதியை அடைய வேண்டியுள்ளது.

அதேபோல, நெல்லித்துறை என்ற ஒரு தீவுப்பகுதி அங்கு அமைந்துள்ளது. அப்பகுதி மக்கள் ஒரு முறை தேர்தலையே புறக்கணித்தார்கள். இந்தமுறை அவர்கள் நான் ஓட்டுச் சேகரிக்கச் சென்றிருந்தபொழுது, ‘நீங்கள்தான் ஆட்சி அமைப்பீர்கள், உங்கள் தலைவிதான் ஆட்சி அமைப்பார். அவருடைய ஆட்சிக் காலத்திலாவது எங்களுக்குப் பாலம் அமைத்துத்தர வேண்டு’ மென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள்.

அதுபோன்று, பாலமலை என்ற மலைப்பகுதி ஆதிவாசிகள் வாழும் மலைப் பகுதி. அங்கு ஆறு கிலோமீட்டர் சாலை போடப்பட வேண்டும். அவர்கள் கால்நடையாக, தலைச்சுமையாக, உணவுப் பொருட்களைக் கொண்டு செல்கிறார்கள். அந்தத் திட்டங்களையெல்லாம் செயல்படுத்த முழுச் செலவும் மத்திய அரசுடையது என்று கூறப்படுகிறது. மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் மேற்குத் தொடர்ச்சிமலை அபிவிருத்தித் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான நிதியை மத்திய அரசிடம் பெற்றுத் தர ஆவன செய்யுமாறு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு, எனது வேண்டுகோளை இந்த அவையின் மூலமாக வைக்கிறேன்.

தோலம்பாளையம் கிராமத்தில் பெரும்பள்ளம் என்ற காட்டாறு உள்ளது. இந்த ஆற்றில் அணை கட்ட பொதுப் பணித் துறையால் ஆய்வு செய்யப்பட்டு, திட்ட மதிப்பீடும் செய்யப்பட்டு நீண்ட காலமாகிறது. திட்டம் நிறைவேற்றப்பட்டால் 4 ஊராட்சி மன்றங்களைச் சேர்ந்த சுமார் 5,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். இப்பகுதியைச் சேர்ந்த விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக அமையும்.

விவசாயத்திற்குப் பாசன வசதியைப் ஏற்படுத்தித் தர பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தை நிறைவேற்றிட அரசு ஆவன செய்யுமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் வாயிலாக பவானி ஆற்றிலிருந்து காரமடை ஒன்றியத்திலுள்ள கிராமப் பஞ்சாயத்துக்களுக்குக் குடிநீர் வசதி செய்து தர வேண்டுமென்ற வேண்டுகோளை இம்மன்றத்தின் வாயிலாக மாண்புமிகு முதல்வருக்கு சமர்ப்பிக்கிறேன். இத்திட்டத்தைச் செயல்படுத்தினால் ஐந்து பஞ்சாயத்துக்களின் குடிநீர்ப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தர தீர்வு ஏற்படும்.

பல பகுதிகளில் மலைவாழ் மக்கள் 200 ஆண்டுகளுக்கும் மேலாக அவர்கள் முன்னோர்கள் வாழ்ந்த இடங்களில் வாழ்ந்து வருகின்றனர். அதை ரிசர்வ்ட் ஃபாரஸ்ட்—ஒதுக்கப்பட்ட காடுகள்—என்று கூறி புதிய வீடு கட்ட அனுமதியில்லை. இதனால் புரட்சித் தலைவர் கொண்டு வந்த இலவச வீட்டு வசதித் திட்டம் மூலமாக இவர்கள் பயன்பெற முடியாத நிலையில் உள்ளனர். ஆகவே, அவர்களுக்கு வீடுகள் கட்டித் தர மத்திய அரசினுடைய அனுமதியைப் பெற்றுத் தரவேண்டுமென்ற வேண்டுகோளை இந்த அவையிலே வைக்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

முற்பகல் 10-45

ஆகவே, 1991-92-ஆம் வருடத்திய நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி, வரவேற்று, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. சி. சுவாமிநாதன்.

* திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பத்தாவது சட்டப் பேரவையில் 1991-92 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் பங்குபெற எனக்கு வாய்ப்பு அளித்த உங்களுக்கு முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, பல்வேறு நிதி நெருக்கடிகளுக்கிடையிலே இந்த நாட்டில் மதுவிலக்கை ஒழித்த பிறகு, அதனால் ஏற்பட்ட இழப்பையும் பொருட்படுத்தாமல், இந்த நாட்டில் ஏறத்தாழ ஆயிரம் கோடி ரூபாய் நிதி நெருக்கடி நிலைமை இருந்தாலும், அத்தனையையும் சிரமேற்கொண்டு, தமிழக மக்களுக்கு அனைத்துத் துறைகளிலும் இந்த அரசு எந்த அளவிற்கு பல நல்வாழ்வுத் திட்டங்களை அறிவிக்க வேண்டும் என்கிற எண்ண உணர்வோடு, அனைத்துத் துறைகளையும் அழைத்து ஆராய்ச்சி செய்து, பாகுபாடு இல்லாமல், அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பல நல்வாழ்வுத் திட்டங்களை இந்த நிதிநிலை ஆண்டில், ‘பட்ஜெட்’-ல் மிகத் தெளிவாக எடுத்துரைத்திருக்கிறார்கள். புரட்சித் தலைவியார் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, தமிழக மக்கள்

எந்த அளவுக்கு, இந்த ஆட்சியிடமிருந்து எதிர்பார்க்கிறார்கள் என்பதனை இங்கே பல்வேறு விவாதங்கள் மூலம் மாண்புமிகு உறுப்பினர்கள் தமிழக மக்கள் சார்பாக அவைக்கு எடுத்துரைத்திருக்கிறார்கள்.

இங்கே விடுதலைப் புலிகளைப் பற்றி பல்வேறு விவாதங்கள் இந்த மாமன்றத்தில் நடைபெற்றிருந்தாலும், சமீப காலமாக இங்கே பல்வேறு அமைப்புகளைச் சார்ந்தவர்களை—மாண்புமிகு புரட்சித் தலைவியார் அவர்கள் இன்றைக்கு அறிவித்ததைப் போல—அவர்களை எந்த அளவிற்குக் கட்டுப்படுத்த வேண்டும் என்கிற உணர்வினை இந்த நாட்டு மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக பெருந்தன்மையோடு நல்ல இரும்பு உள்ளத்தோடு, அவர்களை ஒடுக்குகின்ற நிலையை இன்றைக்கு ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்று சொன்னால், அதற்காக என்னுடைய வாழ்த்துக்களையும், நன்றியையும் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

இங்கே நம்முடைய புரட்சித் தலைவியார் அவர்களும், அதைப் போல தமிழக காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அவர்களும், அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிற நாட்களை, இந்த நாட்டில் 'போனஸ்' நாட்களாகத்தான் இந்த நாட்டு மக்கள் கருதிக் கொண்டிருக்கிறார்கள். காரணம், இரண்டு, மூன்று தினங்களுக்கு முன்பு, வாழப்பாடியார் அவர்கள் டெல்லி மாநகரத்தில் சுட்டுக் கொல்லப்பட்டு விட்டதாக ஒரு செய்தியை, சென்னை நகரத்தின் மத்தியப் பகுதியிலே பரப்பிவிட்டு, அங்கே கடையடைப்புகள் எல்லாம் செய்திருக்கிறார்கள். இந்த அளவிற்கு தமிழகத்தினுடைய தலைவர்களுடைய நிலைமை, விடுதலைப் புலிகள் மூலம் அச்சுறுத்தப்பட்டு, இங்கே அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிற நாட்களை எண்ணிக் கொண்டிருக்கிற ஒரு சூழ்நிலை இந்த நாட்டிலே ஏற்பட்ட பிறகு, தமிழகத்தைப் பொறுத்தவரையில் இங்கே புரட்சித் தலைவியார் அவர்கள் இன்றைக்கு அறிவித்திருப்பது, அதில் நேரடியாக ஈடுபட்டிருப்பவர்களை தடைக் காவல் சட்டத்தின் மூலமாகவும், 'நேஷனல் செக்யூரிட்டி ஆக்ட்' மூலமாகவும் அவர்களைக் கைது செய்து உள்ளே அடைப்பதாக அறிவித்திருக்கிறார்கள். அதற்கு மேலே ஒரு படி சென்று, இந்த நாட்டை துண்டாட எண்ணுகிறவர்கள், இந்த நாட்டை விலை கூறி விற்க எண்ணுகிறவர்கள், தமிழகத் தலைவர்களை விலைபேசி, அவர்களுடைய உயிர்களுக்கு ஊறு விளைவிக்க எண்ணிக் கொண்டிருப்பவர்கள், எங்களுடைய தலைவர் திரு. இராஜீவ் காந்தி அவர்களுடைய கொலைக்கு உறுதுணையாக இருந்தவர்கள் இன்றைக்கு ஒளிந்து கொண்டிருக்கிறார்கள்.





முற்பகல் 10-50

இன்றைய தினம் பேசுகிறபோது, ஒரு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாண்புமிகு உறுப்பினர், 'எங்களுடைய கொள்கை தமிழ் ஈழத்தை உருவாக்க வேண்டும்' என்கிற உணர்வோடுதான் பேசியிருக்கிறார். அவர்களுடைய எண்ண உணர்வெல்லாம் ஈழத்தைத் தனிமைப்படுத்தி தனி நாடு உருவாக்கி, தமிழகத்தை அதோடு இணைக்கிற எண்ண உணர்வோடு அவர்கள் அவையிலே வந்து பேசியிருக்கிறார்கள் என்று சொன்னால், அவர்களையும் சேர்த்து இந்தக் கட்டுப்பாட்டிற்குள் தமிழக அரசு, மதிப்பிற்குரிய புரட்சித் தலைவியார் அவர்கள், தூண்டுகோலாக இருக்கிற அந்த இயக்கங்களையும் கட்டுப்படுத்த வேண்டும். அங்கே புல்லுருவிகளாக இருந்து இந்த நாட்டைத் துண்டாட எண்ணுகிறவர்கள், இந்த நாட்டினுடைய ஒருமைப்பாட்டிற்கு ஊறு விளைவிக்கக் கூடியவர்கள், இந்த நாட்டினுடைய பொருளாதாரத்திற்கு களங்கம் விளைவிக்கக்கூடியவர்கள், தமிழ்ச் சமுதாயத்தை அசிங்கப் படுத்தியவர்கள், களங்கப்படுத்தியவர்கள், அவர்களையும் மனதிலே கொண்டு அவர்களுக்கு இந்த 'மிசா சட்டம்', 'தடுப்புக் காவல் சட்டம்' அமுல்படுத்தி இந்த நாட்டில் ஒரு நிலையான, அமைதியான ஆட்சியை உருவாக்குவதற்கு நீங்கள் பாடுபடவேண்டும். அதேபோல், தமிழகத்திற்குப் பல்வேறு நல்வாழ்வுத் திட்டங்களை நீங்கள் இங்கே அறிவித்திருக்கிறீர்கள். குறிப்பாக, விவசாயத்தைப் பொறுத்தவரையில், தமிழகத்தில் நீங்கள் பல்வேறு நிலைகளை மேற்கொண்டிருக்கிறீர்கள். பல்வேறு அணைக்கட்டுத் திட்டங்களை இந்த நாட்டு மக்களுக்குக் கொடுப்பதாக அறிவித்திருக்கிறீர்கள். அதேபோல், எத்தனை திட்டங்களை நிறைவேற்றியிருந்தாலும், நம்முடைய உணவுப் பெருக்கம் சென்ற ஆண்டு உள்ள கணக்குப்படி ஏறத்தாழ 65 இலட்சம் டன் அரிசி உற்பத்தி செய்ய வேண்டும் என்கிற இலக்கு இருந்தாலும் கூட, அது 57 இலட்சம் டன்னாகக் குறைந்திருக்கிறது என்று சொன்னால், அதை நீங்கள் முழு மனதோடு கவனத்திலே எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த நாட்டில் விவசாயப் பெருங்குடி மக்கள் தமிழக அரசிடமிருந்து மிகப்பெரிய எதிர்பார்ப்புகளோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். விவசாயப் பெருங்குடி மக்கள் ஏறத்தாழ 70 சதவீத மக்கள் தமிழகத்தைப் பொறுத்தவரையில் வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக உணவு உற்பத்திப் பெருக்கத்தை நாம் செய்ய வேண்டுமென்று சொன்னால் தமிழகத்தின் பல்வேறு இடங்களில் நிலத்தடி நீரைப் பெறுவதற்கு நம்முடைய விவசாயப் பெருங்குடி மக்கள் ஆழ்குழாய்க் கிணறுகளை அமைத்து, அதற்கு ஒரு இலட்சம், இரண்டு லட்சம் என்று சொல்லி கடன்களை வாங்கி, அதற்கு மின் இணைப்பு கிடைக்காமல் இன்றைக்கு அவர்கள் மிக்க கடுமையான நஷ்டத்திற்குட்பட்டு, பாதிக்கப்பட்டிருக்

[திரு. சி. சுவாமிநாதன்] [1991 செப்டம்பர் 10

கிறார்கள். மின்சாரம் இல்லையென்று சொன்னால், தண்ணீர் இறைக்க முடியாத ஒரு சூழ்நிலை உருவாகி விடுகிறது. சென்ற கூட்டத் தொடரிலே நான் இதைப்பற்றி அவைக்குத் தெரிவித்திருக்கிறேன். ஆழ்குழாய்க் கிணறுகளை அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். அமைத்துக் கொண்டிருப்பவர்கள், கடனைப் பெற்று அல்லல்பட்டுக் கொண்டிருக்கிற அருமை விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நீங்கள் அதற்கு முன்னுரிமை கொடுத்து, அவர்களுக்கு உடனடியாக மின்சாரம் வழங்குகின்ற ஒரு திட்டத்தை அமைத்துக் கொடுப்பீர்களேயானால் மேலும் 10 ஆயிரம் டன் அரிசியை இந்த நாட்டில் உற்பத்தி செய்ய முடியும் என்பதனை நான் இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, இங்கே தொழில் துறை பற்றி அருமையான திட்டங்களை புரட்சித் தலைவியார் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இங்கே ரூ. 50 கோடி மதிப்பீட்டிற்குத் தொழில் துவங்குவோர்களுக்கு 25 இலட்சம் வரையிலும் மானியம் கொடுப்பதாகவும் ரூ. 100 கோடிக்கு மேலே தொழில் துவங்குவோர்களுக்கு அதிகபட்சமாக 50 இலட்சம் வரை சலுகைகள் கொடுப்பதாகவும் அறிவித்திருக்கிறீர்கள். ஆனால், மற்ற மாநிலங்களைப் போல நிலம், நீர், மின்சாரம், சாலை வசதிகளைத் தொழில் தொடங்குபவர்களுக்கு நாம் முன்னுரிமை கொடுத்து அனைத்தும் இனாமாகக் கொடுக்கப்படுமேயானால் இந்த நாட்டில் மிகப் பெரிய தொழில் வளம் உருவாகும் என்பதனை இந்த சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, 'டாமினை'ப் பொறுத்த வரையில், இந்த நாட்டில் 120,150 ஆண்டுகளுக்குத் தேவையான, கனிம வளங்கள் தமிழகத்தில் நிறைய இருக்கின்றன. டாமினுக்குச் சொந்தமான பாறைகளை இந்த நாட்டில் மிகுந்த அளவில் பயன்படுத்த முடியாமல் ஏறத்தாழ 6 அல்லது 7 கோடி ரூபாய் வருமானத்தோடு அந்த டாமின் இன்றைக்கு இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் அதற்கு லீசிங் லைசென்ஸ் கொடுத்து மற்றவர்களும் ஏற்றுமதி செய்கின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்குவீர்களேயானால், ஏறத்தாழ 500 கோடி ரூபாய்க்கு இந்த நாட்டில் வருமானம் வரும். அன்னியச் செலாவணி மூலம் இந்த நாட்டுக்குப் பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் வருமானம் வரும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

புதுக்கோட்டையைப் பொறுத்தவரையில் இன்றைக்கு பல்வேறு நிலைகளைச் சொல்லவேண்டி இருக்கிறது. இங்கே பல சிறப்பு நிதித் திட்டங்களை அறிவித்திருந்தாலும் கூட



1991 செப்டம்பர் 10] [திரு. சி. சுவாமிநாதன்]

புதுக்கோட்டை மாவட்டம் ஒரு சிறப்பு நிதித் திட்டத்திலும் இணைக்கப்படாதது கண்டு, புரட்சித் தலைவி அவர்களுடைய கடைக்கண் பார்வை எங்களுடைய மாவட்டத்திற்கு விழ வேண்டும் என்ற அன்பான வேண்டுகோளை இங்கே விடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10–55

புதுக்கோட்டை மாவட்டம் கடந்த 7, 8 ஆண்டுகாலமாக வறட்சியால், தண்ணீர் இல்லாத காரணத்தால் வறண்டு போய் இருக்கிறது. அங்கே விஞ்ஞான ரீதியாக, அறிவுபூர்வமாக பல பெரியவர்கள் சொல்கிறார்கள். புதுக்கோட்டை மாவட்டத்தில் பல லட்சக்கணக்கான தைல மரங்கள் வளர்க்கப்படுவதால் தான் அங்கே தொடர்ந்து பருவமழை தவறி இருக்கிறது என்று சொல்கிறார்கள். காரணம் தைல மரத்தை பொறுத்தவரையில் காற்றிலே இருக்கிற ஈரப்பசையை உறிஞ்சுகின்ற சக்தி இருக்கின்ற காரணத்தால், காற்றே வறண்டு விடுகின்ற தன்மை ஏற்பட்ட காரணத்தால்தான் அங்கே தொடர்ந்து 7,8 ஆண்டு காலமாக கடுமையான வறட்சி நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனவே தைல மரங்களை நல்ல நீர்ப் பகுதிகளிலும், மலைப் பகுதிகளிலும் வளர்ப்பதுதான் முறையாக இருக்கும். எனவே புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அந்த நிலைமையை படிப்படியாக மாற்றி தைல மரங்களை வளர்ப்பதைக் குறைத்துக்கொண்டுஅந்த மக்களைக் காப்பாற்றும் படி உங்களை அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது) புதுக்கோட்டை மாவட்டத்தில்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்லதுரை உறுப்பினர் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு நிறைய பேர்கள் பேசுகிறார்கள். தலைவர்கள் எல்லாம் பேசுகிறார்கள். அடுத்து மானியக் கோரிக்கை இருக்கிறது. எனவே மாவட்டத்தைப் பற்றி அன்றைக்கும் பேசுவதற்கு உறுப்பினர்களுக்கு வாய்ப்பு அதிகமாக இருக்கிறது. ஆகவே தயவுசெய்து அமர்ந்து மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்லதுரை அவர்களைப் பேச அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. ஆ. செல்லதுரை: வணக்கத்திற்குரிய சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் காவல் தெய்வம், எங்கள் அன்னையை முதலாக வணங்குகிறேன். சாதாரண சாமானியான என்னை திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதியிலே

[திரு. ஆ. செல்லதுரை] [1991 செப்டம்பர் 10

சட்டமன்ற வேட்பாளராக நிறுத்தி என்னை சட்டமன்ற உறுப்பினராக ஆக்கித் தந்த எங்களின் காவல் தெய்வம் தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய பாதங்களிலே நன்றியை மீண்டும் காணிக்கையாக்குகிறேன் எனக்கு வாக்களித்த திருச்செந்தூர் தொகுதி மக்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள், நான் எந்தத் திருச்செந்தூர் தொகுதியிலே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டேனோ அந்தத் திருச்செந்தூரில்தான் முதன் முதலாக அரசியலைத் துவங்கினார். அங்கேதான் அரசியலிலே காலெடுத்து வைத்தார்கள். திருச்செந்தூர் என்பது சரித்திர வரலாறு படைத்த ஒரு புனிதமான ஊராகும். அங்கேதான் அசுர குலத்தில் பிறந்த அரக்கன் ஒருவன் மிகப்பெரிய தவம் இருந்து அந்தத் தவத்தால் ஆதியையும், அந்தத்தையும் உருவாக்கிய ஆதி பராசக்தியினுடைய வரத்தைப் பெற்று அன்றிருந்து தேவர்களையும் மக்களையும் அடித்துக்கொன்று குவித்துக்கொண்டிருந்த நேரத்தில்தான் தேவர்கள் எல்லாம் ஒன்று கூடி தங்களைப் பாதுகாக்க முடியவில்லையே என்று ஓடி வருகிற போதுதான் முருகக் கடவுளைக் கண்டு முருகா அதோ அரக்கன் எங்களைக் கொன்று குவிக்க வருகிறான் எங்களைக் காப்பாற்றுங்கள் என்று ஓடி வுருகிற நேரத்தில்தான் முருகன் ஒரு கணம் நினைத்துப் பார்த்து தன்னுடைய தாயை, ஆதிபராசக்தியை, ஆதியையும் அந்தத்தையும் உருவாக்கிய அந்த ஆதிபராசக்தியை நோக்கி தவம் இருக்கிறான். அப்படி தவம் செய்து கடுமையான தவத்தில் இருக்கிறபோது ஆதிபராசக்தி அங்கே வருகிறாள். அந்தத் தவத்தை மெச்சி அவனுக்கு வரமும் கொடுத்து அந்த வரத்திற்குரிய தன்னுடைய கையிலே இருந்த வேலாயுதத்தையும் கொடுத்து ......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஸ்தல புராணங்களைச் சொல்லிக் கொண்டிருந்தால் அவருடைய தொகுதியைப் பற்றியும், மற்றவற்றைப் பற்றியும் சொல்வதற்கு நேரம் இருக்காது. ஸ்தல புராணம் எல்லோருக்கும் தெரியும். எனவே அதைப்பற்றிச் சொல்ல வேண்டாம். தொகுதிப் பிரச்சினைக்கு வந்தால் நிதிநிலை அறிக்கைக்குப் பொருத்தமாக இருக்கும்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னும் 3 நிமிடங்களில் முடித்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திரு. ஆ. செல்லதுரை.



1991 செப்டம்பர் 10]

முற்பகல் 11-00

திரு. ஆ. செல்லதுரை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆக அப்படிப்பட்ட அரக்கர்களை கொன்று குவித்து அங்கே சூரனைச் சம்ஹாரம் செய்த ஊர் திருச்செந்தூர். அப்படிப்பட்ட அந்த தொகுதியிலே இருந்து அரசியலிலே காலடி எடுத்து வைத்த நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள், இன்றைக்குத் தமிழகத்திலே தவறான வழியிலே அரசியலை நடத்திக்கொண்டிருக்கின்றவர்களை எல்லாம் முருகன் எப்படி அரக்கர்களைக் கொன்று குவித்தாரோ அப்படி இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்கள் அரசியலிலே ஏழை யெளிய மக்களை வாட்டி வதைத்துக் கொன்று குவித்த அந்த புல்லர்களை இன்றைக்கு வீழ்த்தி இங்கே நல்லதொரு அரியணையிலே அமர்ந்து இருக்கின்றார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லி நான் நெஞ்சார அவர்களை வாழ்த்துகிறேன்.

அதே நேரத்திலே இன்றைக்கு 1991—92-க்கான பட்ஜெட் தயாரிப்பு நாட்டிலே பொருளாதார பற்றாக் குறையாக இருந்தாலும் இந்த பட்ஜெட் தயாரிக்கப்பட்டிருக்கிறது. மிகப் பெரிய பட்ஜெட் ஆக சிறப்பான பட்ஜெட் ஆக இன்றைக்கு தயாரித்திருக்கிறார்கள். இன்றைக்கு உலகத்திலே வழிகாட்டுகின்ற அளவுக்கு நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் அமர்ந்து கொண்டிருக்கின்றார்கள். இந்த பட்ஜெட் தயாரிப்பைப் பொறுத்தமட்டில், நம்முடைய புரட்சித் தலைவி அவர்களை 'பொருளாதாரத் தாய்' என்று கூட பாராட்டலாம். அந்த அளவுக்கு நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள், இன்றைக்கு இந்தத் திட்டத்தை உருவாக்கித் தந்திருக்கின்ற அவர்களுக்கு நெஞ்சார நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த பட்ஜெட் தயாரிப்பைப் பொறுத்த அளவில் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் இந்த திட்டத்தினை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்களுடைய திருச்செந்தூர் தொகுதியைப் பொறுத்த மட்டில் காயல்பட்டினம் குடிநீர் திட்டம் என்று கிட்டத்தட்ட 40 ஆண்டுகள் காலத்திற்கு முன்னாலே அந்த திட்டத்தைத் தந்து அந்த குடிநீர் திட்டம் 'பில்ட்டர் பெட்' என்று போடப்பட்டு, கிட்டத்தட்ட 9 பில்ட்டர் பெட்ஸ் தயாரிக்கப்பட்டு அந்த தண்ணீர் அங்கே இருந்து சுத்திகரிக்கப்பட்டு அந்தக் குடிநீர் மக்களுக்குப் பயன்படுத்தப்பட்டது. இன்றைக்கு பில்ட்டர் பெட்ஸ் எல்லாம் பழுதடைந்து அந்தக் குடி தண்ணீர் நேராகவே செல்கின்ற காரணத்தினாலே, அந்தத் தண்ணீரைக் குடித்து மக்கள் மிகவும் வேதனைக்குள்ளாகி

றார்கள். அதை உடனடியாகப் பழுது பார்த்துத் தருமாறு புரட்சித் தலைவி அவர்களை பாதம் பணிந்து கேட்டுக்கொள்கிறேன் (மணி அடிக்கப்பெற்றது).

அதே நேரத்திலே, என்னுடைய திருச்செந்தூர் தொகுதியில் ஆத்தூர்-புன்னக்காயல் ரோடு என்று ஒன்று இருக்கிறது. புன்னக்காயலில் வாழ்கின்ற மக்கள் முழுக்க முழுக்க மீனவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். மழை பெய்து வெள்ளம் பெருக்கெடுத்து வருகிறபோது அந்தத் தாமிரவருணி ஆற்றிலேயிருந்து தண்ணீர் மிக அதிகமாகப் போகின்ற காரணத்தினால் கடலுக்குத் தண்ணீர் போகின்றபோது அந்த புன்னக்காயல் தீவாகக் காட்சி அளிக்கிறது.

அந்த ஆத்தூருக்கும் புன்னக்காயலுக்கும் புரட்சித் தலைவர் ஆட்சி நடத்திய காலத்தில் மக்களுடைய குறைபாடுகளைக் கேட்டறிந்து அங்கே ஒரு பாலம் அமைப்பதற்குத் திட்டங்கள் வடிவமைத்துத் தந்தார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் மறைவுக்குப் பின்னால் வந்த ஆட்சியில் அதை அப்படியே போட்டு விட்டார்கள். அந்த புன்னக்காயல் மக்களுடைய குறையை நீக்குகின்ற வகையில் அந்த பாலத்தைக் கட்டித் ஓமாறு உங்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** டாக்டர் (செல்வி) ஜி. ஆர். மாலா.

**டாக்டர் (செல்வி) ஜி. ஆர். மாலா :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

கைமேற் களிபடைத்து கருணை பொழிந்து ;
மைவார் குழற்கன்னி மனம் போற் கவிகுவித்து,
நெய் வாசமாக நிறைந்த சபை மணக்கச்
செய்வாயே, என்னைச் சீராட்டும்
செந்தமிழை வணங்கி !

ஆன்றோர்களும், சான்றோர்களும் அலங்கரித்து அழியாப் புகழ் பெற்ற காரியங்களைச் சாதித்து திராவிட பாரம்பரியத்தைக் கட்டிக்காக்கும் இச்சபையின் தலைமைப் பொறுப்பேற்று புரட்சித் தலைவி அவர்களின் நம்பிக்கையைப் பெற்று கண்ணியத்துடன் சபையை நடத்திக்கொண்டு இருக்கும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,



''இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன் கண்விடல்''

என்ற வள்ளுவனின் வார்த்தைகளுக்கேற்ப, தமிழக மக்கள், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களைத் தமிழகத்தின் காவல் தெய்வமாக, ஆளும் தெய்வமாக இன்று அரியணையில் ஏற்றி வைத்துள்ளார்கள். சரித்திர ஏட்டில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய சாதனையை நிகழ்த்தி, வெற்றியைப் படைத்த எங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியின் ஓரங்கமாக இருப்பதற்கு வாய்ப்பினை உருவாக்கி என்னை வேட்பாளராக ஆக்கி, சட்டமன்ற உறுப்பினராக்கி, தாய்க்குலத்திற்கே ஒரு தனிச் சிறப்பை எடுத்துத் தந்த எங்கள் தாய்க்குலத்தின் தனிப் பெரும் தலைவியின் பொற்பாதங்களில் எனது நன்றியையும் வணக்கத்தையும் காணிக்கை ஆக்குவதோடு, என்னை இந்த மாமன்றத்திற்கு அனுப்பி வைத்த எனது தொகுதி மக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். பெரியோர்கள் நிறைந்த இந்த மன்றத்தில் எனது கன்னிப் பேச்சைத் துவக்குகிறேன்.

முற்பகல் 11-05

நமது மாண்புமிகு முதலமைச்சர் எப்படிப்பட்ட திறமையான நிர்வாகி என்பதை கடந்த இரண்டு மாதங்களில் அவர் நடத்திக் கொண்டிருக்கும் ஆட்சியின் முறையைக் கூறலாம்'' சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்'' என்று கூறியுள்ளபடியே தனது முதல் தேர்தல் வாக்குறுதியை முதல்வராகப் பொறுப்பேற்ற உடன் முதல் முதலாகக் கையெழுத்திட்ட கோப்பு ''மலிவுவிலை மதுக்கடைகளை மூடுவோம்'' என்ற கோப்பு ஆகும். அந்த வகையில் தான் கூறியதைச் செய்து வாக்கு தவறாத வரலாற்று நாயகியாக இன்றைக்குக் கொலு வீற்றிருக்கிறார்கள்.

தமிழகத்தின் ஜீவாதார, அடிப்படை உரிமைகளில் பங்கம் ஏற்படுகின்ற வகையில் தஞ்சைத் தரணி தரிசு நிலமாக மாறு கின்ற வகையில் கர்நாடக அரசு காவிரி நதியில் நீர் விட மறுத்த போது, நடுவர் மன்றத் தீர்ப்பை கர்நாடக அரசு ஏற்க வேண்டும், மத்திய அரசு அதற்குத் துணை நிற்க வேண்டும், மத்திய அரசு கெசட்டில் நடுவர் மன்றத் தீர்ப்பு ஏற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கையினை மனவலிமையோடு, தர்மத்தின் துணையோடு, தமிழ் மக்களின் நலன் காக்கும் பணியில் எவர் குறுக்கே வரினும், எதிர்த்துப் போராட அஞ்ச மாட்டேன் என சூளுரைத்த நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவியின் அரசியல் சாதுர்யத்தையும், சாணக்கியத் தந்திரத்தையும், அகில இந்தியாவே ஒருமனதாகப் பாராட்டுகிறது.

தமிழகத்தின் பண்டைய கலாச்சாரத்தை, பண்பாட்டை, வரலாற்றுச் சிறப்பினை, தமிழனின் பெருமையை, அவனது கலைத்திறனை உலகுக்குக் காட்டும் கோயில்கள் சிதிலமடைந்து உள்ளன என்பதை அறிந்து ஆண்டவன் வாழும் இல்லத்தில் அணையா விளக்கோடு ஆறு கால பூஜையோடு அருள்பாலிக்க வேண்டும் என்பதற்காக யாருமே செய்யாத சாதனையாக '' கோயில் திருப்பணி மற்றும் சீரமைப்பு நிதி '' என்ற அமைப்பை ஏற்படுத்தி நிதி திரட்டும் நமது முதலமைச்சர் அவர்களுக்கு ஆன்மீகவாதிகள் மட்டுமல்ல, ஆச்சாரியார்கள் மட்டுமல்ல, தமிழ் மாநிலமே ஒன்று சேர்ந்து அனைவரும் ஒருமனதாகப் பாராட்டுகிறார்கள்.

இந்த மண் என் சொந்த மண், ஓரடி இடத்தைக்கூட அந்நியனுக்கு விடமாட்டேன் என்று சுதந்திர தாகத்தோடு பாடிய பாரதியின் வரிகளுக்கேற்ப, தாரை வார்த்துக் கொடுக்கப்பட்ட தமிழனின் மண் கச்சத் தீவை திரும்பப் பெறுவோம் என்று சூளுரைத்ததன் வாயிலாக, இன்றைய ஜான்சி ராணியாக உலாவரும் எங்கள் அன்புத்தாய் மாண்புமிகு புரட்சித் தலைவியை மனமார வணங்கி வாழ்த்துகிறேன்.

தமிழகத்தை தொழில் துறையில் முன்னேற்றி, இந்தியாவில் தொழில் துறையில் தமிழகத்தை முதல் மாநிலமாக உருவாக்க வேண்டும் என்பதை அறிந்து அயல்நாட்டில் வாழும் இந்தியப் பெரு முதலாளிகளை தமிழகத்தில் தொழில் துவங்க முதலீடு செய்ய ஏற்பாடுகளை நடத்தியுள்ள மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களை அகில உலகமே வியந்து பார்க்கிறது.

மிகுந்த பொருளாதார நெருக்கடியிலும் தமிழக ஏழை யெளிய மக்களும், நடுத்தரவாதிகளும் போற்றும் அளவில் மிக நேர்த்தியாகவும், கவனமாகவும் 1991–92 நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. புரட்சித் தலைவர் அவர்களால் உருவாக்கப்பட்டு வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்ட சத்துணவுத் திட்டத்தை வலுப்படுத்துவதற்காக ரூபாய் 236 கோடி நிதி ஒதுக்கீடு செய்ததோடு மட்டுமல்லாமல் ஆறு வயதிலிருந்து இரண்டு வயது குழந்தைகளுக்கும், கருவுற்ற தாய்மார்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் சத்துணவு வழங்குவதோடு மட்டுமல்லாமல், சுகாதாரப் பணியையும் செய்யும் நிலையங்களாக அவைகளை மாற்றியதோடு மட்டுமல்லாமல், முதியோர் உதவித் தொகை, இலவச அரிசி, ஆண்டுதோறும் வேட்டி, புடவை முதலியவை புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் கொடுக்கப்பட்டது, முந்தைய அரசு அதைக் கைவிட்டாலும் நமது புரட்சித் தலைவரின் அரசியல் வாரிசாக விளங்கும் புரட்சித் தலைவி அவர்கள் மீண்டும் அந்தத் திட்டத்தைக் கொடுத்ததோடு ஆதரவற்ற நிலையில் இருக்கும் முதியோர்



களுக்குப் பேராதரவு தரும் வெள்ளை உள்ளம் கொண்டவர்களாக இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்கள் திகழ்கிறார்கள். இங்கு அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சார்பாக அமைக்கப்பட்டிருக்கும் இந்த அரசு தாய்க்குலத்தின் பேராதரவு பெற்ற அரசு ஆகும். அதை எடுத்துக்காட்டும் வகையில் புரட்சித் தலைவி அவர்கள் நிதி நிலை அறிக்கையில் பெண்களுக்கு என்று சில சலுகைகளைத் தந்துள்ளார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் ஒருங்கிணைந்த மகளிர் மேம்பாடு திட்டத்தின்கீழ் ஒரு லட்சம் மகளிருக்கு வேலை வாய்ப்பு அளிப்பது, தங்க நகைகள், தங்க முலாம் பூசிய நகைகள், சில்வர் பாத்திரங்கள், அலுமினியப் பாத்திரங்கள், மளிகை சாமான்கள் முதலியவைகளுக்கு வரிச் சலுகைகள் செய்தது, எந்த அமைப்பின்கீழும் வராத சிறு தொழில் செய்யும் நடை ஓர பாதைகளில் கடை வைத்து பூ வியாபாரம், காய்கறி வியாபாரம் செய்பவர்களுக்கு அவர்களுடைய வாழ்க்கை வளத்தைக்கருத்தில்கொண்டு அவர்களுக்கு வேண்டிய அனைத்து அத்தியாவசியப் பொருள்களை விற்பது மற்றும் தாய்மார்களின் வாழ்க்கை வளம் பெறுவதைக் கருத்தில் கொண்டு பல்வேறு சிறப்புத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

' டேனிடா ' உதவியின்மூலம் வேளாண்மைத் துறையில் முதன் முதலாக மகளிருக்குப் பயிற்சி அளிக்கும் திட்டத்தினை உருவாக்கியுள்ளார்கள். தனது தேர்தல் அறிக்கையில் கூறிய படியே, மக்களுக்கு வேண்டிய அடிப்படை வசதியைச் செய்து தருவோம் என்றபடியே குடிநீர் ஆதாரம் இல்லாத குடியிருப்புகளுக்கு உடனடியாகக்குடிநீர் வசதிக்கு ஏற்பாடு செய்ய ரூபாய் 10 கோடி செலவில் திட்டங்கள், சீர் செய்யப்படாத பழுதடைந்த நிலையில் இருக்கும் சாலைகளைச் சீரமைக்க ரூபாய் 150 கோடி செலவிட அரசு 150 கோடி ரூபாய்க்கு உத்தரவிட்டுள்ள திட்டங்கள் எல்லாமே பாராட்டத்தக்கவை.

மேலும் நடப்பாண்டில் 1.22 லட்சம் வீடுகள் கட்டித் தருவதற்கும் அரசு இசைவு அளித்துள்ளது. நாம் செய்யும் தர்மத்திலே மிகச் சிறந்த தர்மம் ஏழைக் குழந்தைகளுக்குக் கல்வி புகட்டுவதுதான். அதைக் கருத்திலே கொண்டு ஏழைகளுக்குக் கல்வி புகட்டும் நோக்கத்தில் ஏழ்மை காரணமாகக் கல்வியை இடையிலே நிறுத்திவிடாமல் பார்ப்பதற்காக மாநில கல்வி சாரா கல்வித் திட்டத்தை உருவாக்கி இருப்பது, ஆயிரம் தொடக்கப் பள்ளிகள் கட்டித் தருவது போன்றவற்றை நாங்கள் மனதார வரவேற்கின்றோம்.

நகரத்தின் வெகு தொலைவிலுள்ள கிராமங்களில் இருக்கும் மக்கள் மருத்துவ வசதி பெறுவதற்காக நடப்பு ஆண்டில் 76 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் கட்டித் தருவதும், மருந்து

[டாக்டர் (செல்வி) ஜி. ஆர். மாலா] [1991 செப்டம்பர் 10

செலவிற்காக 30 ஆயிரம் என்று இருந்ததை 40 ஆயிரம் ரூபாயாக உயர்த்தித் தந்திருப்பதும், தற்போது உலகத்தையே ஆட்டிப் படைக்கும் புற்றுநோயானது 13 வயதில் இருந்து 70 வயது வரையுள்ள யாரை வேண்டுமானாலும் தொற்றி, நோய் தாக்கலாம் என்கிற நிலையில் அதற்காக அனுதாபத்துடன், அந்த நோயைக் குணப்படுத்தும் அத்தியாவசிய மருந்துகளுக்கு முழு வரி ரத்து செய்திருப்பதும் ஆன திட்டங்களை நாங்கள் முழுமனதுடன் மனதார வரவேற்கிறோம்.

என் தொகுதியைப் பொறுத்தவரையில் திருச்சி நகர மையப் பகுதியில் ஒரு மருத்துவக் கல்லூரியை அமைத்துத் தர வேண்டும். கோ. அபிஷேகபுரம் பஞ்சாயத்தில் கூட்டு குடிநீர் திட்டத்தினை விரைவில் அமுல்படுத்தி குடிநீர் பிரச்சினையை தீர்க்க வேண்டும். திருச்சி சிந்தாமணி பகுதியில் உள்ள பேருந்து நிலையத்தை விரிவு படுத்தி புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். பெயரை வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. எஸ். ஆர். ஜெயராமன் அவர்கள்.

டாக்டர் (செல்வி) ஜி. ஆர். மாலா : ஒரே ஒரு நிமிடம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாணியக் கோரிக்கைகளில் நீங்கள் பேசலாம். திரு. எஸ். ஆர். ஜெயராமன் அவர்கள், 5 நிமிடங்கள்.

திரு. எஸ். ஆர். ஜெயராமன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, சக சட்டப் பேரவை உறுப்பினர்களே, பாரதத் தலைவன் ஒளிக்கோளாக மாறிய ஸ்ரீபெரும்பூதூரை வணங்கி, என்னை வெற்றி பெறச் செய்த என் தொகுதி மக்களுக்குத் தலைவணங்கி, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் வாழப்பாடியாருக்கு வணக்கத்தைக்கூறி, காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய சட்டப் பேரவை காங்கிரஸ் கட்சியின் தலைவர் அவர்களுக்கு நன்றியைக் கூறி, அனைவருக்கும் வணக்கத்தையும் நன்றியையும் உரித்தாக்குகிறேன்.

வரலாற்றுச் சிறப்புமிக்க சான்றோர்கள் இடம் பெற்றிருந்த இந்தச் சட்டப் பேரவையில் அமர்ந்து, சட்டப் பேரவை உறுப்பினராக நிகழ்ச்சிகளில் பங்கேற்றுக்கொள்வதில் நான் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். பட்ஜெட் கூட்டத் தொடரில்



1991 செப்டம்பர் 10] [திரு. எஸ். ஆர். ஜெயராமன்]

என்னுடைய இந்த சிறிய உரை இடம் பெறுவதில் அளவிலாத மகிழ்ச்சியடைகிறேன்.

சேலம் மாவட்டத்தில் ஏழை நெசவாளர் குடும்பத்தில் பிறந்த நான் இன்று மக்கள் அளித்த பெரும்பான்மை ஆதரவினால் உங்களிடையே அமரும் வாய்ப்பு பெற்றுள்ளேன். இன்று நான் இந்த நிலைமைக்கு வந்தாலும் அடிப்படையில் நான் ஒரு நெசவாளிதான். இன்று எனது தொகுதியிலும், சேலம் மாவட்டம் மற்றும் அண்டை மாவட்டங்களான பெரியார், கோவை, தருமபுரி மாவட்டங்களிலும் குடிநீர், சாலை வசதி போன்ற பல பிரச்சினைகள் இருந்தாலும், இன்றைய தலையாய பிரச்சினை நூல் விலை உயர்வு, மற்றும் பற்றாக்குறைதான். தமிழகத்தில் குறிப்பாக நான் குறிப்பிட்ட இம்மாவட்டங்களில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக உள்ளது நெசவுத் தொழில் தான். தமிழ்நாடு முழுவதும் இந்தத் தொழிலில் ஏறத்தாழ 30 இலட்சம் மக்கள் ஈடுபட்டுள்ளனர். சேலம் மாவட்டத்தில் மட்டும் இத்தொழிலில் சுமார் 3 இலட்சம் பேர் ஈடுபட்டுள்ளனர்.

மத்தியில் இதற்கு முன்பிருந்த மத்திய அரசின் தவறான நூல் கொள்கையால் வெளிநாட்டிற்கு அதிக அளவு பஞ்சு ஏற்றுமதியினாலும், நூல் ஏற்றுமதியினாலும் தற்போதைய கடும் நூல் விலை ஏற்றத்திற்கு வழி வகுக்கப்பட்டுவிட்டது. இந்த நூல் விலை ஏற்றத்தினால் நெசவாளர்கள் நூல் வாங்கி தொழில் செய்ய இயலாத வகையில் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் கடந்த மாதம் நமது மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் மத்திய அரசுக்கு நூல் விலையினைக் குறைக்கவும், கைவிடப்பட்ட சிட்டா நூல் உற்பத்தியைச் சீர்படுத்தவும், நெசவாளர்களுக்கு நூல் தட்டுப்பாடின்றி கிடைக்கவும் ஆவன செய்யுமாறு கடிதம் எழுதியுள்ளார். இதற்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். ஏழை நெசவாளர்களின் கண்ணீரைத் துடைக்க கடந்த மாதம் பர்கூரில் நடந்த விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஜூலை மாதத்தில் நூல் விற்ற விலைக்கே ஆகஸ்டு மாதத்தில் 2,000 பேல்கள் நூலினை ஏழை நெசவாளர்களுக்கு வழங்க கைத்தறித் துறை இயக்குநருக்கு உத்தரவிட்டுள்ளார். இதற்கும் நான் நெஞ்சார வாழ்த்தி நன்றி கூறுகிறேன்.

தற்போது நம் நாட்டின் ரூபாய் மதிப்பு குறைக்கப்பட்டுள்ளது. உள்நாட்டில் உற்பத்தியாகும் பருத்தி நூல் பெரிய கட்டு ஒன்றுக்கு ரூ. 40, ரூ. 50 வரை விலை அதிகரித்துள்ளது. பல்வேறு ரக நூல்களின் விலையும் கட்டுக்கடங்காமல் போய்விட்டபடியால் நம் நாட்டில் பெருகிவரும் விசைத்தறி, கைத்தறியாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு கடந்த 20 நாட்களாக தங்கள் கைத்தறி, விசைத்தறிக் கூடங்களை மூடிவிட்டனர். இதனால் பல்லாயிரக் கணக்கான ஏழை நெசவாளர்கள் இன்று பட்டினி கிடக்கும் நிலை உருவாகியுள்ளது.

[திரு. எஸ். ஆர். ஜெயராமன்] [1991 செப்டம்பர் 10

இதே போல் சேலம் மாவட்டத்திற்கே உரித்தான சுத்தப் பட்டு தொழிலும் பெரிதும் சீரழிந்துவிட்டது. கடந்த இரண்டு மாதங்களில் சுத்தப் பட்டு சேலைக்குத் தேவையான சுத்தப் பட்டு நூல் வரலாறு காணாத அளவு உயர்ந்துவிட்டது. வார்ப்பு பட்டு ஒரு கிலோ ரூ. 1,000-ல் இருந்து ரூ. 1,500 வரையிலும், ஊடை பட்டு ஒரு கிலோ ரூ. 900-ல் இருந்து ரூ. 1,250 வரையும் சுமார் 40 சதவிகிதம் விலை உயர்ந்துவிட்டது. ஆனால் சுத்த பட்டு சேலைகளையோ 10 சதவிகிதம்கூட விலை கூட்டி விற்க முடியாத நிலை. இதனால் என்னுடைய மாவட்டத்தில் உள்ள சுமார் 50,000 கைத்தறி நெசவாளர்கள் தவிர, காஞ்சிபுரம், ஆரணி, கும்பகோணம் பகுதி பட்டு நெசவாளர்கள் லட்சக்கணக்கான பேர் வேலை இல்லாமல் பட்டினி கிடந்து வாடுகின்ற நிலை உருவாகியுள்ளது. காவிரி நீரில் பிரச்சினை எழுப்பிய கர்நாடக மாநிலம் தற்போது சுத்தப் பட்டு நூலை தமிழகத்திற்கு அளிப்பதற்கும் பெரிதும் தடங்கல் செய்து வருகிறது. இதேபோல் சரிகை விலையும் 20 சதவிகிதம் உயர்ந்துள்ளது.

மத்திய அரசின் விசைத்தறி வாரிய உறுப்பினர் என்ற முறையில் நான் மத்திய அரசின் ஜவுளித் துறை அமைச்சகத்திற்கு அனைத்து பருத்தி நூல், பட்டு நூல் விலையினைக் குறைக்க போர்க்கால நடவடிக்கை எடுக்க ஆவன செய்யும்படி வலியுறுத்தியிருக்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது.)

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துழைப்பு தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்று முன் வரிசையில் உள்ள அனைவரும் பேசி முடிக்கவேண்டும். இது கட்சித் தலைவர்கள் அனைவரும் ஏற்றுக்கொண்ட ஒரு முடிவு. மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. சா. பழனிசாமி அவர்களை பேசுமாறு அழைக்கிறேன்.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 1991–92 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை கிராமப்புறத்திலே இருக்கிற மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்கிற, கிராமங்களில் வாழ்பவர்களும் நல்ல வாழ்க்கை வசதியினைப் பெற்று, நகர்ப்புறங்களில் சேரிகள் பெருகாவண்ணம் கிராமத்தில் இருப்பவர்களுக்கும் அடிப்படைத் தேவைகள் கிடைக்கிறபோது, அவர்கள் அங்கே நல்ல வசதியைப் பெற்று வாழ்கின்ற பல்வேறு நலத் திட்டங்களை நிறைவேற்றுகிற அளவுக்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே கிராமப்புற பொருளாதாரத் திட்டங்கள் அமைந்திருக்கின்றன. கிராமப்புறத்தில் குடிநீர் வசதி, தெருவிளக்கு வசதி, பொது சுகா



1991 செப்டம்பர் 10] [திரு. நா. சா. பழனிசாமி]

தாரம், சாலை வசதி இப்படிப்பட்ட வசதிகளை ஏற்படுத்துவதற்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே வழி வகுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இதை நிறைவேற்றுகிற கிராமப்புறத்தில் இருக்கிற ஊராட்சி ஒன்றியங்களிலும், ஊராட்சி மன்றங்களிலும் இப்போது எந்தவிதமான வசதியும் கிடையாது. சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக ஒரு கோடி ரூபாயைக் கிராமப் புறத்தில் இருக்கின்ற ஊராட்சி மன்றங்களுக்கும், ஒன்றியங்களுக்கும் கொடுத்தாலும்கூட அதை நிறைவேற்றுகின்ற பொறுப்பு இப்போது தனி அதிகாரிகளாக இருப்பவர்களிடத்தில்தான் இருக்கிறது. சென்ற ஆட்சிக் காலத்திலே ஊராட்சி ஒன்றியங்களின் சார்பாகவும், ஊராட்சி மன்றங்களின் சார்பாகவும் நிறைவேற்றப்படுகின்ற ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டங்களுக்கு ஊராட்சி ஒன்றியமும், ஊராட்சி மன்றமும் 10 சதவீதப் பங்குத் தொகையைக் கொடுத்தால்தான் மற்ற வேலைகளைச் செய்ய முடியும் என்று அரசு ஆணை இருக்கிறது. அந்த 10 சதவீத நிதியைக் கொடுப்பதற்கு ஊராட்சி ஒன்றியமோ, ஊராட்சி மன்றங்களோ நிதி வசதியைப் பெற்றிருக்கவில்லை. அந்த அரசு ஆணை அப்படியே இருக்குமேயானால், அந்த ஒரு கோடி ரூபாய் சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கினால்கூட இந்த வேலையைச் செய்ய முடியாத அளவுக்கு அரசு ஆணை தடையாக இருக்கிறது. எனவே அந்த அரசு ஆணையை உடனடியாக இந்த ஆட்சி நீக்கிவிடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதிலே ஊராட்சி ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டங்களின்கீழ் உள்ள வேலைகளைச் செய்கிற அதே நேரத்தில் பழைய கட்டிடங்கள், ஊராட்சி மன்றக் கட்டிடங்கள், ஊராட்சி ஒன்றியக் கட்டிடங்கள் போன்றவை பராமரிக்கப்படாமல் இருக்கின்றன. ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டிடங்கள் பராமரிக்கப்படாமல் இருக்கின்றன. அப்படி அந்தப் பழைய கட்டிடங்களைப் பராமரிப்பதற்கும், பழுது பார்ப்பதற்கும் ஒரு தொகையை ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கும், ஊராட்சி மன்றங்களுக்கும் இருக்கிற அதிகாரம் மிகவும் குறைவாக இருக்கிறது பாரதப் பிரதமர் மறைந்த ராஜீவ் காந்தி அவர்கள் பஞ்சாயத்து ராஜ் மசோதாவைக் கொண்டு வந்தார்கள். அந்தப் பஞ்சாயத்து ராஜ் மசோதா மட்டும் நிறைவேற்றப்பட்டு இருக்குமேயானால், ஊராட்சி மன்றங்களுக்கும், ஒன்றியங்களுக்கும் நல்ல அதிகாரம் கிடைக்கப்பெற்று, அந்த நிதி ஒதுக்கீடானது முறையாகப் பெறப்பட்டு அந்தக் கிராமங்களுக்குக் கிடைப்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். அப்படி ஏற்படாத சூழ்நிலையில் அந்த ஒன்றியங்களுக்கும் ஊராட்சி மன்றங்களுக்கும் அதிகாரம் கொடுக்கிற வண்ணமும், இப்போது அப்படிச் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தை நிறைவேற்றுகிற நேரத்தில் மக்களின் பிரதிநிதிகளாக இருக்கின்ற சட்டமன்ற

[திரு. நா. சா. பழனிசாமி] [1991 செப்டம்பர் 10

உறுப்பினர்கள் அதைச் சரியாகக் கண்காணிக்கிற வகையிலும்,
அதிகாரத்தை வழங்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்
கிறேன்.

இப்போது ஊராட்சி ஒன்றியங்களின் சார்பிலே இருக்கிற
தார் சாலைகளைப் பராமரிப்பதற்கு ஊராட்சி ஒன்றியங்
களிலே நிதி வசதி இருப்பதில்லை. எனவே அப்படிப்பட்ட
தார்சாலைகளை நெடுஞ்சாலைத் துறையிடம் மாற்றிவிட்டு
விடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தரிசு நிலங்களை
விளை நிலங்களாக மாற்றுகின்ற திட்டத்தை இந்த அரசு
அறிவித்து பல்வேறு மாவட்டங்களிலும் அந்தத் தரிசு நிலங்
களை எந்தெந்த முறையில் விளை நிலங்களாக மாற்ற
இருக்கிறார்கள். எந்த எந்தப் பயிரை விளைவிப்பதற்காக
அதை மாற்றி இருக்கிறார்கள் என்ற திட்டம் எல்லாம் அறி
விக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தத் திட்டத்திலே கோவை
மாவட்டத்தை எந்த இடத்திலும் இணைக்கவில்லை என்ற
குறை எங்களுக்கு இருக்கிறது. அந்த முன்னோடித் திட்டத்
தை கோவை மாவட்டத்தின் ஏதாவது ஒரு பகுதிக்கும்
ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது
பாசனத்திற்கு சிக்கன முறையில் சொட்டு நீர்ப்பாசனம்,
தெளிப்பு நீர்ப்பாசனம் என்ற முறைக்கு அரசு ஊக்கம்
கொடுக்கிற அளவில் இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்
பட்டிருக்கிறது.

முற்பகல் 11-20

ஆனால் சொட்டு நீர்ப்பாசன, தெளிப்பு நீர்ப் பாசனக்
கருவிகளை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலை
இருக்கிறது. அந்தக் கருவிகளுக்கு ஆரம்ப முதலீடு அதிக
மாகப் போட வேண்டியிருக்கிறது. ஆகவே அதற்கு
அரசாங்கம் 50 சதவீதம் மானியத்தில் சொட்டு நீர்ப் பாசன,
தெளிப்பு நீர்ப் பாசனக் கருவிகளைக் கொடுப்பதற்கும், வங்கி
யிலே கடன் வசதி கொடுப்பதற்கும் வழிவகை செய்ய
வேண்டும். சென்ற 7 ஆம் தேதி தினமணி பத்திரிகையில்
''மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திரு. வி.சி. ஷுக்ளா
அவர்கள், தமிழ்நாடு தண்ணீரை விரயம் ஆக்குகிறது என்ற
குற்றச்சாட்டை தமிழ்நாடு நாடாளுமன்ற உறுப்பினர்
களை அழைத்துப் பேசுகின்ற நேரத்தில் குறிப்பிட்டிருக்
கிறார்கள்'' என்ற செய்தி வந்திருக்கிறது. தேசிய நீர் நிர்
வாகத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட ரூ. 15 கோடியை
மாநில அரசாங்கம் செலவிட்டால் 90 சதவீதம் உலக வங்கி
மானியமாகக் கொடுக்கிறது. ஆனால் தமிழக அரசாங்கம்
சென்ற ஆண்டு ரூ. 8 கோடியைத்தான் அதிலே செலவழித்



1991 செப்டம்பர் 10] [திரு. நா. சா. பழனிசாமி]

திருக்கிறது. இப்படி நீர் சிக்கனத்திற்காகப் பயன்படுத்துகிற
திட்டங்களுக்கு ஒதுக்கப்படுகிற பணத்தை தமிழ்நாடு அர
சாங்கம் சரியாகப் பயன்படுத்தவில்லை என்ற குற்றச்
சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய வேளாண்
மைத் துறை அதிகாரிகள் ஏன் இப்படி ஒதுக்கீடு செய்யப்பட்ட
பணத்தை செலவழிக்கவில்லை என்பதை அரசாங்கம்
சரியாகக் கவனிக்க வேண்டும் என்றும், இப்படி நீரைச் சிக்கன
மாகப் பயன்படுத்துவதற்கு ஒதுக்கப்படுகிற மத்திய அரசி
னுடைய நிதியை மாநில அரசு முறையாகப் பயன்படுத்த
வேண்டும் என்றும் இந்த நேரத்திலே நான் அரசைக் கேட்டுக்
கொள்கிறேன்.

மகா நதியிலிருந்து வைகை நதி வரை இணைக்கிற திட்டத்தை
அரசாங்கம் இந்த நிதிநிலை அறிக்கையிலே தெரிவித்திருப்பதை
உண்மையிலேயே விவசாயிகள் இயக்கத்தைச் சேர்ந்த
வர்கள் அனைவருமே மனமாரப் பாராட்டிக் கொண்டிருக்
கிறார்கள். கடந்த 5–9–1991 இல் ''அசோகா ஓட்டல்-இல்
நடைபெற்ற அனைத்து விவசாய சங்கங்களின் ஒருங்கிணைப்புக்
கூட்டத்தில் ஊரூர் முத்துக் கவுண்டர், எம்.பி. அவர்
களும், டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி அவர்களும்,
உழவர் உழைப்பாளர் கட்சியின் தலைவர் சொல்லேர் உழவர்
செல்லமுத்து அவர்களும், தேசிய உழவர் சங்கத் தலைவர்
வேலுசாமி அவர்களும், தமிழக விவசாயிகள் சங்கத்தினுடைய
தலைவர் சின்னசாமி கவுண்டர் அவர்களும், தமிழகம் தழுவிய
விவசாய இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் போன்றோரும் இந்த
மாநில அரசு எடுத்திருக்கும் நதிநீர் இணைப்பு முயற்சிக்கு
மனப்பூர்வமாக ஒத்துழைப்பு கொடுப்பதற்கு முடிவு எடுத்
திருக்கிறார்கள். இப்படிப்பட்ட திட்டங்களை மாநில அரசு
நிறைவேற்றுகிற நேரத்தில்; பல்வேறு புதிய பாசனத் திட்
டங்களை நிறைவேற்றுகிற இந்த அறிக்கையிலே எங்கள்
கோவை மாவட்டத்தைப் பற்றி ஒன்றும் குறிப்பிடப்பட
வில்லை. குறிப்பாக பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்திலே
பல்வேறு விஸ்தரிப்புப் பகுதிகளில் வாய்க்கால்கள் வெட்டப்
பட்டும் இன்னும் தண்ணீர் கிடைக்காமல் இருக்கிறது, அதற்கு
ஆனைமலையாறு, நல்லாறு போன்ற நீர்த்தேக்கத் திட்டங்களை
கட்டினால்தான் அந்த விஸ்தரிப்புப் பகுதிகள் பாசனம் பெற
முடியும். ஆனால் ஆனைமலையாறு, நல்லாறு நீர்த் தேக்கத்
திட்டங்களுக்கு இந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்
பதாக என்னாலே அறிய முடியவில்லை. எனவே பரம்பிக்குளம்–
ஆளியாறு விஸ்தரிப்புப் பகுதிக்கும் பாசனம் கிடைக்க,
பரம்பிக்குளம்–ஆளியாறு திட்டத்திலே ஆனைமலையாறு,
நல்லாறு அணைகளை உடனடியாகக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய
வேண்டும் என்று அரசை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.
மணி அடிக்கப்பெற்றது)

(

[திரு. நா. சா. பழனிசாமி] [1991 செப்டம்பர் 10

விவசாயிகளுக்கு இலவச மின்சாரத் திட்டத்தை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான் கொண்டு வந்தார்கள். ஆனால் அந்த இலவச மின்சாரத் திட்டத்தை சிறு விவசாயிகளுக்குக் கொண்டு வந்ததை, வி.பி. சிங் ஆட்சியிலிருந்து பதவி இறங்கிய நேரத்திலே, யாரும் எதிர்பாராத வண்ணம், திராவிட முன்னேற்றக் கழக அரசு எல்லா விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் என்று அறிவித்தது. எல்லா விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் என்று அறிவிப்பதற்கு முன்பு விவசாயிகள் ஹார்ஸ் பவருக்கு ரூ. 50 என்ற கட்டண முறையில் ஏற்கெனவே விதிக்கப்பட்டிருந்த அளவிற்கு, பத்து இலட்சம், 12 இலட்சம் பம்ப் செட்டுகளுக்கு ஓராண்டுக்கு 38 கோடி ரூபாய், 40 கோடி ரூபாய் என்ற அளவிலேதான் விவசாயிகள் மின்சார வாரியத்திற்குக் கட்டி வந்தார்கள். ஆனால் இந்த நிதிநிலை அறிக்கையில் ரூ. 550 கோடி மின்சார வாரியத்திற்கு இழப்பு ஏற்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு பெரிய தொகை இழப்பு ஏற்படுவதாகக் குறிப்பிட்டிருப்பதைப் பார்க்கும்போதுதான் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் அளிப்பதிலே இவ்வளவு நஷ்டம் அரசாங்கத்திற்கு வருகிறதா என்று பொது மக்களும் மற்றும் பலரும் நினைக்க வேண்டியிருக்கிறது. எனவே விவசாயிகள் இயக்கத்தின் சார்பாக நானும் புரட்சித் தலைவியினுடைய இரட்டை இலை சின்னத்திலே நின்று வெற்றி பெற்று, சட்டமன்ற உறுப்பினராக வந்தவன் என்ற முறையில்—'ஒரு மரம் தோப்பாகாது', 'ஒரு கை ஓசை இடாது' என்று சொன்னாலுங்கூட என்னை விவசாயிகளுடைய ஒட்டு மொத்தப் பிரதிநிதியாக புரட்சித் தலைவி அவர்கள் இந்தச் சட்டமன்றத்திற்கு அனுப்பி வைத்திருக்கிற காரணத்தால், ஏற்கெனவே விவசாயிகளுக்குக் கிடைத்திருக்கிற இந்த இலவச மின்சாரச் சலுகையை புரட்சித் தலைவி அவர்கள் தயவு செய்து எடுத்துவிட வேண்டாம் என்று மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-25

உலக வங்கியும் மற்றும் பல்வேறு ஸ்தாபனங்களும் விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரம் கொடுப்பதை ஏற்றுக் கொள்வதில்லை. ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள், அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே மத்திய அரசு மறுத் தாலும் ரிசர்வ் வங்கி ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், 'நான் கடன் தள்ளுபடி செய்கிறேன்' என்று தள்ளுபடி செய்தார்கள். இலவச மின்சாரம் தந்தார்கள். அதற்குப் பிறகு மத்திய அரசு அதிலே, தேவிலால் போன்றவர்கள் விவசாயிகளுக்கு ஆதரவாக இருந்ததால் அந்த ரிசர்வ் வங்கியைக் கட்டுப் படுத்துகிற மத்திய அரசே கடனைத் தள்ளுபடி செய்ய



1991 செப்டம்பர் 10] [திரு. நா. சா. பழனிசாமி]

முன்வந்தது. இப்படி மத்திய அரசு தமிழகத்தை கறுப்புப் பட்டியலில் சேர்த்துவிட வேண்டும் என்று மிரட்டிய போது கூட புரட்சித் தலைவர் அவர்கள் விவசாயிகளுக்கு பல்வேறு சலுகைகளை அளித்தார்கள். எனவே இந்தக் கடன் தள்ளுபடி பற்றி இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட ஏதோ தவறி இருக்கிறார்கள். இந்த ஆண்டு கடுமையான நிதி நெருக்கடியின் காரணமாக ஒருவேளை அதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய முடியாமல் இருந்திருக்கலாம். ஆனால் வருகிற ஆண்டிலேயாவது புரட்சித் தலைவி அவர்கள் தன்னுடைய தேர்தல் அறிக்கையிலும், ஆளுநர் உரையிலும் குறிப்பிட்டபடி விவசாயிகள் கடனிலே பிறந்து கடனிலே வளர்ந்தவர்கள், கடனிலே இருந்து விடுபடுகின்ற அந்த கடன் தள்ளுபடிக்கு உத்தரவிட வேண்டும் என்றும், இப்போது மத்திய அரசு உயர்த்தி இருக்கின்ற இந்த உரத்தின் விலையானது விவசாயத் தொழிலையே பாதிக்கின்ற வண்ணம், விவசாய உற்பத்தி குறைகின்ற நிலை ஏற்பட்டு இருக்கிறது. நாங்கள் எங்கள் இயக்கத்தின் சார்பாக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அமைச்சர் அவர்களுக்கும் இந்த மன்றத்தின் சார்பாக ஒரு தீர்மானத்தைப் போட்டு மத்திய அரசு பழைய விலைக்கே உரத்தைக் கொடுக்க வேண்டுமென்று கூறி இருக்கிறோம். அந்தத் தீர்மானத்துக்கு இந்த மன்றம் ஆதரவு அளிக்க வேண்டுமென்று புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

இப்போது தமிழ்நாட்டில் 20 இலட்சம் டன் உரம் உபயோகப்படுத்துவதாகவும், இப்போது அந்த உர விலையை உயர்த்தியதால் மட்டும் கிட்டத்தட்ட 150 கோடி ரூபாயை தமிழக விவசாயிகள் உரத்திற்குக் கொடுக்க வேண்டி இருக்கிறது. இதுவரை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்திலே இருந்து, மத்திய அரசும் கடன் தள்ளுபடி செய்த வரை 500 கோடி ரூபாய் அளவுக்குக் கடன் தள்ளு படி செய்யப்பட்டு இருக்குமேயானால் 3 ஆண்டுக் காலத் தில் விவசாயிகள் உரத்திற்காகக் கொடுக்கின்ற விலையில் மட்டும் கிடைத்த சலுகைகள் அத்தனையுமே....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே மட்டும்தான் தாயுள்ளம் கொண்ட புரட்சித் தலைவி அவர்கள் பழைய உரங்களைப் பழைய விலைக்கு விற்க வேண்டுமென்று உத்திர வைக் கடுமையாக்கி இருக்கிறார்கள். அதனை மீறியவர்கள்

[திரு. கு. ப. கிருஷ்ணன்] [1991 செப்டம்பர் 10

மீது கடுமையான நடவடிக்கையை இந்தியாவிலேயே இந்த அரசு
தான் எடுத்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கி
றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. நா. சா. பழனிசாமி : பழைய விலைக்கே, ஜூலை
மாதத்திற்கு முன்பு இருந்த விலைக்கே கொடுக்க வேண்டு
மென உத்திரவு இருந்தாலும் கூட, உர வியாபாரிகள் உரத்தை
வைத்திருப்பதில்லை. அதை எங்கேயோ ஓரிடத்தில் பதுக்கி
வைத்திருக்கிறார்கள். 10 மூட்டை, 20 மூட்டை என்ற அள
வுக்குத்தான் வைத்து இருக்கிறார்கள். பழைய விலைக்கு
பில்லைத்தான் கொடுக்கிறார்கள்.......

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு துணைத்
தலைவர் அவர்களே, பழைய உரத்தை பழைய விலைக்கு
விற்காத 400 உரிமங்களை இப்போது புரட்சித் தலைவியினுடைய
அரசு தடை செய்து இருக்கிறது. அது மட்டுமல்ல, உறுப்பினர்
அவர்கள் குறிப்பிட்டு இந்த இடத்திலே தவறு இருக்கிறது என்று
சொன்னால் இந்த அரசு நடவடிக்கை எடுக்கத் தயங்காது என்
பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

திரு. நா. சா. பழனிசாமி : எப்ப்டி கள்ளச் சாராயம் காய்ச்சு
பவர்களைக் கண்டுபிடிப்பதற்காக காவல் துறையையும் வரு
வாய்த் துறையையும் இணைத்து அந்த இடத்திலே கள்ளச்
சாராயம் காய்ச்சுபவர்களை அவர்கள் கண்டுபிடிக்காவிட்டால்
அவர்களை சஸ்பெண்ட் செய்கிற நடவடிக்கையை புரட்சித் தலைவி
அவர்கள் எடுத்து இருக்கிறார்களோ, அதுமாதிரி உரத்தைப்
பதுக்கி வைத்து இருப்பவர்கள் மீதும், உரத்திலே கலப்படம்
செய்து இருப்பவர்கள் மீதும், பூச்சி மருந்துகளை, தரக் குறை
வான மருந்துகளை விநியோகிப்பவர்கள் மீதும் நடவடிக்கை
எடுக்கும் அதே நேரத்திலே அந்தப் பகுதியினுடைய வேளாண்
மைத் துறை அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
வேளாண்மைத் துறையானது நல்ல கட்டமைப்போடு நம்
முடைய தமிழகத்திலே இருக்கிறது. அந்த விரிவாக்க அதிகாரி
கள் எல்லாம் இப்போது சரியான முறையில் விவசாயிகளைச்
சந்தித்து அந்த விரிவாக்கப் பணிகளைச் செய்வதில்லை. அவர்கள்
செய்து கொண்டிருப்பது எல்லாம் இப்போது ஊராட்சி ஒன்றியத்
தினுடைய வேளாண்மைக் கிடங்குகளிலே இருந்து கொண்டு ஒரு
சிறு விவசாயிகள் பட்டியலை வைத்துக் கொண்டு இருக்கிறார்கள்.
அதிலே சிறு விவசாயிகளுக்கு என்று ஒதுக்கப்படுகின்ற கடப்
பாரை, கோடாரி, மண்வெட்டி, மினி கிட்ஸ் போன்ற 50 சத
வீத மானியத்திலே கொடுக்கப்படுகின்றதை அவர்களே பில்
போட்டு எடுத்துக் கொண்டு தவறாகப் பயன்படுத்தி விவசாயி
களுக்குக் கிடைக்காமல் செய்கிறார்கள்.



1991 செப்டம்பர் 10] [திரு. நா, சா. பழனிசாமி]

இப்போது இரட்டை விலை உரத்திற்கு அறிவித்து இருப்பதி
லும், சிறு விவசாயிகளுக்கு அப்படிப்பட்ட உரங்கள் அப்படிப்
பட்ட இடங்களிலே வழங்கப்படும்போது இந்த ஊழல் அதிகாரி
கள்தான் அதிலே பயனடைகிறார்கள். எனவே அப்படி அந்தப்
பகுதியில் யாராவது ஊழல் செய்தால் அந்த வேளாண்மைத்
துறை அதிகாரிகளைத் தண்டித்து அவர்களையும் பதவி நீக்கம்
செய்ய இப்போது காவல் துறையில் எடுக்கப்பட்டு இருக்கிற
அதே நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்றும், இப்
போது ஊராட்சி ஒன்றியங்களில்....

முற்பகல் 11-30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு
உறுப்பினர் வாக்கியத்தை முடிக்க வேண்டும். 'என்றும், என்றும்'
என்று கமா போடுவது சரியல்ல. 11-30 மணி ஆகிவிட்டது.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் கட்டப்பட்டிருக்கிற ஆதி
திராவிடர் குடியிருப்புகள் பல பகுதிகளில் கட்டி முடிக்கப்பட்ட
வுடன் அவர்கள் குடிசென்ற நேரத்தில், மழை பெய்கிறபோது அந்
தக் கட்டிடங்கள் எல்லாம் ஒழுகிக் கொண்டிருக்கின்றன. மழை
பெய்தால் ஆதிதிராவிட மக்கள் அவர்களுடைய வீட்டிற்குள்ளே
ஓடுவதற்கு பதிலாக, வீட்டை விட்டு வெளியே ஓடி வந்துகொண்
டிருக்கிறார்கள். காரணம் அவற்றை காண்ட்ராக்ட் எடுத்து செய்
தவர்களும், அந்த யூனியன் என்ஜினியர்களும் சரியான கான்கிரிட்
கலவை போடாமல் அந்த வீடுகள் எப்போது விழுமோ என்ற
நிலையில் இருக்கின்றன. அந்த வீடுகள் குறிப்பிட்ட காலம்
வரையில் சரியான முறையில் இல்லாவிட்டால்; அந்த காண்ட்
ராக்டர்கள், அந்த யூனியன் என்ஜினியர்கள்தான் அதற்கு
பொறுப்பாவார்கள் என்று அரசாங்கம் நிர்ணயித்தால்தான்
இப்போது இந்த சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக
பயனடையக்கூடிய நிலை ஏற்படும்.

இப்போது விவசாயிகள் பவானி ஆறு, அமராவதி ஆறு,
காவிரி ஆறு போன்றவற்றில் விவசாய மின் இணைப்புகள் மூல
மாக பல்லாயிரம் அடிகள் பைப்லைன் போட்டு தண்ணீர் எடுத்து
விவசாயம் செய்கிறார்கள். அவர்கள் தண்ணீர் எடுத்து விவ
சாயம் செய்வது இன்றைய தொழில் நுட்பம் காரணமாக ஏற்
பட்டிருக்கிறது. இப்போது அதற்கு தண்டத்தீர்வை அரசு
விதிக்கிறது. தீர்வை என்று விதியுங்கள். 50 ரூபாய் என்றா
லும், 100 ரூபாய் என்றாலும் கட்டுகிறோம். ஆனால் விவசாயி
கள் வேளாண்மைக்கு பயன்படுத்துகிற தண்ணீருக்கு, இந்த
அரசாங்கம் தண்டத்தீர்வை என்ற குற்றச்சாட்டை, விவசாயி
கள் திருடுகிறார்கள் என்று அந்த தண்டத்தீர்வையை விதிக்க

வேண்டாம் என்று இந்த விவசாயிகள் இயக்கத்தின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன். அளித்த வாய்ப்பிற்கு நன்றி கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. செ. கு. தமிழரசன் அவர்கள்.

திரு. செ. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சமர்ப்பித்து இருக்கிற நிதிநிலை அறிக்கையின் மீது இந்திய குடியரசு கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பளித்துள்ளமைக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த பட்ஜெட் ஒரு புரட்சிகரமான பட்ஜெட் என்று சொன்னால் அது மிகையாக இருக்காது. தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களால் அளிக்கப்படுகிற முதல் பட்ஜெட் இதுவாக இருப்பதால் இதிலே ஏதாவது குறைகள் இயல்பாக வரக்கூடும், அந்தக் குறைகளைப் பேசி கொஞ்ச நாளைக்கு அரசியல் நடத்தலாம் என்று கருதியவர்கள் கூட, இதிலே என்ன குறை இருக்கிறது என்று தேடித் தேடிப் பார்த்தாலும், சொல்கிற அளவுக்கு எந்தக் குறையும் இல்லை என்று அவர்களே வியந்து போகிற அளவுக்கு பாராட்டத்தக்க ஒரு நல்ல பட்ஜெட்டாக இது இருப்பதால் நான் முதலில் என்னுடைய பாராட்டுக்களை மனம் திறந்து தெரிவிக்க விரும்புகிறேன்.

ஏழையெளிய மக்களை, அடித்தளத்து மக்களை, எல்லா தரப்பு மக்களையும் கருத்திற்கொண்டு, சாதாரண மக்களுக்கு வரிச் சுமையை அதிகம் அளிக்காத பட்ஜெட்டாக இருப்பதால் நான் சார்ந்திருக்கிற என்னுடைய இயக்கத்தின் சார்பில் இதைப் பாராட்டுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். பொதுவாக இந்த அரசை குறை சொல்ல வேண்டும் என்ற நோக்கத்தையே குறிக்கோளாகக் கொண்டவர்களைத் தவிர வேறு யாராலும் குறை சொல்ல முடியாத பட்ஜெட் இது. இதிலே பல்வேறு நலத்திட்டங்கள் தெளிவுபடுத்தப்பட்டிருக்கின்றன. ஒன்றியங்களுக்கு ஒரு கோடி ரூபாய், தன்னிறைவுத் திட்டத்திற்காக வழங்குகிற இந்தத் திட்டத்தை இந்த பட்ஜெட்டிலே சொல்லியிருக்கிறார்கள். அதிலேயும் கிராமப்புறங்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்வதிலே அந்தத் தொகையில் பெரும் பகுதி செலவு செய்யப்படும் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். எல்லா கிராமங்களிலும் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர், நல்ல சாலைகள், தெரு விளக்குகள் போன்றவற்றைச் செய்து தருவதில் நாங்கள் முன்னுரிமை வழங்குவோம் என்று இந்த பட்ஜெட்டில் வலியுறுத்தி இருக்கிறார்கள். இந்தியா கிராமங்





களில் வாழ்கிறது என்று காந்தியடிகள் சொன்னார். 70 சதவீதமாக வாழ்ந்து கொண்டிருக்கிற கிராமப்புற மக்களுடைய அனைத்து அடிப்படைத் தேவைகளையும் பூர்த்தி செய்கிற வகையில் இப்போது ஒன்றியத்திற்கு ஒரு கோடி ரூபாய் என்ற சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தை வலியுறுத்துவதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-35

அதேபோல் உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் தருவதுதான் ஒரு நல்ல அரசின் குறிக்கோளாக இருக்க முடியும் என்று பாபாசாகிப் அம்பேத்கார் அவர்கள் சொன்னதைப் போல, உண்ண உணவு தந்த அரசு, உடுக்க உடை தந்த அரசு, இருப்பதற்கு இடம் தருவதற்காகவும், வீட்டுமனைப்பட்டா, வீடு கட்டித் தருகிற திட்டம் போன்றவற்றையெல்லாம் இதிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

நடப்பாண்டிலே மட்டும் 1 லட்சத்து 22 ஆயிரம் வீடுகளை, எல்லாத் தரப்பு மக்களுக்காகவும், கட்டுவதற்காக இந்த நிதிநிலை அறிக்கையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே 50 ஆயிரம் வீடுகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக மட்டும் வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டு இருக்கிறார்கள். இதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். 50 ஆயிரம் வீடுகள் கட்டுவதற்கு நிதி ஒதுக்குவது என்பது நம்முடைய நிதிநிலைப் பற்றாக்குறைக்கு அதிகபட்சத் தொகை என்றாலும் கூட, தாழ்த்தப்பட்ட மக்களுடைய மக்கள் தொகையைக் கணக்கிலே எடுத்தால், அந்த வீடுகள் போதுமானதாக இருக்காது என்று நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

கடந்த ஆண்டு, அரசு தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஜீவன் தாரா என்கிற திட்டத்தின் மூலம் கிணறுகளை வெட்டுவதற்காக 20 கோடி ரூபாயை வழங்கினார்கள். அந்த 20 கோடி ரூபாயிலே 5 கோடி ரூபாய்தான் பயன்படுத்தப்பட்டு இருக்கிறது. மீதி 15 கோடி ரூபாயை என்ன செய்வது என்று தெரியாமல் அப்படியே நிலுவையில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த 15 கோடி ரூபாயை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்டுவதற்காக மாற்றலாமா என்று அரசின் சார்பிலே எழுதப்பட்டு இருப்பதாக நான் அறிகிறேன். இதேபோல் கேரளாவிலே அந்தத் தொகையை முழுமையாக செலவு செய்ய முடியாத நிலைமையிலே, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக வீடு கட்டுவதற்காக அங்கே மீதியிருந்த நிலுவைத் தொகையை மாற்றி இருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். எனவே நாமும், இந்த 15 கோடி ரூபாயை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்டுவதற்கான திட்டத்திற்கு மாற்றி, அந்தத் தொகைக்கும் வீடுகளைக் கட்டித் தந்தால், குறைந்த பட்சம்

[திரு. செ. கு. தமிழரசன்] [1991 செப்டம்பர் 10

இன்னும் 2 ஆயிரம், 3 ஆயிரம் தாழ்த்தப்பட்ட மக்கள் வீடுகளைப்
பெறுகிற நிலைமை உருவாகும். எனவே அந்தத் தொகையை
இந்தத் துறைக்கு மாற்றி, பயன் உள்ள வகையில் அதைச் செய்து
தரவேண்டும் என்று நான் இங்கே கேட்டுக் கொள்ள விரும்பு
கிறேன்.

அதேபோல் தாட்கோ மூலமாக, ஆர். எல். இ. ஜி. பி.,
என். ஆர். இ. பி. திட்டங்களின் மூலமாக தாழ்த்தப்பட்ட
மக்களுக்குக் கட்டித் தருகிற அந்த வீடுகளுக்கு கட்டாயமாக
மின்சார இணைப்பையும் தர வேண்டும் என்று இந்த
அரசு கட்டாய நடவடிக்கையை மேற்கொண்டால் அந்த
வீடுகளை தாழ்த்தப்பட்டவர்கள் பராமரிப்பதற்கு எளிதாக
இருக்கும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்பு
கிறேன்.

கிராமப்புற மக்களுக்கு ஏராளமான நலத் திட்டங்களை
அறிவித்திருக்கிற நம்முடைய நிதிநிலை அறிக்கை, சென்னை
மாநகரத்தை மேலும் எழில்படுத்துவதற்காக ஒரு பெரும்
திட்டத்தை வைத்து, ரூ. 1,250 கோடியை, சென்னை மாநகர
வளர்ச்சிக்காக ஒதுக்கியிருக்கிறார்கள். இன்றைக்கு சென்னை
மாநகரத்தினுடைய மக்கள் தொகை 70 லட்சத்தை நெருங்கிக்
கொண்டிருக்கிறது. இந்தியாவின் இரண்டாவது பெரிய நகரமாக
இன்று சென்னை மாநகரம் வளர்ந்து கொண்டு இருக்கிறது.
இந்த 70 லட்சம் மக்களிலே, 30 லட்சத்திற்கும் மேற்பட்டவர்
கள் தாழ்த்தப்பட்டவர்களாக, தினக்கூலிகளாக, அன்றாடம்
காய்ச்சிகளாக, சென்னையிலே இருந்து கொண்டிருக்கிறார்கள்.
பிளாட்பாரங்களைப் பார்த்தால் அவர்கள் வெறும் சாக்குத்துணி
களைத் திரையாகக் கட்டி, தலைமுறை தலைமுறையாக குடும்பம்
நடத்திக் கொண்டு இருப்பதை நாம் இன்று சென்னை மாநகரத்
திலே பார்க்கலாம். அந்தப் புழுதிக் கொட்டில்களிலே, ரிக்ஷாத்
தொழிலாளியாகவும், துப்புரவுத் தொழிலாளியாகவும், சென்
னையில் இருந்து கொண்டிருக்கிற, அடித்தளத்து மக்கள்
வாழ்ந்து கொண்டு இருப்பதை நாம் பார்க்கிறோம். அதை விட்டு
விட்டு, கொஞ்சம் கூவம் நதிக்கரை ஓரத்திலே வந்து பார்ப்
போமானால், நாற்றத்திலே, குப்பங்களிலே, சுகாதாரச் சீர்கேடு
உள்ள அந்தப் பகுதிகளிலே அவர்கள் வாழ்ந்து கொண்டு இருப்
பதைப் பார்க்கலாம். எனவே சென்னை மாநகர வளர்ச்
சிக்காக ஒதுக்கப்பட்டு இருக்கிற இந்த ரூ. 1,250 கோடியிலே,
சென்னை மாநகர குடிசை மாற்று வாரியத்திற்கு அதிகப்படி
யான நிதி ஒதுக்கீடு செய்து, அவர்களுக்கு எல்லாம், சென்னை
யின் புறநகர்ப் பகுதியிலே இலவச வீடுகளைக் கட்டித் தந்தால்,
சென்னை மாநகரம் நாம் நினைக்கிற வண்ணம் அழகாகவும்,
காதாரமாகவும் இருக்கும் என்பதை நான் சுட்டிக் காட்ட
விரும்புகிறேன்,



1991 செப்டம்பர் 10] [திரு. செ. கு. தமிழரசன்]

அதுமட்டுமல்ல, 70 லட்சத்தை நெருங்கிக் கொண்டு இருக்
கிற போது, ஏராளமான பஸ்களும், கார்களும், ஸ்கூட்டர்களும்
என்று ஏராளமான போக்குவரத்துகளும் அதிகமாகிக்கொண்டு
இருக்கிற சென்னை மாநகரத்திலே, பொல்லூஷன் காரணமாக,
ஆரோக்கியமான சுவாசம், தூய காற்று கிடைக்க முடியாமல்
சுகாதாரச் சீர்கேடு இருப்பதை நாம் பார்க்க முடிகிறது.

முற்பகல் 11-40

புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் இருந்த போது,
தலை நகரத்திலே உள்ள பல அதிகாரிகளை, பெரிய அலுவலகங்
களை எல்லாம், தலை நகரத்திலே உள்ள முக்கிய அலுவல
கங்களையெல்லாம் வேறு மாவட்டங்களுக்கு மாற்றி, இதைக்
குறைக்க முடியுமா என்று கருதினார்கள். ஏன், தலை நகரத்
தையே கூட திருச்சிக்கு மாற்ற முடியுமா என்றெல்லாம்
யோசித்துப் பார்த்தார்கள். நாம் திருச்சிக்கு மாற்றுவது
கடினமான காரியமாகக் கூட இருக்கலாம். ஆனால் டில்லி
யைப் போல, டில்லி, நியூ டில்லி என்ற இரு நகரங்களை உரு
வாக்கியிருப்பதைப் போல, ஹைதராபாத், செகந்தராபாத்,
என்று உருவாக்கியிருப்பதைப் போல, அஹமதாபாத், அஹமத்
நகர் என்ற இரண்டு நகரங்களை உருவாக்கியிருப்பதைப்போல,
சென்னையிலும்கூட தாம்பரத்திலேயோ அல்லது பூந்தமல்லி
யிலோ அல்லது அருகிலுள்ள புறநகர்ப் பகுதியிலோ ஒரு இரண்
டாவது சென்னையை நாம் ஏன் உருவாக்கக் கூடாது என்ற
யோசனையை நான் இந்த மாமன்றத்திலே உங்கள் முன்னாலே
வைக்க விரும்புகிறேன். (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இன்னும் இரண்டு
நிமிடத்திலே முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. செ. கு. தமிழரசன் :** தமிழகம் இந்தியாவிலே கேரளத்
திற்கு அடுத்தபடியாக எழுத்தறிவிலும் கல்வியிலும் இரண்டாவது
இடத்தைப் பெற்றிருக்கிறது. தமிழகத்திலே கிராமப்புற
மக்களுடைய கல்வி வளர்ச்சிக்காக நம்முடைய நிதிநிலை அறிக்
கையில் பல்வேறு சிறப்புத் திட்டங்களைச் சொல்லியிருக்கிறார்
கள். ஆனால் கிராமப்புறங்களைப் பார்க்கிறபோது எழுதப்
படிக்கத் தெரிந்தவர்களாக ஆண்களை விட பெண்கள் மிகக்
குறைந்த சதவீதத்திலேதான் இருக்கிறார்கள். மிகக் குறைந்த
சதவீதத்திலே பெண்கள் எழுதப் படிக்க தெரிந்தவர்களாக இருக்
கிறார்கள். ஒரு ஆண் படிப்பதன் மூலம் வேண்டுமானால்
அந்த ஆண் சுயலாபம் பெறலாம், வசதி பெறலாம். ஆனால்
ஒரு பெண் படித்தால், பெண் எழுத்தறிவு பெற்றால், அந்தக்
குடும்பமே எழுத்தறிவு பெறுவதற்கும் தெளிவு பெறுவதற்கும்,
அந்தக் குடும்பம் நலம் பெறுவதற்கும், அது ஒரு அடிப்படையாக
இருக்கும், அடித்தளமாக இருக்கும். எனவே பெண்களுக்கு

[திரு. செ. கு. தமிழரசன்] [1991 செப்டம்பர் 10

அதிகப்படியான கல்வி வசதிகளை நாம் முதியோர் கல்வி வசதி என்று சொல்லித் தருகிறோமே, அந்தத் திட்டங்களில் எல்லாம் பெண்களுக்கு அதிகப்படியான முக்கியத்துவம், முன்னுரிமை கொடுத்து, அவர்கள் கல்வித் தகுதி பெறுவதற்கான வழிவகைகளை செய்ய வேண்டுமென்று நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

அதேபோன்று இன்றைக்கு எம்.பி.பி.எஸ். படிக்கின்ற மருத்துவக் கல்லூரியானாலும், பொறியியல் கல்லூரியானாலும், வேறு சில தொழில் கல்வி நிலையங்களானாலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீடு என்று வருகின்றபோது இன்றைய ஒதுக்கீடு கிராமப்புற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எவ்வளவு போயிருக்கிறது என்று சொன்னால், கிராமப்புற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எல்லாம் 2 சதவீதம் கூடப் போய் இருக்காது. ஏனென்றால் இந்த இட ஒதுக்கீட்டின் மூலம் ஒரு தலைமுறை வளர்ந்திருக்கிறது, வேறு ஒரு தலைமுறை என்ன செய்வது என்று தெரியாமல் இன்னமும் தடுமாறிக் கொண்டிருக்கிறது. இந்த இட ஒதுக்கீட்டை ஒரு தலை முறையே தொடர்ந்து அனுபவித்து வருகின்ற ஒரு தவறான நிலைமை இன்றைக்கு இந்த முறையிலே உருவாகிவிட்டது. டாக்டருடைய மகன் தான் டாக்டராக வர முடியும், ஒரு இஞ்சினியருடைய மகன்தான் இஞ்சினியராக வரமுடியும், ஒரு வக்கீலுடைய மகன்தான் வக்கீலாக வர முடியும். ஆனால் கிராமப்புறங்களிலே இருக்கின்ற தாழ்த்தப்பட்ட மக்களுடைய கல்வித் தரம் அங்கே போதுமானதாக இல்லாத காரணத்தால் சென்னை நகரத்திலே உள்ளவர்களோடு, அவர்களால் மோத முடியவில்லை. எனவே கிராமப்புறத்திலேயிருந்து வருகின்ற தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொஞ்சம் அதிகப்படியான சிறப்பு மதிப்பெண்கள் நாம் தந்தால் அவர்களும் அந்த இட ஒதுக்கீட்டினை முழுமையாக அனுபவிக்க முடியும் என்று நான் கருதுகிறேன். எனவே கிராமப்புறத்திலேயிருந்து வருகின்ற தாழ்த்தப்பட்டவர்களுக்கு சிறப்பு மதிப்பெண்களைத் தருகின்ற திட்டத்தை இந்த அரசு செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் நிறுவனங்களிலே இட ஒதுக்கீடு முழுமையாக செய்யப்படுவது இல்லை. நம் அரசே நிதி ஒதுக்கீடு தந்து, நடத்திக் கொண்டிருக்கிற தனியார் நிறுவனங்கள் ஏராளமாக இருக்கின்றன. அதில் எல்லாம் கூட முறையாக இட ஒதுக்கீடு தரப்படுவதில்லை. எடுத்துக்காட்டாக இங்கே பச்சையப்பன் கல்லூரி இருக்கிறது. அதிலே 300 பேர் வேலை செய்கிறார்கள். ஒரேயொரு தாழ்த்தப்பட்ட பேராசிரியர்தான் இருக்கிறார். 300 பேரிலே ஒரே ஒருவர் தான் இருக்கிறார். கூட்டுறவுத் துறை இருக்கிறது. நம்முடைய மத்திய கூட்டுறவு வங்கிகள் ஏராளமாக இருக்கின்றன. இந்த கூட்டுறவு வங்கிகளிலே ஒட்டுமொத்தமாக கணக்கெடுத்துப் பார்த்தால், அதிலே இரண்டு சதவீத ஒதுக்கீடு கூட தாழ்த்தப்



1991 செப்டம்பர் 10] [திரு. செ. கு. தமிழரசன்]

பட்டவர்களுக்கு அளித்து அவர்கள் பணியாற்றவில்லை. தனியார் நிறுவனங்களிலும் இந்த நிலைமை நீடிக்கிறது. இங்கே இருக்கின்ற லயோலா கல்லூரியை எடுத்துக் கொண்டாலோ, ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரியை எடுத்துக் கொண்டாலோ, அங்கே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 சதவீதம் தந்திருக்கிறார்களா என்றால் நிச்சயமாக இல்லை. எனவே இந்த நிலைமைகளை தவிர்ப்பதற்காக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தலைமையிலே, இட ஒதுக்கீடு முறை என்பது முறையாக செயல்படுகிறதா என்பதை ஆராய்வதற்கு ஒரு கண்காணிப்புக் குழுவை ஏற்படுத்த வேண்டும், ஒரு உயர் மட்டக் குழுவை ஏற்படுத்த வேண்டுமென்பதை நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் மானியக் கோரிக்கைகளிலே அதிகமாகப் பேசலாம். ஒவ்வொன்றிலும் பேசலாம். இப்பொழுது முடிக்க வேண்டும்.

முற்பகல் 11—45

திரு. செ. கு. தமிழரசன் : இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன். ஆதி திராவிடர் நலத்திற்காக ஒரு சிறப்பு திட்டத்தை நம்முடைய நிதி நிலை அறிக்கையிலே 10 அம்ச திட்டமாக சொல்லியிருக்கிறார்கள். எங்களுடைய நீண்ட நாள் கோரிக்கை இது. புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கூட ஒரு சிறப்பு 5 ஆண்டுத் திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்று விரும்பினார்கள், சொன்னார்கள். நேரம் அற்ற நிலையிலே, அவரால் செய்ய முடியாத நிலையிலே மறைவுற்றார்கள். இன்றைக்கு எங்களுடைய கோரிக்கையை புரட்சித் தலைவி அவர்கள் செயல்படுத்தியிருக்கிறார்கள். அதற்காக நான் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையிலே கூட, தாழ்த்தப்பட்டவர்களை வெறும் சலுகைகள் தந்து உயர்த்திவிட நாம் முயற்சித்தால் போதாது, அவர்களை உண்மையாக உயர்விக்க வேண்டுமானால் பொருளாதார மேம்பாட்டு திட்டங்களை அமல்படுத்தி அவர்களை பொருளாதார ரீதியாக கைதூக்கி விட வேண்டும் என்று தேர்தல் அறிக்கையிலே புரட்சித் தலைவி அவர்கள் சொன்னார்கள். நான் பணிவோடு ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். இந்தச் சலுகைகளுக்கெல்லாம் நான் நன்றியை தெரிவித்துக் கொள்கிற அதே நேரத்தில், அவர்களை பொருளாதார ரீதியாக மேம்படுத்த வேண்டுமென்றால், நம்முடைய டி.ஐ.ஐ.சி. போன்ற நிறுவனங்களிலே, டிட்கோ போன்ற நிறுவனங்களிலே, சிப்காட் போன்ற நிறுவனங்களிலே 18 விழுக்காடு தாழ்த்தப்பட்ட மக்களை, தொழில் ரீதியிலே கொண்டு வருவதற்கு, தொழில் அதிபர்களாக ஒதுக்கீடு தந்து கொண்டு வர வேண்டும் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மணி அடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. எஸ். வி. சண்முகம்.

திரு. எஸ். வி. சண்முகம் : மாண்புமிகு சட்டப் பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மரியாதைக்குரிய நிதியமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைமீது நான் சார்ந்திருக்கிற ஐக்கிய பொதுவுடமைக் கட்சியின் சார்பில் பொதுவான கருத்துக்களை மாத்திரம் தெரிவித்துக்கொள்ளலாம் என கருதுகிறேன். நிதிநிலை அறிக்கையின் மீது புள்ளி விவரங்களை, மானியக் கோரிக்கைகளின்போது பேசுகிற வாய்ப்பு எனக்கு இருக்கிறது என்பதனாலே, மேலோட்டமாக என்னுடைய கருத்துக்களை முன் வைத்து பேசுவது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

பொதுவாக சற்றேறத்தாழ 100 கோடி மக்கள் வாழுகின்ற இந்தியத் திருநாட்டில், மக்களுடைய தேவைகளையெல்லாம் பூர்த்தி செய்யக்கூடிய நிதிநிலையை அறிவிப்பது என்பது எந்த ஆட்சியாலும் முடியாத காரியம் என்பதை விவரம் தெரிந்தவர்கள் ஒப்புக் கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன். சகல வித அதிகாரங்களையும் படைத்திருக்கிற உலக நாடுகளிடமிருந்து கூட கோடிகளை பெறுகிற தகுதி படைத்த நமது இந்திய அரசு கூட வரம்புக்கு மீறிய கடன்கள் வாங்கி இறுதியில் இருக்கிற தங்கங்களையெல்லாம் அடகு வைத்து இந்த நாட்டை நடத்திக் கொண்டிருக்கிறது என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். அத்தகைய மிகுந்த நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கிற தேசத்தில் புதியதாக பொறுப்புக்கு வந்திருக்கக்கூடிய இந்த அரசு பொறுப்புக்கு வந்த உடனேயே மது விலக்கு கொள்கையை அமல்படுத்தி 322 கோடி ரூபாயை இழந்து, இழந்த உடனேயே ஒரு நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பிக்கும்போது மக்களுடைய தேவையை அதிகமாகப் பூர்த்தி செய்ய விரும்புகிற இந்த அரசு அதிகமான சுமையை மக்கள் மீது வைக்குமோ என்று பலரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்த வேளையில், சுமைகளையெல்லாம் தான் ஏற்றுக்கொண்டு ஒரு 70 கோடி ரூபாயை மாத்திரம் வரியாக வைத்திருக்கிறது மக்கள் மீது சுமையை வைக்காத இந்த நிதிநிலை அறிக்கையை நான் மனமார வாழ்த்தி பாராட்டுகிறேன். 70 கோடி ரூபாய் என்பது ஒரு சாதாரணத் தொகை. 7 கோடி மக்கள் வாழ்கிற தமிழ்நாட்டில் புதியதாக போடப்பட்டிருக்கிற வரியை கணக்கிட்டால் ஒரு நபருக்கு 10 ரூபாய்தான் வரி போட்டிருக்கிறார்கள். கிராமங்களில், ஏன் நகரங்களில் கூட, சில இடங்களில் சாமி கும்பிடுவார்கள். சாமி கும்பிடுவதற்கே வரி போடுவார்கள் 100 ரூபாய். ஆகவே பத்து ரூபாய் என்பது ஒரு சாதாரண வரி.

அதுவும் மதுவின் மீது அதிக வரி விதித்து இருக்கிறார்கள். அநேகமாக இது எல்லோரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒன்றாகத்தான் இருக்க முடியும். அந்த வகையில் இந்த பட்ஜெட்



16490



என்பதை ஏதோ வம்புக்கு] வேண்டுமானால் எதிர்க்கலாம், வீம்புக்கு வேண்டுமானால் எதையாவது எதிர்த்துப் பேச வேண்டும் என்று வேண்டுமானால் பேசிக் கொண்டிருக்கலாம். வங்காளத்திலே அப்படி இருக்கிறது, இப்படி இருக்கிறது என்று சொல்லலாம். கேரளாவைப் பாருங்கள் என்று சொல்லலாம். ஆனால் விவரம் தெரிந்தவர்கள் என்ற முறையில், தனக்கும் மனச்சாட்சி இருக்கிறது என்ற முறையில் இதை ஆய்வு செய்தால், இதை விட ஒரு நல்ல பட்ஜெட்டை சமர்ப்பித்திருக்க முடியாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-50

இந்த அரசு சந்தித்துக்கொண்டிருக்கின்ற பிரச்சினைகளை எல்லாம், தமிழ் சமுதாயம் சந்தித்துக் கொண்டிருக்கின்ற பிரச்சினைகளை எல்லாம் அணுகியிருக்கிறார்கள் நம்முடைய நிதியமைச்சர் அவர்கள். பயங்கரவாதத்தை அணுகியிருக்கிறார்கள். இந்த அரசு ஈகை உள்ள அரசு என்ற முறையில் முதியோர்களுடைய விஷயங்களை கவலையோடு அணுகியிருக்கிறார்கள். தாய்மார்கள், குழந்தைகள் இவர்களுடைய விஷயங்களை எல்லாம் அணுகியிருக்கிறார்கள். பயங்கரவாதத்தை வேரோடும் வேரடி மண்ணோடும் வீழ்த்துவதில் முதலமைச்சர் அவர்கள் தன் உயிரையும் துச்சமென மதித்து செயல்படுகிறார்கள் என்பதை கடந்த கால அரசோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இதனிலும் ஒரு தேச பக்தி அரசு இல்லை என்று தான் சொல்ல முடியும். கடந்த கால அரசுத் தலைவர்கள் எல்லாம் 2 வருட ஆட்சியில் பயங்கரவாதம் இருக்கிறது என்று நாம் சொன்னால் "எங்கே இருக்கிறது இங்கே இருக்கிறதா, அங்கே இருக்கிறதா இருந்தாலும் அது பயங்கரவாதமாக இருக்காது, என்றெல்லாம் மழுப்பினார்கள். இப்போது நம்முடைய தமிழ்நாட்டை பார்க்கின்றபொழுது பெட்டி பெட்டியாக ஆயுதங்கள், குவியல் குவியலாக ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. அந்த அரசே நீடித்திருந்தால் தமிழகம் என்ன ஆகியிருக்கும் என்றே தெரியாது. அவற்றையெல்லாம் அடக்குவதற்கான முயற்சிகளை எல்லாம் இந்த அரசு எடுத்திருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சரை நினைக்கும்போது மிகுந்த விழிப்புணர்ச்சியோடு, தன்னுயிரைப் பற்றியும் கவலைப்படாமல் இத்தகைய நடவடிக்கைகளை எடுத்து இருக்கிறார்கள்.

ஒன்றை மட்டும் நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். காவல்துறையை பலப்படுத்துவதின் மூலமாக மாத்திரம் பயங்கரவாதத்தை ஒழித்துவிட முடியாது. ஏனெனில் பயங்கரவாதத்திற்கு வேர் இந்த தமிழ் சமுதாயத்திற்குள்ளே இருக்கிறது. நம்முடைய ராஜீவ் காந்தி அவர்கள் படுகொலை செய்யப்பட்டபோது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒருவர் விருதுநகர் பொதுக் கூட்டத்திலே பேசினார் 'நிலையான அரசு

[திரு. எஸ். வி. சண்முகம்] [1991 செப்டம்பர் 10

அமைக்கிறேன் என்று சொல்கிறார் ராஜீவ் காந்தி. அவர் தமிழ்நாட்டிற்கு வருகிறார். திரும்பப் போனால் தானே நிலையான ஆட்சியை அமைப்பார், தருவார்' என்றார். அவர் கைது செய்யப்படவில்லை. அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அந்த ** மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பெயர் குறிப்பிட்டு யார் மீதும் குற்றச்சாட்டுகளைச் சொல்லக் கூடாது. அந்தப் பெயர் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. தொடர்ந்து பேசுங்கள்.

திரு. எஸ். வி. சண்முகம் : முன்பு இருந்த முதலமைச்சர் ராஜீவ் காந்தி அவர்கள் கொல்லப்பட்டபோது, அவர் கொல்லப்படுவதற்கு மூன்று மணி நேரத்திற்கு முன்பு, நிகழ்ச்சிகளை எல்லாம் ரத்து செய்து விட்டு வீட்டிற்கு வந்திருக்கிறார். ராஜீவ் காந்தி கொல்லப்படுவார் என்பது எப்படியோ அவருக்கு முன் கூட்டியே தெரிந்திருக்கிறது. அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர் மீது நடவடிக்கை எடுக்காததினுடைய விளைவுதான் நேற்றைக்கு இங்கு வரம்பு மீறி போட்ட ஆட்டம். வேட்டியைத் தானே கழட்டிக் கொண்டு விளம்பரம் தேடுகின்ற முயற்சிகள் எல்லாம் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் மீண்டும் அழுத்தமாக சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த அரசுக்கு வெளியிலிருந்தும், அங்கிருந்தும் பல தாக்குதல்கள் வரும், சோதனைகள் வரும். இந்த சட்டமன்ற நிகழ்ச்சிகளை வைத்து கூட ஒரு ஜாதிச் சண்டையை வெளியே கிளப்புவதற்கான முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதையெல்லாம் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

பல நல்ல திட்டங்களை அறிவிக்க விரும்புகின்ற இந்த அரசு சில துணிச்சலான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உதாரணமாக நம்முடைய பேருந்துத் துறை, மின்சாரத் துறை இவைகள் எல்லாம் நஷ்டத்திலேயே ஓடிக்கொண்டிருக்கின்றன. நான் பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்தவன் என்பதை உணர்ந்து கொண்டே சொல்ல விரும்புகிறேன். நம்முடைய தமிழ்நாட்டில் பேருந்துகள் பற்றாக்குறை இருக்கிறது. அரசு துறைகளாலும் அவைகளை அதிகப்படுத்த முடியாத நிலை இருக்கிறது. ஏன் தனியாருக்கு பேருந்துகளை கொடுக்கக்கூடாது என்பதை இந்த அரசு சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏதோ இதில் பெரிய கொள்கை விஷயம் இருப்பதாக நான் கருதவில்லை. தேவை

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணை[illegible] அகற்றப்பெற்றது.



1991 செப்டம்பர் 10] [திரு. எஸ். வி. சண்முகம்]

முக்கியம். பஸ்ஸிலே எல்லாம் ஆட்கள் தொங்கிக் கொண்டு போகிறார்கள். ஏன்? அரசுத்துறையிடம் கேட்டால் பஸ் இல்லை, டீஸல் இல்லை. அதே நேரத்தில் தனியார் எத்தனையோ பஸ் விடுவதற்கு தயாராக இருக்கிறான். ஆகவே தயவு செய்து சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே போல மின்சாரம். மின்சாரமா? கிடைக்காது 4 வருஷமாக. தொலைபேசியா? 15 வருஷம். இவற்றைத் தருகிறேன் என்று சொல்பவர்களை அரசு பயன்படுத்துவதற்கு முன்வர வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். ஐக்கிய பொதுவுடைமை இயக்கத்தைச் சேர்ந்தவரே சோஷலிஸ நாட்டு அனுபவங்களோடு சொல்கிறாரோ என்று கூட மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் கருதலாம். வாழ்க்கை என்பது அனுபவங்களைக் கொண்டது. எதையெல்லாம் வாழ்க்கை அனுபவத்தில் மாற்றிக்கொள்ள வேண்டுமோ அதையெல்லாம் விவரம் தெரிந்தவர்கள் நாகரிகம் மிக்க நாடுகளில் மாற்றிக்கொள்வது தான் வழக்கம். ஆகவே பேருந்துகளை தனியார் துறைக்கு கணிசமான அளவுக்கு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் இப்படி சொல்லும்போது பெரிய முதலாளிகளுக்கு கொடுக்க வேண்டும் என்று சொல்லவில்லை. ஏன் என்றால் ஐக்கிய பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்தவர்கள் இப்படி பேசுகிறார்கள் என்று எங்களுடைய இரண்டு கம்யூனிஸ்ட்டு தோழர்கள் சொல்லுவார்கள். அவைகளைக் கொடுக்கும்போது படித்த பட்டதாரிகளுக்குக் கொடுக்க வேண்டும், ஊனமுற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11—55

அதைப்போலவே மின்சாரம். அதைப்பற்றி இந்த அரசின் அறிக்கையில் இருந்து நான் தெரிந்து கொண்டு இருப்பது இந்த இலவச மின்சாரத்தை ரத்து செய்து விட்டு அதற்கு மீண்டும் வரி விதிப்பது போல் ஒரு யோசனை இருப்பது போல் தெரிகிறது. அந்த அளவுக்கு மின்துறையின் நிதிநிலை இருக்கிறது என்பதும் எனக்குத் தெரியும். நான் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புவது எல்லாம் அறிவிக்கப்பட்ட இலவச மின்சாரம் அறிவிக்கப்பட்டதாக இருக்கட்டும். அதற்கு மீண்டும் வரி விதித்து நிதி கவலைகளை நீங்கள் வெளிப்படுத்த தொடங்குவீர்களானால் இந்த விவசாயிகளை தூண்டிவிட்டு தமிழ்நாட்டில் அரசியல் ஆதாயம் தேடுவதற்கு ஒரு கூட்டம் தயாராக இருக்கிறது என்பதை மறந்து விடக்கூடாது என்பதைத்தெரிவித்துக் கொள்கிறேன். ஏன் என்றால் ஒரு பைசா மின்சாரம் தான் ஒரு பெரிய போராட்டமாக கடந்த காலத்தில் வந்தது என்பதை மறந்து விடக்கூடாது. தயவு செய்து அறிவிக்கப்பட்ட இலவச மின்சாரத்தை மீண்டும் ரத்து செய்து விடக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல நிர்வாக சீர்திருத்தம் செய்வது பற்றி எல்லாம் அறிவித்து இருக்கிறீர்கள். தாலுக்காக்களைப் பிரிப்பது, மாவட்டங்களைப் பிரிப்பது பற்றி எல்லாம் அறிவித்து இருக்கிறீர்கள்.

பெரிய மாவட்டங்களைப் பிரிக்கும்போது நான் பணிவன்போடு கேட்டுக்கொள்வது, தலைவர்கள் பெயர்களை வைக்கும்போது மறைந்த மூதறிஞர் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரி அவர்கள் பெயரால் ஒரு மாவட்டம் இந்த தமிழ் மண்ணில் அமைய வேண்டியது அவசியம். ஏன் என்றால்—எதுவோ அவர் சார்ந்து இருக்கின்ற பகுதி, அவர் தோன்றிய சமுதாயம் எதுவோ அதைப் பற்றி கவலைப்படவில்லை மற்றத் தலைவர்கள் பெயர்கள் இருப்பது போல மூதறிஞர் இராஜாஜி அவர்கள் பெயராலும் ஒரு மாவட்டம் அமைய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தரிசு நிலங்களை எல்லாம் விளை நிலங்களாக மாற்ற முயற்சிகள் எடுத்து இருக்கிறீர்கள். பெரிய திட்டங்களைக் கொண்டு வருவதற்கும், சிறிய பாசன திட்டங்களை கொண்டு வருவதற்கும் முயற்சிகள் செய்வதாக சொல்லியிருக்கிறீர்கள். தமிழ்நாட்டின் ஜீவ நதி காவேரி. இப்போது அதுவும் பிரச்சினைக்கு உள்ளாகி இருக்கிறது. காவேரிக்கும் தாமிரபரணிக்கும் ஊடே 6, 7 மாவட்டங்கள் வறண்டு போயிருக்கின்றன. இந்த 6, 7 மாவட்டங்களுக்கும் முத்தாய்ப்பாக இருக்கின்ற மதுரை மாவட்டத்தின் இறுதியில் மூணாற்றுக்கு அருகில் உள்ள ஆலடி ஆறு என்றும், கல்லாறு என்றும், பம்பை ஆறு என்றும் மிக அற்புதமான பெரிய ஆறுகள் எல்லாம் கடலில் விழுகின்றன. இதுபற்றி மத்திய அரசோடு பேசி ஒரு புதிய பாசனத் திட்டத்தை உருவாக்கினால் காவேரிக்கும் தாமிரபரணிக்கும் ஊடே ஒரு புதிய ஆற்றை உருவாக்க வாய்ப்புகள் இருக்கின்றன. அதைப்பற்றியும் யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையை நம்முடைய நிதித்துறை அமைச்சர் அவர்கள் படிக்கும்போது திருக்குறளோடு தொடங்கி இருக்கிறார்கள். இந்த அரசுக்கு அஞ்சாமை இருக்கிறது; ஈகை இருக்கிறது; அறிவுடைமை இருக்கிறது, துணிவுடைமை இருக்கிறது என்று எல்லாம் சொல்லியிருக்கிறார். அத்திசை வழியில் இந்த அரசு தொடர்ந்து முன்னேற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உண்மையிலேயே இந்த அரசு இதற்கு முன்பு இருந்த எந்த அரசைக் காட்டிலும் துணிச்சலோடு பிரச்சினைகளை அணுகி இருக்கிறது. முன்பு இருந்த அரசு, ஒரு சாதாரண திட்டம், சேலை, வேட்டி, அரிசி அதை கொடுத்துக்கொண்டு இருந்தது, அமரர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொடுத்து கொண்டு இருந்தார். அதை முன்பு இருந்த தி.மு.க. அரசு நீக்கியது. ஒரு 10 கோடி ரூபாய். முடியாதா? அமரர் எம்.ஜி.ஆர். செய்தார் என்பதற்காக அதை நீக்கினார்கள். அதைப்போல விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகள் செத்துப் போய்விட்டால் 5 ஆயிரம் ரூபாய் கொடுத்துக்கொண்டு இருந்தார்கள். அது பொறுக்கவில்லை. வந்தவுடன் அதை 3 ஆயிரம் ரூபாய் என்று குறைத்தார்கள்.





இதுபோன்ற திட்டங்களை எல்லாம் இந்த அரசு மீண்டும் கொண்டு வந்து இருப்பதாலேயே இந்த அரசு ஈகை, இரக்கம் போன்ற உணர்வுகளைக் கொண்ட அமரர் எம்.ஜி.ஆர். அவர்கள் வழியில் தொடர்கிறது என்பதை இந்த நிதிநிலை அறிக்கை மெய்ப்பிக்கிறது. இந்த அரசு மீண்டும் சவால்களைச் சந்தித்து முன்னேற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு எஸ். ஆண்டித் தேவரீ அவையில் இல்லை. அடுத்து திரு. எஸ். திருநாவுக்கரசு.

நண்பகல் 12—00

*திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1991—92 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது சில கருத்துக்களை எடுத்துச் சொல்கிற வாய்ப்பு பெற்றதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

சென்ற ஆளுநர் உரையையொட்டி மறைந்த மாண்புமிகு முதல்வர், இதய தெய்வம், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயரால் எம்.ஜி.ஆர். மாவட்டம் அறிவித்ததையும், சத்துணவுத் திட்டத்திற்கு எம்.ஜி.ஆர்.-ன் பெயரைச் சூட்டியதையும், எம்.ஜி.ஆர்.-ன் தொண்டர், பக்தன் என்ற முறையிலே அதற்காக இந்த அரசை நான் பாராட்டுகின்றேன். அதுபோல, இந்த மாமன்றத்திலே நான் இந்தக் கூட்டத் தொடரிலே பேசுகிறபோது குறிப்பிட்டேன், பல அரசியல் தலைவர்களின் படங்களை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் திறந்து வைத்தார்கள் ; தமிழ் நாட்டினுடைய அரசியலில், ஆட்சியில் மிக நீண்ட ஆண்டுகளாக முதலமைச்சராக இருந்த பெருமை மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு உண்டு. எனவே அவருடைய திருவுருவப் படத்தினை இந்த மாமன்றத்திலே திறந்து வைக்க வேண்டுமென்று. அதுபோல புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய சமாதி, நினைவகம் மாற்றியமைக்கப்படும், பெரியதாகக் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. நான் அந்த வழியாக வருகிறபோது கவனிக்கிறேன், அங்கே எந்தப் பணியும், வேலையும் இதுவரையில் தொடங்கவில்லை. அதற்கான நிதி ஒதுக்கம் ஏதும் இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்படவில்லை. ஒருவேளை பொதுப்பணித் துறையின் சார்பிலே மானியக் கோரிக்கை வருகிறபோது, அதிலே நிதி ஒதுக்கீடு இருக்கும் என்று எதிர் பார்க்கிறேன். அப்படி ஒதுக்கி, அந்த நினைவகத்தை பெரிய அளவிலே, அழகுபட கட்ட வேண்டும் என்கிற வேண்டுகோளை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1991 செப்டம்பர் 10

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், புதுக்கோட்டை மாவட்டத்தில் ஏற்கெனவே சர்க்கரை ஆலை ஒன்றுக்கு மத்திய அரசாலே அனுமதி வழங்கப்பட்டு, கூட்டுறவுத் துறையிலே ஆரம்பிப்பதற்கு மத்திய அரசு உரிமம் தந்திருந்தது; அனுமதி தந்திருந்தது. அதற்குப் பின்னாலே, முன்னால் இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு காலத்தில், அறந்தாங்கி தொகுதியிலே உள்ள நாகுடி பகுதியிலே ஆரம்பிப்பதற்காக உரிமம் பெறப்பட்டிருந்த சர்க்கரை ஆலை, அடுத்த தொகுதிக்கு, ஆலங்குடி தொகுதிக்கு மாற்றப்பட்டது. இப்போது நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்வது ஏறக்குறைய 1 கோடி ரூபாய் வரையில் ஷேர் கேப்பிடல் விவசாயிகளிடத்திலே ஏற்கெனவே வசூல் செய்யப்பட்டிருக்கிறது. அரசாங்கத்திலே மத்திய அரசிடமிருந்து உரிமம் பெறப்பட்டிருக்கிறது. எனவே, இந்த அரசாங்கம் ஏற்கெனவே அனுமதி வாங்கியிருந்த அறந்தாங்கி தொகுதியிலே உள்ள நாகுடியிலே போட்டாலும் சரி அல்லது ஏற்கனவே அறிவித்திருக்கிற ஆலங்குடி தொகுதியில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினரைத் தேர்ந்தெடுத்த தொகுதிதான், எனவே அந்தத் தொகுதியிலே வந்தாலும் சரி, எங்காவது புதுக்கோட்டை மாவட்டத்திலே ஒரு இடத்திலே அந்த சர்க்கரை ஆலையைத் துவங்க வேண்டும். ஏனென்றால், ஏறக்குறைய 1 கோடி ரூபாய் ஷேர் கேப்பிடல் வசூல் செய்து ஓராண்டு ஆகப் போகிறது. அதை நிறைவேற்றித்தரவேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக் கொள்கிறேன். அதுபோல, புதுக்கோட்டை மாவட்டத்திலே இப்போது கடும் வறட்சி நிலவுகிறது. அந்த வறட்சியைப் போக்குவதற்குரிய நடவடிக்கைகளை இந்த அரசு உடனடியாக எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புதுக்கோட்டை நகரத்திற்கு நிரந்தரமாகக் குடிதண்ணீர் கிடைக்கிற விதத்திலே காவிரி நீர் புதுக்கோட்டை நகரத்திற்கு வருவதற்காக ஒரு திட்டம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய காலத்திலே உருவாக்கப்பட்டது. அதை விரைவுபடுத்தி, புதுக்கோட்டை நகருக்கு காவிரி தண்ணீர் கிடைப்பதற்கு உரிய நடவடிக்கையை இந்த அரசு எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1991—92 ஆம் ஆண்டு வருவாய் கணக்கிலே மொத்த வருவாய் 5,347.34 கோடி என்றும் செலவுகள் 6,249.83 கோடி என்றும், வருவாய் கணக்கிலே பற்றாக்குறை 902.49 கோடி என்றும் மற்றைய ஏனைய இனங்களின் கீழே வரவு செலவு போக மீதப் பற்றாக்குறை 577.41 கோடி என்றும், 1990—91 ஆம் ஆண்டிலே பற்றாக்குறை அதாவது சென்ற ஆண்டு பற்றாக்குறை 207.94 கோடி என்றும் இங்கே அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மொத்தத்திலே பார்க்கிறபோது 1991—92 இல் மொத்த பற்றாக்குறை 785.35 கோடியாக



1991 செப்டம்பர் 10] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

இருக்கும் என்று கணக்கிடப்பட்டு இருந்தாலும் நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டதைப்போல மின் வாரியத்துக்கு ஏற்படுகிற இழப்பு, அதற்கு அரசாங்கம் தருகிற பணம், போக்குவரத்து நிறுவனங்களுக்கு ஏற்படுகிற நஷ்டம், அதற்கு அரசாங்கம் தருகிற பணம் இவையெல்லாம் இதிலே சேர்க்கப்படவில்லை. ஆனால் அவற்றையும் சேர்க்கிறபொழுது ஏற்கனவே இருந்த 785.35 கோடியோடு இந்த 330 கோடியையும் சேர்க்கிறபொழுது சுமார் 1,115.35 கோடி மொத்தப் பற்றாக்குறை ஏற்படும் என்பது இங்கே மொத்தமாகக் குறிப்பிடப்படாவிட்டாலும், அதுதான் உண்மையான பற்றாக்குறையாக இருக்கும்.

பிற்பகல் 12-05

அதிலே 70 கோடிக்கு வருமானம் வரும் என்று கணக்கிட்டு உண்மையான பற்றாக்குறை 575.35 கோடியாக இருக்கும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆனால், உண்மையிலேயே மொத்தப் பற்றாக்குறை என்பது 1,115.35 கோடி. இதிலே, வருமானம் 70 கோடி போக மொத்தப் பற்றாக்குறை 1,145 கோடியாக இருக்கும்.

இந்த ஆண்டு நலப் பணிகளுக்காக, திட்டப் பணிகளுக்காக ஒதுக்கியிருப்பது ஏறக்குறைய 1,600 கோடி. சம்பளம் மற்ற எல்லாம் போக, நலப் பணிகளுக்காக ஒதுக்கியிருப்பது வெறும் 1,600 கோடிதான். 1,600 கோடி நலப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சுமார் 1,200 கோடி பற்றாக்குறையாக இருக்கிறது. ஆக மொத்தம் 400 கோடி ரூபாய்க்குத்தான் இந்த ஆண்டிலே திட்டப் பணிகளை மக்கள் நலப் பணிகளைச் செய்ய முடியும், இருக்கின்ற கணக்குப்படி, ஆக, செலவுகளை மீதப்படுத்துவதன் மூலம், மிச்சப்படுத்துவதன் மூலம் இந்தப் பற்றாக்குறையைச் சரிக் கட்டுவோம் என்று அறிவித்திருக்கிறீர்கள். எவ்வளவு தூரம் அப்படிச் சரிக்கட்ட முடியும் என்பதை அடுத்த ஆண்டு பட்ஜெட் வருகிறபொழுது தான் நாம் தெரிந்து கொள்ள முடியும்.

இதற்கிடையிலே இப்படிப் பற்றாக்குறை இருக்கிற காரணத்தினாலே, சில வரிகளை இங்கே விதித்திருக்கிறீர்கள். வரி சுமார் 70 கோடி ரூபாய்க்கு விதிக்கப்பட்டிருக்கிறது. அதிலே ரேஷன் அரிசியைப் பொறுத்த வரையில் ஆந்திராவிலே உள்ளதைப்போல வருமான அடிப்படையிலே உச்சவரம்பு இங்கேயும் கொண்டு வரப்படும் என்று ஒரு குறிப்பு இங்கே கூறப்பட்டிருக்கிறது. நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்வேன், ஏற்கனவே விலையை ஒரு தடவை உயர்த்தி, அதற்குப் பின்னாலே அரிசி விலையை உயர்த்துவது இல்லை என்று கைவிட்டு இருக்கிறீர்கள். மத்திய அரசு அப்போதைக்கப்போது ஆண்டுக்கு ஒரு தடவையோ, இரண்டு தடவையோ அரிசி விலையை உயர்த்திக்கொண்டு தான் இருப்பார்கள். ஆனால், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் சுமார் பத்தாண்டுக் காலம் முதலமைச்சராக இருந்த

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1991 செப்டம்பர் 10

பொழுது அரிசி விலை நேரடியாக மக்களைப் பாதிக்கிறது என்கிற காரணத்தினாலே ஒருபோதும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அரசு விலையை உயர்த்த சம்மதம் தந்ததே கிடையாது. எனவே, இந்த அரசும் அரிசி விலையை உயர்த்தாமல் இருக்க வேண்டும்.

அதுபோல ஏற்கனவே வழங்கப்பட்டிருக்கிற ரேஷன் கார்டுகளை இனிமேல் உச்சவரம்பின் அடிப்படையிலே, ஏதாவது ஒரு பண அளவைக் குறிப்பிட்டு ஐநூறோ, ஆயிரமோ, ஆயிரத்து இருணூறோ ஆந்திராவிலோ, கர்நாடகத்திலோ இருப்பதைப் போல வைத்து, ஆங்கேயும் இனி ஒரு சீலிங் கொண்டு வந்து கொடுத்திருக்கின்ற ரேஷன் கார்டைத் தள்ளுபடி செய்வீர்களானால் ரத்து செய்வீர்களானால் அது ஏற்கெனவே அந்த சலுகைகளைப் பயன்படுத்திக்கொண்டிருந்த பொதுமக்கள் மத்தியிலே அதிருப்தியைத்தான் உண்டாக்கும். எனவே, அதையும் இந்த அரசு கவனத்திலே கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வரிக்குறைப்பு என்கிற அயிட்டத்தில் கீழே தங்கப் பாளத்திற்கு 2 சதவீதத்திலிருந்து 1 சதவீதமாகக் குறைத்திருக்கிறீர்கள். அதுபோல தங்கம், வெள்ளியில் செய்யப்படும் பொருட்கள் ஆபரணங்களுக்கு 4 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாகக் குறைத்திருக்கிறீர்கள். தங்க முலாம் பூசிய நகைகளுக்கு 8 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

என்னுடைய அபிப்பிராயம், தங்க முலாம் பூசப்பட்ட நகைகள் வேண்டுமானால் நடுத்தர, ஏழை எளிய மக்கள் பயன்படுத்துகின்ற ஆபரணங்கள் ஆகும். அதற்கான வரியை 8 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாகக் குறைத்தது ஏற்றுக் கொள்ளக் கூடியதுதான். ஆனால், அதே நேரத்திலே தங்கத்தால் வெள்ளியால் செய்யப்படுகிற ஆபரணங்கள், நகைகள், பொருட்களுக்கு நீங்கள் வரியைக் குறைத்திருக்க வேண்டியதில்லை என்றுதான் நான் சொல்வேன். ஏனென்றால், அந்த வரியால் ஏழை எளிய மக்கள், நடுத்தர மக்கள் பாதிக்கப்படப்போவதில்லை. அதேபோல, தங்கப் பாளங்களுக்கு 2 சதவீதத்திலிருந்து 1 சதவீதமாக நீங்கள் குறைக்க வேண்டியதில்லை என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். தங்க முலாம் பூசியிருக்கிற அந்த ஆபரணங்களுக்கு வேண்டுமானால்—அதை சாதாரணமாக கவரிங் என்று சொல்வார்கள். மேலே தங்க முலாம் பூசியிருக்கலாம். அது நடுத்தர, ஏழை மக்கள் பயன்படுத்தக்கூடியது. அதற்கு வேண்டுமானால் நீங்கள் ஏற்கனவே 8 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாகக் குறைத்திருப்பதை ஏற்றுக் கொள்ளலாம்.



1991 செப்டம்பர் 10] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

பிற்பகல் 12-10

தங்கத்திற்கு வரியைக் குறைத்துவிட்டு, வெள்ளிக்கு வரியைக் குறைத்துவிட்டு, சாதாரண ஏழை எளிய மக்கள் பயன்படுத்துகிற சோப்புக்கு வரியை நீங்கள் உயர்த்தியிருப்பது, கண்டனத்திற்கு உரியதாகும். சோப்புக்கு வரியை, ஏற்கெனவே இருந்த 8 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக உயர்த்தியிருக்கிறீர்கள். சாதாரணமான, நடுத்தர, ஏழை எளிய மக்கள் பயன்படுத்தக் கூடியது சோப்பு ஆகும். கையினால் செய்யப்படுகிற சோப்புக்கு வரி விதிப்பைக் குறைத்திருக்கிறீர்கள் 8 சதவீதம் என்று. ஆனால், கையினால் செய்யப்படுகிற சோப்பு, பெருமளவிலே மக்கள் மத்தியிலே பழக்கத்திலே எங்கேயும் இல்லை. கிராமத்திலேகூட, 'ஸ்டேண்டர்டு' சோப்புகள்தான் உபயோகப்படுத்துகிறார்கள். அது தோய்ப்பதற்காக இருந்தாலும் சரி, குளிப்பதற்காக இருந்தாலும் சரி,

ஒருவேளை நம்முடைய நிதியமைச்சர் நாவலர் அவர்கள் வழக்கமாக 'பட்ஜெட்டிலே' சில வரிகளைப் போடுகிறபோது, கடைசியிலே அரசாங்கம் சலுகை அளித்திருக்கிறது என்கிற அடிப்படையிலே தொடர்ந்து கடைசியாக அறிவிப்பார்கள். அதற்காக, ஒருவேளை சோப்பை சேர்த்திருப்பார்களோ என்று எண்ணுகிறேன். அப்படி ஒருவேளை அதற்காகச் சேர்த்திருந்தால், அந்த சோப் மீது நீங்கள் போட்டிருக்கிற வரியை நீக்கவேண்டும்; எடுத்துவிட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, மின் கட்டணத்திலே — ஏற்கெனவே மின்சாரக் கட்டணம் சமீபத்திலே உயர்த்தப்பட்டிருக்கிறது. அப்படி உயர்த்தப்பட்டிருக்கிற மின் கட்டணத்தின் மேலே, மேலும் 4 சதவிகத வரியை இப்போது சேர்த்திருக்கிறீர்கள். இதனால், தொழிற்சாலைகள், நடுத்தரக் குடும்பங்கள், ஏழை எளிய குடும்பங்கள் நிச்சயமாகப் பாதிக்கப்படும். 'பட்ஜெட் கூட்டம் கூடுவதற்கு முன்னாலே, மின் கட்டணங்கள் ஏற்கெனவே உயர்த்தப்பட்டு இருக்கின்றன. அதை தொழிற்சாலைகளின் சார்பிலே அந்த 'அசோசியேஷன்'கள் எல்லாம் கண்டித்து இருக்கிறார்கள். இப்போது, அதன் மேலே 4 சதவிகித வரியை விதித்து இருப்பது, மேலும் தொழில் வளர்ச்சியைப் பாதிக்கும்; சாதாரண, நடுத்தர ஏழை எளிய மக்களை அது பாதிக்கும் என்கிற காரணத்தினாலே, அதற்கு விலக்களிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல, பேருந்துகள் மீதான வரி, சரக்கு வண்டிகள் மீதான வரி, இவற்றால் நிச்சயமாக பொருட்களின் விலைவாசி உயரும். பேருந்துகளில் பயணம் செய்கிற சாதாரண நடுத்தர மக்கள் பாதிக்கப்படுவார்கள். கடுமையான நிதி பற்றாக்குறை இருக்கிற இந்த நேரத்திலே இந்த சபை கூடுவதற்கு முன்னாலே, 'ஆம்னி' பஸ்களைப் பொறுத்தவரை, ஏற்கெனவே 500 ரூபாயாக இருந்தது. இரண்டாயிரம் ரூபாயாக சென்ற ஆட்சி காலத்திலே உயர்த்தப்பட்டது. ஒரு சீட்டுக்கு ஒரு காலாண்டிற்கு. அவர்கள் கோர்ட்டுக்குப் போனார்கள். கோர்ட்டிலே, 1,500 ரூபாய் வரை என்று இறுதி தீர்ப்பு வருகிறவரை, இடைக்காலமாக 1,500 ரூபாயை நீங்கள் வசூல் செய்ய வேண்டுமென்று ஆணையிட்டார்கள். அதிலே அரசாங்கம் திடீரென 500 ரூபாயாகக் குறைக்க வேண்டிய அவசியம் ஏன் வந்தது? தனியார்கள் வசதியாளர்கள் எல்லாம் 'ஆம்னி' பஸ்கள் நடத்துகிறார்கள். எனவே, சாதாரண பொது மக்கள் பயணம் செய்கிற பேருந்துகளின் மீது, சரக்குகள் செல்கிற வாகன வண்டிகள் மீது கட்டணத்தை உயர்த்துவதை விட...... (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, 'ஆம்னி' பஸ்ஸிற்கு 500 ரூபாயிலிருந்து இரண்டாயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டது என்றார். அது நீதிமன்றத்திற்குச் சென்று 1,500 ரூபாய்க்குக் கீழே அரசு விதிக்கலாம் என்று உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறதே தவிர, 1,500 ரூபாய் அல்ல. இரண்டாவதாக, வேறு மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, பாண்டிச்சேரி மாநிலத்தில் 150 ரூபாய் 'ஆம்னி' பஸ்ஸிற்கு, ஒரு சீட்டிற்குக் கட்டணம் கொடுக்கப்படுகிறது. அதேபோல், கேரள மாநிலத்தில் 250 ரூபாய் வழங்கலாம் என்று உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது. ஆந்திர மாநிலத்தில் 300 ரூபாயாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது, ஆகவே, எல்லா மாநிலங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது ஏதோ ஒரு தொழிலைச் செய்து வாழ்ந்து கொண்டிருக்கிறவர்களின் வாயிலே மண்ணைப் போடுகிற முன்னாள் அரசினுடைய கொள்கையை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்கிற அடிப்படையிலேதான், நம்முடைய தாயுள்ளம் படைத்த நம்முடைய தலைவர் அவர்கள் 20 ஆயிரம் குடும்பங்கள் வாழ வேண்டும் அவர்கள் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்காகத்தான் அந்த 500 ரூபாயை விதித்திருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1500 ரூபாய்க்குள்ளேதான் விதிக்க வேண்டுமென்று நீதிமன்றம் சொல்லியிருந்தால், 1499 ரூபாய் கூட 1500



ரூபாய்க்கு உட்பட்டதுதான். அதை 500 ரூபாயாக ஆக்க வேண்டிய அவசியம் இல்லை. 1499 ரூபாய் கூட விதிக்கலாம்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே எந்தத் தொழிலும் செய்து விடக்கூடாது என்று முந்தைய அரசு கருதியதைப் போல, இந்த அரசு கருதவில்லை. ஆகவே, நம்மை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிற 20 ஆயிரம் குடும்பங்களின் வாழ்க்கையையும் நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். வேறு மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, எல்லா மாநிலங்களைக் காட்டிலும் உயர்ந்திருக்கிறதே தவிர குறைக்கப்படவில்லை என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இதைக் கோடிட்டுக் காட்டி, ஒரு குற்றச்சாட்டாக இங்கே இருக்கிற எதிர் வரிசையில் அமர்ந்திருக்கிற உறுப்பினர் சுட்டிக் காட்டியது நியாயமாக இருக்காது. நம்முடைய மாநிலத்தில், வேறு மாநிலங்களைக் காட்டிலும் அதிகமாக வசூலிக்கப்படுகிறதே தவிர, குறைக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 12-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். திருநாவுக்கரசு.

திரு. எஹ. திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமாதானம் எனக்கு வேண்டியதில்லை. ஆனால் இந்த நிகழ்ச்சியால், இது போன்ற நிகழ்ச்சியால் அரசுக்குக் கெட்ட பெயர் வராமல் பார்த்துக் கொள்ளுங்கள், அதை மட்டும் நான் இப்போது சொல்லி அந்தப் பேருந்துகள் நடத்துகிறவர்கள் ஏழைகள் என்றோ அன்றாடம் காய்ச்சி என்றோ சொல்ல முடியாது. வசதியானவர்கள் ஆம்னி பஸ்கள் ஓட்டுகிறவர்கள். எனவே, வரியை, சாதாரண, நடுத்தர மக்கள் பயணம் செய்கின்ற பஸ்களுக்கு உயர்த்துகின்றபோது பிரைவேட் பஸ்கள் வைத்திருக்கின்ற ஓனர்களுக்கு இவ்வளவு சலுகைகள் காட்ட வேண்டியது அவசியம்தானா என்பதுதான் என் கேள்வி. ஏனென்றால் இப்போது பணம் போதாமல் இருக்கிறது வரி போட வேண்டும் என்றெல்லாம் நீங்கள் வரி போடுகிறபோது எந்தெந்த ஐயிட்டங்களுக்கெல்லாம் வரி போட வேண்டும் என்று நீங்கள் சொல்ல வேண்டும். கண்டித்தால் மட்டும் போதாது, ஆலோசனை சொல்ல வேண்டும் என்று நம்முடைய காங்கிரஸ் நண்பர்கள் கூட பேசுகிறபோது சொன்னார்கள். ஏதோ ஒரு சாதாரண ஆலோசனை. அதற்கு நீங்கள் வரியை உயர்த்தலாம் என்பதுதான் என்னுடைய ஆலோசனை. காவல் துறையைப் பொறுத்தவரை டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் உயிரோடு இருந்தபோது, சப்சிடைஸ்ட் ரேட்டிலே அவர்களுக்கு

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1991 செப்டம்பர் 10

உணவுப் பொருள்களை வழங்கிக் கொண்டிருந்தார்கள். ஆனால், இன்றைக்கு ஆண்டுகள் போகப்போக, அப்போது என்ன ரேட்டிலே பிக்ஸ் பண்ணுகிறார்களோ இன்ஸ்பெக்டரிலிருந்து கான்ஸ்டிபிள் வரைக்கும் அதிலே பாதி தள்ளுபடி செய்து அந்த ரேட்டிலே அவர்களுக்கு அத்தியாவசியமான உணவுப் பொருள்களை வழங்கவேண்டுமென்று கோரிக்கையை நான் இந்த அரசுக்கு வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, வேளாண்மையைப் பொறுத்த வரை, காவிரி நதி நீர் தாவாவைப் பொறுத்த வரை, ஏற்கனவே நிரம்பப் பேசப்பட்டிருக்கிறது. பல பேர் அது குறித்துப் பேசியிருக்கிறார்கள். நானும் இந்த அரசைக் கேட்டுக் கொள்வது அது உச்ச நீதி மன்றம் சொன்னாலும் சரி, அல்லது பாரதப் பிரதமர் சொன்னாலும் சரி, அல்லது கர்நாடக அரசு அழைத்தாலும் சரி, இனிமேல் கர்நாடக அரசோடு பேச்சு வார்த்தை நடத்தி நமக்கு எந்தப் பிரயோசனமும் நிச்சயமாக இருக்காது. எனவே, ஏற்கனவே இந்த அரசு மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் வாயிலாகவே அதற்குச் சாதகமான தீர்ப்பைப் பெற வாயிலாக எடுத்திருக்கிற நிலையில் உறுதியாக இருந்து நீதி முயற்சிக்க வேண்டுமென்று அரசை நான் வற்புறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே ஆரம்பத்திலே இந்த அரசு மிக வேகமாக இருந்தது. ஆனால், இப்போது நல்ல வேளை மழை பெய்துவிட்ட காரணத்தாலோ என்னமோ தஞ்சாவூரிலே இப்போது பிரச்சினை இல்லை. அதனால் அந்தப் பிரச்சினை இப்போது மிக மந்தமான நிலையிலே இருக்கிறது. எனவே, இடைக்காலத் தீர்ப்பு ஏறக்குறைய 20 ஆண்டுகள் போராடி, புரட்சித் தலைவர் அவர்கள் காலத்திலே அது டிரிப்யூனலுக்கு அனுப்பப்பட வேண்டும் என்று வேண்டப்பட்டு அதற்குப் பின்னாலே வந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு, அதற்குப் பின்னாலே வந்த இன்றைக்கு இருக்கிற அரசு, ஆக அனைத்து அரசுகளும் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில், டிரிப்யூனலுக்கு அனுப்பி 205 டி.எம்.சி.தண்ணீர் தமிழகத்திற்கு இடைக்கால நிவாரணமாகத் தரப்பட வேண்டுமென்ற இடைக்காலத் தீர்ப்பை இந்தத் தடவை நாம் போராடியோ, வாதாடியோ மத்திய அரசை வற்புறுத்தியோ பெறவில்லை என்று சொன்னால், அதற்குப் பின்னாலே எந்தக் காலத்திலேயுமே, தமிழகத்திற்கு நிவாரணமே எந்த ரூபத்திலேயும் பெற முடியாது. தஞ்சாவூர் போன்ற காவிரி டெல்டா பகுதிகள் அத்தனையும் நிச்சயமாகப் பாலைவனமாகப் போய்விடும் சூழ்நிலை ஏற்பட்டு விடும். எனவே, அந்த இடைக்காலத் தீர்ப்பை எப்படியாவது நாம் பெறும் விதத்திலே மத்திய அரசை நீங்கள் வற்புறுத்த வேண்டுமென்று நான் இந்த அரசை கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1991 செப்டம்பர் 10] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

எம்.சி.டி.சி. திட்டத்தின் நிதி உதவியுடன் செங்கல்பட்டு—எம்.ஜி.ஆர். மாவட்டம், இராமநாதபுரம், தஞ்சாவூர், சிதம்பரனார், கன்னியாகுமரி ஆகிய 5 மாவட்டங்களிலே மீனவர்களுக்கு மோட்டார்ப் படகுகள் வாங்க, கட்டு மரங்கள் வாங்க, வலைகள் வாங்க இப்படி மீனவர்களுக்கு இந்த மாவட்டங்களிலே நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கிறது. இதிலே புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் ஒருவேளை, கடலோரப் பகுதி என்பது புதுக்கோட்டை மாவட்டத்திலே அறந்தாங்கி மட்டும்தான் வருகிறது. அதனாலே ஒரு வேளை தஞ்சாவூரை எடுத்து இருக்கிறீர்கள். தென்னார்க்காட்டை எடுத்திருக்கிறீர்கள். பக்கத்திலே இராமநாதபுரம் எடுத்திருக்கிறீர்கள். இடையிலே இருக்கக் கூடிய புதுக்கோட்டையை மட்டும் விட்டு விட்டீர்கள். அறந்தாங்கியிலே இருக்கிற மீனவப் பெருமக்கள் பெரும்பாலும் ஓட்டுப் போட்டிருக்கிறார்கள். இரட்டை இலைக்குச் சென்ற தடவை போட்டிருக்கிறார்கள். ஆகவே அறந்தாங்கி தொகுதியைச் சேர்த்து மாவட்டங்களையும் இந்த எம்.சி.டி.சி. திட்டத்தின் கீழே கடலோரப் பகுதியிலே வாழ்கின்ற மீனவர்கள் படகுகள் வாங்க, மற்ற உரிய சாதனங்கள் வாங்க வழி செய்கின்ற விதத்திலே இணைக்க வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-20

பொதுவாக நிதி நிலை அறிக்கையில் நினைவு வைத்துக் கொள்ளக் கூடிய அளவிற்கு மிகப் பெரிய திட்டம் எதுவும் கிடையாது. ஒரே ஒரு திட்டம் பற்றி குறிப்பிட்டுச் சொல்லலாம். ஸ்பெஷல் தன்னிறைவுத் திட்டம் என்கிற அடிப்படையிலே ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு 1 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பது பாராட்டுக்குரியதாகும். இந்த நிதி நிலை அறிக்கையிலே அதுதான் ஒரு பெரிய திட்டம் ஆகும். கிராம பகுதிகளை ஊக்குவிப்பதற்காக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின்கீழ் சுமார் 1,000 ஆரம்பப் பள்ளிகள் கட்டப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இன்னமும் கிராமப் பள்ளிகள் மரத்தடியில் நடக்கின்றன. பல இடங்களில் கீற்றுக் கொட்டகைகளில் நடக்கின்றன. இது போல ஆரம்பப்பள்ளிகள் இன்னும் பல்வேறு தொகுதிகளிலே பார்த்தால் ஆங்காங்கே சாதாரணமாக அளவிலே இடிந்து போன கட்டிடங்களிலே நடந்து கொண்டிருக்கின்றன. எனவே அவற்றையெல்லாம் மனதிலே கொண்டு இந்தப் பிரத்யேகமான தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் ஒரு 1,000 ஆரம்பப் பள்ளிக் கட்டிடங்கள் கட்டப்படும் என்று தெரிவித்திருப்பது குறித்து வரவேற்கிறேன். அந்த 1 கோடி ரூபாய் என்பதை கூட்டி, எனக்கு நினைவு இருக்கிறது, புரட்சித் தலைவர் காலத்திலே தன்னிறைவுத் திட்டம் கொண்டு வந்த போது சுமார் 40 இலட்சம் ரூபாயிலிருந்து ரூபாய் 80 இலட்சம் வரை ஒரு ஆண்டுக்கு ஒதுக்கிக் கொடுத்தார். அப்போது

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1991 செப்டம்பர் 10

கூட மூன்று கட்டமாக எடுத்துக்கொண்டுதான் ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் கொடுத்தார்கள். நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன். அப்போது ஏறக்குறைய 80 ஒன்றியங்கள் முதலிலே ; அடுத்த ஆண்டு 100 ஒன்றியங்கள் ; இப்படி கட்டம் கட்டமாக மூன்று ஆண்டுகளில் அந்தத் தன்னிறைவுத் திட்டம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றப்பட்டது. பணம் ஒட்டுமொத்தமாக 40 இலட்சம், 50 இலட்சம் என்று கொடுக்கப்பட்டது. இப்போது நிதி நெருக்கடி இருக்கின்ற காரணத்தால் ஒரே ஆண்டிலே ஏறக்குறைய 380 ஒன்றியங்களுக்கும் 1 கோடி ரூபாய் என்று கொடுப்பதற்குப் பதிலாக அதை இரண்டாண்டுத் திட்டமாக வைத்து முதல் ஆண்டிலே ஒரு 50 இலட்சம், அடுத்த ஆண்டிலே 50 இலட்சம் என்று நீங்கள் அறிவிக்கலாம். இப்போது தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து யூனியன் சேர்மனோ அல்லது பஞ்சாயத்து யூனியன் பிரசிடென்டோ கிடையாது. பீ.டீ.ஓ. தான் இருக்கிறார்கள். தனி அதிகாரிகள்தான் இருக்கிறார்கள். அவர்களிடத்தில் 1 கோடி ரூபாயை ஓராண்டிலே கொடுத்து, இந்த ஒரு வருடத்திற்குள்ளாக அனைத்துப் பணிகளையும் முடிக்க வேண்டும் என்று சொன்னால் அவசரம் அவசரமாக வேலை நடக்குமே தவிர முறையாகப் பணிகள் நடைபெறாது. ஆகவே இரண்டு கட்டமாக நீங்கள் எடுத்துக்கொண்டு முதல் ஆண்டு 50 இலட்சம் ரூபாய் ; அடுத்த ஆண்டு 50 இலட்சம் ரூபாய் என்று ஒதுக்கி எந்த ஒன்றியத்தையும் விட்டுவிடாமல் எல்லா ஒன்றியத்திற்கும் இதைச் செய்தால் இரண்டாண்டுகளிலே நிதானமாக இந்த வேலை நடக்கும் ; ஒழுங்காகவும் நடக்கும். அதற்குள்ளாக ஒரு வேளை தேர்தல் நடந்து உள்ளாட்சி அமைப்புகளிலே பஞ்சாயத்து போர்ட் பிரசிடென்ட், சேர்மன் ஆகியோர் வந்துவிட்டால் அவர்களும் சூப்பர்வைஸ் செய்து பார்வையிடக்கூடிய வகையில் அதாவது எங்கெங்கு பணிகள் ஒழுங்காக நடக்கின்றன என்று கவனிக்கக் கூடிய நிலைமையும் ஏற்படும். எனவே அப்படி நீங்கள் அதை நிறைவேற்றலாம். இந்தத் திட்டத்தினால் உங்களுக்கு ஏற்படுகிற செலவு 380 கோடி என்று சொன்னால் 100 அல்லது 140 கோடி ரூபாய் இந்த வகையில் மிச்சப்படும். அதை மற்ற மக்கள் நலப் பணிகளுக்கு பயன்படுத்தலாம் என்று இந்த அரசுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஒரு கோடி ரூபாய் என்பதைப் பற்றிக்கூட நான் நிதியமைச்சர் அவர்களிடத்திலே கேட்டுக் கொள்கிறேன். மொத்தமாக ஸ்பெஷல் கிராண்டாக ஒரு கோடி ரூபாய் தரப் போகிறீர்களா? அல்லது பல்வேறு துறைகளுக்கு ஏற்கனவே கொடுத்திருக்கிறீர்களே, அதை எல்லாம் சேர்த்து ஒட்டுமொத்தமாக ஒரு கோடி என்று கணக்கு வைத்து இருக்கிறீர்களா என்பது தெளிவாக இல்லை. அதையும் நாவலர் அவர்கள் விளக்க வேண்டும். அரசாங்கத்தின் பல்வேறு துறைகளுக்குத் தரப்



1991 செப்டம்பர் 10] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

படுகிற பணத்தோடு அடிஷனலாக ஒரு கோடியா அல்லது ஏற்கனவே இருந்த திட்டங்களுக்கும் சேர்த்து மொத்தமாக ஒரு கோடியா என்பதை நாவலர் அவர்கள் விளக்க வேண்டும் விளக்குவார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்து எலக்ட்ரிசிட்டி என்பதைப் பொறுத்த வரையில் கூறியிருக்கிறீர்கள். 2000-ஆம் ஆண்டில் 4293 மெகாவாட் பற்றாக்குறை ஏற்படும் என்றும் 1995-ஆம் ஆண்டிலே சுமார் 1700 மெகாவாட் பற்றாக்குறை ஏற்படும் என்றும் கூறி இருக்கிறீர்கள். இதற்காக ஒதுக்கப்பட்ட பணம் ஏறக்குறைய 425 கோடி தான். இது போதாது என்பது என்னுடைய அபிப்பிராயம் ஆகும். மற்றைய பெரிய திட்டங்களுக்கெல்லாம் நீங்கள் மத்திய அரசினுடைய உதவியை நாடி இருக்கிறீர்கள். மத்திய அரசு இதுவரை இந்த ஆட்சி ஏற்பட்டதற்குப் பின்னால் ஒரு கோடி ரூபாய் என்று கூட கொடுத்ததாகத் தெரியவில்லை. முதலமைச்சர் அவர்கள் கூட மத்திய பிரதமரை, நிதியமைச்சரை எல்லோரையும் சந்தித்துவிட்டு வந்து இருக்கிறார். அதற்குப் பிறகு அரசாங்கத்தின் சார்பிலே கடிதமும் எழுதி இருக்கிறீர்கள். கடந்த நான்கைந்து மாதங்களாக, போலீஸை நவீனப்படுத்துகிற திட்டத்திற்கு 80 கோடியாக இருந்தாலும் சரி, அதற்குப் பின்னால் காவிரி நதிநீர்ப் பிரச்சினையிலே நமக்குச் சாதகமாக வந்த தீர்ப்பை அமல் படுத்துவதாக இருந்தாலும் சரி அல்லது மற்றைய இலாக்கக்களின் கீழே நீங்கள் கேட்டிருக்கிற உதவித் தொகையாக இருந்தாலும் சரி, இவை அனைத்துமே மத்திய அரசாலே கடந்த காலத்திலே புறக்கணிக்கப்பட்டு இருக்கிறதே தவிர எந்தச் சலுகையும், எந்த உதவியும் கிடைக்கவில்லை. இங்கே இந்த ஓராண்டில் உங்களுக்கு நீங்கள் எதிர்பார்ப்பதைப் போல் எந்த உதவியும் கிடைக்குமா என்பது சந்தேகத்திற்குரியது தான். இருந்தாலும் நான் சொல்வது மின்சார உற்பத்தியை அடிப்படையாக வைத்துத்தான் மற்றைய தொழில் பெருக்கத்தையோ அல்லது வேலை வாய்ப்பையோ ஏற்படுத்த முடியும். மின்சாரத்தில் பற்றாக்குறை இருந்தால் நீங்கள் என்ன திட்டம் போட்டாலும் அது தொழில் வளர்ச்சியோ, மற்றைய வளர்ச்சியோ நிச்சயமாக இருக்காது என்பதைத் தெரிவித்து அதில் தனி கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் வளர்ச்சி குறித்த அறிவிப்பைப் பார்த்தேன். 50 கோடியிலிருந்து 100 கோடி ரூபாய் வரை முதலீடு செய்தால் அவர்களுக்கு 25 இலட்சம் ரூபாய் கேப்பிட்டல் சப்சிடி என்றும் 100 கோடிக்கு மேலே அவர்கள் முதலீடு செய்தால் அவர்களுக்கு 50 இலட்சம் ரூபாய் சப்சிடி என்றும் அறிவித்திருக்கிறீர்கள். இப்படி மானிய உதவியாக கேப்பிட்டல் ஷேரிலே உதவித் தொகையாக அறிவித்திருக்கிறீர்கள். என்னைப் பொறுத்த வரையில் இவ்வாறு நீங்கள் அறிவித்ததற்குப் பின்னாலே எத்தனை பேர் 100 கோடியோடு தொழில் துவங்க வந்திருக்கிறார்கள்

என்பது தெரியாது. எனவே இப்படிப்பட்ட அறிவிப்புகளை விட சாதாரணமானவர்களை உற்சாகப்படுத்த சிறு தொழில்களை உற்சாகப்படுத்த நீங்கள் சலுகைகளை அறிவிக்கவேண்டும். பி.ஈ. படித்தவர்களை, பி.டெக் படித்தவர்களை, பாலிடெக்னிக் படித்தவர்களை எல்லாம், இப்படிப் படித்திருக்கின்ற இளைஞர்களை எல்லாம் உற்சாகப்படுத்துவீர்களேயானால் அவர்கள் ஆங்காங்கே சிறு சிறு அளவிலே தொழில்களைத் துவங்கி 10 பேர், 20 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பார்கள். அவர்களும் வேலையில் அமர்ந்துகொள்வார்கள். எனவே ஒரு கோடி ரூபாய் முதலீட்டிலே தொழில் துவங்குபவர்களுக்கு இந்த 50 இலட்சம் ரூபாய் போய் பெரிய உதவியாக இருந்துவிடப் போவதில்லை. என்னைப் பொறுத்த வரையில் அதிலே பெரிய ........ (மணியடிக்கப்பட்டது) தொழில் கல்லூரிகளிலே படித்தவர்களுக்கு நீங்கள் அந்தச் சலுகைகளை வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதுபோல் படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு தருகிற விதத்தில் ஏற்கனவே 35 இலட்சம் பேர் பதிவு செய்தவர்கள் இருக்கிறார்கள். பதிவு செய்யாதவர்களும் இருக்கிறார்கள். அது இந்தத் தொகையை விட இரண்டு மடங்கு கூடுதலாக இருக்கும். அவர்களுக்காக எந்தப் பிரத்தியேகமான திட்டமும் அறிவிக்கவில்லை. 10 பேருக்கு ட்யூஷன் சொல்லிக் கொடுத்தால் ஆயிரம் ரூபாய் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஒரு நாளைக்கு 2 ரூபாய் வருகிறது. மாதத்திற்கு 80 ரூபாய் வருகிறது. பட்டப் படிப்பு படித்துவிட்டு 80 ரூபாய் மாதச் சம்பளத்திற்கு 10 பேருக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதற்கு எந்த இளைஞனும் முன்வரமாட்டான். எனவே அதற்குப் பதிலாக அவர்களை மாற்றுப் பணிகளிலே, பயன் உள்ள வகையிலே பயன்படுத்த சிந்திக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12.25

மக்கள் நல்வாழ்வுத் துறையைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 26 ஆரம்ப சுகாதார நிலயங்களை நீங்கள் அப்கிரேட் செய்வதாகச் சொன்னீர்கள். அதை வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன். ஆனால் அதே நேரத்திலே 30 ஆயிரம் மக்களுக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம், பிரைமரி ஹெல்த் சென்டர் என்று வருகிறது. 30 ஆயிரம் மக்கள் தொகைக்கு எவ்வளவு பணம் கொடுக்கிறீர்கள் என்று சொன்னால் ரூபாய் 40 ஆயிரம் கொடுக்கிறீர்கள். 30 ஆயிரம் மக்கள் தொகைக்கு ஆண்டுக்கு 40 ஆயிரம் கொடுத்தால் ஒரு நபருக்கு, ஒரு ஆளுக்கு $1\frac{1}{4}$ ரூபாய்தான் வருகிறது. ஒரு ஆளுக்கு ஒரு நபருக்கு ரூ. $1\frac{1}{4}$ என்று ஒதுக்கினால் ஓராண்டுக்கு அந்த ஆரம்ப சுகாதார நிலையத்திலே என்ன மருந்து வாங்கிக் கொடுக்க முடியும். எனவே நீங்கள் இதை மனதிலே கொண்டு ரூ. 40 ஆயிரம் ஒரு ஆரம்ப





சுகாதார நிலையத்திற்கு, பிரைமரி ஹெல்த் சென்டருக்கு போதாது என்பதை மனதிலே கொண்டு அதிகமாக, கூடுதலாக நிதி ஒதுக்க வேண்டும். அப்போதுதான் மருத்துவமனை இருந்தாலும், மக்களுக்கு மருத்துவமனை பயன் அளிக்கக்கூடியதாக அங்கங்கே போய்ச் சேரும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. இங்கே மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசுகின்றபோது ஞாயிற்றுக்கிழமைகளில் சத்துணவுத் திட்டத்தை நிறுத்துங்கள் என்று சொன்னார்கள். இது தோழமைக் கட்சியினுடைய ஆலோசனை என்று கேட்டு தயவுசெய்து அப்படிச் செய்ய வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், அது எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டு வந்த திட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. சின்னசாமி. பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்கிறீர்களா?

திரு. வி. கே. சின்னசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி.கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி : பேரவைத் தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் பேசும்போது, 30 ஆயிரம் ஜனத்தொகை இருக்கும் இடங்களில் 40 ஆயிரம் ரூபாய் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒதுக்கியிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். ஒருவருக்கு $1\frac{1}{4}$ ரூபாய்தானா என்று கேட்டார். ஆக 30 ஆயிரம் பேர்களையுமே நோயாளிகளாகவே அவர் கணக்கில் எடுத்துக் கொள்கிறார்களா, அவர்கள் எல்லாம் ஆஸ்பத்திரிக்குப் போகிறார்கள் என்று கணக்கெடுத்துக் கொண்டிருக்கின்றார்களா என்பது எனக்குத் தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். திருநாவுக்கரசு.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. சின்னசாமி அவர்கள் இப்படித்தான் ஏதாவது பேசுவார் என்று எனக்குத் தெரியும். 30 ஆயிரம் பேர்களுமே மருத்துவமனைக்கு போகிறார்கள் என்று நான் சொல்லவில்லை. சராசரி அளவைத்தான் சொன்னேன். அவ்வளவுதான். அதிலே எவ்வளவு பேர் போனாலும் சராசரி ரேட் ரூ. $1\frac{1}{4}$ தான் கிடைக்கும், அது போதாது ! என்பதுதான் என் கருத்து. ஒரு வேளை அவருடைய தொகுதியிலே யாருமே மருத்துவ மனைக்குப் போகாமல் இருந்தால் நான் ரொம்பு மகிழ்ச்சியடைவேன்,

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1991 செப்டம்பர் 10

எனவே சத்துணவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் ஞாயிற்றுக்கிழமைகளிலே சத்துணவுத் திட்டத்தை நிறுத்த வேண்டாம். தயவுசெய்து நிறுத்த வேண்டாம். ஆலோசனை சொல்பவர்கள் ஞாயிற்றுக்கிழமை நிறுத்தினால் ரூ. 30 கோடி மிச்சப்படும், சனிக்கிழமை சேர்த்து நிறுத்தினால் 60 கோடி ரூபாய் மிச்சப்படும் என்று சொல்வார்கள். அதற்காக எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டு வந்த ஒரு வாரம் முழுவதும் நடைமுறைப்படுத்தியதை நிறுத்தாதீர்கள். அதனால் பொது மக்கள் மத்தியிலே அதிருப்தி வரும். கெட்ட பெயர் வரும். எந்த நன்மைகளாக இருந்தாலும் ஏற்கனவே பொதுமக்கள் அனுபவித்துக்கொண்டு இருப்பதை எடுக்கப்போனால் மக்கள் மத்தியிலே கெட்ட பெயர் வரும். அங்கே இருக்கும் எம்.எல்.ஏ.க்கள் எல்லாம் பதில் சொல்ல வேண்டியிருக்கும். ஆகவே தயவு செய்து நிறுத்த வேண்டாம் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சீக்கிரம் முடியுங்கள். மாண்புமிகு சத்துணவுத்துறை அமைச்சர்.

***மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டத்தை யாரும் நிறுத்துவதாகச் சொல்லவில்லை. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். கொண்டு வந்த எந்தத் திட்டத்தையும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி நிறுத்த விரும்பவில்லை என்பது ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே சத்துணவுத் திட்டத்தை நிறுத்துவதாகச் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் சொல்வது, வேறு யாராவது ஆலோசனை சொல்வார்கள். அதற்காக நிறுத்த வேண்டாம் என்றுதான் சொன்னார். நீங்கள் சொன்னதாகச் சொல்லவில்லை. திரு. எஸ். திருநாவுக்கரசு.

**திரு. எஸ். திருநாவுக்கரசு :** திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இங்கே ஒரு ஆலோசனை சொன்னார்கள். அதை கேட்காதீர்கள் என்று தான் சொன்னேன். நீங்கள் சத்துணவுத் திட்டத்தை நிறுத்தப் போகிறீர்கள் என்று நான் சொல்லவில்லை. அவர் ஆலோசனையைக் கேட்க வேண்டாம் என்று தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் ஆலோசனைகள் சொல்லியிருக்கிறார்கள். அதில் எது எது தேவையோ



1991 செப்டம்பர் 10] [திரு. சு. முத்துசாமி]

அதை இந்த அரசாங்கம் எடுத்துக்கொள்ள இருக்கிறது. ஆலோசனை சொல்லும்போது நாம் ஆட்களையெல்லாம் நன்றாகப் பார்த்து, ஒழுங்காகப் பார்த்துதான் அரசாங்கம் ஆலோசனைகளை எடுத்துக்கொள்ளும். உங்களுடைய ஆலோசனையும் அப்படித்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்னும் 3 பேர் பேச வேண்டியதாக இருக்கிறது. கொஞ்சம் வேகமாக முடியுங்கள். திரு. எஸ். திருநாவுக்கரசு.

**திரு. எஸ். திருநாவுக்கரசு :** அரசு அலுவலர்கள். இந்த அரசு அலுவலர்களுக்கு வீடு கட்டுவதற்காக ஏறத்தாழ 18 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு அரசு ஊழியர்கள் வீடு கட்டுவதற்காக முன் பணமாக வாங்குவதற்காக மனு செய்தார்கள். பல்லாயிரக்கணக்கிலே மனுக்கள் தேங்கிக் கிடக்கின்றன. எனவே, அரசு ஊழியர்களுக்காக வீடு கட்டுவதற்குத் தரப்படுகின்ற முன் பணம் இருக்கின்றதே அந்தப் பணத்தை கடனாகத்தான் கொடுக்கிறார்கள். திருப்பி அந்தக் கடனை கழித்துக் கொள்கிறார்கள். அவ்வளவுதான். அது கடன்தான். நீங்கள் 'பிரி' யாக கொடுப்பதில்லை. எனவே, அந்தப் பணத்தை தயவு செய்து அதிகப்படுத்த வேண்டும். அரசு ஊழியர்கள் வீடு கட்டத் தயாராக இருக்கின்றார்கள். அவர்களுடைய சம்பாத்தியத்திலே தான் பிடித்துக்கொள்ளப்போகிறார்கள். ஆகவே, அந்த முன் பணத்தை அதிகமாக்கித் தந்தால் அரசு ஊழியர்கள் அத்தனை பேர்களும் வீடு கட்டிக்கொள்வார்கள். எனவே, 18 கோடி ரூபாய் என்பது போதாது. அதை அதிகப்படுத்த வேண்டும். அப்போது தான் அரசு ஊழியர்கள் எல்லாம் மகிழ்ச்சி அடைவார்கள்.

இந்த பிசி. அண்டு எஸ்சி. ஹாஸ்டலைப் பொறுத்த வரையில், அதாவது ஒவ்வொரு தடவையும் பேக்வேர்ட் கிளாஸ், செட்யூல்ட் கேஸ்ட், செட்யூல்ட் டிரைப்ஸ் பொறுத்தவரையிலும் ஒவ்வொரு பட்ஜெட்டிலேயும் 10 அல்லது 20 ஹாஸ்ட்டல் தொடங்குவது என்பது வழக்கம். எல்லா ஏழை எளிய மக்கள் தங்கிப் படிக்கிறார்கள். பின்தங்கிய மக்களாக இருந்தாலும் சரி, ஆதிதிராவிட மக்களாக இருந்தாலும் சரி, அவர்கள் 'பிரி'யாகப் படிக்கிறார்கள் 'பிரி' போர்டிங் கூட உண்டு. ஆக இந்த பட்ஜெட்டிலே பின் தங்கிய ஆதிதிராவிட மக்களுக்காக எந்த ஹாஸ்ட்டலும் தொடங்கப்படுவதாக அறிவிக்கவில்லை. அவர்களுடைய டிமான்டிலேயாவது ஹாஸ்ட்டல்கள் தொடங்க அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மொத்தமாக சட்டம் ஒழுங்கு இன்னும் பல்வேறு பிரச்சினைகளை ஒரே நேரத்திலே பேச முடியாத காரணத்தினாலே ஒன்றே ஒன்றை மட்டும் சொல்கிறேன். அரசு பழி வாங்குகின்ற விதத்திலே யார் மேலேயும் பொய் வழக்கு போடாமல் இருக்க வேண்டும்.

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1991 செப்டம்பர் 10

குறிப்பாக பத்திரிகைகள், நக்கீரன், அலை ஓசை, சிவப்பு நாடா இந்தப் பத்திரிகைகளின் ஆசிரியர்களை கைது செய்வது, பத்திரிகைகளை நிறுத்துவது, ரெய்ட் பண்ணுவது இதுபோன்ற செயல்களில் இறங்குவதால் அரசுக்குக் கெட்ட பெயர் வரும்.

முதலமைச்சர் அவர்களே, ஆட்சிக்கு வந்த உடனே எதிர்க் கட்சியிலே உள்ளவர் எண்ணிக்கையைப்பற்றி கவலைப்படவில்லை. பத்திரிகைகள் சுதந்திரமாகச் செயல்படலாம். எதிர்க்கட்சிகள் சுதந்திரமாகச் செயல்படலாம் என்று டி.வி.யில் பேசினார்கள். அவர் அப்படி எல்லாம் பேசிவிட்டு செய்திகள் போடும்போது கைது செய்வது, ரெய்ட் பண்ணுவது, இதுபோல செய்வதால் பத்திரிகைகளின் எதிர்ப்பு உங்களுக்கு வந்துசேரும். அந்தப் போக்கை இந்த அரசு கைவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–30

விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரைக்கும் ஒரே ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். இந்தப் பிரச்சினையை இரண்டாகப் பார்க்க வேண்டும். ஒன்று போராளிகள், இன்னொன்று அகதிகள். அகதிகளாக அங்கிருந்து காயமுற்று நிவாரணம் தேடி வருகிறார்களே அப்படிப்பட்டவர்களை ஒரு கண்ணோட்டத்தோடும் தீவிரவாதிகளை இன்னொரு கண்ணோட்டத்தோடும் இந்த அரசு கவனிக்க வேண்டும். பலபேர், எல்லோரையுமே இலங்கைக்கு அனுப்பிவிட வேண்டும், அகதிகளையும் திருப்பி அனுப்பிவிட வேண்டும் என்று பேசுவதே தமிழ் மக்களுக்குச் செய்கிற துரோகமாக அது அமையும். என்னைப் பொறுத்தவரைக்கும், விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரையில், நம்முடைய நாட்டிலேயே தீவிரவாதம் இருக்கிறது. அஸ்ஸாமில் இருக்கிறது. காஷ்மீரில் இருக்கிறது. பஞ்சாபில் இருக்கிறது. அங்கு எல்லாம் இன்னும் ஒருவரையும் அடக்கி ஒடுக்கிவிடவில்லை. முன்னாள் அமைச்சரைக் கூட கடத்திச்சென்றிருக்கிறார்கள், மூன்று நாளைக்கு முன்னால். என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. எனவே, இலங்கையில் தங்களுடைய மானம் காக்க, உரிமை காக்க போராடுகிற அந்த விடுதலைப் புலிகள் அங்கே தனியே ஈழத்தைப் பெற்றுவிடுவார்கள் என்றால் நமக்கு ஒன்றும் அதிலே ஆட்சேபணை கிடையாது. ஆனால் நம்மைப் பொறுத்தவரையில் நாம் செய்ய வேண்டியது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் விடுதலைப் புலிகளைப் பொறுத்த மட்டிலும் என்ன மனோபாவத்தோடு செயல்பட்டார்களோ அதேபோல உதவுகின்ற வகையில் உதவி, ஆதரவு அளிப்பது, அதை மீறினால் கண்டிப்பாக நம்முடைய நாட்டினுடைய சட்டங்களுக்குப் புறம்பாக செயல்பட்டால் அவர்களைத் தண்டிப்பது என்கிற மனோபாவத்தோடு, புரட்சித் தலைவருடைய வழியிலே இந்த அரசு செயல்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு அமைகின்றேன். நன்றி. வணக்கம்.



1991 செப்டம்பர் 10]

*திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு
அவர்கள் பேசுகிறபோது, அஸ்ஸாமிலே கூட சில அதிகாரிகளை
கடத்திச் சென்று சுட்டிருக்கிறார்கள். அப்படி எல்லாம் இங்கே
நடக்கவில்லை. ஆகவே, நீங்கள் மெத்தனமாக இருக்க வேண்
டும் என்பதைப் போல பேசினார். அப்படி என்றால் இங்கே
யும் அதிகாரிகளைக் கடத்திச் சென்று சுட வேண்டுமென்று அவர்
நினைக்கிறாரா? அப்படிப்பட்ட ஒரு பிரச்சினை தமிழகத்திலே
யும் வரும் என்று நினைக்கிறாரா என்பதையும் அவர் தெளிவு
படுத்த வேண்டும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அப்படி நான் சொல்லவில்லை. இந்திரா அம்மை
யார் வீட்டிலே இருந்த ஒரு காவலர் தான் இந்திரா காந்தி அம்மை
யாரை சுட்டுக் கொன்றார். அவர் பஞ்சாபைச் சார்ந்தவர். அதற்
காக பஞ்சாபியர்களை எல்லாம் அழித்துவிடுவேன் என்று யாரா
வது பஞ்சாபிலே போய்ப் பேச முடியுமா? அதுபோல இலங்கைத்
தமிழர்களை எல்லாம், ஏதோ நடந்துவிட்ட ஒரு அசம்பாவிதத்திற்
காக, அங்குள்ள 10 லட்சம் மக்களுக்கும் பாதுகாப்பு இல்லை,
அழித்தே தீருவோம் என்கிற மனோபாவம் சரிதானா? அது சரி
யானது அல்ல என்பது என்னுடைய கருத்து.

*திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, இலங்கைத் தமிழர்களை எல்லாம்
அழித்துவிடுவோம் என்று யாரும் சொல்லவில்லை. இலங்கைத்
தமிழர்கள் என்கிற பெயரால் குறிப்பாக தமிழ் ஈழ விடுதலைப்
புலிகள் தமிழ்நாட்டிலே நுழைந்து பயிற்சி முகாம் நடத்துவது,
ஆயுதங்களைத் தயாரித்து இங்கே ஆயுதச் சந்தையாக்கி, இங்கே
இருக்கிற தமிழ் இனத் தலைவர்களை, தமிழர்களை சுட்டுக்
கொல்லுவதை எல்லாம் நிச்சயமாக ஊக்குவிக்க முடியாது.
அமைதிப் பூங்காவாக தமிழகம் திகழ வேண்டுமென்று விரும்பு
கிறோம். அமைதிப் பூங்காவாகத் திகழ்கிற தமிழகத்திலே அவர்
கள் படுகொலை நிகழ்த்திக் கொண்டிருப்பதை நிச்சயமாக தமிழ்
மண்ணிலே அனுமதிக்கச் கூடாது என்பதைத்தான் இங்கே
வெளிப்படுத்துகிறேன். அந்த வழியில் அவர்கள் ஈடுபட்டிருக்
கிறார்கள். அதுமட்டுமல்லாமல் நம்முடைய நாட்டுக்கு எதிராக
போர் தொடுத்தவர்கள் அவர்கள் என்பதையும் யாரும் மறந்து
விடக் கூடாது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்
கரசு அவர்கள் திசை திருப்பக் கூடாது என்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மேற்கொண்டு வேண்டாம்.
இதிலே மேற்கொண்டு ஒன்றும் இல்லை. அவர் சொன்னதற்கு
விளக்கம் சொல்லிவிட்டீர்கள். உங்கள் கருத்தையும் சொல்லி
விட்டீர்கள், அவர்கள் கருத்தையும் சொல்லிவிட்டார்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒன்றும் திசை திருப்பவில்லை. தவறாகவும் சொல்லவில்லை. நான் சொல்ல விரும்புவது, இந்த நாட்டினுடைய சட்ட திட்டங்களுக்குப் புறம்பாக யார் நடந்தாலும் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள்தான். தண்டியுங்கள். ஆனால் ஒரே கண்ணோட்டத்தில் அகதிகளாய் இலங்கையில் காயமுற்று குண்டடிபட்டு மருத்துவமனைகளுக்கு சிகிச்சைக்காக வருகிறார்களே அவர்களுக்கும் அதே தண்டனை தானா? அவர்கள் வேறு எங்கே போவார்கள். அவர்களுக்கு எந்த நாடு பாதுகாப்புத் தருகிறது? இங்கே நாம் எடுக்கின்ற நடவடிக்கையால் லண்டனில் இருக்கிற கிட்டு கூட பாதிக்கப்பட்டிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை பெரிய விவாதத்திற்கு உரியது அல்ல. உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்றும், மற்ற உறுப்பினர்கள் கருதுவது போன்றும் இங்கே வன்முறையில் ஈடுபட்டு கலகம் விளைவிப்பதை, குழப்பங்கள் விளைவிப்பதை, பல படுகொலை, கொள்ளை போன்றவைகளில் ஈடுபடுகின்ற போராளிகள், விடுதலைப் புலிகள் ஆகியவற்றை நாம் கடுமையாக கவனிக்கிறோம். ஆனால் அகதிகளாக வந்து, நிரபராதிகளாக வந்து, அங்கு வாழ முடியாமல் அடைக்கலம் புகுந்த அத்தனை பேரையும் மத்திய அரசும், மாநில அரசும் இன்றைக்கும் காப்பாற்றிக் கொண்டுதான் இருக்கின்றன. அந்த முகாம்கள் எல்லாம் இருக்கின்றன. அவர்களுக்கு வேண்டிய வசதிகள் எல்லாம் முறைப்படி செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. இரண்டு பேரையும் தனித்தனியாகத்தான் இப்போதும் பார்க்கிறோமே தவிர அகதிகள் எல்லோரையும் வெளியேற்றுகின்ற எந்தத் திட்டமும் இல்லை. விடுதலைப் புலிகளையே வெளியேற்ற வேண்டுமானாலும் இந்திய அரசாங்கம்தான் அதற்கான ஒரு முடிவை எடுக்க வேண்டும். அதிலேயே இன்னும் எந்த முடிவும் எடுக்கவில்லை. ஆகவே, விடுதலைப் புலிகளை ஒரு கண்ணோட்டத்தோடும், அகதிகளை வேறு ஒரு கண்ணோட்டத்தோடும் எப்போதும் கவனிக்கிறோம். எல்லா அகதிகள் முகாம்களும் இருந்து கொண்டிருக்கின்றன, முறைப்படி என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*பிற்பகல் 12—35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் இங்கே பேசுகிறபோது, அகதிகளையும் விடுதலைப் போராளிகளையும் தனித் தனி கண்ணோட்டத்தோடு அணுக வேண்டுமென்று ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதற்காக ஒப்பற்ற மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் அவர்கள் மேற்கொண்ட அணுகுமுறையையும் எடுத்துக் காட்டி, விடுதலைப்புலிகள் அமைதியாக இருந்தபோது, அவர்களை அணைத்தும், அவர்கள் சட்டத்திற்குப் புறம்பாக நடந்துகொண்டபோது அடக்கியும் இருந்த அந்த அனுபவங்களைச் சொன்னார்கள். அதே அணுகுமுறையைத்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களும் துளியும் மாறாமல் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று காலை கூட மாண்புமிகு முதல்வர், புரட்சித் தலைவி அவர்கள் மதுரையில் நடைபெற்ற சில விரும்பத்தகாத, அழித்துத் தீர வேண்டிய, அப்புறப்படுத்த வேண்டிய தேசத் துரோக நடவடிக்கைகள் பற்றியெல்லாம் விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். உங்கள் அனுமதியோடு, இந்துப் பத்திரிகையிலே வந்துள்ள ஒரு தகவலை நான் தெரிவிக்க விரும்புகிறேன். ஒரே ஒரு சிறு கருத்து அதிலே வந்திருக்கிறது.

"The LTTE supremo, Prabhakaran, in a recent interview with the BBC claimed that for a long time his organisation had been used as a pawn in the politics of Tamil Nadu, He went on to say that although the Central and State Governments were engaged in a vilification campaign to tarnish the LTTE image, the people of Tamil Nadu were still supporting his organisation and its struggle and asserted that so long as the LTTE got such support, the present anti-Tiger campaign would have no adverse effect, என்று சொல்லி, இதில் எதையும் செய்ய முடியாது என்று இன்றைக்குச் சொல்லி, எனக்கு ஆதரவாளர்கள் இருக்கிறார்கள் இன்னும் என்று சொல்லியிருக்கிறார்கள். எதற்குப் பின்பு? ராஜீவ் காந்தி கொலைக்கும் எல்.டி.டி.ஈ.க்கும் சம்பந்தம் இருக்கிறது என்று தெளிவாகத் தெரிந்த பிறகும் கூட, அந்தப் பிரச்சாரம் இருக்கிறது என்றால், அவர்கள் மீது, அந்த எல்.டி.டி.ஈ. மீது அனுதாபம் கிடையாது, 'சாப்ட்-கார்னர்' கிடையாது. ஒரு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் நடவடிக்கை எடுக்கும்போது, அகதிகள் பிரச்சினையை இதிலே இணைக்க வேண்டாமென்று மாண்புமிகு உறுப்பினர். திரு. திருநாவுக்கரசு அவர்களை அன்புடன் வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** டாக்டர் தே. குமாரதாஸ்.

திரு. வி. தண்டாயுதபாணி: பேரவைத் தலைவர் அவர்களே, ...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மேற்கொண்டு இதிலே விவாதம் வேண்டாம். உட்காருங்கள். டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு தலைவரவர்களே, நடைபெற்றுக் கொண்டிருக்கிற நிதிநிலை அறிக்கையின் மீது ஜனதா தளத்தின் சார்பாக சில கருத்துக்களை உங்கள் முன்னாலே எடுத்துரைக்கின்ற வாய்ப்பினைத் தந்ததற்கு நன்றி கூறிக் கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்த வரையில் நாங்கள் ஏதோ எதிர்க் கட்சியிலே இருக்கிற காரணத்தாலே வசை பாடித்தான் தீர வேண்டுமென்ற நிர்பந்தம் காண முடியாது. 234 சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ள இந்தப் பேரவையில் பெருவாரியான ஆளுங்கட்சி நண்பர்களும், கூட்டணிக் கட்சித் தோழர்களும் இருக்கிறார்கள். எனவே நாமே விவாதித்து இந்த அறிக்கை நல்லதா அல்லது கெட்டதா என்று சொல்வதை விட, நமக்கு வாக்களித்து, அறுதிப் பெரும்பான்மையோடு சட்டமன்றத்திற்கு அனுப்பி வைத்திருக்கிற பாமர மக்கள் இந்த பட்ஜெட்டை ஏற்றுக் கொள்வார்களா என்பதற்கு உங்கள் முன்னாலே ஒன்றிரண்டு புள்ளி விவரங்களை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 12-40

குறிப்பாக நம்முடைய ஆட்சி தமிழகத்தில் வந்த பிறகு முதல் ரக அரிசி, ரூ. 4.75 ஆக இருந்தது இன்றைக்கு ரூ. 7.50 ஆக உயர்ந்திருக்கிறது; இரண்டாம் ரக அரிசி 4 ரூபாய் 45 காசாக இருந்தது இன்றைக்கு 6 ரூபாயாக உயர்ந்திருக்கிறது; மிளகாயினுடைய விலை 12 ரூபாயாக இருந்தது இன்றைக்கு 50 ரூபாயாக உயர்ந்திருக்கிறது; துவரம் பருப்பின் விலை 13 ரூபாய் 85 காசாக இருந்தது 21 ரூபாய் 80 காசாக உயர்ந்திருக்கிறது; கடலை எண்ணெயின் விலை 32 ரூபாய் 90 காசாக இருந்தது 40 ரூபாயாக உயர்ந்திருக்கிறது; தேங்காய் எண்ணெயின் விலை 36½ ரூபாயாக இருந்தது இன்றைக்கு 53 ரூபாய் 80 காசாக உயர்ந்திருக்கிறது என்று சொன்னால் நீங்கள் எத்தனை பட்ஜெட் போட்டு என்ன? பாமர மக்கள் இதை ஏற்றுக்கொள்வதற்கு முன்வருவார்களா என்று கேட்க ஆசைப்படுகிறேன். ஆக இன்றைக்கு 70 கோடி ரூபாய்தான் பற்றாக்குறை என்று சொல்கிறார்கள். ஏற்றுக்கொள்கிறோம். தமிழகத்தினுடைய அரசுப் பொறுப்பை ஏற்றிருக்கிற மரியாதைக்குரிய முதலமைச்சர் அவர்கள், மலிவு விலை மதுக்கடைகளை மூடுவதன் மூலம் கிட்டத்தட்ட ரூ. 320 கோடி இழப்பு வந்தாலும் பரவாயில்லை என்று சொல்லி, அதைத் தள்ளுபடி செய்திருக்கின்ற பெருந்தன்மையைப் பாராட்டுகின்ற அதே நேரத்



தில் இந்த 70 கோடி ரூபாயையும் தள்ளுபடி செய்திருக்கலாம். அதற்காக நீங்கள் ஒட்டுமொத்தமாக வரிகளைப் போட வேண்டாம்! போடாமல் ஆட்சி செய்ய முடியாது என்பதும் எங்களுக்குத் தெரியும். இது ஒருபுறம் இருந்தாலும் இந்த மக்களுக்கு மிக மிகத் தேவையான அத்தியாவசியப் பண்டங்களின் விலைகளை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக உயர்த்தி வருகின்ற கால கட்டத்தில் அதைத் தடுத்து நிறுத்துவதற்காக நீங்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகள் என்னென்ன என்று அறிய விரும்புகிறேன்.

அதுமாத்திரமல்ல, மத்தியில் காங்கிரஸ் சர்க்கார் ஆட்சிக்கு வந்த 100 தினங்களுக்குள்ளாகவே விலைவாசியைக் குறைப்போம் என்று சொன்னார்கள். ஆனால் குறைப்பதைவிட பல மடங்கு ஏறியிருக்கின்றது என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி நீங்கள் விலைவாசி ஏற்றத்தைப் பார்க்கிறபோது....(குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் கருத்து கூறுகிறார். அந்தக் கருத்துக்குப் பிறகு பதில் அளிக்கலாம். அவரைப் பார்த்துப் பேசக்கூடாது. (குறுக்கீடு) இங்கே பாருங்கள். உறுப்பினர்கள் என்னைப் பார்த்துத்தான் பேசவேண்டும். அவர் ஒரு கருத்தைச் சொல்கிறார். அவருக்கு அடுத்துப் பேசுகிற எதிர்க்கட்சித் தலைவர் அதை மறுக்கிற வாய்ப்பு இருக்கிறது. எனவே கருத்துக்குக் கருத்து என்று எழுந்து நின்று பேசக்கூடாது. எப்போது நீங்கள் எழுந்து நின்றாலும் என்னைத் தான் பார்க்கவேண்டும். எழுந்து நிற்கும்போது இன்னொருவரைப் பார்க்கக் கூடாது. இப்போது மாண்புமிகு உறுப்பினர் குமாரதாஸ் பேசலாம்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரத்திற்கு டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் விலையை உயர்த்தியிருக்கிறார்கள். இது விலைவாசி உயர்வு இல்லையா? நம் நாட்டிலே விளைகிற உப்பு, அதற்கு 50 பைசா ஏற்றி, அந்த உப்பு இன்றைக்கு 2 ரூபாய்க்கு விற்கிறது. இது விலைவாசி உயர்வு இல்லையா? (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுக்கீடு செய்வதற்காகப் பொறுத்தருளக் கேட்டுக் கொள்கிறேன். இருந்தாலும் கடைசியில் பொது விவாதத்திற்குப் பதில் அளிக்கிறபோது விரிவாக நான் சொல்கிறேன் என்றாலும், மாண்புமிகு உறுப்பினர்

குமாரதாஸ் அவர்கள் இங்கே பேசுகிற போது விலைவாசி பற்றிப் பேசினார்கள். இப்போது போட்ட வரிக்கும் இதற்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா? ஏதாவது இந்த அறிக்கையால் விலைவாசி ஏறியிருக்கிறதா என்பதைத் தெரிவிக்கக் கேட்டுக் கொள்கிறேன். ஜனதா தள அரசு இரண்டாண்டுக் காலம் டெல்லியை ஆண்டபோது விலைவாசியை எப்படி எல்லாம் இறக்கியிருக்கிறீர்கள் (சிரிப்பு) என்பதைத் தெரிந்து அந்த முறையைச் சொன்னால் இங்கே கடைப்பிடிக்க முடியுமா என்பதை நான் யோசிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**டாக்டர் தே. குமாரதாஸ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நாங்கள் ஆட்சி செய்தது 11 மாத காலம்தான். இதற்கு முன்பு ஜனதா ஆட்சி நடந்தபோது வெளியில் ஓட்டலில் 5 ரூபாய்க்கு சாப்பாடு விற்ற காலத்தில் கூட ஜனதா சாப்பாடு என்று ஒரு ரூபாய்க்குப் போட்ட பெருமை எங்களுக்கு உண்டு. அதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. (கூச்சல்) (குறுக்கீடு) எங்கள் ஜனதாதான் சார்.

(காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் பலர் எழுந்து நின்றார்கள்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** யாராவது ஒருவர் எழுந்து நில்லுங்கள். திரு. தண்டாயுதபாணி.

**திரு. வி. தண்டாயுதபாணி :** எப்போது போட்டீர்கள்? எந்த ஆட்சியில் சொல்கிறீர்கள்? எமர்ஜென்சியில் போட்டது சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எமர்ஜென்சி ஆட்சியில் தான் ஜனதா சாப்பாடு போட்டதாக உறுதியாகக் கூறுகிறார்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ் :** எமர்ஜென்சியில் நீங்கள் சாப்பாடு போடவில்லை. எதிர்க்கட்சித் தலைவர்களைப் பிடித்து சிறையில் போட்டீர்கள். அவ்வளவுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்—நீங்கள் கூறுகிறபோது ஏதாவது ஆதாரம் இருக்க வேண்டும். எமர்ஜென்சி காலத்தில் போட்டது என்று உறுதியாகச் சொல்லும்போது, போடப்பட்டது அல்லது போடவில்லை என்று சொல்லும்போது உங்களிடம் ஆதாரம் இருக்க வேண்டும். ஜனதா ஆட்சியில்தான் போட்டது என்றால் ஆதாரம் இருக்கவேண்டும். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனதா தளம் என்கின்ற கட்சி இப்போது வந்திருக்கலாம். ஆனால் ஜனதா வேட்டி, ஜனதா உணவு, ஜனதா என்பது எல்லாம் சீனா சண்டைக்கு முன்பே வந்துவிட்டது. சீனா சண்டை நடக்கும்போதே இந்த ஜனதா எல்லாம் வந்துவிட்டது. இப்போது கட்சி ரீதியில் வந்திருக்கிறது. அவ்வளவுதான்.

**டாக்டர் தே. குமாரதாஸ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அந்த விவாதத்திற்குள் சென்று கொண்டிருந்தால் என்னுடைய மாவட்டத்தின் குறைகளைச் சொல்ல முடியாது. எனவே என்னுடைய வாதத்திற்கு வருகிறேன். இப்போது நம்முடைய நிதிநிலை அறிக்கையில் 1433 கோடி ரூபாய்க்கு ஆரோமேட்டிக் தொழிற்சாலை ஆரம்பிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். பாராட்டுகிறேன். ஆனால் அந்தத் திட்டத்தைத் தமிழகத்திற்குத் தந்த முன்னாள் பிரதமர், வணக்கத்திற்கும் மரியாதைக்கும் உரிய திரு. வி. பி. சிங் அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தவறான கருத்து என்றால்......திரு. இராசேந்திரன்......பாயின்ட் ஆப் ஆர்டரா என்ன? சொல்லுங்கள்.

பிற்பகல் 12-45

**திரு. பி. வி. இராஜேந்திரன் :** ஒரு தவறான தகவலை மாண்புமிகு உறுப்பினர் குமாரதாஸ் தெரிவிக்கிறார்கள். நாம் நம்முடைய மாநிலத்தில் பெட்ரோ-கெமிக்கல்ஸ் நிறுவனத்திற்கு அப்ரூவல் கேட்டபோது, மேற்கு வங்காளத்திலுள்ள ஹால்டியாவுக்குத்தான் வி.பி. சிங் அவர்கள்-அவருடைய அரசாங்கத்திற்கு ஜோதிபாசு அவர்களுடைய ஆதரவு பாராளுமன்றத்தில் வேண்டும் என்பதற்காகவும், அந்த அரசாங்கத்தைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்பதற்காகவும்—அனுமதியைக் கொடுத்தார்களே ஒழிய நமக்குத் தரவில்லை. பப்ளிக் இன்வெஸ்ட்மென்ட் போர்டும் அப்ரூவல் நமக்குக் கொடுக்கவில்லை. அமைச்சரவையும் நமக்கு அப்ரூவல் தரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சரி. இது பாயின்ட் ஆப் இன்பர்மேஷன்தான்.

**திரு. வி. தண்டாயுதபாணி :** அரோமாட்டிக் காம்ப்ளக்ஸ் என்பது......

திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, பாயின் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்கிறார்.

திரு. வி. தண்டாயுதபாணி : நானும் பாயின்ட் ஆப் ஆர்டர்தான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன பாயின்ட் ஆப் ஆர்டர், சொல்லுங்கள்.

திரு. வி. தண்டாயுதபாணி : உறுப்பினர் குமாரதாஸ் அவர்கள் சொன்னது தவறான செய்தி. ஏனென்று சொன்னால் முன்னாள் பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள்தான் இந்த 'அரோமாட்டிக் காம்ப்ளக்ஸ்' ஆரம்பிப்பதற்கு 'லெட்டர் ஆப் இன்டெண்ட்' வழங்கி தமிழ்நாடு அரசாங்கத்திற்கு அனுப்பினார். அனுப்பியதே தலைவர் ராஜீவ் காந்தி அவர்கள்தான் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுவும் பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல. அவர் அவருடைய தலைவர் என்கிறார். நீங்கள் உங்கள் தலைவர் என்கிறீர்கள். இதிலே பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை.

திரு. வி. தண்டாயுதபாணி : ஒரு தவறான தகவலைச் சொல்லுகிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தவறான தகவல் என்றால் அவரைத் திருத்திக் கொள்ளச் சொல்கிறேன்.

*திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வி. பி. சிங் அவர்கள் பிரதமராக இருக்கிறபோது அமைச்சரவைக் கூட்டத்திலும், அதற்குப் பிறகு பப்ளிக் இன்வெஸ்ட்மென்ட் போர்டிலும் 'அரோமாட்டிக் புராஜெக்ட்' கிளியர் செய்யப்பட்டது. ஆனால் அதற்குப் பிறகு சந்திரசேகர் அவர்கள் பிரதமராக வந்து, வி. பி. சிங் அவர்கள் எடுத்த, முன் தேதியிட்டு எடுத்த அத்தனை 'டெசிஷன்களையும்' முடிவுகளையும் ரெவ்யூ பண்ணினார். அதிலே அது அடிபட்டுப் போய்விட்டது. அதுதான் உண்மை நிலைமை.

டாக்டர் தே. குமாரதாஸ் : ஆகவே அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தது வி. பி. சிங் தான். That is all.



மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 'அரோமாட்டிக் ஸ்கீம்' பற்றி அன்றைக்கு இங்கே ஆட்சிக் கட்சியாக இருந்த கருணாநிதி அவர்களைத் திருப்தி செய்ய வேண்டும் என்பதற்காக அவர் விமான நிலையத்தில் இறங்கும்போது சொன்ன ஒரு தகவலே தவிர, முறைப்படி எடுக்கப்பட்ட ஒருமுடிவு அல்ல என்பதை பண்ருட்டியாரும் அறிவார், மற்றவர்களும் அறிவார்கள்.

திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தேதியை நான் மறந்துவிட்டேன். It is clear. ஒரு particular date-இல் மெஜாரிட்டி போய்விட்டது என்பதால், அந்தத் தேதியிலிருந்து எடுத்த all decisions taken by the Prime Minister V. P. Singh were reviewed by the subsequent Government. அந்த ரெவ்யூ-வில் அது போய் விட்டது. அவ்வளவுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த விவாதம் நாடாளு மன்றத்தில் நடக்க வேண்டியது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுதான். மாண்புமிகு உறுப்பினர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் சொல்வதைத் தான் நான் சொல்லுகிறேன். அவர்கள் அவசரத்தில் எடுத்து, முறைப்படி அனுமதி வாங்க வேண்டியவர்களை பை-பாஸ் செய்துவிட்டு, அவர்கள் அரசியல் காரணத்திற்காக இந்த தலைநகரத்தில் ஒரு செய்தியைச் சொல்ல வேண்டும் என்பதற்காக சொல்லப்பட்ட ஒரு முடிவே தவிர அது Executive Decision அல்ல, Political Decision.

திரு. ச. இராமச்சந்திரன் ; மாண்புமிகு அமைச்சர் கே. ஏ. கே. அவர்கள் சட்ட வல்லுநர், நான் சொல்லுவது—அமைச்சரவை டெசிஷன் எடுத்தது, அதை அரசியலுக்காக எடுத்தார்களா, எதற்காக எடுத்தார்கள் என்பதல்ல. Cabinet has taken a decision. அந்த அமைச்சரவைக்குப், பெரும்பான்மை இல்லை என்பதால் அந்த முடிவை ஏற்றுக் கொள்ள முடியாது என்று பிறகு பிரதமராக வந்த சந்திரசேகர் அவர்கள் அதை நிராகரித்தார். அதுதான் உண்மை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டில்லிச் செய்தி அமைச்சருக்கும் தெரியும். அவர் கொஞ்சம் சொல்லுவார். மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

[1991 செப்டம்பர் 10

மாண்புமிகு திரு. க. இராசாராம் : நான் அமைதியாக
இருந்தேன். எல்லாம் நடந்து முடிக்கட்டும் என்று. அதை
முதலில் கேட்டதே புரட்சித் தலைவர் அவர்கள்தான். அதற்குப்
பிறகுதான் அது டில்லிக்குப் போனது, அதற்குப் பிறகுதான்
வந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நான் சொல்லுவதை நண்பர்கள் எதிர்த்
தாலும் என்னைப் பொறுத்த வரையில் யார் திட்டினாலும்
அரிசி வடிக்க வேண்டும் என்கிற விதத்தில் தமிழ்நாட்டிற்கு
ரூ. 1433 கோடிக்கான தொழிற்சாலை வர வேண்டும்.***

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து, திரு.
குமாரதாஸ் அவர்கள், இதைக் கேளுங்கள். எதிர்க்கட்சித்
தலைவர் அவர்கள் உட்கார வேண்டும். குமாரதாஸ், தயவு
செய்து கேளுங்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
இங்கே இருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் சொன்னார்
கள் என்ற தகவலைச் சொல்வதாக இருந்தால் ஆதாரத்தை
வைத்துக் கொண்டுதான் சொல்ல வேண்டும்.

டாக்டர் தே. குமாரதாஸ் : பேப்பரை நான் காட்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை என்னிடம் காண்
பித்துவிட்டுப் பேசுங்கள். இந்த மாதிரிப் பேசுவது முறையல்ல.
நீங்கள் இந்தமாதிரிப் பேசுவது முறையல்ல. நீங்கள் இங்கே
பேசக்கூடிய ஒவ்வொரு வார்த்தைக்கும் உங்களிடத்திலே
ஆதாரம் இருக்க வேண்டும். ஆதாரத்தைக் காட்டாமல்
நீங்கள் இந்தமாதிரி பேசுவது அவை நடைமுறைக்கு உகந்த
தல்ல.

பிற்பகல் 12-50

டாக்டர் தே. குமாரதாஸ் : ஆதாரம் இருக்கிறது. பத்
திரிகையிலே வந்திருக்கிறது.

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப்பெற்றது.



1991 செப்டம்பர் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதுவாக இருந்தாலும்
என்னிடத்திலே காட்டிவிட்டுப் பேசவேண்டும். பத்திரிகையிலே
வந்திருக்கிறது என்றாலும் என்னிடத்திலே ஆதாரத்தைக் காட்டி
விட்டு பேசவேண்டும்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலை
வரவர்களே, இந்தச் செய்தி எல்லா பத்திரிகைகளிலேயும் வந்
திருக்கிறது ; அதைத்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பத்திரிகையிலே வந்த
தாக இருந்தாலும், என்ன தகவலைச் சொல்வதாக இருந்
தாலும் என்னுடைய அனுமதியைப் பெற்று சொல்ல வேண்டும்.
மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குமார
தாஸ் அவர்கள் தன்னுடைய கருத்துக்கள், எண்ணங்கள், நோக்
கங்கள் ஆகியவற்றை எடுத்துச் சொல்வதிலே தவறு இல்லை.
ஆனால் உண்மைக்குப் புறம்பான கருத்துக்களைச் சொல்லு
கின்றபோதுதான் மறுக்க வேண்டிய அவசியம் உறுப்பினர்களுக்கு
ஏற்படுகிறது. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள்
டெல்லிக்குப் போயிருந்தபோது சாதாரணமாக பிரதமர் அவர்
கள் 20, 25 நிமிடங்கள்தான் பேசுவார்கள் என்றாலும் நம்
முடைய முதலமைச்சரிடத்திலே ஒரு மணி நேரம் பேசினார்கள்
என்றுதான் பத்திரிகையிலே செய்தி வந்தது. (மேசையைத் தட்டும்
ஒலி).

அதன் பிறகு உள் துறை அமைச்சரையும் கண்டு பேசியிருக்
கிறார்கள்; நிதி அமைச்சர் அவர்களைக் கண்டு பேசியிருக்
கிறார்கள்; பிறகு திட்டக்குழுத் தலைவரையும் கண்டு பேசி
யிருக்கிறார்கள்; வெளிநாட்டு பாதுகாப்பு அமைச்சரையும் கண்டு
பேசியிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் புறக்கணித்தார்கள்
என்ற பேச்சுக்கே இடமில்லை. அது உண்மைக்குப் புறம்பான
தாக இருக்கிறது என்ற காரணத்தால் அதை உறுப்பினர்கள்
மறுக்க வேண்டிய அவசியம் இருக்கிறதே தவிர உங்களுடைய
கருத்துக்கள், எண்ணங்கள், நோக்கங்கள் ஆகியவற்றை எடுத்துச்
சொல்வதில் எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்
குமாரதாஸ் அவர்கள் என்ன பேசினாலும் அதற்கு உங்களிடத்
திலே ஆதாரம் இருக்க வேண்டும். ஆதாரம் இல்லாமல்
எதைப் பேசினாலும் அது அவைக் குறிப்பிலே ஏறாது; நான்
அனுமதிக்கவும் மாட்டேன்.

[1991 செப்டம்பர் 10

டாக்டர் தே. குமாரதாஸ் : தலைவரவர்களே, ஆதாரம் இருக்கிறது; பத்திரிகையில் வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆதாரம் இருந்தால் காட்டுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அவர் பேசட்டும்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் இதை ஒரு 'அமென்ட்மென்ட்' ஆகக் கூட சொல்லலாம். எதிர்க்கட்சிக்காரர்கள் பேச வேண்டுமென்றால் பத்திரிகைக் குறிப்பு என்றாலும் ஆதாரத்தோடுதான் பேச வேண்டும்; இல்லாவிட்டால் பேசக் கூடாது என்று கூட அமுல் படுத்துங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது 'அமென்ட்மென்ட்' அல்ல. இருக்கிற விதி. நீங்கள் பேசுவதற்காக விதிகள் எதையும் திருத்த வேண்டியதில்லை. இருக்கிற விதிகளே போதும். நீங்கள் உட்காருங்கள். நீங்கள் பேசுவதற்காக ஏதோ விதிகளைத் திருத்தித் தான் பேச வேண்டும் என்பதல்ல. விதிகள் எல்லாம் தெளிவாக இருக்கின்றன. நீங்கள் ஏதாவது குறிப்புகளைச் சொல்லவேண்டுமென்று நினைத்தால், அதற்கு உங்களிடம் இருக்கிற ஆதாரத்தைக் கொடுங்கள்; நான் அனுமதிக்கிறேன். அந்தமாதிரி இல்லாமல் நீங்கள் போகிற போக்கில் ஒரு கருத்தைச் சொல்லிவிட்டு, அதுவும் இங்கே இருக்கிற முதலமைச்சர் சொன்னதாகச் சொல்லிவிட்டு, அதை நிரூபிப்பதற்கு உங்களால் முடியாதபோது வேறுவிதமாக திசை திருப்புவது நல்லதல்ல. தயவுசெய்து உங்களிடம் இருக்கிற ஆதாரத்தை மட்டும் சொல்லுங்கள். முதலமைச்சர் சொன்னதாகச் சொல்கிற தகவலை அவைக்குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கொஞ்சம் பொறுத்துக்கொள்ள வேண்டும். நான் ஆதாரம் தரவேண்டுமென்று சொன்னால் முதலமைச்சரிடம் அதைக் கேட்டு வாங்குவதா அல்லது பிரதமரிடம் கேட்டு வாங்குவதா......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து ஆதாரம் இல்லாமல் நீங்கள் பேசுவது சரியல்ல. சொன்னார்கள் என்று நீங்கள் சொல்கிறீர்கள். சொன்னார்கள் என்றால் தங்களிடம் சொன்னார்களா அல்லது பத்திரிகையிலே சொன்னார்களா? பத்திரிகையிலே சொன்னார்கள் என்றால் அதற்கு ஆதாரம் இருக்கிறதா?

டாக்டர் தே. குமாரதாஸ் : ஆதாரம் இருக்கிறது; பத்திரிகையில் வந்திருக்கிறது.



1991 செப்டம்பர் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆதாரம் இருக்கிறது என்றால் கொடுத்துவிட்டுப், பேசுங்கள். இல்லாமல் பேச முடியாது. ஆதாரம் இல்லாமல் அதையே சொல்லவேண்டாம். பட்ஜெட்டுக்கு வாருங்கள்.

டாக்டர் தே. குமாரதாஸ் : ஆக, நம்முடைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் இலங்கைப் பிரச்சினையில் மிக அக்கறை காட்டுகிறார்கள். நன்றி. பாராட்டுக்குரிய விஷயம். ஆனால் அவர்களுடைய அமைச்சரவையில் இருக்கக்கூடிய மரியாதைக்குரிய சிதம்பரம் அவர்கள் அடிக்கப்பட்டபோது ஒருவர் கூட ஒரு கண்டனக் குரல்கூட எழுப்பவில்லையே என்பது வேதனையாக இருக்கிறது. (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குமாரதாஸ் அவர்களுக்குக் கவனப்படுத்துகிறேன். தயவுசெய்து நீங்கள் சம்பந்தம் இல்லாதவற்றைப் பேசாதீர்கள். நீங்கள் பட்ஜெட்டிலே பேசுவதாக இருந்தால் பேசுங்கள். பட்ஜெட்டில் பொதுப் பிரச்சினைகள் பற்றி பேச விரும்பவில்லை என்றால் நீங்கள் இதோடு உங்கள் பேச்சை முடித்துவிட்டு மற்றவர்களுக்காவது வழிவிடலாம். (குறுக்கீடு) இதை எல்லாம் அனுமதிக்க முடியாது. இதை எல்லாம் வெளியிலே போய் பொதுக்கூட்டங்களில் பேசலாமே தவிர இங்கே வந்து பேச முடியாது; பேசுவது முறையும் அல்ல. (கூச்சல், குழப்பம்) தயவுசெய்து எல்லோரும் உட்காருங்கள். நீங்கள் சொல்லக்கூடிய முறையிலே சொல்லுங்கள். சொல்லக் கூடிய முறையிலே சொன்னால் நான் அனுமதிக்கிறேன்.

பிற்பகல் 12—55

நீங்கள் பட்ஜெட்டில் பேசுங்கள் என்று சொன்னால் எது எது தேவையில்லையோ அதை எல்லாம் பேசிக்கொண்டே போகிறீர்கள். நீங்கள் பட்ஜெட்டுக்கு சம்பந்தம் இல்லாத எந்த எந்த விஷயங்கள் இருக்கின்றதோ அவைகளைப் பேசிக்கொண்டு போகிறீர்கள். ஒவ்வொரு விஷயமாக நீங்கள் பேச ஆரம்பித்ததிலிருந்து 10 நிமிடம், 15 நிமிடம் நேரமாக அவையின் நேரத்தையும் வீணடித்து பட்ஜெட்டுக்கு எது எது தேவை இல்லையோ அத்தனையையும் பேசிக்கொண்டு போகிறீர்கள். தயவுசெய்து உட்காருங்கள்.

டாக்டர் தே. குமாரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் எதை எதைப் பற்றிப் பேச வேண்டுமென்று ஒரு பட்டியலைத் தாருங்கள். வேறு வழி, என்ன செய்வது?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது நீங்கள் பட்ஜெட்டைப் பற்றிப் பேச வேண்டாமா? எதற்காக உங்களுக்கு நேரம் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டு இருக்கிறது? உங்களுக்கு நேரம் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டு இருப்பது பட்ஜெட்டைப் பற்றிப்பேசுவதற்காகத்தான்.

டாக்டர் தே. குமாரதாஸ்: எல்லாமும் பேசலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லாம். பேசுவதற்கு இது இடமல்ல. பட்ஜெட்டைப் பற்றிப் பேசுவதற்குத்தான்.

டாக்டர் தே. குமாரதாஸ் : இப்போது பேசி ஆகவேண்டிய சூழ்நிலை, சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணியத்திற்குரிய போற்றுதலுக்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. குமாரதாஸ் அவர்களிடத்திலே இருந்து நான் ஒரு உறுப்பினர் என்ற வகையிலே ஒரு தகவலைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். நம்முடைய போற்றுதலுக்குரிய முன்னாள் முதல்வர் வி. பி. சிங் அவர்கள் பிரதமரான உடன் முதன் முதலாக சென்னைத் திருநகரத்திற்கு வந்தார்கள். பெரியார் திடலிலே கூட்டத்தைக் கூட்டினார்கள். அந்தக் கூட்டத்தில் அழையாத விருந்தாளியாக அன்றைக்கு முதலமைச்சராக இருந்த கருணாநிதி சென்றபோது உங்களுடைய ஜனதா தளக் கட்சி நண்பர்களே 'இவரை ஏன் அழைத்தீர்கள்? வேண்டாத விருந்தாளி' என்று கேட்டார்களே, அதற்கு என்ன காரணம் என்று சகோதரர் விளக்குவாரா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது போன்ற அரசியல் விவாதங்களை வளர்த்துக் கொண்டே போக வேண்டாம். நிதி நிலை அறிக்கையின் மீது பேசுங்கள். திரு. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : காவல் துறை என்று எதற்கு வைத்து இருக்கிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காவல் துறை பற்றி வரும்போது பேசுங்கள். இப்போது நிதிநிலை அறிக்கையின் மீது பேசுங்கள். நீங்கள் அரசியல் பிரச்சினைகளுக்குள் போகாதீர்கள். (குறுக்கீடு) நீங்கள் அரசியல் பிரச்சினைகளுக்குள் போனால் தயவுசெய்து உங்கள் நேரம் வீணாகும். (குறுக்கீடு)



குமாரதாஸ் அவர்களே, உங்களுடைய நேரம் முடிகிறது; முடிவதற்குள் நீங்கள் பட்ஜெட்டைப் பற்றிப் பேசுவதாக இருந்தால் பேசலாம். இப்படி சவால் விடுவது, அடித்துப் பேசுவது, இதெல்லாம் தேவையில்லாத வேலை. முன் வரிசையில் அமர்ந்து கொண்டு ஒரு உறுப்பினர் இப்படிச் செய்யவும் கூடாது. (குறுக்கீடு) பேசுங்கள், பட்ஜெட்டில் பேசுங்கள். தயவுசெய்து பட்ஜெட்டில் பேசுங்கள். திரு. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : என்னுடைய மாவட்டத்தினுடைய விஷயங்களையாவது கேட்டுவிடுகிறேன். சார் (சிரிப்பு) அதையாவது பேச விடுங்கள், சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேசுங்கள். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பற்றி நிறைய விஷயங்கள் பேச வேண்டி இருக்கிறது.

டாக்டர் தே. குமாரதாஸ் : ஏகப்பட்ட விஷயங்கள், சொல்ல வேண்டி இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் அதிகமான மீனவ நண்பர்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு ஜூன் முதல் டிசம்பர் மாதம் அதாவது 6 மாதங்கள் வரை மீன் பிடிக்க செல்ல முடியாத சூழ்நிலை கடல் கொந்தளிப்பு ஏற்படுகிற காரணத்தாலே இருக்கிறது. அதனால் அந்தப் பகுதியில் அவர்களுக்கு ஒரு தூண்டில் வளைவு அமைத்துத் தர வேண்டும் என்ற ஒரு வெகு நாளைய கோரிக்கை இருந்து வருகிறது. நான் இதற்கு முன் சட்டமன்ற உறுப்பினராக இருந்த நேரத்தில் கடலிலே மீன்பிடிக்கச் செல்கிற மீனவ சகோதரர்கள் காணப்படவில்லை என்று சொன்னால் அவர்களைத் தேடுவதற்கு ஹெலிகாப்டர் வைத்து தேட வேண்டுமென்று அன்றைய முதலமைச்சர் மரியாதைக்குரிய எம். ஜி. ஆர். அவர்களிடம் கேட்ட நேரத்தில், அதற்காக ஒரு நபரைக்கூட காணவில்லை என்று சொன்னாலும் ஹெலிகாப்டர் வைத்து தேடலாம் என்று உத்தரவு பிறப்பித்தார்கள். ஆனால் அது நடைமுறைக்கு வராமல் இருந்து கொண்டிருக்கிறது. எனவே அதை நடைமுறைப்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கடற்கரைச் சாலைகளை அமைக்கின்ற விதத்தில் கணபதியான் கடவு பாலம், மேலமணக்குடி, கீழமணக்குடி பாலங்களை இணைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல் தெற்குக் கடவு பாலம் என்கிற ஒரு பாலம் அந்தப் பகுதியில் தேவைப்படுகிறது. அதையும் நீங்கள் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெய்வேலி டவுன்ஷிப் என்று இருப்பதை, பெரும் தலைவர் காமராசர் நகர் என்று மாற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதுபோல் கன்னியாகுமரி மாவட்டத்தில் பெரும் தலைவர் காமராசர் அவர்களுடைய அஸ்தி வைக்கப் பட்டு இருக்கிற பகுதியில் அவருக்கு ஒரு நினைவாலயம் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாயத்துக்குப் பயன் படுத்தக்கூடிய மிக முக்கியமான அணைகளிலிருந்து குறிப்பாக சிற்றாறு பட்டணங்கால், பேச்சிப்பாறை, பெருஞ்சாணி—இவைகளிடையே சேனல்களினுடைய அளவை அதிகப்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு கடைவரம்புப் பகுதி வரைக்கும் சிமின்ட் தளங்கள் அமைத்துத் தரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-00

கன்னியாகுமரி மாவட்டத்தில் இன்றைக்கு இந்தியாவிலேயே அதிகமாகப் படித்தவர்கள் நிறைந்த மாவட்டம் என்று சொல்லக்கூடிய அந்த மாவட்டத்தில் இதுவரைக்கும் ஒரு அரசு கல்லூரி கிடையாது. அதற்காக ஒரு அரசுக் கல்லூரியைத் தருகிறோம் என்று சொல்லி பெருந்தன்மையோடு தந்து விட வேண்டாம். அதற்கு பதிலாக ஒரு சட்டக் கல்லூரியோ, மருத்துவக் கல்லூரியோ, விவசாயக் கல்லூரியோ—இப்படிப் பட்ட ஒரு புரபஷனல் கோர்ஸ் கல்லூரியை ஏதாவது ஒன்றை உங்களுடைய ஆட்சியில் அமைத்துத் தந்து பெருமை சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பனையேறுகிற தொழிலாளர்களை மிகவும் பிற்படுத்தப் பட்ட 'மோஸ்ட் பேக்வர்ட்' லிஸ்டில் சேர்க்க வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்தில் மீனவ நண்பர்கள் பொதுவாக மூக்குவர் என்ற சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் மாத்திரம் மோஸ்ட் பேக்வர்ட் கம்யூனிட்டியில் சேர்த்து இருக்கிறார்கள். அங்கே பரதர் என்ற கம்யூனிட்டியைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் முதலில் எஸ். சி. யாக கருதப் பட்டவர்கள். இன்றைக்கு பேக்வர்ட்டாக மாற்றப்பட்டு இப்போது பி. சி. யாக இருக்கிறார்கள். மோஸ்ட் பேக்வர்ட்டாக பரதர் கம்யூனிட்டியை மாற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் என்னுடைய தொகுதியில் நான் சட்ட மன்ற உறுப்பினராக இருந்த நேரத்தில் நம்முடைய மரியாதைக்குரிய முன்னாள் முதல்வர் அவர்கள் 4½ கோடி ரூபாய்க்கு ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைத் தந்து உதவி னார்கள். அந்த 4½ கோடிக்கான குழித்தலையார் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஐந்து ஆண்டுகள்





ஆகிவிட்டது. இன்றும் அது செயல்பட ஆரம்பிக்கவில்லை. காரணம் அங்கேயிருந்த பொறியாளர் அலுவலகத்தை திருநெல் வேலிக்கு மாற்றிவிட்ட காரணத்தால், இப்போது சின்ன செக்ஷன் ஆபீஸ் மாத்திரம் வைத்திருக்கிறார்கள். எனவே, அது செயல்படவில்லை. இதனை துரிதப்படுத்தி, வெகுவிரை வாக 4½ கோடித் திட்டத்தை எங்களுக்கு நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பல ஆண்டுக்காலமாக அந்தப் பகுதியில் விவசாயப் பெருங்குடி மக்கள் பயன்படுத்தி வந்த விளாத்துறை லிப்ட் இரிகேஷன் என்ற திட்டம் கடந்த 5, 6 ஆண்டுகளாக தடைப் பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தை மீண்டும் நம்முடைய அர சாங்கம் எடுத்து நீங்கள் அதைத் தருவீர்களானால் கிட்டத்தட்ட 5,000-லிருந்து 7,000 ஏக்கர் வரைக்கும் விவசாயம் செய்ய வாய்ப்பு ஏற்படும்.

அடுத்து கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு பெரிய பிரச்சினையாக இருப்பது என்னவென்று சொன்னால் கனிம வளத்துறை. அதாவது மணல், கல் இவைகளை எடுப்பதற்கு அரசு அனுமதி பெறவேண்டுமென்று சொல்கிறார்கள். அரசு அனுமதி பெறவேண்டும் என்பதில் எனக்கு மாற்று கருத்து கிடையாது. ஆனால் மணல் எடுக்கிற கூலித் தொழிலாளர்கள் 25,000-க்கு மேலானவர்கள் அந்தப் பகுதியில் வேலை செய்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவ ரிடம் சொன்னால் எங்களுக்கு சென்னையிலிருந்து தகவல் வந்தால் தான் முடியும் என்று சொல்கிறார்கள். இதனால் பாதிக்கப்படுவது பொதுமக்கள் தான். வீடு கட்டுவதானாலும் சரி, ஆஸ்பத்திரி கட்டுவதானாலும் சரி, அரசாங்கத்தினுடைய பணிகளைச் செய்வதானாலும் சரி, மணல் எடுக்க வேண்டு மென்றால் தனி பெர்மிட், கல் எடுக்க வேண்டுமென்றால் தனி பெர்மிட் வேண்டும் என்கிறார்கள். இப்படி இருக்கிற நிலையில் அரசு ஒரு திட்டத்தை, கொள்கையை வைத்து அதன் மூலமாக நீங்கள் எடுக்க வேண்டும் என்று குறிப்பிட்ட பகுதியை ஒதுக்கிக் கொடுப்பீர்களானால் அந்தப் பிரச்சினை அங்கே தீர்ந்து விடுமென்று கருதுகிறேன்.

வயல்வெளிகளில் தண்ணீர் குறைவாக வருகிறது என்று சொல்லி அந்தப் பகுதிகளில் வாழை, தென்னை போன்ற பயிர்களை பயிரிட ஆரம்பித்து இருக்கிறார்கள். அப்படி பயிரிடுகிறபோது மற்ற விவசாயப் பெருங்குடி மக்கள் பெரியதாக பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். எனவே, ஒரு விவசாயப் பகுதி யில் புதியதாக இப்படிப்பட்ட புன்செய் நிலத்தினுடைய பயிர்களை பயிர் செய்யக் கூடாது என்ற விதத்தில் ஒரு

உத்தரவை தருவீர்களானால் நல்லது...... (மணியடிக்கப் பெற்றது). முடித்து விடுகிறேன். ஐந்து நிமிடம் கூட பேசவிடவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவ்வளவு விஷயம் வைத்திருக்கிறீர்கள். அது உங்களுக்கு முன்னாலேயே தெரிந்திருக்க வேண்டும். வேகமாக முடியுங்கள்.

டாக்டர் தே. குமாரதாஸ் : நான் எந்த விஷயத்திற்கும் வரவில்லை. போகட்டும், நாடு எப்படி போனால் நமக்கு என்ன ? ஆகவே, நெய்யாறு இடது கரை சானலைப் பற்றி சொன்னேன். கேரளாவிலிருந்து அதற்கு தண்ணீர் வருகிறது. அதிலே வருகிற தண்ணீர் கொள்ளளவு ஒப்பந்தத்தை விட குறைவாக வருகிறது. எனவே, அதைச் செப்பனிட்டு தருவீர்களானால் அந்த நெய்யாறு இடது கரை சானலில் அதிகமாகத் தண்ணீரைப் பெற முடியும்.

அடுத்து முந்தைய அரசிலும் சொன்னார்கள். இப்போதும் சொல்லியிருக்கிறார்கள். 306 கோடி ரூபாய்க்கு கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு ரப்பர் தொழிற்சாலை தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பாராட்டுகள், வாழ்த்துக்கள். ஆனால் தமிழ் நாட்டில் 234 தொகுதியாக இருப்பது என்னுடைய தொகுதி. ஒன்றாவது தொகுதியிலிருந்து 234 தொகுதி வரைக்கும் வந்து சேர வேண்டுமென்றால் அதற்குள் பணம் நிறையச் செலவாகிவிடுகிறது. அங்கே ஒரு தொழிற்சாலை கூட கிடையாது. எனவே, 234 தொகுதிக்கு அந்த ரப்பர் தொழிற்சாலை தந்துதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-05

இன்னும் ஒன்றிரண்டு கருத்துக்களை கூறி முடித்து விடுகிறேன். நெசவாளர் பெருங்குடி மக்களுக்கு துயர் துடைக்கும் விதத்தில் 250 ரூபாய் அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப் படவிருப்பதை பாராட்டுகிறேன். அதோடு மாத்திரம் விட்டு விடாமல் அவர்களுக்கு மானிய விலையில் நூல் கிடைக்க நீங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். நெசவுக் கூடங்களில் இருக்கக்கூடிய துணிகளை அரசு கொள்முதல் செய்கிற விதத்தில் செயல்படுவீர்களானால் அவர்கள் பிரச்சினைகளை ஓரளவுக்கு தீர்க்க முடியும்.

மலிவு விலை மதுக்கடைகளை ஒழித்து விட்டீர்கள் பாராட்டுகிறேன். பூரண மதுவிலக்கு எங்களுடைய கொள்கை என்று சொல்லியிருந்தீர்கள். நாங்கள் கூட எல்லாம் முடிந்துவிடும், அயல்நாட்டு மதுக்கள் பிசினஸ் இனி நடக்காது என்று எதிர்பார்த்துக் கொண்டு இருந்தோம். எனக்கு ஒரு சிறிய சந்தேகம் வருகிறது. இதைக் கூட நீங்கள் குற்றச்சாட்டாக எடுத்துக்கொண்டு, சண்டைக்கு வந்துவிடாதீர்கள். என்ன சொல்லுகிறார்கள் என்று சொன்னால், 'இதெல்லாம் எங்களுடைய குறிக்கோள்கள், எண்ணங்கள்; நாங்கள் செயல்படப்போகிறோம், ஆனால் அது முடியாத பட்சத்தில் சிறப்புத் திட்டங்கள் மூலம் நிறைவேற்றப்படும்', என்கிற ஒரு வரி இருக்கிறது. சிறப்புத் திட்டம் என்று வருகிற நேரத்தில் எனக்கு ஒரு சந்தேகம். வேறு ஒன்றும் இல்லை. ஒருவேளை மலிவு விலையில் அயல்நாட்டு மது வந்துவிடக்கூடுமோ என்கிற ஒரு எண்ணம் வருகிறது. அப்படி மலிவு விலையில் அயல்நாட்டு மதுக்கள் வருவதை, தமிழ் நாட்டில் நீங்கள் அனுமதிக்கக்கூடாது. அந்த உத்தரவாதத்தை மரியாதைக்குரிய நிதியமைச்சர் அவர்கள் தருவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.



அதேபோல், மின் கட்டணத்தினுடைய உயர்வை ஒட்டு மொத்தமாக நாம் ஏற்றுக்கொண்டு இருக்கிறோம். ஒரு சிறிய வேண்டுகோள், அதற்காக நான் நாத்திகன் என்று எண்ணிவிட வேண்டாம். திருவாரூரிலே இருக்கக் கூடிய சாமி சிலைகள் அத்தனையையும் ஏ. சி. ரூமிலே வைக்க வேண்டும் என்று ஒரு ஆணை பிறப்பித்து, அதற்கான வேலைகள் நடைபெற்று வருவதாக நான் அறிகிறேன். எதற்காக சாமி சிலைகளுக்கு ஏ.சி. என்பது எனக்குப் புரியவில்லை. ஏழைகளுக்கு—நமக்கு மின்சார உயர்வு. ஆனால் சாமி சிலைகளுக்கு ஏ.சி.யா ? இது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லாதது போல் எனக்குத் தோன்றுகிறது. இல்லை, அதுதான் வேண்டும் என்று நீங்கள் எல்லோரும் சேர்ந்து சொன்னால், அதை நான் என்ன செய்ய முடியும் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்குரிய மின்சாரக் கட்டணத்தை அந்தந்த கோயில்களின் நிர்வாகம் கட்டிவிடுகிறது. அதையும் மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் கோயிலினுடைய மண்டபத்திலே பல்லாண்டுக் காலத்திற்கு முன்னாலே, பல்வேறு கோயில்களிலிருக்கிற விலை மதிக்க முடியாத சிலைகளை எல்லாம், செப்புச் சிலைகளை, ஐம்பொன் சிலைகளை எல்லாம் கொண்டு வந்து வைத்து, காப்பாற்றி வருகிறார்கள். அதற்கு ஏ.சி. முன்பே செய்யப்பட்டு இருக்கிறது. அது ஏன் செய்யப் பட்டு இருக்கிறது என்று சொன்னால், அவைகள் ஐம்பொன்னாக இருப்பதாலும், செப்புச் சிலைகளாக இருப்பதாலும், அவை காப்பாற்றப்படவேண்டியதாக இருக்கிறது. சிவபுரத்திலே யிருந்து எடுத்துச் செல்லப்பட்ட நடராசர் சிலை மட்டும்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1991 செப்டம்பர் 10

2 கோடி ரூபாய்க்கு ஏலம் போகிற அளவிற்கு விலை மதிப்பு உடைய உலோகங்களாலானது. எனவே அதற்காகத்தான் ஏ.சி.யே தவிர, அந்தச் சாமிகள் எல்லாம் கேட்டன என்பதற்காகவோ (சிரிப்பு) அவர்களுடைய வேண்டுகோள்களையாவது நிறைவேற்று வோம் என்ற காரணத்தினாலோ ஏ.சி. தரப்படவில்லை என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே. குமார தாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, விளக்கத்திற்கு நன்றி. இருந்தாலும் அதை ஏற்றுக்கொள்வ தற்கு கொஞ்சம் மனம் இடம் கொடுக்கவில்லை. இருந்தாலும், (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் இரண்டு பேர்கள் பேச வேண்டியிருக்கிறது. சீக்கிரம் முடியுங்கள்.

டாக்டர் தே. குமாரதாஸ் : முடித்துவிடுகிறேன். என்னை இங்கே எங்கே சார் பேசவிட்டார்கள்.

அதேபோல் இன்னும் ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன் நம்முடைய நக்கீரன் பத்திரிகை கழிந்த 3 தினங்களிலே 12 முறை ரெய்டு செய்திருப்பதாக சொல்கிறார்கள். காவல் துறையினுடைய டார்ச்சரி ரொம்ப அதிகமாக இருக்கிறது. அது உங்களுடைய கவனத்திற்குக்கூட வராமல் நடந்திருக்கக்கூடும். அப்படிப்பட்ட தவறுகள் பத்திரிகை உலகினை, நசுக்குகின்ற விதத்திலான செயல் பாடுகள் இருக்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, நீங்கள் எல்லோரும் எதிர்க்கக்கூடியதுதான். இருந்தாலும், என்னுடைய கருத்தைச் சொல்லியாக வேண்டும். மரியாதைக்குரிய எம். ஜி. ஆர். அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்த நேரத்தில், அருமை தாய்மார்களுக்காக, குழந்தைகளுக்காக, சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்து, அதிலே கிட்டத்தட்ட 50 ஆயிரம், 60 ஆயிரம் தாய்மார்களை அமைப்பாளர்களாக, ஆயாக்களாகக் கொண்டு வந்தார்கள். ஆனால் அதற்குப் பிறகு வந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அது எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டு வந்த திட்டம் என்று சொல்லி, அவர்களை வீட்டுக்கு அனுப்பவில்லை. மாறாக அவர் களுக்குப் பணி நிரந்தரம் கொடுத்து ஊதிய உயர்வும் கொடுத் திருக்கிறார்கள்.

அதே போல் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியின் போது 35 ஆயிரம் நகர நலப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள், என்று சொன்னால், அதை.... (குறுக்கீடு).



1991 செப்டம்பர் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு). மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : தலைவர் அவர்களே, பணி நிரந்தரம் பண்ணவில்லை. தவறான கருத்தைச் சொல்கிறார். புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர். காலத்தில் அமைப்பாளர்களாக போடப்பட்டவர்கள் பல பேர்கள் திராவிட முன்னேற்றக் கழகத் தினுடைய ஆட்சியில் வெளியேற்றப்பட்டார்கள். புதியவர்கள் நியமிக்கப்பட்டார்கள் என்பதைப் பேரவைத் தலைவருக்குத் தெரி வித்துக்கொள்கிறேன். சத்துணவு அமைப்பாளர்களுடைய பணி இன்னும் நிரந்தரம் செய்யப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, சில அரசாங்கங்கள் சில வேலைகள் இருக்கிறது என்பதற்காக சில பணியாளர்களை நியமிக்கிறார்கள். ஆனால் சில பேர்கள் இருக்கிறார்கள் என்பதற்காக, சில அரசாங்கங்கள் வேலை களைத் தேடுகிறது. எனவே, இப்போது அரசாங்கத்திற்கு அதிகமான நஷ்டம் ஏற்படுகிற காரணத்தால், இந்த அரசாங்கம் அந்த நடவடிக்கையை எடுத்து இருக்கிறதே தவிர, வேறு ஒன்றும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சரவர்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவர்கள் குறிப்பிட்டு இருப்பது மக்கள் நலப் பணியாளர்கள். மக்கள் நலப் பணியாளர்கள் என்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே யாருக்குப் போட்டிருக்கிறார்கள் என்று சொன்னால், ஜனநாயகத்தில், தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிற ஊராட்சி மன்ற, பேரூராட்சி மன்றத் தலைவர்களைக் கண்காணிப்பதற்கு இவர்களால் போட் டிருப்பது நியாயம்தானா என்பதை நான் கேட்க விரும்பு கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய அமைச்சர் அவர்கள் கூறுகின்றபோது, சத் துணவு அமைப்பாளர்களை, ஆயாக்களை நிரந்தரம் செய்ய

வில்லை என்று சொன்னார்கள். அது உண்மையிலேயே நிரந்தரம்
செய்யப்படாததா என்பதை நான் அறிந்து கொள்ள விரும்பு
கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சமூகநலத்
துறை அமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : தனிக் கேள்வி
போடவும். பதில் சொல்லப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : நான் சொல்லிக் கொள்வதெல்
லாம் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஒரு படம். எனக்கு படத்தி
னுடைய பெயர் ஞாபகம் இல்லை. அதிலே ஒரு வரி வரும்.
அதை மாத்திரம் சொல்கிறேன். 'ஏழைக் குடும்பங்கள் அழுது
சிந்திய கண்ணீர் சும்மா போகாது' என்று சொன்னார்கள்.
இப்போது 35 ஆயிரம் குடும்பங்கள் அழுது சிந்திய கண்ணீர்
உங்களை அழித்துவிடக் கூடாது என்பதற்காக......
(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்
தம்புசாமி. (குறுக்கீடு). நீங்கள்தான் முடித்து விட்டீர்களே.
(குறுக்கீடு). மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்
அவர்கள்.

பிற்பகல் 1-10

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே,
இந்த நாட்டிலே ஒரேயொரு பெண்மணி சிந்திய கண்ணீர் தான்
இந்த அளவிற்கு மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்
றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் முடித்தாகி விட்
டது. (குறுக்கீடு) திரு. தம்புசாமி அவர்கள். (குறுக்கீடு) தம்பு
சாமி அவர்களைக் கூப்பிட்டேன். நீங்கள் உட்காருங்கள். 40
நிமிடம் ஆகிறது. இன்னும் இரண்டு கட்சித் தலைவர்கள் பேசி
முடிக்க வேண்டியிருக்கிறது. 1.10 ஆகிவிட்டது. தயவு செய்து
உட்காருங்கள். திரு. தம்புசாமி.

*திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நிதியமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்
டிருக்கின்ற நிதிநிலை அறிக்கை மீது இன்று பேசுவதற்கு அனுமதி
தந்த உங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



இந்த நிதிநிலை அறிக்கை என்பது ஏறத்தாழ 35 தலைப்பு
களிலும், 219 பாராக்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி
சொல்லப்பட்டிருக்கின்ற நிதிநிலைத் திட்டங்களை இரண்டு வகை
யாகப் பிரித்துப் பார்க்க வேண்டியிருக்கிறது. ஒன்று. நீண்ட
காலத் திட்டம், மற்றொன்று குறுகிய காலத் திட்டம். இந்த
நீண்ட காலத் திட்டங்களுக்கெல்லாம் இந்த நிதிநிலை அறிக்கை
யிலே குறிப்பிடப்பட்டிருக்கின்ற திட்டங்களை நிறைவேற்ற
வேண்டுமென்று சொன்னால், இந்த நிதிகள் முழுமையுமே மத்திய
அரசிடம் கோரப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. அப்படி
மத்திய அரசிடம் கோரி நீண்ட காலத் திட்டங்களை நிறை
வேற்றுகிறபோது இன்றைக்கு மத்திய அரசினுடைய நிலை
எப்படியிருக்கிறது என்பதை நிதிநிலை அறிக்கை துவக்கத்திலே
சொல்லப்பட்டிருக்கின்றது. அதனுடைய நிதிநிலை நெருக்கடி
யின் காரணமாக எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேற்
றப்படாமல் காலம் கடத்துவதன் மூலம் பல திட்டங்களை நிறை
வேற்ற முடியாத ஒரு நெருக்கடிக்குள்ளே சிக்கியிருக்கிறது என்று
துவக்கத்திலே கூறப்பட்டிருந்தும் கூட, இன்றைய தினம் மத்திய
அரசிடத்திலே இருக்கின்ற நிதிநிலை பற்றாக்குறை காரணமாக
மிகவும் மோசமான சூழ்நிலைக்குப் போய் உள்ளது. ஏறத்தாழ
திவால் என்ற நிலைமை ஆகியிருக்கின்ற போது நமக்கு, தமிழகத்
திற்கு அந்தத் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றுவதற்கு நிதி
வழங்குமா என்ற ஒரு ஐயப்பாடு எனக்கு ஏற்பட்டிருக்கின்றது.

எனவே தமிழக அரசு இந்த நிலையிலும் கூட ஒரு பற்றாக்
குறை நிதிநிலை அறிக்கை அறிவித்திருக்கிறது. இந்த
பற்றாக்குறை நிதிநிலை அறிக்கை என்பதிலே ஏறத்தாழ 902
கோடி ரூபாய் பற்றாக்குறை ஏற்பட்டு, அந்த ரூ. 902 கோடி
பற்றாக்குறை சிக்கன சீரமைப்பின் மூலம் குறைத்துக் கொண்
டாலும் மிச்சம் இருக்கிற பற்றாக்குறை ஏறத்தாழ ரூ. 573
கோடி பற்றாக்குறையாக இருக்கிறது. இப்படி இந்த பற்றாக்
குறை பட்ஜெட்டைப் பற்றி பேசுகின்றபோது மரியாதைக்குரிய
மாண்புமிகு உறுப்பினர் அல்போன்ஸ் அவர்கள் குறிப்பிட்டார்
கள். இப்போது பற்றாக்குறை பட்ஜெட்டை விமர்சித்து மார்க்
சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி சார்பிலே, அதனுடைய தமிழ் மாநிலக்
குழு ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறது. அந்த பற்றாக்
குறைக்கு எப்படி ஈடுகட்டுவது என்று சொல்லவில்லை என்று
குறிப்பிட்டார்கள். நான் அவர்களைத் திருப்பி கேட்கிறேன்.
இந்தப் பற்றாக்குறையைப் போக்க வேண்டுமென்று சொன்னால்,
இந்தத் திட்டங்களையெல்லாம் நிறைவேற்ற மத்திய அரசிடத்
திலே நிதி கேட்போம் என்று சொல்லக் கூடிய நிலையில், இன்
றைக்கு மத்திய அரசில் காங்கிரஸ் ஆட்சியில் இருக்கிற அந்தக்
காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
அந்த நிதியைப் பெற்றுக் கொடுப்பதற்கு இந்த மாமன்றத்திற்கு
முன்னாலே உறுதி அளிக்க வேண்டும்.

[திரு. வே. தம்புசாமி] [1991 செப்டம்பர் 10

இன்னொன்று, தமிழகத்திலேயிருந்து எஃ.ணெய் வளம் கொண்ட தஞ்சை மாவட்டத்திலிருந்து எண்ணெய் தோண்டி எடுக்கப்படுகிறது. நெய்வேலியிலிருந்து நிலக்கரி எடுக்கப்படு கிறது. இதற்குக் கிடைக்கக் கூடிய ராயல்டியை நீண்டகாலமாக மத்திய அரசு வழங்காமல், காலம் கடத்துகிறது. அதனால் தமிழகத்தினுடைய திட்டங்கள் பாதிக்கப்பட்டு வருகின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். அந்த ராயல்டியை அவர்கள் கட்சி மத்தியிலே ஆட்சியில் இருக்கிற காரணத்தால் அந்த ராயல்டியைப் பெற்றுக் கொடுப்பதற்கு, அவர்கள் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்த நேரத் திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்திலே இந்த வரவு-செலவுத் திட்ட நிதிநிலை அறிக்கையை எவ்வாறு இரண்டு பகுதிகளாகப் பார்க்க வேண்டி யிருக்கிறது. ஒன்று உழைக்கக்கூடிய மக்கள். மற்றொன்று தொழி லதிபர்கள் இந்த இரண்டு நபர்களையும் கொண்ட பகுதியாகவேறு படுத்திப் பார்க்கிறபோது எங்கே அதிகமாக சலுகை வருகிறது என் றால் தொழிலதிபர்களுக்கு அந்தத் தொழிலுக்கு ஊக்கம் என்ற பெயராலும், தமிழகத்தில் தொழில் வளர்ச்சி என்ற பெயராலும், அவர்களுக்கு அளிக்கப்படக் கூடிய சலுகை, 1, 2, 3, 4 என்று வரையறுக்கப்பட்டு கூறப்பட்டிருக்கின்றது. ஆனால் அதே நேரத்தில் உழைப்பை நம்பி இன்றைக்கு 80 சதவீத மக்கள் தமிழகத்திலே விவசாயத் தொழிலை நம்பித்தான் வாழக் கூடிய நிலைமையில் இருக்கிறார்கள். இந்த விவசாயத்தை தவிர வேறு எந்தத் தொழிலும் அவர்களுக்குத் தெரியாது. அப்படிப்பட்ட தொழிலை நீண்ட காலமாகவே, குலத் தொழிலாக பரம்பரை யாக செய்து வாழக்கூடிய அந்த விவசாயக் குடும்பங்கள் எதிர் காலத்திலும் கூட முன்னேற முடியாமல் எவ்வளவு தூரம் பொருளாதார படுகுழியில் சிக்கியிருக்கிறார்கள் என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மை. ஒரு புறத்திலே அவர்களுக்கு இயற்கையின் தாக்குதல் நடக்கிறது. ஒரு புறத்திலே வெள்ளம் வருகிறது. மறு புறத்திலே வறட்சி ஏற்படுகிறது. இன்னொரு பக்கத்திலே புயல் அடிக்கிறது. மறு புறத்திலே என்ன வகை பூச்சி என்று கண்டு பிடிக்க முடியாத பூச்சிகள் பயிர்களை அழித்துக் கொண்டிருக்கிறது. விஞ்ஞானிகளால் கூட கண்டு பிடிக்க முடியாத பூச்சியின் தாக்குதல் கடுமையாகத் தாக்கிக் கொண்டு இருக்கிறது. அப்படிப்பட்ட தாக்குதல்களுக்கு இடை யிலே, தான் செலவழித்த பொருளைக் கூட இழந்து உற்பத்தி யிலே கடுமையான பாதிப்பு ஏற்பட்டு அந்த உற்பத்தியின் பாதிப்பு தன்னுடைய குடும்பங்களின் பொருளாதாரத்தை சீரழித்துக் கொண்டிருக்கிற அந்த விவசாயிகளுடைய வாழ்க்கைக்கு எந்த உத்திரவாதமான திட்டமும் அறிக்கையில் தற்போது இல்லை.



1991 செப்டம்பர் 10] [திரு. வே. தம்புசாமி]

பிற்பகல் 1–15

நீண்டகாலமாக தமிழக விவசாயிகள் கேட்டுக் கொண்டி ருப்பது ஒரு ஆலைத் தொழிலுக்கு நஷ்டம் வருகிற போது ஏற்படுகிற நஷ்டத்தை ஈடு கட்டுவதற்கு மானியம் வழங்கப்படு கிறது. 80 சதவீத விவசாய மக்கள் நஷ்டமடைந்து கஷ்டப்படு கிறபோது, அவர்கள் உற்பத்தி செய்கிற அந்தப் பொருள்களுக்கு நஷ்டம் ஏற்படுகிறபோது, அதேபோல் மானியம் வழங்க வேண் டும் என்பது விவசாயிகளின் நீண்டநாள் கோரிக்கையாகும். அந்தக் கோரிக்கைக்கு உத்திரவாதம் தரக்கூடிய வகையிலே இந்த வரவு செலவுத் திட்டம் அமையவில்லை என்பதை நான் வருத்தத்துடன் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சிறு தொழில்களின் நிலைமை என்ன? விலைவாசி கட்டுப் படுத்தப்படும் என்று இதிலே சொல்லப்படவில்லை. எனக்கு முன்னாலே திரு. குமாரதாஸ் அவர்கள் கூட அது பற்றிப் பேசி னார்கள். 100 நாட்களிலே விலைவாசியைக் கட்டுப்படுத்து வோம் என்பது காங்கிரஸ் கட்சியினுடைய தேர்தல் அறிக்கை. அந்த அறிக்கையின்படி இன்றைக்கு ஆட்சிக்கு வந்த பிறகு கட்டுப்படுத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டு விட்டது என்று மத்திய அமைச்சரே கூறுகின்ற சூழ்நிலையைப் பார்க்கிறோம். அதே போல்தான் தமிழக நிதிநிலை அறிக்கை யிலேயும் கூறப்பட்டிருக்கிறது. விலைவாசி மேலும் ஏறும் அபாயம் இருக்கிறது என்பது ஒரு அபாயச் சங்கு ஊதக்கூடிய அளவில்தான் விலைவாசியைப் பொறுத்த வரையில் இருக்கிறது. விலைவாசியின் நிலைமை இப்படி இருக்கிறபோது விவசாயத் துறையிலே இருக்கிறவர்கள் எப்படி பிழைப்பார்கள்? உதாரணத் திற்கு சொன்னால் ஏறத்தாழ 2 ரூபாய் 60 காசுக்கு விற்ற விதை இன்றைய தினம் 5 ரூபாய் 60 காசுக்கு விற்கிறது. எந்த விவசாயி வாங்கி இதை சாகுபடி செய்ய முடியும்? அதே மாதிரி களைக் கொல்லி மருந்து. ஒரு லிட்டர் களைக் கொல்லி மருந்தின் விலை 95 ரூபாயாக இருந்தது இன்று விலை என்ன? 148 ரூபாய். எந்த விவசாயியால் அதைப் பயன்படுத்த முடியும்? அது மாதிரி உர உற்பத்தியினுடைய விலை எவ்வளவு இருந்தது? இன்று எவ்வளவு சதவீதம் உயர்த்தி அறிவிக்கப்பட்டிருக்கிறது? ஆனால் இந்த விலையேற்றம் சம்பந்தமாக, மானியமாக சிறு விவசாயிகளுக்கு ஒரு தொகை கொடுப்பதாக மத்திய அரசு அறிவித்திருந்தும், இன்றைக்கு அந்த மானியம் கொடுக்கப்பட்டிருக்கிறதா இல்லை. இன்றைக்கு வாங்க முடியாமல் விவசாயிகள் கஷ்டப்படுகிறார் கள். பழைய விலையிலேயே வழங்க வேண்டும் என்று எவ்வளவு ஆணையிட்டிருந்தாலும் நம்முடைய நாட்டிலே விற்பனையாளர் கள் என்ன செய்வார்கள் என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மை. அப்படிப்பட்ட சூழ்நிலையில் உர உற்பத்தியின் விலையைக் குறைத்து அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறதா, இல்லை. ஏறத்தாழ ஒரு மூட்டை உற்பத்தியினுடைய விலை ரூ. 265, ரூ. 270 என்று ஏறிவிட்டது. விவசாயிகள் வாங்க

[திரு. வே. தம்புசாமி] [1991 செப்டம்பர் 10

முடியவில்லை. அப்படிப்பட்ட விவசாயிகளின் குடும்பத்தை
வாழ வைக்கக் கூடிய, அந்த மக்களை பாதுகாப்பதற்கு எந்த
விதமான உத்திரவாதமும் இதிலே குறிப்பிடப்படவில்லை.

அவர்களுக்கு மானியம் வழங்குகிற உத்திரவாதம் இருக்
கிறதா, இல்லை. அல்லது அந்த விவசாயத்திற்கு பயன்படுத்தக்
கூடிய இடுபொருளை குறைந்த விலையில் தருகிற அந்த உத்திர-
வாதம் இருக்கிறதா, இல்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில்,
இன்றைக்கு 80 சதவீத மக்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்கு
எதிர் காலத்திலே என்ன வழி காட்டப் போகிறோம் என்பது
ஒரு பிரதான பிரச்சினையாகும். அடுத்து கடன் தள்ளுபடி.
கடந்த காலத்திலே வி. பி. சிங் ஆட்சி இருந்த காலத்திலே 10
ஆயிரம் வரை கடன் தள்ளுபடி செய்யப்பட்டது. அதை நிறை
வேற்றுவதிலே கூட குறைபாடு இருக்கலாம். எனக்கு அது குறித்து
பிரச்சினை கிடையாது. ஆனால் அந்த பத்தாயிரம் ரூபாய்
தள்ளுபடி என்ற அறிவிப்பையே பரிசீலிக்கப்படும் என்று கூறப்
படுகிறது. பரிசீலிக்கப்படும், ஆய்வு செய்யப்படும் என்பதில்
அதனுடைய வரையறுப்புக்கு ஆயுள் காலமே கிடையாது. எப்
போது வேண்டுமானாலும் பரிசீலிக்கலாம். எப்போது வேண்டு
மானாலும் ஆய்வு செய்யலாம். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை
இருக்கிறது. இதையெல்லாம் போக்க இந்த வரவு செலவு
நிதிநிலை அறிக்கையிலே ஒன்றும் இல்லை என்பதைப் பார்க்க
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1–20

அடுத்து நம்முடைய மரியாதைக்கும் மதிப்பிற்கும் உரிய
காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் ராஜிவ் காந்தி அவர்கள்
தமிழகத்திலே கொலை செய்யப்பட்டது ஒரு துரதிருஷ்டவச
மானது என்பது யாரும் ஏற்றுக் கொள்ளக் கூடியதே. அப்படிப்
பட்ட நிகழ்ச்சி நடைபெற்ற பிறகு தமிழகம் முழுவதும்
சில வன்முறை சம்பவங்கள் நடைபெற்றன. அந்த வன்
முறைச் சம்பவங்களிலே பாதிக்கப்பட்டவர்கள் எல்லாம் அன்
றைக்கு இருந்த ஆளுநர் ஆட்சியிலே மகஜர் கொடுத்தார்கள்.
அவர்களுக்கு எதிர் காலத்திலே ஒரு நிவாரணம் அளிக்கப்படும்
என்று ஆளுநர் அவர்களால் உறுதி அளிக்கப்பட்டது. ஆனால்
அது குறித்து எந்தவிதமான நஷ்டஈடும் வழங்குவதற்கான
திட்டங்கள் அறிவிக்கப்படவில்லை என்பதை இந்த நேரத்திலே
சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்திலே இந்த
நிதிநிலை அறிக்கையிலே மேலும் விலை உயரும் என்ற
ஒரு அபாய சூழ்நிலை என்பது இருக்கிறது. அதனால் அந்தப்
பற்றாக்குறையை எதிர் காலத்திலே என்னென்ன திட்டங்கள்
போட்டு என்னென்ன வழியிலே ஈடு கட்டப் போகிறோம் என்று
அதிலே குறிப்பிடவில்லை. உதாரணத்திற்கு சொன்னால்



1991 செப்டம்பர் 10] [திரு. வே. தம்புசாமி]

நமது போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இன்னமும்
அந்த பஸ் கட்டணம் உயரும் என்று அறிவித்து இருக்கிறார்கள்.
ஆனால் எதிர்காலத்திலே எவ்வளவு உயரும் என்பது தெரியாது.
அதே போன்று அரிசி விலை உயர்த்தப்பட்டு மக்களுடைய
பொதுவான ஒரு கருத்தை அறிந்து அது இன்றைய தினம் வாபஸ்
பெறப்பட்டு இருக்கிறது. எதிர் காலத்திலே அரிசி விலை உயருமா?
உயராதா என்பதற்கு உத்தரவாதம் இல்லை. இலவச மின்சாரம்
பற்றி எனக்கு முன்னாலே உறுப்பினர்கள் பேசினார்கள். இந்த
இலவச மின்சாரம் எதிர் காலத்திலே எப்படி உத்திரவாதப்
படுத்தப்படும் என்று சொன்னார்களா, இல்லை. அதுபோன்று
70 கோடி ரூபாய்க்கு இன்றைய தினம் வரி விதிக்கப்பட்டிருக்
கிறது. அதுபோல டீசல், சோப்பு, காகிதம் இதுபோன்ற பொருள்
ஏழையிலிருந்து வசதிபடைத்தவர்கள் வரை அன்றாடம்
பயன்படுத்தப்படும் பொருள்களாகும். டீசலை உபயோகிப்ப
வர்கள் லாரிக்காரர்கள் மட்டும் அல்ல. இன்றைய தினம் 40,000
அல்லது 50,000 மின் இணைப்புகள் கொடுக்கப்படாமல் இருக்
கின்றன. அதனால் சாகுபடி செய்யக்கூடிய விவசாயிகள் சாகு
படி செய்வதற்காக பயன்படுத்தக்கூடிய ஆயில் என்ஜினுக்கு
டீசல் போட்டுத்தான் ஓட்ட வேண்டியிருக்கிறது. அப்படி பார்க்
கும்போது இந்த டீசலினுடைய வரி உயர்வால் விவசாயிகள்
பாதிக்கப்படுகிறார்கள் என்று கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்
கிறேன்.

அதுபோன்று புதிய திட்டங்களையும் நீங்கள் அறிவிக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமாதிரி விவசாயத்
திற்கு இயற்கை பாதிப்பு ஏற்படுகின்றபொழுது அதற்கு நட்ட
ஈடு வழங்கப்பட வேண்டும். கடன் தள்ளுபடி செய்வதற்கான
உத்திரவாதம் ஏற்படுத்த வேண்டும். இவ்வளவு சிரமத்திற்
கிடையிலே விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய அந்த உற்
பத்திப் பொருள்களுக்குக் கட்டுப்படியான விலை அறிவிக்கப்பட
வேண்டும். தமிழ்நாட்டில் அந்தப் பொருட்களை உற்பத்தி
செய்யக்கூடியவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கப்பட வேண்டும்.
அதே நேரத்திலே தமிழகத்திலே, குறிப்பாக தஞ்சை மாவட்டத்
திலே அதிகமான நிலங்களில் சாகுபடி செய்யக்கூடியவர்கள்
குத்தகை விவசாயிகள். அந்தக் குத்தகை விவசாயிகளுடைய
குத்தகையைத் தள்ளுபடி செய்வதற்கு எந்தவிதமான உத்திர
வாதமும் அளிக்கப்படவில்லை. அப்படி குத்தகையைத் தள்ளு
படி செய்வதற்காக உத்திரவாதம் அளிக்கப்பட வேண்டும். அது
போன்று விவசாயத் தொழிலாளர்களுக்குக் கிடைக்கக்கூடிய
வேலைவாய்ப்புப்பற்றி கமிஷன் மூலம் விசாரிக்கப்பட
வேண்டும். ஏறத்தாழ 12 மாதங்களிலே அந்த விவசாயத்
தொழிலாளி 100 நாட்கள், 120 நாட்கள்தான் வேலை பார்க்
கிறான். மிச்சம் இருக்கக்கூடிய கிட்டத்தட்ட 8, 9 மாத
காலம் வேலையற்று இருக்கிறான். அந்த விவசாயத் தொழி

லாளர்களுக்கு ஒரு மாற்று வேலைத் திட்டத்தை உருவாக்க வேண்டும். அது பற்றி இதிலே சொல்லப்படவில்லை. அது போன்று விவசாயத் தொழிலாளர்களுக்கு எவ்வளவு கூலி இருக்க வேண்டும் என்று மத்திய அரசு பரிசீலித்து அறிக்கை மூலம் அறிவித்திருக்கிறது. மாநில அரசிலும் அது சம்பந்தமாக ஒரு பரிசீலனை செய்யப்பட்டு எதிர்காலத்திலே கூலி விகிதத்தை எந்த அளவிற்கு உத்தரவாதப்படுத்தப் போகிறோம் என்று சொல்லப்படவில்லை. உச்சவரம்புச் சட்டத்தைத் திருத்தி விரைவுபடுத்தி நிலமற்றவர்களுக்கு வழங்குவதன் மூலமாகத்தான் கிராமப்புற அடிப்படை பொருளாதார திட்டத்தை வளர்க்க முடியும். நிலமற்ற அவர்களை பாதுகாக்க முடியும்.

அது போன்று பினாமி நிலம். பினாமிநிலத்தைப் பற்றி முன்னாலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு காலத்திலே வருவாய்த்துறை அமைச்சர் அவர்களாலே முன்மொழியப்பட்டு ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டது. அந்தச் சட்டத்தின் மூலம் தமிழகத்திலே 20 இலட்சம் ஏக்கர் இருக்கிறது என்று அன்றைய தினம் அறிவிக்கப்பட்டது. அப்படி 20 இலட்சம் ஏக்கரை அந்த நிலமற்றவர்களுக்கு வழங்குவதன் மூலம் ஓரளவிற்கு கிராமப்புற பொருளாதாரத்தை உயர்த்த முடியும். அது போன்று கோவில், மடம், அறக்கட்டளை போன்றவற்றின் நிலங்களை எடுத்து நிலம் அற்றவர்களுக்கு, சாகுபடி செய்யக்கூடியவர்களுக்கு சொந்தமாக்குவோம் என்று கூறப்பட்டது. ஆனால், இந்த அறிக்கையிலே அது முழுவதுமாக சொல்லப்படவில்லை. உபரி நிலத்தின் மீது வசதி படைத்தவர்கள், அந்த நிலத்தை வைத்திருப்பவர்கள் கோர்ட்டிலே தடை வாங்கிவிடுகிறார்கள். அப்படி வாங்கப்பட்ட தடை என்பது 10 வருடம் 12 வருடங்களாக கிடப்பில் போடப்பட்டிருக்கிறது. ஆகவே, அதை விரைவாகத் தீர்த்து, எந்த நோக்கத்திற்காக அரசு அறிவித்து அந்த நிலத்தை கைப்பற்றியதோ அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தனியார் தொழில் உற்பத்தி இன்றைய தினம் வளர்ச்சி அடைவதற்கு மாறாக, ஆலைகள் மூடிக் கிடக்கின்றன. மூடிய ஆலைகளைத் திறப்பதன் மூலமே உற்பத்தியைப் பெருக்க முடியும். அதை நம்பி உழைத்துக்கொண்டிருக்கிற இலட்சோப இலட்சம் தொழிலாளர்களின் எதிர்கால வாழ்க்கைக்கு ஒரு குறைந்தபட்ச உத்திரவாதத்தையாவது தமிழக அரசு ஏற்படுத்த வேண்டும்.

பிற்பகல் 13-25 மணி

இன்றையதினம் சிறு தொழில்களை வளர்ப்போம் என்று கூறுகிறீர்கள். அதை நான் வரவேற்கிறேன். ஆனால், சிறு தொழில்களின் மூலம் உற்பத்தி செய்கின்ற அந்தப் பொருட்களை



விற்பதற்கு எந்தவிதமான உத்திரவாதமும் இல்லை. ஆகவே, சிறு தொழில்கள் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த சிறு தொழில்களுக்கு வழங்கப்படுகின்ற கடனைப் போல அது உற்பத்திச் செய்கிற மூலப்பொருட்களை விற்பதற்கான ஒரு உத்திரவாதத்திற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

அதுபோல் எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். எப்படி இருந்தாலும் கூட, எந்தவிதமாக இருந்தாலும் கூட இந்த கிராம நல ஊழியர்கள் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களை வேலையைவிட்டு இன்றைய தினம் நீக்கப்பட்டிருப்பது நியாயமில்லை, ரொம்ப சிரமத்திற்குரியது. அவர்கள் சிரமமான சூழ்நிலையில் வாழ்கிறார்கள். ஆகவே, அரசு மறு பரிசீலனை செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்கு மீண்டும் வேலை கொடுப்பதற்கு உண்டான ஒரு சூழ்நிலையை அரசு ஏற்படுத்த வேண்டும்.

அதேபோல் சத்துணவு அமைப்பாளர்களைப் பற்றிச் சொல்லுகிறபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு நிரந்தரம் இல்லை என்று சொன்னார்கள். சத்துணவு அமைப்பாளர்களின் பணி நிரந்தரம் செய்யப்படவில்லை என்று அவர்கள் கூறினார்கள். சத்துணவு அமைப்பாளர்கள் காலம் முழுவதும் வேலை செய்கிறார்கள். அந்த குழந்தைகளைப் பார்ப்பது முதல் உணவு சமைப்பது வரையில் வேலை செய்கிறார்கள். சாதாரணமாக கடைநிலை ஊழியர்களை அரசு ஊழியர்களாக அரசு அங்கீகரித்து இருக்கிறது. ஆகவே, இன்றைய தினம் அவர்களை விட்டுவிடாமல் அரசு ஊழியர்களாக அங்கீகரித்து அவர்கள் வாழ்க்கையை மேம்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். சாதாரணமாக 200 ரூபாய் சம்பளம், 150 ரூபாய் சம்பளம் என்று சொன்னால் அவர்கள் தவறு செய்வதாக அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டு, சஸ்பெண்டு செய்யப்பட்டு இதை எல்லாம் வைத்து அந்த 200 ரூபாயை திருப்பிக் கட்ட வேண்டியநிலையில் அவர்கள் இருக்கிறார்கள்.

எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதுபோல் ஏறக்குறைய ஒரு நாளைக்கு ஒரு மண் சுமக்கக்கூடிய ஒரு சாதாரண தொழிலாளிக்குக் கூட 15 ரூபாய் 20 ரூபாய் சம்பளம் கிடைக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. இப்படிப் பட்டவர்கள், படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள் அவர்கள் சத்துணவு அமைப்பாளர்களாக 200 ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டு இருக்கக்கூடிய சூநிலையில் இருக்கிறார்கள். எதிர்

[திரு. வே. தம்புசாமி] [1991 செப்டம்பர் 10

காலத்திலாவது இவைகளை எல்லாம் பரிசீலித்து அவர்களுடைய வாழ்க்கைக்கு உத்திரவாதம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் ஒப்பந்த ஆசிரியர்கள். இந்த ஒப்பந்த ஆசிரியர்கள் குறைந்தபட்ச சம்பளம் வாங்கிக்கொண்டு வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். ஏன் என்றால் எதிர்காலத்திலாவது தங்களுடைய வாழ்க்கைக்கு இந்த அரசு உத்திரவாதத்தை ஏற்படுத்தாதா என்று எண்ணி அந்தக் குறைந்த சம்பளத்தை வாங்கிக்கொண்டு எப்படிப்பட்ட சங்கடத்திலும், சிரமத்திலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் உயருகின்ற வகையில் அரசு அவர்களை அங்கீகரித்து அவர்களுக்கு அதிகச் சம்பளம் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் தமிழகம் முழுவதும் இன்றைய தினம் ஆசிரியர்கள் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. 5 வகுப்புகளை இரண்டு ஆசிரியர்கள் நடத்துகிறார்கள். அதில் ஒரு ஆசிரியர் லீவு போட்டுவிட்டால் மீதி உள்ள ஒருவரே 5 வகுப்புகளையும் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். இதே மாதிரி அரசு உயர்நிலைப் பள்ளிகளில் கூட இன்றைய தினம் 2 ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்கள்தான் அத்தனை வகுப்புக்களையும் சேர்த்து பார்த்துக் கொள்ளக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். இதனால் எதிர்காலத்தில் மாணவர்களின் படிப்பு வீணாகும். அவர்கள் தேர்வில் வெற்றி பெறுவது சிரமமாகும். இதனால் அரசுப் பள்ளிகளில் உள்ள மாணவர்கள் தகுதி இல்லாமல் தேர்வில் குறைந்து விட்டார்கள் என்று கல்வித் துறைக்கு தவறான பெயர் வந்துவிடும். இந்தக் கருத்து எதிர்காலத்தில் வராமல் பாதுகாக்க அரசு தேவையான ஆசிரியர்களை நியமிப்பதற்கு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் சிவில் சப்ளை கார்ப்பரேஷனில் உள்ள ஊழியர்களுக்கும் சம்பளம் உயர்த்த வேண்டும்.

அதேபோல் பி. அண்டு சி. மில்லைப் பற்றிச் சொன்னார்கள். பி. அண்டு சி. மில்லை மீண்டும் திறப்பதற்கு அரசு முடிவுக்கு வர வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு பொதுவாக இந்த நிதிநிலை அறிக்கையில் பல்வேறு பிரச்சினைகள், குறைபாடுகள் இதை எல்லாம் எடுத்துச் சொல்லுகிறபோது அரசு பரிசீலித்தால் எதிர்காலத்தில் சிறப்பாக நல்ல பெயர் வாங்க முடியும். ஆகவே, இந்தத் திட்டங்களை எல்லாம் சிறப்பாக செயல்படுத்த வேண்டும் என்றால் இந்தத் திட்டங்களைச் செயற்படுத்துவதில் கடந்த காலத்தில்



1991 செப்டம்பர் 10] [திரு. வே. தம்புசாமி]

என்னென்ன தேக்க நிலை இருந்தனவோ, பலகீனங்கள் இருந்தனவோ, இடையூறுகள் இருந்தனவோ அவற்றை எல்லாம் இந்த அரசு விரைவாக, வேகமாக, கண்டுபிடித்து அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு துரித நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப் போல சட்டம், ஒழுங்கு என்பது இன்றைய தினம் ஒரு பலகீனமான சூழ்நிலையில் இருக்கிறது. மக்களுக்கு பாதுகாப்பு இருக்குமா என்ற அச்ச சூழ்நிலை இருக்கிறது. எனவே தான் உதாரணமாக பத்திரிகைகள் பற்றி எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப் போல் தராசு பத்திரிகை, நக்கீரன், குமுதம் போன்ற பத்திரிகைகள் தாக்கப்பட்டிருக்கின்றன. இது சம்பந்தமாக ஒரு முழுமையான பாதுகாப்பு நடவடிக்கை எடுத்து எதிர்காலத்தில் பத்திரிகை சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டும். பத்திரிகையில் குறைபாடுகள் வரலாம்; விமர்சனங்கள் வரலாம்; அப்படி குறைபாடுகளும், விமர்சனங்களும் வருகின்றபோது அது சரியா, தவறா என்று அரசு பார்க்க வேண்டும். அதே நேரத்தில் பத்திரிகை தர்மத்திற்கு, பத்திரிகை மரபிற்கு, அதனுடைய சுதந்திரத்திற்கு மாறாக யார் நடந்தாலும் நடவடிக்கை எடுப்பதிலே மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியைப் பொறுத்த வரையில் கருத்து வித்தியாசம் கிடையாது. இந்த அடிப்படையில் அது பற்றி பார்க்க வேண்டுமென்று இன்றைய தினம் நான் கேட்டுக்கொள்கிறேன்.................(மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 1-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் முன் அனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. வே. தம்புசாமி : எதிர்காலத்திலே பொது மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் மாணவர்கள் போராட்டம் நடந்திருக்கிறது. முதலமைச்சர் அவர்களும் இது பற்றி கூறியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட மாணவர்கள் போராட்டத்தை விரைவாகத் தீர்ப்பதற்கு அரசு முயற்சிக்க வேண்டும். ஏனென்றால், எதிர்காலத்திலே மாணவர்களெல்

லாம் இளம் தலைவர்களாக, நாட்டின் சிந்தனையாளர்களாக வளரக்கூடியவர்கள். இந்த நாட்டை வளர்ப்பதற்கு சிற்பிகளாக இருக்கக்கூடியவர்கள்; ஆகவே, பொதுவாக மக்கள் மத்தியிலே பிரச்சினைகள் வருவது இயல்பு. இன்றைக்கு அன்றாடத் தேவைகள் அதிகரிக்கிறது. இந்தத் தேவைகள் பூர்த்தியாகாத போது மக்கள் ஒன்றுபட்டு தங்களுடைய கோரிக்கையை வலியுறுத்துகிறார்கள். அப்படி கோரிக்கையை வலியுறுத்துகிறபோது அந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு நம்மாலே என்ன செய்ய முடியும் என்று பரிசீலித்து நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ஆனால், இப்படி கோரிக்கைகளை இயக்கங்கள் வைக்கிறபோது போராட்டங்களை நடத்துகிறபோது, எந்த வன்முறை சம்பவத்தையும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி விரும்பாது; விரும்பவில்லை. ஆகவே, மக்களுடைய கோரிக்கைகளை விரைவாக ஏற்பதற்கான சூழ்நிலையை உருவாக்கி, எதிர்காலத்திலே அத்தகைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசு முன் வரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு, இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்த வரையிலே, நிதியமைச்சர் அவர்கள் அதிக சிரமத்திற்கு இடையிலே தயாரித்து இருக்கிறார்கள். அவர்களை நான் பாராட்டுகிறேன். பொதுவாக இருக்கக்கூடிய இந்தக் குறைபாடுகளையெல்லாம், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் இருக்கக் கூடிய அரசு ஊழியர்கள், காவல் துறையில் இருக்கக்கூடிய குறைபாடுகள் போன்றவற்றையெல்லாம் எதிர்காலத்திலே பரிசீலித்துத் தீர்ப்பதற்கு, ஒரு நம்பிக்கைக்குரிய அரசாக செயல்படுவதற்கு முயற்சிக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு, இந்த நிதிநிலை அறிக்கையின் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலே என்னுடைய கருத்தைச் சொல்வதற்கு அனுமதித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் எனது நெஞ்சார்ந்த நன்றியைக் கூறி அமருகிறேன், நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பண்ருட்டி இராமச்சந்திரன்.

*திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை வழிநடத்தி மறைந்த தலைவர்களுக்கு எனது இதய அஞ்சலி ; வாக்களித்த பெருமக்களுக்கு என் இதயமார்ந்த நன்றி.

" எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு "

என்றார் வள்ளுவர்.



அதைப்போல, எனக்குத் தெரிந்த சிலவற்றை எளிமையாக நான் எடுத்து வைக்க இருக்கிறேன். நுண்ணிய பொருளையெல்லாம் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் எங்களுக்கு எடுத்துச் சொல்லி அறிவைக் கொளுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கீடு பிரச்சினை பற்றி ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. தமிழ்நாட்டு மக்களிடையே இருக்கின்ற வகுப்புகளில், பிற்படுத்தப்பட்ட வகுப்புகள் என்றும், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்புகள் என்றும், தாழ்த்தப்பட்ட வகுப்புகள் என்றும், பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்புக்கு வரவேண்டுமென்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சிலர், நரிக்குறவர் போன்றோர் தாழ்த்தப்பட்ட பிரிவில் சேர்க்கப்பட வேண்டுமென்றும் பல்வேறு வகையான சிக்கல்கள் நம்முடைய சமுதாயத்தில் இருக்கின்றன. இந்தச் சிக்கலைத் தீர்க்கவேண்டிய அவசியம் நமக்கு இருக்கிறது. மறைந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் மறைவதற்கு முன்னால் தன்னுடைய நேரத்தையும் நினைப்பையும் பெரிதும் செலவழித்து பல்வேறு சங்கங்களின் கோரிக்கைகளையெல்லாம் கேட்டு அறிக்கைகளைப் பெற்றார். அந்த அறிக்கைகள் என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. அவர் மறைந்த பிறகு ஏற்பட்ட ஆளுநர் ஆட்சியில் இவற்றை மாற்றியமைக்க வேண்டுமென்கிற நல்ல எண்ணத்தோடு ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியைக் கொண்டு, ஒருவர் கமிஷனாக நியமித்தார்கள். ஆனால் என்ன காரணத்தாலோ முந்தைய ஆட்சி அந்த ஒரு நபர் குழுவை நீக்கிவிட்டது. நான் இந்த அரசாங்கத்தை தங்கள் மூலமாக பணிவன்போடு கேட்டுக்கொள்வது, தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய இந்தப் பிரச்சினையை நன்கு ஆராய்ந்து பிற்பட்ட தன்மையின் அளவைப் பார்த்து Degree of Backwardness பிற்பட்ட வகுப்பு, மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பு என்றெல்லாம் இல்லாமல், 6 தொகுதிகளாகப் பிரித்து அவர்கள் அனைவருக்கும் சமநீதி வழங்க வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1-35

தேவைப்பட்டால் எந்தெந்தப் பிரிவு மக்கள் என்னென்ன நிலையிலே இருக்கின்றார்கள் என்ற ஒரு மக்கள் கணிப்புத் தொகையைக்கூட எடுப்பது தவறாகாது. சாதிக் கணக்கு எடுக்கிறதா என்று தயவுசெய்து அசூயைப்பட வேண்டாம். சேற்றிலே மோதிரம் விழுமானால் அதை எடுப்பதற்குச் சேற்றிலே இறங்கித்தான் ஆகவேண்டும். உடம்பிலே கட்டி தோன்றுமானால் சீழ் ஒழுகுகிறதே என்று விட்டுவிட்டுப் போனால் பயன்படாது, அதைத் தொட்டு அறுவைச் சிகிச்சை செய்துதான் ஆக வேண்டும்.

[திரு. ச. இராமச்சந்திரன்] [1991 செப்டம்பர் 10

ஆகையினாலே, தேவைப்பட்டால் அந்த முறையை மேற்கொண்டு, ஆறு தொகுதிகளாகப் பிரித்து, அனைத்துத் தரப்பினருக்கும் சமநீதி வழங்கினால், நாட்டிலே வகுப்புகளுக்கிடையே ஒரு அமைதி ஏற்படும். பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் டாக்டர் இராமதாஸ் அவர்களைப் பொறுத்தவரையிலே அரசு விரும்புமேயாயின், அதற்குரிய ஆலோசனைகளை, அவருக்குத் தெரிந்தவைகளை வழங்குவதற்குத் தயாராக உள்ளார் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எவ்வாறு காவிரி பிரச்சினையில் ஒன்றுபட்டு, தமிழ்நாடு தன்னுடைய குரலை எதிரொலிக்கிறதோ அதேபோல மத்திய அரசுப் பணிகளிலேயும் காலங்காலமாகப் புறக்கணிக்கப்பட்ட மக்களுக்கு வாய்ப்பு தர வேண்டுமென்பதற்காக மண்டல் குழு பரிந்துரை அமலாக்கம் செய்யப்பட்டது. ஆனால் அது இன்று காலதாமதமாகிறது. இந்த ஒடுக்கப்பட்ட மக்களுக்கெல்லாம் நீதி வழங்க வேண்டும் என்ற உயர்ந்த கொள்கைக்குத் தாயகமாக இருப்பது தமிழ்நாடு. ஆகையினாலே, தமிழ்நாட்டைச் சேர்ந்த அனைத்துத் தரப்பினரும் எவ்வாறு காவிரி பிரச்சினையில் ஒன்றுபட்டு நாம் குரலெழுப்புகிறோமோ அதேபோல, மண்டல் குழு பரிந்துரையை மத்திய அரசு அமல் செய்வதற்கும் இந்த அரசு எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். அதற்கு முழு ஒத்துழைப்பை அனைத்துத் தரப்பாரும் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இந்த கி.பி. இருபதாம் நூற்றாண்டு முடிந்து இருபத்தோராம் நூற்றாண்டு வருவதற்குள் எல்லோரும் படித்தவர்களாக வேண்டுமென்று உலகமே கேட்கிறது. ஆனால், இன்னும் நம்முடைய நாட்டில் எத்தனையோ பிள்ளைகள் பள்ளிக்கு வராமல் வெளியிலே சுற்றித் திரிகின்றார்கள். அவர்களையெல்லாம் குறைந்தது 14 வயது வரையிலே அல்லது 15 வயது வரையிலே உள்ள அத்தனை பேருக்கும் கட்டாய கல்வியைப் பெற்றுத் தருவதற்கு இந்த அரசாங்கம் சட்டம் இயற்றவேண்டும். அதற்குரிய நடவடிக்கை எடுத்தாலொழிய நாம் எதிர்காலத்தில் ஒரு நல்ல சமுதாயத்தைத் தமிழ்நாட்டிலே உருவாக்க முடியாது என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே இந்த நிதிநிலை அறிக்கையிலே வேலைவாய்ப்பைப் பற்றி ஏதேனும் சிறப்புத் திட்டங்கள் இருக்குமா என்று எண்ணி எங்களைப் போன்றோர்கள் பார்த்தோம். மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் அவருக்கேயுரிய அனுபவத்தை வைத்து, எப்படியெல்லாம் சந்து பொந்துகளை வைத்து இந்தத் திட்டத்தைத் தயாரிக்க முடியுமோ அவ்வளவு திறமையாகத் தயாரி[illegible]றார்கள் என்று கருதுகிறேன்.



1991 செப்டம்பர் 10] [திரு. ச. இராமச்சந்திரன்]

வேலைவாய்ப்புத் திட்டம் என்று பார்க்கிறபொழுது, ஆளுங்கட்சியினுடைய தேர்தல் அறிக்கையிலே, படித்து வேலையற்றோர் மடியிலே கட்டப்பட்டிருக்கின்ற வெடிகுண்டுக்குச் சமம் என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். அது முழுக்க முழுக்க உண்மை. அப்படியானால், அந்த வெடிகுண்டு வெடிக்காமல் இருப்பதற்கு என்ன திட்டங்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே வகுக்கப்பட்டிருக்கின்றன என்ற கேள்வி எழுகிறது.

பள்ளிசாராக் கல்வித் திட்டத்தில் ஒன்றரை இலட்சம் பேர் படித்து வேலையற்றோர் வாய்ப்பு பெறுகிறார்கள் என்கிறார்கள். உண்மையிலேயே அது என்ன தெரியுமா ? புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் வேலைவாய்ப்பு இல்லாமல் பல ஆண்டுகளாக இருந்தவர்களுக்கு நிவாரணத் திட்டம் ஒன்று இருக்கிறது. அந்த நிவாரணத்தைப் பெறுகின்றவர்கள் ஆண்டுதோறும் பத்து குழந்தைகளுக்குப் படிப்பு சொல்லிக் கொடுக்க வேண்டுமென்று அந்தத் திட்டம் திருத்தியமைக்கப்பட்டிருக்கிறதே தவிர, அதன் மூலம் எவ்வாறு புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும் என்று இந்த அரசாங்கத்தைக் கேட்க விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, அடுத்தபடியாக சுமார் ஏழு இலட்சம் பேர் நூறு நாட்கள் வேலை பெறுவார்கள் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது இந்திய அரசு கொண்டு வந்திருக்கிற திட்டம். அதோடுமட்டுமல்ல, இந்தத் திட்டத்தில் கடந்த ஆண்டு 166 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, அது படித்த பட்டதாரிகளுக்கு மட்டுமல்ல, சாதாரணமான அத்தனை பேர்களுக்கும் அது செலவழிக்கப்பட்டு வேலைவாய்ப்பு தரப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையிலே என்ன நடந்து இருக்கிறது என்றால், அந்த 166 கோடி ரூபாயில் 110 கோடி ரூபாய் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்திற்கும் 61 கோடி ரூபாய் தன்னிறைவுத் திட்டத்திற்கும் என்று அதைப் பிரித்திருக்கின்றீர்கள். கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைத்திருக்கிறீர்கள். அதுவும் ஒரு பெரிய தேங்காயாக எடுத்திருக்கிறீர்களா என்றால் இல்லை ; மிகவும் சிறிய தேங்காயாக எடுத்திருக்கிறீர்கள், சென்ற ஆண்டாவது 166 கோடி ரூபாய் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் பலன் கிடைத்தது.

பிற்பகல் 1-40

ஆனால், இப்போது 110 கோடி ரூபாய்தான் செலவு செய்யப் போகிறீர்கள். கேட்டால் சொல்வீர்கள், தன்னிறைவுத் திட்டத்திலேயும் 60 கோடி ரூபாயிலே சாலை போட்டால், வேலை கிடைக்குமே என்று. ஆனால், படித்து வேலையற்றோருக்கு அது பயன்படுமா என்பதை இந்த அரசாங்கம் சிந்திக்க வேண்டும். அதோடு மட்டுமல்ல; [illegible]

அதைப்போல, தாழ்த்தப்பட்டோர் நலத் திட்டங்களை எடுத்துக்கொண்டாலும்கூட, ஆண்டுதோறும் தாழ்த்தப்பட்டோருக்கென இந்திய அரசு ஒரு தனித் திட்டம் 'சப்-பிளான்'—அதாவது துணைத் திட்டம் போட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக 65 ஆயிரம் பேருக்கு இந்த ஆண்டு வேலை கிடைக்குமென்ற விவரம் தரப்பட்டிருக்கிறதே தவிர, அதிலேகூட கடந்த ஆண்டு 20 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது ; ஆனால், இந்த ஆண்டு 17.9 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல. ஒருங்கிணைப்பு மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் ஒரு இலட்சம் பேருக்கு வேலை கிடைக்குமென்ற ஒரு தகவல் தரப்பட்டிருக்கிறது. என்னவென்று பார்த்தால், பல துறைகளிலே இருக்கிற தாய்மார்களுக்கு என்று இருக்கிற திட்டங்களை எல்லாம் ஒன்று சேர்த்து, இவற்றை ஒருங்கிணைப்புத் திட்டம் என்று சொல்லி, அதன் மூலம் ஒரு லட்சம் பேர் என்று சொல்கிறபோது, அது ஏற்கெனவே தொடர்ந்து வருகிற திட்டத்தின் தொடர்ச்சியே தவிர, அதன் மூலம் புதிய வேலைவாய்ப்பு எவ்வாறு உண்டாகும் என்பதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும்.

அதோடு மட்டுமல்ல ; ஒரு இலட்சம் பேர் ஊரகத் தொழில்கள் துறைத் திட்டத்தின் மூலம் பயன் பெறுவார்கள்; அதாவது 'Rural Industries Sub-Plan' அதிலே நான் பார்க்கிறபோது, அதிலே கடன் வாங்கி, அதாவது 'Credit Plan' என்று ஒன்று போட்டிருக்கிறார்கள். வங்கிகளிலே, நிதி நிறுவனங்களிலே கடன் வாங்கி, அதன் மூலம் ஒரு இலட்சம் பேருக்கு வேலை தரப்படுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் 'Credit Plan'-ஐப் பற்றி இதிலே தெளிவாக—நிதிநிலை அறிக்கையிலே தரப்படவில்லை. அதோடு மட்டுமல்ல ; இன்றைக்கு இந்திய அரசின் நிலைமை—இன்றைக்குக்கூட பத்திரிகை பார்த்தவர்களுக்குத் தெரியும். இந்திய ரிசர்வ் வங்கி (Reserve Bank of India) என்ன செய்கிறது என்று சொன்னால், 'Credit squeeze' கடன் முடக்கத்தைக் கொண்டு வருகிறார்கள். விலைவாசி ஏறுகிறதே என்ற காரணத்திற்காக வாங்குகிற கடன்கள் குறைக்கப்பட வேண்டும்; மக்களிடத்திலே வழங்கப்படுகிற பண அளவு குறைக்கப்பட வேண்டுமென்று விரும்புகிற நேரத்தில் 621 கோடி ரூபாயில் ஒரு கடன் திட்டம் கொண்டு வருவோம் என்று சொல்வது எதைக் குறிக்கிறது ? இதையெல்லாம் பார்க்கிறபோது, வேலைவாய்ப்பைப் பெருக்குவதற்கு—அதுவும் சுமார் 32½ இலட்சம் பேர் நம்முடைய வேலைவாய்ப்பு அலுவலகங்களில் இருக்கிறார்கள் ; படித்து வேலையற்றோர். இன்னும் பதிவு செய்யாதவர்கள் பலபேர் இருக்கிறார்கள். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, நம்மைத் தேடி வருகிற ஒரு இளைஞன், தான் பி.ஏ., படித்ததாகவும், தந்தையை இழந்துவிட்டதாகவும், தனது தாயாரும், அதோடு திருமணம் ஆகாத இரண்டு தமக்கைகளும் இருக்கிறார்கள் ; எங்கேயாவது ஒரு வேலை வாங்கிக் கொடுங்கள் என்று கேட்கிறபோது, நம்மால் பதில் சொல்ல முடிகிறதா என்பதைத் தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகையினால், படித்த வேலையற்றோர் பல இலட்சம் பேர் இருக்கிறார்கள். அந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பதற்கான சிறப்பான திட்டம் எதுவும், உருப்படியான திட்டம் எதுவும் நிச்சயமாக இதிலே காணப்படவில்லை. ஏதேனும் இருக்குமானால், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நாளை தெரிவிக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்தபடியாக வறுமை ஒழிப்பு. வறுமை ஒழிப்பு என்று சொல்கிறபோது, மீனவர்களுக்கு இரண்டாயிரம் வீடுகள் ; கைத்தறி நெசவாளர்களுக்கு இரண்டாயிரம் வீடுகள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அதிலேகூட இரண்டாயிரம் வீடுகள் என்றுதான் போடுகிறார். ஒரு ஆயிரம் அல்லது ஐயாயிரம் அல்லது பத்தாயிரம் என்று அல்ல ; இரண்டாயிரம் என்று. அதற்குப் பிறகு, தாழ்த்தப்பட்டோருக்கு இந்திய அரசினுடைய சிறப்புத் திட்டத்தின் கீழ் 50 ஆயிரம் வீடுகள். வீடுகள், வீட்டு மனைகள் என்ற வசதிகள் தரப்பட்டிருக்கிறதே தவிர, அவர்களுடைய வாழ்க்கைச் சுமை குறைக்கப்படுவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ? இதையெல்லாம் நாம் எண்ணிப் பார்க்கிறபோது, ஓரிரு உதாரணங்களைச் சொல்ல விரும்புகிறேன். மறைந்த புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் ஆட்சியில் சத்துணவுத் திட்டம் என்று கொண்டுவரப்பட்டிருக்கிறது என்றால், உழைத்தால்தான் பிழைக்கலாம் என்ற நிலையிலே இருக்கிறவர்களுக்கு, உழைப்பதற்கு வாய்ப்பு இல்லையென்றாலும், அவர்கள் வீட்டுப் பிள்ளைக்கு ஒரு வேளை உணவுக்கு ஒரு உத்தரவாதம் வேண்டும் என்கிற அடிப்படையிலே, அவர்களின் வாழ்க்கைச் சுமையைக் குறைப்பதற்காகத்தான் அந்தத் திட்டம். இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்களும் மற்றவர்களும் கூட சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், அதிலே பணியாற்றுகிறவர்களுடைய கண்ணோட்டத்திலே, இரண்டு நாளைக்கு விடுமுறை வேண்டுமென்று சொன்னார்கள் இரண்டு நாளைக்கு வயிற்றுக்கு விடுமுறை விட முடியுமா என்பதை நீங்கள் தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும். அதே போல், ஓலைக் குடிசைக்கு ஒரு விளக்கு திட்டம் என்று நேராகக் கொண்டுவந்தார் என்றால் ; மண்ணெண்ணெய்க்கு ஆகும் செலவு குறைக்கப்படுகிறது ; மலிவு விலையிலே அரிசி வழங்கப்

-டுகிறது என்று சொன்னால், அரிசிக்கு கூடுதலாக ஆகிற செலவை அவர்களுடைய வாழ்க்கைச் செலவைக் குறைக்கிறது. சிறு விவசாயிகளுக்கு இலவச பம்புசெட்டுகள் என்றால், அதற்கான மின்சாரக் கட்டணத்திற்கு ஆகிற செலவு குறைக்கப்படுகிறது.

ஆகவே, பொருளாதார வேகத்தினுடைய தாக்கல் ஏழை மக்களுடைய வாழ்க்கைச் சுமையைப் பாதிக்கின்ற போது, அவர்களுக்கு கைகொடுத்து உதவக்கூடிய வகையிலே நேரடியாக அவர்கள் இதயத்தைத் தொடக்கூடிய திட்டம்—ஏதேனும் ஏழைகளுக்கென்று நேராக தொடக்கூடிய திட்டம் ஏதேனும் இந்த வரவு-செலவு திட்டத்தில் இருக்கிறதா என்று தேடித் தேடிப் பார்த்தேன். என் கண்ணுக்குக் கிடைக்கவில்லை. ஒரு வேளை அரசு நாளைக்கு அறிவித்தால் நாங்களெல்லாம் மகிழ்ச்சி அடைவோம்.

பிற்பகல் 1-45

விலை வாசி உயர்வைப் பற்றி நாம் கட்டாயம் சிந்தித்துத்தான் ஆக வேண்டும். விலை வாசி என்று சொல்கிற போது ஏதோ அது ஒரு கட்சிக்கும் இன்னொரு கட்சிக்கும் இருக்கிற பிரச்சினை அல்ல. இன்னும் சொல்லப் போனால் விலைவாசி உயர்வு என்பது, மிகப் பெரிய பொருளாதாரப் பிரச்சினை. அந்த விலைவாசி உயர்வு இன்றைக்கு இந்திய அரசு எதிர்பார்த்ததை விட வேகமாக உயர்ந்து வருகிறது. அதை மூடி மறைத்துப் பயனில்லை. அண்மையிலே இந்திய அரசு எவ்வளவோ நடவடிக்கைகளை எடுத்தும் கூட விலைவாசி உயர்வு மிகவும் வேகமாக நம்மை தாக்கி வருகிறது என்பதை நான் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். இந்திய அரசு மானியங்களைக் குறைத்துள்ளது. ரூபாயின் மதிப்பைக் குறைத்துள்ளது. இறக்குமதி இதனால் குறைகிறது. எக்சைஸ் வரி உயர்ந்துள்ளது. வட்டி மீது வரி விதிக்கப்பட்டுள்ளது. டேர்ம் லோன் மீது அதிக வட்டி. இறக்குமதி வரி குறைக்கப்படவில்லை. மறைமுக வரிகள் உயர்வு. நிலக்கரி, இரயில் கட்டணம், கொள்முதல் விலை என்று அரசே உயர்த்தியுள்ளது. பற்றாக்குறை வரவு செலவுத் திட்டம், பெட்ரோல் விலை உயர்வு என்று எத்தனையோ காரியங்களைச் செய்து இன்றைக்கு விலை வாசியை அவர்கள் உயர்த்தியிருக்கிறார்கள். பெரிய பொருளாதார மேதைகள் எல்லாம் கூட சொல்கிறார்கள். —இன்னும் மூன்று ஆண்டுகளுக்கு இந்த விலைவாசி உயரும். அனேகமாக அடுத்த மார்ச் மாதத்தில் மேலும் ரூபாயின் மதிப்பு குறையலாம் என்றெல்லாம் எழுதுகிறார்கள். விலைவாசி, எப்படி ஒருவனுக்கு ஜுரம் ஏறிக்கொண்டே போகிறதோ, அதே போல் இன்றைக்கு ஏறிக்கொண்டே போகிறது. அது போதாது என்று மாநில அரசும் தன்னுடைய பங்கிற்கு, 'அடிமேல் அடி-



-த்தால், என்று சொல்வார்களே, அதுபோல மாநில அரசு மின் கட்டணத்தை உயர்த்தியுள்ளது ; பஸ் கட்டணத்தை உயர்த்தியுள்ளது. உணவுப் பொருட்களின் விலையை என்ன செய்யப் போகிறார்கள் என்று தெரியவில்லை. போக்குவரத்துக் கட்டணம், அதாவது, டாக்சி, ஆட்டோ, இவை போன்ற கட்டணங்களும் டீசல், சோப்பு, மருந்து, காகிதம், முட்டை, இரப்பர், போன்றவை மீது வரிகளும் உயர்த்தப்பட்டுள்ளன, எல்லா நகரங்களிலேயும் நகர்ப்புற வரி, வாகன வரி உயர்வு, கிராம, நகரப் பகுதிகளில் உபரி வரி, தொழில் வரி, நுழைவு வரி, இவ்வாறு சுமார் 140 கோடி ரூபாய்க்கு வரி போடப்பட்டிருக்கிறது. ஆண்டு தோறும் விலைவாசி உயர்கிறது. விலைவாசி உயர்வினால் யார் பாதிக்கப்படுகிறார்கள்? நிரந்தர வருமானம் உள்ளவர்கள் மட்டுமல்ல, குறிப்பாக அடித்தளத்திலிருக்கும் ஏழை மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு போதிய வருமானம் வருவது இல்லை. விலைவாசி ஏறுகிற போது, மூன்று வேளை சாப்பிடுகிறவன், இரண்டு வேளைக்கு வருவான். இரண்டு வேளை சாப்பிடுகிறவன் 1 வேளைக்கு வர வேண்டும். ஒரு வேளை சாப்பிடுகிறவன் ½ வயிற்றுக் கஞ்சிக்கு வரவேண்டும். ஆகவே, ஏழைகள், மேலும் ஏழைகளாவதற்கு இந்த விலைவாசி உயர்வு மிகப் பெரிய விபரீத விளைவுகளை உருவாக்குகிறது. இதை இந்த அரசு உணர்ந்திருக்கிறதா என்று எனக்கு நிச்சயமாக இந்த வரி உயர்வைப் பார்க்கிறபோது தெரியவில்லை. அதிலே கூட 70 கோடி ரூபாய் என்று எல்லாப் பத்திரிகைகளும் போட்டன, அதற்குப் பிறகுதான் தெரிந்தது ஆண்டுக்கு ரூபாய் 140 கோடி என்று. ஆனால், அரை ஆண்டிற்கு 70 கோடி ரூபாய்என்ற விளக்கத்தை அரசு தரப்பிலே இருந்து தந்தார்கள். இது போதாது என்று பற்றாக்குறை வேறு இருக்கிறது. இதைச் சட்டமன்றத்திலே உள்ள அத்தனை உறுப்பினர்களும் கூட இங்கே பேசுகிற போது எடுத்துச் சொன்னார்கள். பற்றாக்குறையை மறைத்துப்பயனில்லை பட்ஜெட்டிலே துல்லியமாக அது போடப்பட வேண்டியது. 'அக்யுரேட் எஸ்டிமேட்' என்று தான் பட்ஜெட்டைப் பற்றிய விளக்கத்தில் நமக்கு குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படி துல்லியமாகப் போட்டால்தான், நாம் எங்கே இருக்கிறோம் என்பது நமக்குத் தெரியும். அப்படி துல்லியமாகப் போடாவிட்டால் ஆண்டு முழுவதும் வரவு-செலவுத் திட்டத்தை நிர்வகிப்பது மிகமிகக் கடினம். மாநில அரசின் பற்றாக்குறை 795 கோடி ரூபாய், மின் வாரியம் 330 கோடி ரூபாய்; கடன் நிவாரணம் இதிலே இந்திய அரசுக்குத் திருப்பிச் செலுத்த வேண்டியது 37.22 கோடி ரூபாய். அதைத் திருப்பி செலுத்த மாட்டோம் என்று நம்முடைய அரசு மைய சர்க்காருக்கு எழுதியிருக்கிறது. ஆகவே, மத்திய சர்க்காரைப் பொறுத்தவரையிலே திருப்பிச் செலுத்துகிறவரை காத்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை. அவர்கள் தருகிற மானியத்திலே கழித்துக் கொண்டுதான் மீதியைக் கொடுப்பார்கள். அது மாண்புமிகு நிதி அமைச்சர்

[திரு. ச. இராமச்சந்திரன்] [1991 செப்டம்பர் 10

அவர்களுக்குத் தெரியாதது அல்ல. விற்பனை வரி மூலம்
52 கோடி ரூபாய் கூடுதலாக வரும் என்று அவர்களாகவே
கணக்கிட்டிருக்கிறார்கள். ஆகவே, உண்மையான பற்றாக்குறை
விற்பனை வரி ஒரு வேளை கூடுதலாக வரவில்லையென்றால்
மத்திய அரசாங்கம் தரவேண்டிய கடன் நிவாரணத்தில் நாம்
தரமாட்டோம் என்பதை ஏற்றுக் கொள்ளாவிட்டால் உண்மையி
லேயே 1204 கோடி ரூபாய் பற்றாக்குறை வரும். 1204 கோடி
57 இலட்சம் ரூபாய். இந்த ஆண்டுக்குத் திட்டமே 1,600 கோடி
ரூபாய்தான். ஆகவே பணம் வந்தால்தான் அந்த '1,600 கோடி
ரூபாய்த் திட்டத்தை நிறைவேற்ற முடியும். இந்தப் பணத்தை
ஈடுகட்டினால்தான் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியும்.
இந்தப் பணம் இல்லையென்றால் அந்தத் திட்டத்தை என்ன
செய்யப் போகிறார்கள்? ஆகவே பஸ் கட்டணத்தை உயர்த்தி
யாகவேண்டும். விவசாயிகளுக்கு மின்சாரக் கட்டணத்தை
உயர்த்தியாகவேண்டும். ஏழைகளுக்கு, நடுத்தர மக்களுக்காக
மலிவு விலையில் அரிசி வழங்குவதை மாற்றியாக வேண்டும்.
இதற்காக மத்திய சர்க்காரிடத்திலே போய் இதற்குரிய
பணத்தைப் பெற்றுத் தர முடியும் என்ற உறுதியாவது
இருக்கிறதா என்றால்— அந்த உறுதி இருந்தால் இந்தப் பற்றாக்
குறையே ஏற்பட்டிருக்காது. இந்தப் பற்றாக்குறையை ஈடு
கட்டாவிட்டால்......(குறுக்கீடு)

பிற்பகல் 1.50

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் திரு. கு.
லாரன்ஸ். என்ன சொல்லப் போகிறீர்கள்? சொல்லுங்கள்.

திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, பண்ருட்டியார் அவர்கள் 1985–86 லே மின்துறை
அமைச்சராக இருந்தபோது மின்துறையினுடைய பட்ஜெட்டிலே
200 கோடி ரூபாய் பற்றாக்குறை ஏற்பட்டது. இப்படி ஒரு
துறையினுடைய அமைச்சராக இருக்கும்போது 200 கோடி ரூபாய்
பற்றாக்குறை அவரே வைத்திருந்தார். அது பற்றி விளக்கம்
என்ன சொல்கிறார் என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, எல்லாம் நிதியமைச்சர் நாளைக்கு விளக்குவார்.
நான் எழுப்ப வேண்டிய பிரச்சினையை எழுப்புகிறேன். ஆக
இந்த வரவு-செலவுத் திட்டத்தைப் பார்க்கிறபோது எங்களுக்குத்
தோன்றுவது எல்லாம் விருந்துக்கு வாருங்கள் என்று இந்த அரசு
அழைக்கிறது. ஆனால் வருகிறபோது கிடைப்பது சாப்பாடு
அல்ல. தரப்படுவது வெறும் டீ தான். அந்த டீயிலே கூட
சர்க்கரை இருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை. ஆனால்



1991 செப்டம்பர் 10] [திரு. ச. இராமச்சந்திரன்]

சர்க்கரை இல்லாவிட்டாலும் கூட சில பேருக்கு இனிக்கிறது.
அவர்களுக்கு அவ்வாறு இனிப்பதற்கு என்ன காரணம் என்று
ஊருக்குத் தெரியும்; உலகுக்குத் தெரியும்; ஆனால் எங்களைப்
போன்ற ஆரோக்கியமான எதிர்க்கட்சியாளர்களுக்கு அதைக்
குடிக்கிறபோது கொஞ்சம் முகம் சுளிக்கிறதே என்று இங்கே
இருக்கிற உறுப்பினர்கள் யாரும் வருத்தப்படக் கூடாது. ஆனால்
இதை நான் சொல்கிறபோது விருந்தை ஏன் உங்களால் சமைத்துத்
தர முடியவில்லை என்றால் மாநில அரசு வெறும் மருமருகள்
அரசு தான். சாவி யார் கையிலே இருக்கிறது என்
றால் மத்திய அரசு கையிலே இருக்கிறது. மாமியார்
எடுத்துக் கொடுத்தால்தான் மருமருகள் விருந்து படைக்கலாம்.
தான் மத்திய அரசு என்று சொல்கிறபோது காங்கிரஸ் அரசு,
ஜனதா தள அரசு என்று சொல்லவில்லை. மாநில அரசு என்று
சொல்கிறபோது ஒரு குறிப்பிட்ட கட்சி அரசு எனறு சொல்ல
வில்லை. கடந்த 25 ஆண்டுகாலமாக மத்திய அரசும், மாநில
அரசும் இயங்குவதைப் பார்த்த அனுபவத்தில் தான் நான்
தெரிவிக்க விரும்புகிறேன்.

நிதி அதிகாரங்கள், நிதி வாயில்கள் அனைத்தும் இந்திய
அரசினிடத்தில் இருக்கிறது. இந்திய அரசினிடத்தில் இருந்து
நிதி கிடைக்காதபோது வேறு வழியில்லை. மோட்டார் வாகனங்
கள், மின் கட்டணம், விற்பனை வரி என்று இப்படி வரிகளை
உயர்த்துவதைத் தவிர மருமகளுக்கு வேறு வழியில்லை. ஆனால்
அதிகாரம் முழுவதும் எங்கே இருக்கிறது என்றால் இந்திய அரசி
னிடத்தில் இருக்கிறது.

பாரதியார் பாடினார்; தமிழ்த் திருநாடு தன்னை பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா; என்று. அப்படிப்பட்ட தமிழ்த்
திருநாட்டின் வறுமையைப் போக்க, வேலையில்லாத் திண்டாட்
டத்தைப்போக்க ஏழ்மையை அறவே அகற்ற வேண்டிய நிதி
யாதாரங்களை நிச்சயமாகப் பெறவில்லை. மத்திய அரசையும்
மாநில அரசையும் இணைத்திருக்கின்ற இந்திய அரசியலமைப்
புச் சட்டம், அதனிடத்தில் இருக்கிற பல்வேறு பிரிவுகள், உட்
பிரிவுகள் இன்றைக்குத் தமிழ்த் திருநாட்டில் கைகளிலே போடப்
பட்ட விலங்குகள். அந்த விலங்குகளை உடைத்து எறிந்தோ
மானால்தான் ஒரு புதிய தமிழ்நாட்டை, ஒரு பொன்னான,
தமிழ்நாட்டை நம்மாலே உருவாக்க முடியும். அதற்கு போர்க்
குணம் கொண்ட பாட்டாளி மக்களைத் திரட்டி தமிழ் நாட்டு
மக்களின் நல்லாசியுடன் என்றையதினம் நாம் எழுந்து உரிமை
களை மீட்கிறோமோ அன்றையதினம்தான் இந்தச்சட்டமன்றமும்
இந்த அரசும் இந்த நாட்டினுடைய பிரச்சினைகளைத் தீர்க்க
முடியும் என்பதைத் சொல்லி என் உரையை முடிக்கிறேன்,

[1991 செப்டம்பர் 10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றது. பேரவை மீண்டும் நாளைக் (11—9—1991) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-54 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

### 5. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

#### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

39. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணையை ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 27—7—1990 ஆம் நாளிட்ட 340ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (இந்திய அரசமைப்புச் சட்டத்தில் 320(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

40. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணையை ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 22—4—91 ஆம் நாளிட்ட 147ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்டஅறிவிக்கை. (இந்திய அரசமைப்பு சட்டத்தின் 320(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

41. தமிழ்நாடு 1954ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணையை ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 23—4—1991 ஆம் நாளிட்ட 154ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320(5) பிரிவின்கீழ் பேரைவைமுன் வைக்கப் பெற்றது.)

42. அத்தியாவசியப் பண்டங்களின் கொள்முதல், இருப்பு வைத்தல், மற்றும் பகிர்ந்தளித்தலில் ஈடுபட்டுள்ள பொதுக் கூட்டுறவுச் சங்கங்களை 1947ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் முதல் அட்டவணையில் சேர்ப்பது குறித்து தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் 10—1—1991 ஆம் நாளிட்ட 52ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 14/1947) 40 பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).



1991 செப்டம்பர் 10]

43. தமிழ்நாடு 1988ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 29—6—1990ஆம் நாளிட்ட 637ஆம் எண் அரசாணையில் வெளிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ் நாடு 1983 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180(5) பிரிவின் கீழ் பேரவை முன்வைக்கப்பெற்றது.)

44. அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் 1989–90ஆம்ஆண்டிற்கான பதினெட்டாவது ஆண்டு அறிக்கை. (1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1956) 619ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

45. கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் 1989–90 ஆம் ஆண்டிற்கான பதினாறாவது ஆண்டு அறிக்கை. (1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956 619ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது) (தமிழ் ஆங்கிலம்).

46. இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்தின் 1989–90 ஆம் ஆண்டிற்கான நான்காவது ஆண்டு அறிக்கை. (1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

47. பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் 1989–90 ஆம் ஆண்டிற்கான பதினெட்டாவது ஆண்டறிக்கை. (1956ஆம்ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

48. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1987–88ஆம் ஆண்டிற்கான அறிக்கை. (சிவில்). (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது). (ஆங்கிலம்).

49. தமிழ்நாடு அரசின் 1987–88 ஆம் ஆண்டிற்கான நிதி நிலைக் கணக்குகள் (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின், 151(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது). (ஆங்கிலம்)

[1991 செப்டம்பர் 1

50. தமிழ்நாடு அரசின் 1987–88 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கக் கணக்குகள். (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது). (ஆங்கிலம்).

51. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1988–89 ஆம் ஆண்டிற்கான அறிக்கை (வருவாய் வரவினங்கள்). (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது). (ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்

ஏதுமில்லை.

161490

D
V2;11,31 N91
N91.5.2

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sithuraman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Mad[illegible]
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tinne[illegible]) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmo[illegible] Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirap-palli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Teenure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 S. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-12.

Published under Rules [illegible] and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.